بسم الله الرحمن الرحيم

-:அட்டவணை:-


| | குர்ஆன் மற்றும் நபிமொழிகளிலிருந்து | இலக்கணம் | பக்கம் |
|---|---|---|---|
| | முக்கிய வழிகாட்டுதல்கள் | | 2 |
| | அகாடமி | | 4 |
| | முன்னுரை | | 7 |
| 1 | அறிமுகம் | هُوَ، هُمْ، ... | 9 |
| 2 | சூரா அல்ஃபாத்திஹா 1-3 | هُوَ مُسْلِم، هُمْ مُسْلِمُون، ... | 13 |
| 3 | சூரா அல்ஃபாத்திஹா 4-5 | رَبُّهُ،.. رَبُّهُم | 19 |
| 4 | சூரா அல்ஃபாத்திஹா 6-7 | دِينُهُ،..، كِتَابُهُ،.. هِيَ، رَبُّهَا... | 24 |
| 5 | இத்திருமறையை இறக்கியதின் நோக்கம் | لِ، مِنْ، عَنْ، مَعَ | 30 |
| 6 | குர்ஆனைக் கற்பது எளிது,<br>அதனைக்கற்பதே மிக சிறந்த செயல் | بِ، فِي، عَلَى، إِلَى | 35 |
| 7 | பயில வேண்டிய துஆக்களும்<br>பயிலவேண்டிய முறைகளும் | هٰذَا، هٰؤُلاَءِ، ذٰلِكَ، أُولٰئِكَ | 41 |
| 8 | சூரா அல்-அஸ்ர் | فَعَلَ، فَعَلُوا، فَعَلْتَ، فَعَلْتُمْ، فَعَلْتُ، فَعَلْنَا | 47 |
| 9 | சூரா அன்-நஸ்ர் | يَفْعَلُ، يَفْعَلُونَ، تَفْعَلُ، تَفْعَلُونَ، أَفْعَلُ، نَفْعَلُ | 53 |
| 10 | சூரா அல்-இக்லாஸ் | اِفْعَلْ، اِفْعَلُوا، لاَ تَفْعَلْ، لاَ تَفْعَلُوا | 60 |
| 11 | சூரா அந்-நாஸ் | فَاعِل، مَفْعُول، فِعْل | 66 |
| 12 | சூரா அல்-காஃபிரூன் | فَتَحَ، جَعَلَ | 73 |
| 13 | சூரா அல்-ஃபலக் | نَصَرَ، خَلَقَ، رَزَقَ، ذَكَرَ | 80 |
| 14 | பாங்கு மற்றும் உளூவிற்குப் பின்னுள்ள<br>துஆக்கள் | عَبَدَ، دَخَلَ، كَفَرَ | 89 |
| 15 | ஸனா, ருகூவு, சஜ்தா | ضَرَبَ، ظَلَمَ، صَبَرَ، غَفَرَ | 99 |
| 16 | தஷஹ்ஹு த் (அத்தஹிய்யாத் ஓதுதல்) | سَمِعَ، عَلِمَ، عَمِلَ، رَحِمَ | 108 |
| 17 | ஸலவாத் ஓதுதல் | وَعَدَ، وَجَدَ، وَلَدَ | 116 |
| 18 | ஸலவாத் ஓதிய பின் | قَالَ، قَامَ | 125 |
| 19 | துஆக்கள் | كَانَ، تَابَ | 130 |

**இப்பயிற்சியை கற்றுக்கொள்ள முக்கிய வழிகாட்டுதல் (போதனை) கள்:**

1) உங்களுக்கு அரபி மொழியில் குர்ஆனைப் படிக்கவும், தமிழ் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

2) இப்பயிற்சியை நல்லமுறையில் கற்றுக்கொள்ள கீழ்க்கண்ட விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும்.

- இது முழுமையான ஆர்வத்துடன் பயில வேண்டிய பயிற்சி எனவே கவனத்துடன் செவி சாய்த்து: உடல் ரீதியான ஈடுபாட்டுப் (TPI) பயிற்சியிலும் தொடர்ந்து கலந்து கொள்ள வேண்டும்.
- பயிற்சி செய்யும் போது நிகழும் தவறுகளை கண்டு கொள்ள வேண்டியதில்லை.
- யார் அதிகம் பயிற்சி செய்வார்களோ அந்த அளவுக்கு அதிகம் கற்றுக் கொள்வார்கள்.

**பொன் விதிகளை - Golden Rules - நினைவில் கொள்ளுங்கள்:**

- செவியுற்றேன், மறந்தேன். — I listen, I forget
- பார்த்தேன், நினைவில் வைத்தேன். — I see, I remember
- பயிற்சி செய்தேன், கற்றேன். — I practice, I learn
- கற்றுக் கொடுத்தேன், ஆசிரியரானேன். — I teach, I master

**கற்றலின் மூன்று நிலைகளை நினைவில் கொள்ளுங்கள்:**

1. முழு கவனம் இன்றி கேட்பதால் நீங்கள் சப்தத்தை மட்டுமே கேட்க முடியும்.
2. ஆர்வம் இல்லாமல் அல்லது சந்தேகத்துடன் கேட்பது ஷைத்தான் உங்களின் கற்கும் திறனில் சந்தேகத்தை ஏற்படுத்தலாம்.
3. செயல் ரீதியாக கவனிப்பது, மனதால் கவனிப்பது, குறிப்புகளுக்கு உடனே பதிலளிப்பது.

ஒவ்வொரு பாடத்திற்கு பின்பும் இலக்கணம் வரும். ஆனால் இலக்கணத்திற்கும் பாடத்திற்கும் நேரடியான தொடர்பு இருக்காது. அவ்வாறாக இருந்தால் பாடதிட்டத்தில் சிக்கல் ஏற்படும். மேலும் பாடம் படிப்பதற்கு முன் இலக்கணத்திற்கு தனி வகுப்பு எடுக்க நேரிடும். நீங்கள் பாடத்தில் படித்த வார்த்தைகளை சார்ந்தே இலக்கணம் வரும். சில பாடங்களுக்கு பின் சூரா மற்றும் அத்கார் (திக்ர்கள்) படிக்கும் போது இலக்கணத்தை கற்றுகொண்டதற்கான பயனை உணர்வீர்கள்.

**கீழே குறிப்பிட்டுள்ள ஏழு வீட்டுப்பாடங்களையும் செய்து வர மறக்காதீர்கள்.**

- **இரண்டு ஓத வேண்டியவை:**
  1. குர்ஆனைப் பார்த்து தினமும் குறைந்தது 5 நிமிடங்கள் ஓதுதல்.
  2. குர்ஆனைப் பார்க்காமல் (தன் ஞாபகத்தில் உள்ளதை) மனப்பாடமாக தினமும் குறைந்தது 5 நிமிடங்கள் ஓதுதல்.

- **இரண்டு படிக்க வேண்டியவை:**

3. (இந்நூலிலிருந்து) முன்னால் படித்த மற்றும் படிக்க வேண்டிய பாடங்களை அதன் மொழிபெயர்ப்புகள் மற்றும் கலைச்சொற்களை எழுதிப்பார்ப்பதோடு தினமும் குறைந்தது 5 நிமிடங்கள் பார்வையிடுதல், ஏனெனில் எழுதிப்பார்ப்பது என்பது மிக முக்கியமானதாகும். முதன்முதலாக இறக்கிய வசனத்தில் **"எழுதுகோல் கொண்டு கற்பித்த அவன்"** என அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

4. குறைந்தது 5 முறை ஐவேளை தொழுகைக்குப்பின்னோ முன்னோ வாய்ப்பு உள்ளபோது 30 வினாடிகள் அதாவது சில வினாடி (இப்புத்தகத்துடன் கொடுக்கப்பட்டுள்ள) வார்த்தைகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் அடங்கிய பாக்கெட் வடிவ பயிற்சி காகிதத்திலிருந்து ஓர் பார்வையிடுதல்.

- **இரண்டு தானும் செவி சாய்த்து பிறருக்கும் சொல்லிக் காண்பித்தல் (கற்பித்தல்):**

5. இந்த வசனங்கள் மற்றும் (தினம் ஓதவேண்டிய) திக்ர்களின் வார்த்தைகளுக்கான மொழிபெயர்ப்புகளை ஒளிநாடா மற்றும் குறுந்தகடுகளிலிருந்து செவியுறுதல்.
6. இது சம்பந்தமாக தினமும் குறைந்தது 5 நிமிடங்களாவது தன் வகுப்பு நண்பர்களோடு கலந்துரையாடுதல்.

- **மேலும் ஒன்று : தன் உபயோகத்தில் கொண்டு வர வேண்டியது:**

7. உங்களுக்கு மனப்பாடமாக இருக்கின்ற சூரா (அத்தியாயங்)களை தொழுகைகளில் (தொடர்ந்து) ஓதி வருதல்.

- **இன்னும் மேலதிகமான இரண்டு வீட்டுப்பாடங்களையும் நினைவில் வைக்கவும்:**

(i) தனக்காக ( رَبِّ زِدْنِى عِلْمًا) எனது ரப்பே! எனக்கு கல்வியை அதிகப்படுத்துவாயாக! என பிரார்த்தித்தல்
(ii) தனக்காகவும் தனது நண்பர்களுக்காகவும் 'இறைவா! குர்ஆனின் உரிமைகளை முழுமையாக நிறைவேற்றிட எங்களுக்கு உதவிடுவாயாக!' என பிரார்த்தித்தல்.

**கற்றுகொள்வதற்கு சிறந்த வழி கற்பித்தலாகும். கற்பித்தலுக்கு சிறந்த வழி ஒருவரை ஆசிரியராக உருவாக்குவதாகும்.**

# UNDERSTAND AL-QUR'AN ACADEMY - அகாடமி ஓர் அறிமுகம்

**அகாடமியின் நோக்கம்**

மக்கள் குர்ஆனிலிருந்து தூரவிலகி இருப்பதை நினைவுறுத்த வேண்டும், ஒரு புதிய சந்ததியினரை உருவாக்க வேண்டும். அவர்கள் குர்ஆனை ஓதி, விளங்கி, செயல்பட்டு, பிறருக்கும் இச்செய்தியைக் கொண்டு சேர்க்க வேண்டும். பள்ளிக்கூடங்கள், மதரஸாக்கள், குர்ஆன் ஆரம்ப பாடசாலைகள், பொதுமக்கள் வரை இதைக் கற்கவேண்டும். இதற்காக உதவக்கூடிய அவசியமான புத்தகங்கள், குறுந்தகடுகள், சுவரொட்டிகளைக் கொண்டு அறிவுறுத்த வேண்டும். குர்ஆனிய கலையில் திறமைவாய்ந்தவர்களை உருவாக்குவது இதன் நோக்கமல்ல. திறமை வாய்ந்தவர்களை உருவாக்கும் பணியை மாஷா அல்லாஹ் மதரஸாக்களும் மற்ற நிறுவனங்களும் செய்து வருகின்றன. இதன் நோக்கம் என்னவெனில் இஸ்லாமிய மக்கள் குர்ஆனின் அடிப்படைச் செய்தியைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே. இன்ஷா அல்லாஹ் இந்நூலில் அடிப்படையான நபிமொழிகளும் போதிக்கப்படும். இத்தகைய பயிற்சி முறையில் புதிய யுக்திகளைக் கையாள முழுமையாக முயற்சிக்கப்பட்டுள்ளது.

**இதன் குறிக்கோள் (மிஷன்)**

குர்ஆனில் வரும் அரபியை மிகவும் எளிய முறையில் கற்பித்தல். சிறுவர்கள், வாலிபர்கள், பெரியவர்களுக்கென மூன்று வெவ்வேறு வித பயிற்சி முறைகளை உருவாக்குதல். குர்ஆனை மிகவும் ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் தினமும் தன் வாழ்வில் செயலாற்றுவது. எல்லாவற்றையும் விட அதிகம் உதவக்கூடிய விதத்திலும், இம்மை-மறுமை இரண்டிலும் வெற்றி பெறும் வழியைக் காண்பிக்கூடிய நூல் என்ற விதத்திலும் இக்குர்ஆனை சமர்ப்பித்தல்.

**இச்சேவை ஏன்?**

99 விழுக்காடு அரபி மொழி பேசத்தெரியாத முஸ்லிம்களில், ஒரு விழுக்காடு கூட குர்ஆனைப் புரிந்து கொள்பவர்கள் புரிந்து ஓதுபவர்கள் இல்லை. இது மிகப்பெரிய வெட்கக்கேடு! எனவே இன்றைய சந்ததியினருக்கு குர்ஆனை அறிமுகப்படுத்துவது மிகவும் அவசியம். ஏனெனில், அல்லாஹ்வின் வார்த்தைகளுக்கு ஏற்படும் பிரதிபலிப்பு வேறு எவரின் வார்த்தைகளிலும் ஏற்படுவதில்லை. இது மட்டுமல்ல ஏறத்தாழ இஸ்லாமியர்களின் இறைநம்பிக்கை குர்ஆனை விட்டு முழுமையாக பறிபோய் விட வேண்டும் அல்லது பலவீனமடைந்து விட வேண்டும் என்பதற்காக எல்லா திசைகளிலிருந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இஸ்லாமிய மார்க்கத்தின் மீதும், மரியாதை மிகுந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புகழின் மீதும், குர்ஆனின் மீதும் தொடர் தாக்குதல்கள் நடந்து வருகின்றன. ஆகவே நாம் நமது இளைய சந்ததியினருக்கு குர்ஆனைப் புரியவைத்து; மேலும் பிற மதத்தவர்களின் அடிப்படை வினாக்களை தானாக எதிர்கொள்ளும் தகுதியை அவர்களிடம் உருவாக்க வேண்டும். குர்ஆனைப் புரிந்து கொள்ளும்போது இன்ஷா அல்லாஹ் இம்மை மறுமை இரண்டிலும் வெற்றியும் பெறுவார்கள். மற்றவர்களிடமும் அழைப்புபணியை ஆற்ற முடியும்.

**திட்டம்**

உலகின் **100** கோடி அரபி மொழி பேசத்தெரியாத முஸ்லிம்கள் வரை இதை கொண்டுபோய் சேர்த்தல். பின்னர் இதன் மூலம் முழு மனித சமுதாயத்திற்கும் குர்ஆனின் செய்தி சென்றடைய உதவுதல்.

**தற்போதைய திட்டம் :** உலக முஸ்லிம்களின் **10** முக்கிய மொழிகளில் இதன் மொழிபெயர்ப்பு வந்து விட வேண்டும். பள்ளிக்கூடங்கள், மதரஸாக்கள், அமைப்புகள், நிறுவனங்கள் மூலம் இதை பரப்பும் பணியை செயல் படுத்தப்பட வேண்டும்.

### இப்பயிற்சி முறையின் முதல் பகுதி

எக்கருத்தையும் போதிக்க இரு முக்கிய பகுதிகள் உள்ளன. அ) ஆர்வமூட்டல் ஆ) ஓர் ஈர்ப்பு சக்தியோடு கற்பித்தல். ஆர்வமூட்டுவதற்காக திருமறை வசனங்கள், நபிமொழிகள், நிகழ்ச்சிகள், எடுத்துக்காட்டுக்களையும் அதன் பின் **(NLP- Neuro linguistic programming)** நரம்பியல் மொழிப் பயிற்சி முறை போன்ற புதிய முறைகளையும் இதில் கையாள வேண்டும்.

1. குர்ஆனியச் செய்தி மற்றும் அரபி மொழியின் சட்டங்களை கற்பிப்பதற்காக இருக்கின்ற ஆய்வுகளைப் பயன்படுத்தி ஓர் ஈர்ப்பு சக்தியை வரிசைப்படுத்துதல்.
2. ஒளி நாடாக்கள், வீடியோ, குறுந்தகடுகள், சுவரொட்டிகள், வினாடி வினாப் போட்டிகள் போன்ற பயன் தருகின்ற அனைத்து சாதனங்களையும் இதில் பயன்படுத்த வேண்டும்.
3. ஆசிரியர் பயிற்சி வகுப்புகளையும் ஏற்பாடு செய்தல்.

### குர்ஆனைப் புரிந்து கொள்ள இரண்டாவது படிக்கட்டு

**குறும் பயிற்சி எண் 1 :** இதில் தினமும் தொழுகையில் ஓதப்படுபவைகளின் மூலம் **125** வார்த்தைகள் கற்பிக்கப்படுகிறார்கள். அவை குர்ஆனில் சுமார் **40000** முறை வருகின்றன.

**குறும் பயிற்சி எண் 2 :** இதில் மேலதிகமான வசனங்கள், திக்ருகளின் மூலம் **150** வார்த்தைகள் கற்பிக்கப்படுகிறார்கள். அவை குர்ஆனில் சுமார் **15,000** முறை வருகின்றன.

இதன்பின் குர்ஆனைப் புரிவது மிகவும் எளிது. ஏனெனில் இதன்பின் ஒவ்வொரு வரியிலும் வருகின்ற சுமார் **9** வார்த்தைகளில் சராசரி **2** முதல் **3** வார்த்தைகள்தான் புதியவையாக இருக்கும்.

### பணியின் துவக்கம்

**1998ல் :** **www.understandquran.com** என்ற **website** வளைதளத்தில் துவங்கப்பட்டது.

**2000ல் :** குர்ஆனின் **80** விழுக்காடு வார்த்தைகளடங்கிய ஒரு சிறிய புத்தகம் மேலும் இதே ஆண்டில் குர்ஆனின் முக்கிய வினைச்சொற்களடங்கிய ஒரு சிறிய புத்தகம்.

**2004ல் :** ‘எளிய முறையில் குர்ஆனைக் கற்க’’என்ற நூலின் அறிமுகம்.

**2005ல் :** இப்பயிற்சியின் தொடர் ஆரம்பம்.

### பணிவான வேண்டுகோள்:

நபி(ஸல்)அறிவித்துள்ளார்கள்: என்னிடம் இருந்து ஒரு தகவலை நீங்கள் அறிந்தாலும் அதனை பிறருக்கு எத்திவைத்துவிடுங்கள். எங்களின் வேண்டுகோள் என்னவெனில்: நீங்கள் அறிந்துகொண்டதை எந்த வழியில் எல்லாம் பயண்படுத்த முடியுமோ அந்த அனைத்த வழியையும் பின்பற்றுங்கள். இப்பணியை செய்திட உறுதியான ஒரு குழுவை அமைத்திடுங்கள். அல்லாஹ் எங்களின் பணிவான வேண்டுகோளையும் ஏற்பானாக மேலும் எங்கள் காரியங்களில் முகஸ்துதி இல்லாமல் காப்பானாக.

**இப்பயிற்சி பற்றி சுருக்கமான கண்ணோட்டம்**

இந்தியாவில் இப்பயிற்சி ஏறக்குறைய (ஹைதராபாத், சென்னை, மும்பை, பெங்களூர், டில்லி போன்ற) எல்லா பெரிய நகரங்களிலும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. இது தவிர ஔரங்காபாத், புனே, அஃலம்கட், பரேலி, பைதர் போன்ற நகரங்களிலும், உலகளாவிய அளவில் தாய் நகரம் மக்காவில் சில முறையும், மற்றும் சவுதி அரேபியாவின் (மதினா, ஜித்தா, தம்மாம், அல்-கோபர், ரியாத் கஃப்ஜி, அப்ஹா போன்ற) முக்கிய நகரங்களில் பல முறை, (பஹ்ரைன், துபை, கத்தர், மஸ்கட், குவைத் போன்ற) வளைகுடா நாடுகளிலும், (லண்டன், ரேடிங், இன்ஸிஸ்டர், மங்கம், ஈடன்புரா போன்ற) இங்கிலாந்து நகரங்களிலும், (ஷேக் அஹ்மத் தீதாத்தின் நகரான டர்பன் மற்றும் பரீடோரியாவில்) தென் ஆப்பிரிக்காவிலும், நைஜீரியா மற்றும் இலங்கையிலும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

அமெரிக்காவின் பல நகரங்களிலும், கனடா, சுவீடன், ஐவெரிகோஸ்ட், மலேஷியா, இந்தோனேஷியா, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் இப்பணியை தானே கற்று, ஆசிரியர்கள் மூலமும் கற்பிக்கிறார்கள்.

**இந்திய மொழியில் மொழிபெயர்ப்புகள்:** ஹிந்தி, தமிழ், மலையாளம், தெலுங்கு

**உலக மொழிகளில் மொழிபெயர்ப்புகள்:** ஆங்கிலம், வங்காளம், துருக்கி, பிரெஞ்சு, ஸ்பைன், இந்தோனேஷி, சீன மொழி, போஸ்னி போன்றவை.

**தொலைக்காட்சிகள்:** பீஸ் டி.வி. **(Peace TV)** என்ற உருது மொழி தொலைக்காட்சியில் வாரத்தில் **6** முறையும், ஹைதராபாத் சேனல் மற்றும் **4** டி.வி. **(4 TV)** யில் ரமழானிலும் ஒலி பரப்பாகிறது. மற்ற தொலைக்காட்சிகளிலும் ஒலி பரப்ப முயற்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

**வலைதளம்: 2004** இன்னும் **2005** துவக்கப்பட்ட இதன் மூலம் **50** நாடுகளில் **4,000** க்கு மேற்பட்டோர் பயனடைகின்றனர். இன்று குர்ஆனை புரிந்து கொள்ள உலகளாவிய அளவில் இதுவே முதல் **website** ஆகும். நீங்கள் **Google**ல் சென்று **learn quran** அல்லது **quranic Arabic** அல்லது **understand quran** எனத் தேடினால், இப்பயிற்சியை சமர்ப்பிக்கின்ற **www.understandquran.com** என்ற **site** க்குத்தான் முதலிடம் கிடைக்கும்.

**வேண்டுகோள் :** அல்லாஹ்வின் தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்; بَلِّغُوْا عَنِّى وَلَوْ آيَةً (என்னிடமிருந்து ஒரு வசனமாயினும் சரி, பிறருக்கு எடுத்துக்கூறிவிடுங்கள்) எனவே, நாம் அனைவரும் சேர்ந்து இப்பணியை (தொய்வின்றி) மேன்மையடையச் செய்வோம்.

**அல்லாஹ்விடம் பிரார்த்திப்பீர்களாக :** இம்மகத்துவம் பொருந்திய வேதத்திற்காக செய்கின்ற இச்சிறு பணியினை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக! புகழுக்காகவும், பிறர் பார்ப்பதற்காகவும் செய்வதை விட்டும், மற்ற பாவங்கள், தவறுகளை விட்டும் பாதுகாப்பானாக! எங்களில் ஏற்படுகின்ற தவறுகளை சரி செய்து கொள்வதற்கும் உதவுவானாக! ஆமீன்.

رَبَّنَا تَقَبَّلْ مِنَّا اِنَّكَ اَنْتَ السَّمِيْعُ الْعَلِيْمُ, وَتُبْ عَلَيْنَا اِنَّكَ اَنْتَ التَّوَّابُ الرَّحِيْمُ, وَاغْفِرْ لَنَا اِنَّكَ اَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمُ. وَجَزَاكُمُ اللهُ خَيْرًا

# முன்னுரை

الحَمْدُ لِلّٰهِ وَالصَّلٰوةُ والسَّلَامُ عَلَى رَسُوْلِ اللهِ اَمّا بَعْدُ

'உங்களில் மிகச் சிறந்தவர் எவரெனில், குர்ஆனை தானும் கற்று, மேலும் அதை கற்றுத் தருபவரே' என, அல்லாஹ்வின் தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

குர்ஆனைக் கற்பது; மற்றும் கற்பிப்பதில் இச்சிறப்பு இருக்கிறது என்பது ஒரு புறம், மறுபுறம் அரபி மொழி பேசத்தெரியாத நம்மவர்களின் மிக மோசமான நிலை 70 அல்லது 80 விழுக்காடு மக்கள் தொழுகையைப்பற்றியோ, குர்ஆனிலிருந்து அன்றாட தொழுகையில் தேவைப்படுகின்ற பொதுவான அத்தியாயங்கள் அல்லது வசனங்களைப்பற்றியோ அறியாதவர்களாக உள்ளனர். இன்ஷா அல்லாஹ் தொழுகையை எளிய முறையில் விளக்குவதற்கும், குர்ஆனிய அரபியை கற்பிப்பதற்குமே இப்பயிற்சி உருவாக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி இவை அனைத்தையும் அவர்களுக்குப் போதிக்கும்.

அல்ஹம்துலில்லாஹ்! இப்பயிற்சியை வரிசைப்படுத்த நான்கு ஆண்டுகள் மட்டுமே ஆனது. எனினும் இச்சிறிய காலக்கட்டத்தில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தோனேஷியா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, நைஜீரியா, இலங்கை மற்றும் வளைகுடா நாடுகளிலும் கற்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்! ஆயிரக்கணக்கானோர் இதைக்கொண்டு பயனடைந்து கொண்டிருக்கின்றனர், உலகின் முக்கிய மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பைன், துருக்கி, வங்காளம், போஸ்னி, மலாய், இந்தோனேஷி, சீன மொழி, போர்ச்சுகல் மொழி மற்றும் தமிழ், மலையாளம், ஹிந்தி போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு விட்டன.

இப்பயிற்சியின் மிகவும் முக்கியமான, தனித்தன்மை வாய்ந்த வியப்பு என்னவெனில்; இதன் பெரும் பகுதி குர்ஆனிய வசனங்கள், இறைவனை துதிக்கும் வார்த்தைகள், பிரார்த்தனைகளின் அடக்கமாகும், இதையே அதிக பட்ச முஸ்லிம்கள் ஓதி வருகின்றனர். ஒரு முஸ்லிம் ஐவேளைத் தொழுகைகளில் சுமார் ஒரு மணி நேரம் தன்னைப் படைத்த எஜமான் அல்லாஹ்வுடன் அரபி மொழியில் உரையாடுவதில் செலவிடுகின்றான் எனவேதான் ஒரு முஸ்லிம் அரபியைக் கற்பதின் துவக்கமும் இதைக்கொண்டே இருக்க வேண்டும் என எங்களின் முயற்சி தொடர்கிறது.

**இம்முறையை செயல்படுத்துவதன் பயன்கள் பல. எடுத்துக்காட்டு:**

1 ஒரு புதிய மொழியைக் கற்க, புரிந்து கொள்ள பயிற்சி என்பது மிக அதிக அளவில் பங்கு வகிக்கிறது. தினமும் தொழுகைகள் மற்றும் பிரார்த்தனைகளில் ஓதப்படும் சுமார் 150 முதல் 200 வரை உள்ள அரபி வார்த்தைகள் அல்லது 50 வாக்கியங்களையே திரும்பத் திரும்ப ஓதுகிறோம், அவ்வாக்கியங்களை புரிந்து கொள்ளும்போது; அரபி மொழியின் வாக்கிய அமைப்பு (நடை) மற்றும் முறையை புரிந்து கொள்ளவும் உதவியாக இருக்கும்.

2 இதன் முதல் வகுப்பிலிருந்தே இப்பயிற்சியின் பயனை உணரலாம். தொழுகையில் உபயோகப்படுத்தும் வார்த்தைகளும் புரிய ஆரம்பித்து விடும்.

3 தொழும்போது தனக்கு ஓர் ஈர்ப்பு ஈடுபாடு மற்றும் கவனத்தில் ஒரு வேறுபாட்டை உணர முடியும்.

இவை அல்லாத மற்ற எப்பயிற்சியின் போதனையிலும் இது போன்ற பயன்களை உணரமுடியாது.

**இப்பயிற்சியின் முக்கியமான அடுத்த தனித்தன்மை:**

அரபி இலக்கணத்தை கற்பிக்கும் யுக்தி ஏனெனில் இப்பயிற்சியின் நோக்கம் மாணவனுக்கு நடைமுறையில் உள்ள குர்ஆனிய மொழிபெயர்ப்புகள் மூலம் குர்ஆனை புரிந்து கொள்ள உதவுதல் இதன் காரணமாகத்தான் இப்பயிற்சியில் (صرف) சொல்லிணக்கத்தின் மீது அதிக கவனம் செலுத்தப்படுகிறது, சொல்லிலக்கணத்தை போதிப்பதற்காகவே சாதாரணமாக புரிந்து கொள்கிற **TPI (Total Physical Interaction** என்ற) முக்கிய செயல்பாட்டின் முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் ஆரம்பமான பயிற்சியே, அரபி மொழியைக் கற்க இதன் பின் வேறு பல அரபி நூல்களை அவசியம் படிக்கவேண்டும்.

இப்பயிற்சியின் முடிவின் போது **125** வார்த்தைகளைக் கற்றுக்கொள்வீர்கள். அவை குர்ஆனில் வருகின்ற சுமார் **78000** வார்த்தைகளிலிருந்து சுமார் **40,000** முறை வருகின்றன. அதாவது இவ்விதத்தில் **50** சதவிகித வார்த்தைகளின் பொருள் மற்றும் கருத்தினை தெரிந்து கொள்வீர்கள்.

இன்ஷா அல்லாஹ் நீங்கள் இப்பயிற்சியை கற்க எளிதாகவும், ஓர் ஈர்ப்போடும், ஈடுபாட்டை ஏற்படுத்தும் விதத்திலும் பெற்றுக்கொள்வீர்கள். அல்லாஹ்விடம் பிரார்த்திப்பீர்களாக! அவன் நமது எண்ணத்தையும் செயலையும் இந்த ஏற்பாடுகளையும் ஏற்றுக்கொள்வானாக! மேலும் உங்களிடம் எமது வேண்டுகோள்: தொழுகையை விளங்கி தொழுவதோடு குர்ஆனையும் விளங்கிக்கொள்வதற்காக மதரஸா, பள்ளிக்கூடம், பள்ளிவாசல், தாம் வசிக்கும் தெரு, குடும்பத்தினர் போன்றோர்களில் எங்கெல்லாம் முடியுமோ அங்கு எல்லாம் இதை அறிமுகப்படுத்துங்கள் என்பதாகும்.

இதில் (உருது மொழியில்) அதிக பட்சம் ஹாபில் நதிர் அவர்களின் மொழி பெயர்ப்பிலிருந்து உபயோகப்படுத்தியுள்ளோம். இது அனைத்து பிரிவினராலும் ஏற்கப்படுகின்ற மொழிபெயர்ப்பாகும், (தமிழில் : அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழிபெயர்ப்பிலிருந்து உபயோகப்படுத்தியுள்ளோம்) அல்லாஹ் நம்மை தவறுகளை விட்டும் பாதுகாப்பானாக! அவ்வாறு தவறு ஏற்பட்டு விட்டால் மன்னிப்பானாக! நீங்களும் ஏதாவது பிழையினை இதில் கண்டால், அடுத்த பிரதிகளில் சரி செய்து கொள்ள அவசியம் தெரியப்படுத்துங்கள்.

**Email : abdulazeez@understandquran.com**

**தமிழில் பிழை கண்டால்: uqchennai@gmail.com**

## பாடம் - 1
## அறிமுகம்

**இப்பாடத்தின் முடிவின் போது நீங்கள் 6 புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்வீர்கள் அவை குர்ஆனில் சுமார் 1295 முறை வருகின்றன.**




**பயிற்சியின் நோக்கங்கள்:**

- தொழுகையில் பிரதிபலிக்கும் விதத்தில் தொழும் வழக்கத்தை ஏற்படுத்துதல். தொழுகையில் முழுமையாக உள்ளம் ஒருங்கிணைந்து, இறையச்சமும் பணிவும் ஏற்படவேண்டும், மேலும் தொழுகையில் ஏற்படுகிற (அதே) பிரதிபலிப்புகள் தன் வாழ்விலும் வரவேண்டும்.
- குர்ஆனைப் புரிந்து கொள்வது எளிமையாகி விடவேண்டும்.
- குர்ஆனைப் புரிந்து திரும்ப திரும்ப ஓதும் ஆர்வம் ஏற்படவேண்டும்.
- குர்ஆனோடு உள்ள ஈடுபாடு அதாவது அதைப்பற்றி சிந்தித்தல், அதன் மூலம் உபதேசம் பெறும் முறையைப் புரிந்து கொள்ள வேண்டும். குர்ஆனை தன் வாழ்வில் கொண்டுவரும் முறையையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.
- குழுவாக செயல்படுகின்ற அல்லது குழுவுணர்வின் உயிரோட்டம் உருவாக வேண்டும்.

**அரபி மொழியை பயில்வதற்கும் இப்பயிற்சியின் மூலம் குர்ஆனைப் புரிந்து கொள்வதற்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாடு**

| | |
|---|---|
| **வேறுபாடு எண் 1** | தொழுகையிலிருந்து துவங்குவதால் தினமும் சுமார் ஒரு மணி நேரம் தொழுகை மற்றும் அரபி மொழியில் துஆக்கள் கேட்கிற சூழலில் இருக்கின்றனர். |
| **வேறுபாடு எண் 2** | (கவனத்தோடு) செவிசாய்க்க, மற்றும் படிப்பதில் அதிகம் கவனம் ஏற்படுகிறது ஏனெனில் தினமும் குர்ஆனை கேட்கின்றோம், ஓதுகின்றோம். |
| **வேறுபாடு எண் 3** | வார்த்தைகள் மற்றும் மொழிபெயர்ப்புகளின் மீது அதிக கவனம் ஏற்படுகிறது ஏனெனில் இதுவே இயற்கையான முறையாகும் சிறுவர்கள் தன் மொழியை இவ்வாறே கற்றுக் கொள்கின்றார்கள். |

## <u>இலக்கணம்:</u>

இப்பாடத்தில் நாம் 6 வார்த்தைகளைக் கற்க இருக்கிறோம் அவை:

**هُوَ – هُمْ – أَنْتَ – أَنْتُمْ – أَنَا – نَحْنُ** இந்த 6 வார்த்தைகளும் குர்ஆனில் 1295 முறை வருகின்றன.

இவைகளை **TPI - Total Physical Interaction** (முழுமையான உடல் ரீதியான ஈடுபாட்டின்) முறைப்படி நல்ல முறையில் பயிற்சி செய்யுங்கள் அதாவது நீங்கள் உங்களை முழுமையாக ஈடுபடுத்துங்கள். கண்களால் பாருங்கள் காதுகளால் கேளுங்கள் வாயால் சொல்லுங்கள் கைகளால் சைகை செய்யுங்கள். சிந்தனை செய்யுங்கள். மனம் பதியவைத்து ஆர்வத்தோடு படியுங்கள். இவை அனைத்தையும் செய்யும் போது; இன்ஷா அல்லாஹ் விரைவில் கற்றுக் கொள்ளலாம்.

**கைகளால் சைகை செய்யும் முறை கீழே கொடுக்கப்படுகிறது**

1. هُوَ ஹு வ (அவன்) என சொல்லும்போது வலது ஆட்காட்டி விரலை வைத்து ஒரு மனிதன் வலப்புறம் உட்கார்ந்திருப்பது போன்று வலப்புறம் சைகை காட்டுங்கள், هُمْ ஹு ம் (அவர்கள்) என சொல்லும்போது வலது 4 விரல்களால் (அதைப் போன்றே) வலப்புறம் சைகை காட்டுங்கள்.

2. أَنْتَ அன்த்த (நீ) என சொல்லும்போது வலது ஆட்காட்டி விரலை வைத்து எதிரில் இருக்கும் மனிதனைப் பார்த்து சைகை காட்டுங்கள் அடுத்து أَنْتُمْ அன்த்தும் (நீங்கள்) என சொல்லும்போது 4 விரல்களால் எதிரில் இருக்கும் மனிதர்களைப் பார்த்து சைகை காட்டுங்கள், வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போது ஆசிரியர் மாணவரையும், மாணவர்கள் ஆசிரியரையும் சைகை காட்டுங்கள்.

3. أَنَا அன (நான்) என சொல்லும்போது வலது ஆட்காட்டி விரலை வைத்து தன்னை நோக்கி சைகை காட்டுங்கள் அடுத்து نَحْنُ நஹ்னு (நாங்கள்) என சொல்லும் போது 4 விரல்களால் தன்னை நோக்கி சைகை காட்டுங்கள்.

<table>
<tr><td rowspan="7">முதல் 3 முறை சுற்றில் காணும் 6 நிலைகளையும் பயிற்சி செய்யுங்கள். அதாவது சொல்லுங்கள், செய்யுங்கள். هُو அவன் هُمْ அவர்கள் أَنْتَ நீ أَنْتُمْ நீங்கள், أَنَا، நான், نَحْنُ நாங்கள். சைகையால் காண்பிப்பதால் மூன்று சுற்றுக்களுக்குப் பிறகு மொழி பெயர்த்து சொல்லத் தேவையில்லை. அரபியில் هُوَ، هُمْ، أَنْتَ، أَنْتُمْ، أَنَا، نَحْنُ மட்டும் சொன்னால் போதும். TPI, பயிற்சியின் பல பலன்களின் பிரதானமானதே இப்படிப்பட்ட எளிமையாக்கம் தான். இந்தச் சொற்களை மொழி பெயர்க்காமல் மேலே சொன்னவாறு தொடர்ந்து செய்யவும். இந்த ஐந்து நிமிட TPI பயிற்சி மூலம் இந்த ஆறு சொற்களையும் இன்னும் பலவற்றையும் கற்றுக் கொள்வதையும் மிக எளிதாக்கிவிடும். பயிற்சி மேற்கொள்கின்ற போது துறை சார்ந்த சொற்களைக் கற்பது குறித்து கவலை கொள்ள வேண்டாம். இந்த ஆறு சொற்கள் மற்றும் அவற்றின் பொருள்களில் முழுக் கவனம் செலுத்துங்கள்.</td><th colspan="3">பிரதிப் பெயர்ச்சொற்கள்</th><th>எண் عدد Number</th><th>நபர்</th></tr>
<tr><td>அவன்</td><td>ஹு வ</td><td>هُوَ 481</td><td>ஒருமை واحد Sr. (Singular.)</td><td rowspan="2">படர்க்கை 3rd Person غائب</td></tr>
<tr><td>அவர்கள்</td><td>ஹு ம்</td><td>هُمْ 444</td><td>பன்மை جمع Pl. (plural)</td></tr>
<tr><td>நீ</td><td>அன்த்த</td><td>أَنْتَ 81</td><td>ஒருமை واحد Sr. (Singular.)</td><td rowspan="2">முன்னிலை 2nd Person حاضر</td></tr>
<tr><td>நீங்கள்</td><td>அன்த்தும்</td><td>أَنْتُمْ 135</td><td>பன்மை جمع Pl. (plural)</td></tr>
<tr><td>நான்</td><td>அன</td><td>أَنَا 68</td><td>ஒருமை واحد Sr. (Singular.)</td><td rowspan="2">தன்னிலை 1st Person متكلّم</td></tr>
<tr><td>நாங்கள்</td><td>நஹ்னு</td><td>نَحْنُ 86</td><td>பன்மை pl. جمع dl. مثنى</td></tr>
</table>

# பாடம் எண் : 1
# அறிமுகம்




**வினா 1 :** குர்ஆனில் எத்தனை வார்த்தைகளும், மூல வார்த்தைகளும் உள்ளன?

**விடை :**

**வினா 2 :** இப்பயிற்சியின் நோக்கங்கள் யாவை?

**விடை :**

**வினா 3 :** தொழுகையைக் கொண்டு இந்த பயிற்சியை ஆரம்பிப்பதால் உள்ள பயன்கள் யாவை?

**விடை :**

**வினா 4 :** அரபி இலக்கணங்களைவிட வார்த்தைகள், அதன் பொருள்கள் மீது அதிகம் கவனம் செலுத்துவது ஏன்?

**விடை :**

**வினா 5 :** இப்பயிற்சியில் குர்ஆனைக் கேட்பதிலும் படிப்பதிலும் அதிகம் கவனம் காட்டப்படுகிறதா? அல்லது அரபி மொழியைப் பேசுவதிலும் எழுதுவதிலும் அதிகம் கவனம் காட்டப்படுகிறதா?

**விடை :**

## முதல் பாடத்திற்கான இலக்கண வினாக்கள்

**வினா 1 :** காலி இடங்களில் மும்முறை هُوَ، هُمْ، أَنْتَ، أَنْتُم போன்றவற்றை நிரப்புக:

| பிரதிப் பெயர்ச்சொற்கள் | | | | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|
| | | | அவன் | ஒருமை واحد *Sr.* *(Singular.)* | படர்க்கை *3rd Person* غائب |
| | | | அவர்கள் | பன்மை جمع *Pl.* *(plural)* | |
| | | | நீ | ஒருமை واحد *Sr.* *(Singular.)* | முன்னிலை *2nd Person* حاضر |
| | | | நீங்கள் | பன்மை جمع *Pl.* *(plural)* | |
| | | | நான் | ஒருமை واحد *Sr.* *(Singular.)* | தன்னிலை *1st Person* متكلّم |
| | | | நாங்கள் | பன்மை pl. جمع dl. مثنى | |

| **வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | எனவே அவர்கள் |
| | மேலும் நீங்கள் |
| | எனவே நாங்கள் |
| | மேலும் அவன் |
| | எனவே நீ |

| **வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| எனவே--அவன் | فَ+ هُوَ فَهُوَ = |
| | فَأَنْتَ |
| | وَهُمْ |
| | فَأَنَا |
| | وَنَحْنُ |

**பாடம் எண் : 2**
**சூரா அல் ஃபாத்திஹா**
**வசனம் 1-3**

**இப்பாடத்தின் முடிவின் போது நீங்கள் 14 புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்வீர்கள். அவை குர்ஆனில் சுமார் 4511 முறை வருகின்றன.**




**1ம் வரியில் : அரபி வார்த்தை.**

**2ம் வரியில் : வார்த்தைக்கான மொழிபெயர்ப்பு.**

**3ம் வரியில் : வார்த்தைகளின் தெளிவுரை.**

**இறுதியாக : நடைமுறை மொழி பெயர்ப்பு.**

இதன் கீழே சில பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பாடங்களைப் படித்த பின் வார்த்தைகளுக்கான மொழிபெயர்ப்புடன் பயிற்சி செய்யுங்கள் அதாவது முதலில் அரபி வார்த்தையை படியுங்கள். பின்னர் ஒவ்வொரு அரபி வார்த்தைக்கும் அதன் மொழிபெயர்ப்பைப் படியுங்கள், இறுதியாக அதன் நடைமுறை மொழிபெயர்ப்பைப் படியுங்கள்.

சூரா ஃபாத்திஹாவைத் துவங்குமுன் அதிலும் குறிப்பாக குர்ஆனைத் துவங்குமுன், “அவூது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்” ஓத வேண்டும். அதற்கு முன் அதன் மொழிபெயர்ப்பைப் பயிலுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| الرَّجِيمِ | 88<br>مِنَ الشَّيطَانِ | 2702<br>بِاللهِ | اَعُوذُ |
| **விரட்டப்பட்டவன்** | **ஷைத்தானிடமிருந்து** | **அல்லாஹ்விடம்** | **பாதுகாப்புத் தேடுகிறேன்** |
| ஷைத்தான் அல்லாஹ்வின் அருளிற்குரியவனா? அவன் விரட்டப்பட்டவன். எனவேதான் ரஜீம் என்றால் விரட்டப்பட்டவன், தூக்கி வீசப்பட்டவன் என பொருள். | مِن - இருந்து, (குர்ஆனில் இது சுமார் 3000 முறை வருகின்றது) | الله - அல்லாஹ்<br>بِ - விடம் | அல்லாஹ்வின் பாதுகாப்பில் |
| **மொழிபெயர்ப்பு : விரட்டப்பட்ட ஷைத்தானைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்** | | | |

- எல்லாவற்றிற்குமுன் தன்னைப் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக உணருங்கள். ஏனெனில், நீங்கள் ஷைத்தானின் தாக்குதல்களுக்கு ஆளாகியிருக்கிறீர்கள் அதற்கான ஒரே மருந்து, ‘அவூது பில்லாஹ்’ வாகும்.
- எப்பணியைத் துவங்கினாலும் தன் பாதுகாப்பை முதலில் கவனம் வைக்க வேண்டும். என போதிக்கப்படுகிறது (Safety First - Fasten your seat belt - முதலில் பாதுகாப்பு! வார்ப் பூட்டைப் பூட்டு)
- அல்லாஹ்வின் (திக்ர்) ஞாபகம் வரும்போதெல்லாம் அல்லாஹ்வின் பக்கம் நெருங்குவதாக உணருங்கள். அவனது அருளின் மீது முழுமையான நம்பிக்கை இருப்பதோடு தன் பாவங்களின் காரணமாக அல்லாஹ்வின் பிடியையும் அஞ்சவேண்டும்.
- நம் ஒவ்வொருவருடன் ஷைத்தான் சேர்ந்தே இருக்கிறான். அவனை மிகக்கொடிய விரோதியாக உணருவதோடு, வானவர்களும் தன்னுடன் இருப்பதாகவும் உணரவேண்டும்.
- ரஜீம் என ஏன் சொல்லப்பட்டுள்ளது? அவன் மிகக்கீழ்த்தரமானவன் என்பதை நம் சிந்தனையில் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். அவனைப் போன்றே மற்றவர்களும் மாறிவிடவே அவன் விரும்புகிறான்.

**சூரா அல் ஃபாத்திஹா 1-3 வசனங்கள்**

<table>
<tr><td>182<br>الرَّحِيمِ</td><td>57<br>الرَّحْمَٰنِ</td><td>اللَّهِ</td><td colspan="2">39<br>بِسْمِ</td></tr>
<tr><td>நிகரற்ற அன்புடையோன்</td><td>அளவற்ற அருளாளன்</td><td>அல்லாஹ்</td><td colspan="2">பெயரைக் கொண்டு</td></tr>
<tr><td rowspan="2">இது போன்ற அரபி வார்த்தைகள் “என்றென்றும்” என்ற பொருளை சேர்த்து தருகிறது உதாரணமாக: ஜமீல்: என்றென்றும் அழகானவன் (நேற்று வரை அழகற்று இருந்தான், இன்று அழகாகி விட்டான் என்பதல்ல) கரீம்: என்றென்றும் நற்குணம் படைத்தவன், ரஹீம்: என்றென்றும் அன்புடையோன்</td><td rowspan="2">இது போன்ற அரபி வார்த்தைகள் “மிகவும்” என்ற பொருளை சேர்த்து கொடுக்கிறது, உதாரணமாக:<br>عَطْشَانُ அத்ஷான்: மிகவும் தாகத்தில் இருப்பவன்,<br>جَوْعَانُ ஜவ்ஆன்: மிகவும் பசியில் இருப்பவன்,<br>الرَّحْمَٰنِ ரஹ்மான்: மிகவும் அருள் புரிபவன்</td><td rowspan="2">اللَّه<br>அல்லாஹ் என்பது சுய பெயராகும், மற்ற அர்ரஹீம், அல்கரீம், அல் கஃபூர் போன்ற யாவும் அவனது தண்மை பெயர்களாகும்</td><td>اِسْم</td><td>بِ</td></tr>
<tr><td>பெயர்</td><td>கொண்டு</td></tr>
<tr><td colspan="5">மொழிபெயர்ப்பு : அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு துவங்குகிறேன்</td></tr>
</table>

- அல்லாஹ்வின் பெயர்கள் முழுவதும் அருள் நிறைந்தவை அவனை நாம் நினைவு கூர்ந்தால், அவன் நம்மை நினைவுகூர்கின்றான் அவன் நம்மை நினைவு கூரும்பொழுது, நாம் செய்கின்ற எந்த செயல்களைக் குறித்தும் முடிவுகள் பற்றி கவலை கொள்ளவேண்டாம்.
- அல்லாஹ்வின் இரக்க சிந்தனையை கற்பனை செய்து பாருங்கள். பின்னர் அவனது அருட்கொடைகளையும் உணர்ந்து பாருங்கள், பிஸ்மில்லாஹ் என படிக்கும் போது ரஹ்மான், ரஹீம் தன்னுடன் இருப்பதாக முழுமையாக நம்பிக்கை வையுங்கள்.
- தொடர்ந்து அல்லாஹ்வின் தொடர் அருளை உணருங்கள். நீங்கள் தூங்கும் போதும் சரி

<table>
<tr><td>73<br>الْعَالَمِينَ</td><td>رَبِّ</td><td colspan="2">لِلَّهِ</td><td>43<br>الْحَمْدُ</td></tr>
<tr><td>அகிலத்தார்கள்</td><td>இரட்சகன் (பரிபாலிப்பவன்)</td><td colspan="2">அல்லாஹ்விற்கே</td><td>அனைத்துப் புகழும், நன்றியும்</td></tr>
<tr><td rowspan="3">ஆலம்: உலகம்,<br>அதன் பன்மை: ஆலமூன், ஆலமீன்.<br>ஆலிம்: அறிஞர்<br><br>கணக்கில் அடங்கா, மனிதர்கள், ஜீவராசிகள், வான் வெளி கிரகங்கள், கோள்கள்..</td><td rowspan="3">கோடிக்கணக்கான செல்கள் நம்மிடம் நம்மையறியாமல் உருவாகிறது.. இறக்கவும் செய்கிறது.</td><td>لِلَّه</td><td>لِ</td><td rowspan="3">ஹம்து என்பதற்கு இரு பொருள்கள் உள்ளன.<br>எல்லாப் புகழ், நன்றி</td></tr>
<tr><td>அல்லாஹ்</td><td>க்காக</td></tr>
<tr><td colspan="2">அல்லாஹு க்காக</td></tr>
<tr><td colspan="5">மொழிபெயர்ப்பு: அனைத்துப் புகழும் அகிலத்தினர்களின் ரப் (இரட்சகன்) ஆகிய அல்லாஹ்விற்கே (உரியது)</td></tr>
</table>

- அவன் நமக்கு அருள் செய்தமைக்கு நன்றிசெலுத்துங்கள் நமக்கு உணவென்றும் பாதுகாப்பென்றும் வழங்கியமையை எண்ணிப்பாருங்கள்.
- உள்ளத்தால் அவனைப்புகழுங்கள். அல்லாஹ்வின் உபகாரங்களை நினைவுகூர்ந்தவாறு அவனுக்கு நன்றி செலுத்துங்கள்.
- அவன் ரப்பாக இருக்கின்றான் என்றால், ஒவ்வொரு தேவையாக நிறைவு செய்து வளர்ப்பவன் என பொருள். அவன் கோடிக்கணக்கான படைப்பினங்களை வளர்க்க ஒவ்வொன்றிற்கும் அனைத்து தேவையான சாதனங்களையும் எவ்வாறு ஏற்பாடு செய்கின்றான் என சிந்தித்துப் பாருங்கள்.
- **சரிபார்த்தல்:** எத்தனை முறை நான் உலகின் அலங்காரம், சமுதாயம், பெரிய மனிதர்களால் கவரப்பட்டுள்ளேன். (ஆனால்) அல்ஹம்து லில்லாஹ் சொல்ல (அல்லாஹ்வைப் புகழ) மறந்து விட்டேன்? எத்தனை முறை நான் அல்லாஹ்வின் உபகாரங்களை நினைவுகூர்ந்தவாறு அவனுக்கு நன்றி செலுத்தியுள்ளேன்?

| الرَّحِيْمِ | الرَّحْمٰنِ |
|---|---|
| **நிகரற்ற அன்புடையோன்** | **அளவற்ற அருளாளன்** |
| **மொழிபெயர்ப்பு : அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோனாக இருக்கின்றான்** | |

- இவ்வார்த்தைகளின் தெளிவுரை மேலே பிஸ்மில்லாஹ்வில் சென்றுவிட்டது நாம் அவனுக்கு தொடர்ந்து மாறு செய்து கொண்டிருந்தும், நம்மீது தொடர்ந்து அருட்கொடைகளை பொழிந்து கொண்டிருக்கிறான் என்பதிலிருந்து அவனது அருளை உணர்ந்து பாருங்கள்.
- அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் என்ற இரு தன்மைகள் சேர்ந்தவாறு (வந்து) இருக்கிறது அதாவது அவன் அருள்மழை தொடர்ந்து பொழிந்து கொண்டே இருப்பவன் (எனப் பொருள்)
- அல்லாஹ் உங்கள் மீது அருள் புரியவேண்டும் என்றால் மற்றவர்களின் மீது நீங்களும் இரக்கப்படுங்கள், அன்பு காட்டுங்கள் எனவேதான் அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் சொன்னார்கள் "யார் (பிறர் மீது) இரக்கப்படமாட்டார்களோ, அவர்கள் மீது அருள் புரியப்படுவதில்லை"

## இலக்கணம்:

ஒவ்வொரு மொழியிலும் ஒருமையை பன்மையாக்க சில விதிகள் உள்ளன. உதாரணமாக: ஆங்கிலத்தில் Muslim என்பதில் S இணைத்து Muslims என்றால் பன்மையாகிவிடும். அதைப்போன்று அரபி மொழியிலும் ஒருமையை பன்மையாக்க (பல விதிகளில்) ஒரு விதி ونَ-வூன் அல்லது ينَ ஈன் சேர்ப்பதால் பன்மையாகி விடும், அரபி மொழியில் சுமார் 60 விழுக்காடு பன்மைகள் இதே முறையிலேயே வருகின்றன,

நினைவில் இருக்கட்டும்: விரைவில் எளிய முறையில் வார்த்தைகளைக் கற்றுக்கொள்ள இலக்கணத்தின் ஒவ்வொரு பாடத்தையும் TPI முறையிலேயே பயிற்சி செய்யுங்கள்.

| பன்மை | ஒருமை | |
|---|---|---|
| كَافِرُون– كَافِرِين | நிராகரிப்பவன் | كَافِر |
| مُشْرِكُون – مُشْرِكِين | இணை வைப்பவன் | مُشْرِك |
| مُنَافِقُون – مُنَافِقِين | நயவஞ்சகன் | مُنَافِق |

| பன்மை | ஒருமை | |
|---|---|---|
| مُسْلِمُون – مُسْلِمِين | அடிபணிந்தவன் | مُسْلِمٌ |
| مُؤْمِنُوْن – مُؤْمِنِين | விசுவாசி | مُؤْمِن |
| صَالِحُون – صَالِحِين | நல்லவன் | صَالِح |

இப்பொழுது இவ்வார்த்தைகளை هو- ஹு வ இன்னும் هُم-ஹு ம் மை இணைத்து TPI முறையை பயன்படுத்தி பயிற்சி செய்யுங்கள்.

| பிரதிப் பெயர்ச்சொற்கள் | | எண் Number | நபர் |
|---|---|---|---|
| அவன் முஸ்லிம் | هُوَ مُسْلِم | ஒருமை *Sr.* | படர்க்கை *3rd Person* |
| அவர்கள் முஸ்லிம்கள் | هُمْ مُسْلِمُون | பன்மை *Pl.* | |
| நீ முஸ்லிம் | اَنْتَ مُسْلِم | ஒருமை *Sr.* | முன்னிலை *2nd Person* |
| நீங்கள் முஸ்லிம்கள் | اَنْتُمْ مُسْلِمُون | பன்மை *Pl.* | |
| நான் முஸ்லிம் | اَنَا مُسْلِم | ஒருமை *Sr.* | தன்னிலை *1st Person* |
| நாங்கள் முஸ்லிம்கள் | نَحْنُ مُسْلِمُون | பன்மை *Pl. - dl.* | |

முதல் மூன்று தடவைகள் இந்த 6 சொற்களையும் பொருளுணர்ந்து பயிற்சி செய்யவும் அதாவது هُوَ مُسْلِم அவன் முஸ்லிம் هُمْ مُسْلِمُون அவர்கள் முஸ்லிம்கள் اَنْتَ مُسْلِم நீ முஸ்லிம் اَنْتُم مُسْلِمُون நீங்கள் முஸ்லிம்கள் اَنَا مُسْلِم நான் முஸ்லிம் نَحْنُ مُسْلِمُون நாங்கள் முஸ்லிம்கள் என்று சுட்டிக் காட்டிச் சொல்லவும்.

நீங்கள் சொல்ல நினைப்பதை உங்கள் கையின் மூலம் சுட்டிக்காட்டிவிடுவீர்கள் என்பதால், மூன்று சுற்றுக்களுக்குப் பின்னர் மொழி பெயர்க்க வேண்டிய தேவை உங்களுக்கு இருக்காது. சாதாரணமாக சொல்லுங்கள். பலரிடம் **TPI** ஐப் பயன்படுத்துவதின் உடனடி பயன் இதுதான். இந்தச் சொற்களை மொழி பெயர்க்காமல் மேலே சொன்ன படிநிலைகளைத் தொடர்ந்து செய்யவும் ஓர் ஐந்து நிமிட பயிற்சி இந்த ஆறு சொற்களையும் இன்னும் பலவற்றையும் கற்றுக்கொள்வதையும் மிக எளிதாக்கிவிடும்.

பயிற்சி மேற்கொள்கின்றபோது, 'வூன்' 'ஈன்' என்று எவ்வாறு அறிந்து கொள்வது என்றெல்லாம் கவலை கொள்ள வேண்டாம். இந்த ஆறு சொற்கள் மற்றும் அவற்றின் பொருள்களில் முழுக் கவனம் செலுத்தினால் மட்டும் போதுமானது.

**பாடம் எண் : 2**
**சூரா அல் ஃபாத்திஹா**
**(1-3)**




**வினா 1:** காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழி பெயர்ப்புகளைக் கொண்டு நிரப்புங்கள்

| الرَّجِيمِ. | مِنَ الشَّيْطَانِ | بِاللهِ | أَعُوذُ |
|---|---|---|---|
| | | | |

| الرَّحِيْمِ (1) | الرَّحْمٰنِ | اللهِ | بِسْمِ |
|---|---|---|---|
| | | | |

| الرَّحِيْمِ (3) | الرَّحْمٰنِ | الْعٰلَمِيْنَ (2) | رَبِّ | لِلّٰهِ | اَلْحَمْدُ |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**வினா 2:** நாம் اَعُوْذُبِاللّٰه அவூதுபில்லாஹ்வை எவ்வித உணர்வுகளோடு படிக்கவேண்டும்?
**விடை :**

**வினா 3:** சில உதாரணங்கள் மூலம் அல்லாஹ்வைப் புகழுங்கள்?

**விடை :**

**வினா 4:** الرَّحْمٰنِ மற்றும் الرَّحِيْمُ இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

**விடை :**

**வினா 5:** அல்லாஹ் அனைத்து உலகங்களுக்கும் இரட்சகன்- மூன்று உலகங்களின் உதாரணங்களைக் குறிப்பிடுக?

**விடை :**

## 2-வது பாடத்திற்கான இலக்கண வினாக்கள்

**வினா 1 :** எவ்வாறு مُسْلِم என்ற வார்த்தையைக் கொண்டு வாக்கியங்கள் உருவாக்கப்பட்டுள்ளதோ அவ்வாறே காலியிடங்களில் கீழே கொடுக்கப்பட்ட மற்ற மூன்று வார்த்தைகளுக்கும் வாக்கியம் உருவாக்குங்கள்

| صَالِحٌ | مُؤْمِنٌ | مُسْلِم | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|
| | | هُوَ مُسْلِم | ஒருமை واحد *Sr.* | படர்க்கை *3rd Person* غائب |
| | | هُمْ مُسْلِمُون | பன்மை جمع *Pl.* | |
| | | أَنْتَ مُسْلِم | ஒருமை واحد *Sr.* | முன்னிலை *2nd Person* حاضر |
| | | أَنْتُمْ مُسْلِمُون | பன்மை جمع *Pl.* | |
| | | أَنَا مُسْلِم | ஒருமை واحد *Sr.* | தன்னிலை *1st Person* متكلّم |
| | | نَحْنُ مُسْلِمُون | பன்மை مثنى dl. جمع pl. | |

| **வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக** | |
|---|---|
| مِنَ + اللهِ= مِنَ اللهِ | அல்லாஹ்விடமிருந்து |
| هُوَرَبٌّ | |
| فَهُوَ مُؤمِنٌ | |
| فَاللهُ | |
| فَلِلّهِ | |

| **வினா 3 : தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும்** | |
|---|---|
| எனவே அவர்கள் முஸ்லிம்கள் | |
| மேலும் நாங்கள் ஈமான் கொள்பவர்கள் | |
| மேலும் நான் பாதுகாவல் தேடுகிறேன் | |
| நீங்கள் நல்லவர்கள் | |
| அவன் இணை வைப்பவன் | |

| |
|---|
| **பாடம் எண் : 3**<br>**சூரா அல் ஃபாத்திஹா**<br>**வசனம் 4-5** |

**இப்பாடத்தின் முடிவின் போது நீங்கள் 18 புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்வீர்கள் அவை குர்ஆனில் சுமார் 5990 முறை வருகின்றன.**

| | | | |
|---|---|---|---|
| 4 | பரப்பு | கேள் | 1 |
| | புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | | |
| 3 | திட்டமிடு | மதிப்பிடு | 2 |

أعوذ بالله من الشيطان الرجيم ﴿ بسم الله الرحمن الرحيم ﴾

| الدِّيْنِ ④ [92] | يَوْمِ [393*] | مَالِكِ |
|---|---|---|
| **பகரம் (கூலி)** | **நாள்** | **அதிபதி** |
| தீன் என்பதற்கு இரு பொருள்கள் உள்ளன<br>1) பகரம்<br>2)மனித பண்பாடு<br>(இஸ்லாமிய மார்க்கம்) | உதாரணமாக:<br>يَوْمُ الجمُعَة ஜு ம்ஆவின் நாள்,<br>يَوْمُ اُلقِيٰمَةِ கியாம நாள்.<br>அதன் பன்மை : اَيَّام அய்யாம் | மாலிக்: அதிபதி,<br>மலக்:வானவர் மலகுல் மௌத் என சொல்வது போல |
| **மொழிபெயர்ப்பு : பகரம் (கூலி) வழுங்கப்படும் நாளின் அதிபதி** | | |

- அந்நாளில் யாரிடமும் எந்த சக்தியும் இருக்காது, அல்லாஹ் மட்டுமே (அந்நாளின்) அதிபதி மற்றும் அதிகாரம் செலுத்துபவன் அதுவும் நீதமான மற்றும் சிறந்த முறையில்.
- அந்நேரத்தில் அல்லாஹ் அனுமதி வழங்கியவர்களைத் தவிர வேறு யாராலும் பரிந்துரை செய்ய முடியாது.
- அந்நாளின் திடுக்கிட வைக்கும் பயங்கரமான நிலையை சிந்தனையில் கொண்டு வாருங்கள். அந்நாளின் சகித்துக் கொள்ள முடியாத நிலையைப் புரிந்து கொள்ள முயற்சிசெய்யுங்கள். அந்நாளில் மனிதன் தனது சகோதரன், தனது தாய், தந்தை, மனைவி, மக்களைவிட்டு விரண்டோடுவான். அந்நாளில் ஒவ்வொருவருக்கும் தன்னிலை பற்றிய சிந்தனை மட்டும் தான் இருக்கும்.
- இவ்வசனத்தை ஓதும்போது நம்பிக்கை இருப்பதோடு அச்சமும் இருக்க வேண்டும், நாம் கேட்காமலேயே அவனது அருளால் மட்டுமே நம்மை முஸ்லிம்களாக்கினான். நாம் இப்பொழுது மன்னிப்பையும் சுவர்கத்தையும் கேட்கிறோம், அவசியம் இதையும் ஏற்றுக்கொள்வான் என நம்புகிறோம் இத்துடனே பாவங்களின் காரணத்தால் தண்டித்து விடக்கூடாது என்ற அச்சமும் இருக்க வேண்டும். இருந்தும் பாவங்களை விட்டு திருந்தி நல்லவர்களாக முயற்சிக்க வேண்டும்.

| نَسْتَعِيْنُ ⑤ | وَإِيَّاكَ | | | نَعْبُدُ | إِيَّاكَ [24*] | |
|---|---|---|---|---|---|---|
| **நாம் உதவி தேடுகிறோம்** | **உன்னிடமே** | | | **நாங்கள் வணங்குகிறோம்** | **உன்னை மட்டுமே** | |
| வணங்குவதற்கும், எது ஒன்றை செய்வதற்கும் நமக்கு அல்லாஹ்வின் உதவி தேவை. | كَ | اِيَّا | وَ | عِبَادَة இபாதத் : வணக்கம்,<br>عَابِد ஆபித் : வணங்குபவன்,<br>مَعْبُود மஃபூத் : வணங்கத் தகுதி படைத்தவன் | كَ | اِيَّاكَ |
| | உன்னிடம் | மட்டுமே | மேலும் | | உன்னை | யே |

| |
|---|
| **மொழிபெயர்ப்பு : (அல்லாஹ்வே!) உன்னையே வணங்குகிறோம், மேலும் உன்னிடமே உதவியும் தேடுகிறோம்.** |

- வாழ்வின் நோக்கமே உன்னை வணங்குவதாகும், இது இஸ்லாமியனின் வாழ்க்கையின் (mission statement) முக்கிய வாக்குமூலம் ஆகும். எனவேதான் அல்லாஹ் சொல்கிறான்: ஜின் மற்றும் மனித இனத்தை என்னை வணங்குவதற்காகவே நான் படைத்தேன் (سورةُ الذّارِيَات) சூரத் அல் தாரியாத் அத்தியாயம் (51:56)

- வணக்கம் என்றால் என்ன? தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ், அழைப்புப்பணி, உபதேசித்தல், தியாகம், கல்வி கற்றல், சம்பாதித்தல், பிறருக்குப் பணிவிடை செய்தல் போன்றவை எனினும் எல்லாவற்றையும் விட தொழுகை முதன்மையானதாகும் ஏனெனில் தொழுகையை விட்டவன் இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து வெளியேறி விட்டான் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

- நாம் மிக பலவீனமானவர்கள். அல்லாஹ்வின் உதவியின்றி தன் தாகத்தைக்கூட தணிக்க முடியாது இவ்வாறிருக்க நாம் வணக்கங்கள் புரிவது எவ்வாறு முடியும்? எனவேதான் உன்னை வணங்குவதற்கு குறிப்பாக நீ விரும்பிய விதத்தில் உன்னை வணங்க உனது உதவி தேவைப்படுகிறது. (எனவே) அல்லாஹ்வே! எங்களுக்கு சிறந்த முறையில் உன்னை வணங்க உதவி செய்வாயாக! ஏன, ஆழ் மனதிலிருந்து பிரார்த்திப்பீர்களாக! ஆமீன்.

## இலக்கணம்:

நாம் இதற்கு முன்னுள்ள பாடங்களில் ***“அவன், அவர்கள், நீ, நீங்கள், நான், நாங்கள்”*** என்பதற்கான அரபி வார்த்தைகளைப் படித்தோம். இப்பொழுது ***“அவனுடைய, அவர்களுடைய, உன்னுடைய, உங்களுடைய, என்னுடைய, எங்களுடைய”*** என்பதற் கான அரபி வார்த்தைகளை படிக்க இருக்கிறோம். அவை : ـهُ – هُمْ – كَ – كُمْ – ي _ نَا என்ற பிரதிப்பெயர்களாகும், இவை எல்லா நிலையிலும் இணைந்தே வரும் எனவே இவைகளை கணக்கிடுவது சிரமம். இவை குர்ஆனில் ஒவ்வொரு வரியிலும் அதாவது சுமார் 10,000 முறை வருகிறது. இவற்றை TPI முறையிலேயே ஆர்வத்தோடு பயிற்சி செய்யுங்கள். رَبّ என்ற வார்த்தை ஏரத்தாழ குர்ஆனில் 970 முறை வந்துள்ளது.

| உதாரணம் | | இணைந்து வருகின்ற பிரதிப் பெயர்ச்சொற்கள் | | எண் Number | நபர் |
|---|---|---|---|---|---|
| அவனுடைய ரப் | رَبُّهُ رَبِّهِ | அவனுடைய | ـهُ + ـهِ | ஒருமை Sr. | படர்க்கை 3rd Person |
| அவர்களுடைய ரப் | رَبُّهُمْ رَبِّهِمْ | அவர்களுடைய | ـهُمْ + ـهِمْ | பன்மை Pl. | |
| உன்னுடைய ரப் | رَبُّكَ | உன்னுடைய | ـكَ | ஒருமை Sr. | முன்னிலை 2nd Person |
| உங்களுடைய ரப் | رَبُّكُمْ | உங்களுடைய | ـكُمْ | பன்மை Pl. | |
| என்னுடைய ரப் | رَبِّي | என்னுடைய | ـي | ஒருமை Sr. | தன்னிலை 1st Person |

| | | | | |
|---|---|---|---|---|
| எங்களுடைய ரப் | رَبُّنَا | எங்களுடைய ـنَا | பன்மை *Pl. - dl.* | |

**பாடம் எண் : 3**
**சூரா அல் ஃபாத்திஹா**
**வசனம் 4-5**

4 பரப்பு | கேள் 1
புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்
3 திட்டமிடு | மதிப்பிடு 2

**கேள்வி எண் 1:** காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழி பெயர்ப்புளைக் கொண்டு நிறப்புங்கள்

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿4﴾

| | | |
|---|---|---|
| | | |

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿5﴾

| | | | |
|---|---|---|---|
| | | | |

**கேள்வி எண் 2:** மறுமைக்கு நாம் எவ்வாறு தயாராக இருக்க வேண்டும்?

**பதில்:**

**கேள்வி எண் 3:** ‘தீன்’ என்றால என்ன பொருள்?

**பதில்:**

**கேள்வி எண் 4:** நம் வாழ்வின் நோக்கம் என்ன?

**பதில்:**

**கேள்வி எண் 5:** நாம் ஏன் அல்லாஹ்வின் உதவியை கேட்கிறோம்?

பதில்:

## 3 –வது பாடத்திற்கான வினாக்கள்

**வினா 1)** ரப் (رَبّ) என்ற வார்த்தையோடு பிரதிப்பெயர்ச்சொற்களை இணைத்து வாக்கியம் அமைக்கப்பட்டுள்ளது போல காலியிடங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள மற்ற வார்த்தைகளைக் கொண்டும் வாக்கியம் அமையுங்கள்

| آيَات | دِيْن | كتَاب | رَبّ | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|
| | | | ـهٗ ، رَبُّهٗ | ஒருமை واحد Sr. | படர்க்கை 3rd Person غائب |
| | | | ـهُمْ ، رَبُّهُمْ | பன்மை جمع Pl. | |
| | | | ـكَ ، رَبُّكَ | ஒருமை واحد Sr. | முன்னிலை 2nd Person حاضر |
| | | | ـكُمْ، رَبُّكُمْ | பன்மை جمع Pl. | |
| | | | ـِي، رَبِّي | ஒருமை واحد Sr. | தன்னிலை 1st Person متكلّم |
| | | | ـنَا، رَبُّنَا | பன்மை pl. جمع dl. مثنى | |

| **வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | மேலும் அவர்களது மார்க்கம் |
| | அவன் நமது ரப் |
| | நீ எனது ரப் |

| **வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | اِسْمُهٗ |
| | اللّٰهُ رَبُّنَا وَرَبُّكُمْ |
| | يَوْمِهِمْ |

| | | | |
|---|---|---|---|
| | உங்களுடைய ரப் அன்பு காட்டுபவன் | | فَرَبُّكَ |
| | நாங்கள் உதவி தேடுகிறோம் | | مِنْ رَّبِّهِمْ |

| பாடம் எண் : 4<br>சூரா அல் ஃபாத்திஹா<br>வசனங்கள் 6-7 | இப்பாடத்தின் முடிவின் போது நீங்கள் 24 புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்வீர்கள். அவை குர்ஆனில் சுமார் 9118 முறை வருகின்றன. | 4 பரப்பு / கேள் 1<br>புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்<br>3 திட்டமிடு / மதிப்பிடு 2 |
|---|---|---|

﴿أعوذ بالله من الشيطان الرجيم﴾ ﴿بسم الله الرحمن الرحيم﴾

| الْمُسْتَقِيمَ ⑥ [37] | الصِّرَاطَ [46] | | اِهْدِنَا |
|---|---|---|---|
| நேரான | பாதை | | எங்களை நடத்துவாயாக! |
| உதாரணமாக: خَط مُسْتَقِيم நேரான கோடு (என்பது போல) | (ஆங்கிலத்தில் The என்பது போல) அரபி மொழியில் الْ என்பது குறிப்பிட்ட ஒன்றை குறிப்பிடும்போது இணைக்கப்படும் الصِّراط ஒரு குறிப்பிட்ட பாதை | نَا | اِهْدِ |
| | | எங்களை | நடத்து வாயாக! |
| **மொழிபெயர்ப்பு : நேரான வழியில் எங்களை நடத்துவாயாக!** | | | |

- முஸ்லிமாக இருப்பது (மட்டும்) நேர்வழியில் இருப்பதாக அர்த்தமா? இவ்வாறே அர்த்தம் என்றால் இப்பிரார்த்தனை முஸ்லிம் அல்லாதவர்களுக்கல்லவா சொல்லப்பட்டிருக்க வேண்டும்? முஸ்லிமாக இருப்பது என்பது நேர்வழியின் முதல் படிக்கட்டாகும்.
- ஹிதாயத் என்பதன் பொருள் ''**வழிகாட்டு**'' என்றும், ''**வழிநடத்து**'' என்றும் சொல்லப்பட்டுள்ளது, இரண்டிற்குமுள்ள வேறுபாடு மிகப்பெரியது, (பாதத்தின்) ஒவ்வொரு அடிக்கும் அல்லாஹ்வின் வழிநடத்துதல் நமக்கு தேவைப்படுகிறது.
- நேர்வழி எங்கிருந்து கிடைக்கிறது? குர்ஆனிலும், நபிவழியிலும். குர்ஆன் என்பது هُدًى لِلْمُتَّقِينَ (பயபக்தியாளர்களை வழிநடத்துகிறது) என்றும், هدًى لِلنّاسِ (மனிதர்களுக்கு வழிகாட்டுகிறது) என்றும் சொல்கிறது, குர்ஆனை விளங்குவதற்கான முயற்சியோ, நபிமொழிகளை படிப்பதற்கான சிந்தனையோ இல்லாத போது இந்த துஆ மட்டும் போதுமா? தன்னை சரிபார்த்து (இதற்காக) திட்டமிடுங்கள்.
- ஞாபகம் இருக்கட்டும் : குர்ஆனை விளங்குவது அவசியம் மட்டுமல்ல எமர்ஜென்ஸி (அவசர நிலை) என்பதை ஒவ்வொரு தொழுகையும் ஞாபகமூட்டுகிறது.
- இத்தொழுகைக்குப்பின் இன்று, இவ்வாரத்தில் நான் செய்கின்ற அனைத்திலும் அல்லாஹ்வே! (நீயே) நேரான வழியில் என்னை நடத்துவாயாக! என்ற பொருளும் இதற்கு கூறலாம்.

| عَلَيْهِمْ | | أَنْعَمْتَ | الَّذِينَ [1080] | صِرَاطَ |
|---|---|---|---|---|
| எவர்கள் மீது | | நீ அருள்புரிந்தாய் | அத்தகையோர் | வழி |
| هِمْ | عَلَى | انعام - இன்ஆம்- அருட்கொடை, (பரிசு) | الَّذِيْنَ என்பது ( الَّذِىْ என்பதின் பன்மையாகும், இது) குர்ஆனில் 1080 முறை வருகிறது | இதன் விவரம் மேலே கூறப்பட்டு விட்டது |
| அவர்கள், எவர்கள். | மீது | | | |
| **மொழிபெயர்ப்பு : எவர்கள் மீது நீ அருள்புரிந்தாயோ அத்தகையோரின் வழி** | | | | |

- அல்லாஹ் எவர்கள் மீது அருள்புரிந்துள்ளான்? நபிமார்கள், ஸித்தீகீன் (ஏன், எதற்கு என்ற கேள்வியின்றி அல்லாஹ் இன்னும் ரசூலை ஏற்றவர்)கள், உயிர் தியாகம் செய்தவர்கள், நல்லவர்கள் (போன்றோர்)மீது ஏனெனில் இவர்கள் அல்லாஹ் கட்டளையிட்ட வழியை அப்படியே தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

- அவர்களின் வழி என்னவாக இருந்தது?

1) செயல்பாட்டின் வழி
   (அ) (அந்தரங்க) இதய ரீதியான செயல்பாடுகள் : ஈமான், உளத்தூய்மை, அன்பு, முழுமையான இறை நம்பிக்கை போன்றவை.
   (ஆ) (வெளிப்படையான) மற்ற செயல்பாடுகள் : தொழுகை, நோன்பு, ஜகாத் போன்றவை.
2) அழைப்பு மற்றும் சீர்திருத்தப் பணியின் வழி
3) (தன்னையும், பிறரையும்) பரிசுத்தப்படுத்தி நன்னெறியில் கொண்டு வரும் வழி
4) (மேற்கூறப்பட்டவைகளை) நடைமுறைப்படுத்தும் வழி அதாவது அல்லாஹ்வின் கலிமா (லாயிலாஹ இல்லலல்லாஹு )வை மேலோங்கச்செய்தல். மக்களின் முன்னிலையில் இதனைச் சாட்சி சொல்லுதல், அல்லாஹ்வின் பாதையில் தியாகங்கள் செய்தல், நல்லதை ஏவி தீயதை தடுத்தல் போன்றவைகளின் வழி.

- அல்லாஹ்விடம் பிரார்த்தித்த பின் (யார்)யாருடைய வழிகளில் நாம் சென்று கொண்டிருக்கிறோம் என (தன்னைத்தானே) சரி பார்த்து, சரியானவர்களின் வழியில் செல்ல திட்டமிடுங்கள்.

| الضَّآلِّيْنَ ۝7 | وَ لاَ [1732] | | عَلَيْهِمْ | | الْمَغْضُوبِ | غَيْرِ [147] |
|---|---|---|---|---|---|---|
| **வழிதவறியவர்கள்** | **மேலும் இல்லை** | | **அவர் (எவர்) கள் மீது** | | **கோபத்திற்குள்ளானவர்கள்** | **மாறாக** |
| ضَالّ : (வழி தவறியவன்) என்ற வார்த்தையின் பன்மை ضالين இது ضَلاَلَت என்ற வார்த்தையிலிருந்து பிறந்ததாகும் | لاَ | وَ | هِمْ | عَلَى | இவ்வார்த்தை مَظْلُوْم (மழ்லூம்) என்பதைப்போலவாகும். مَظْلُوْم– அநீதியிழைக்கப்பட்டவன், مَغْضُوب - கோபிக்கப்பட்டவன் | இல்லை, தவிர போன்ற பொருள்கள் உள்ளன, |
| | இல்லை | இன்னும் | அவர்கள் | மீது | | |
| **மொழிபெயர்ப்பு : (அவ்வழி உன்) கோபத்திற்குள்ளானவர்களுடையதும் அல்ல, வழி தவறியவர்களுடையதும் அல்ல.** | | | | | | |

- مَغْضُوْب -கோபத்திற்குள்ளானவர்கள் யார்? : தெரிந்து வைத்திருக்கிறார்கள் ஆனால் செயல்படவில்லை. நமது நிலை என்ன? தெரிந்திருந்தால் செயல்படலாம், தெரியாமலிருந்தால் தெரிந்து கொள்ளலாம்.

- அல்லாஹ் யார் மீது கோபப்பட்டுவிட்டானோ அவர்களின் இம்மை மறுமையின் முடிவு (கதி) என்னவாகும் என சற்று கற்பனை செய்து பாருங்கள்.

- எவர்களை நாம் கதாநாயகர்களாகவும், தலைவர்களாகவும் கருதி, அவர்களைப் பின்பற்றுகிறோமோ, அவர்கள் அல்லாஹ்வினால் அருள்பெற்ற பிரிவினர்களோடு உள்ளார்களா? அல்லது மற்ற (இரு கோபத்திற்குள்ளான, வழிதவறிய) பிரிவினர்களோடு உள்ளார்களா? (சிந்தித்துப் பாருங்கள்)

- ضَالِّيْن -வழிதவறியவர்கள் என்றால் அறியாதவர்கள் என பொருள்படும். (நமது நிலை என்ன?) நமது வீடுகளில் குர்ஆன் இருக்கிறது ஆனால் அதைவிட்டு விலகி ஓடுகிறோம் என்ற நிலை ஏற்படவே கூடாது. அரபி மொழி தெரியாததின் காரணமாக குர்ஆனை விட்டு (விலகி)விலகிச் செல்கிறோமா? இன்றே : நாம் குர்ஆனில் உள்ள அரபியை அதாவது அதன் பாடங்களை கற்க ஆரம்பித்து விட்டோம், இனி விடவே மாட்டோம் என சபதம் எடுத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் நமக்கு இதைக் கற்க எளியதாக ஆக்கிவைப்பானாக!

- (அல்லாஹ்விடம்) பிரார்த்தனை செய்வதோடு (தன்னிலையை) சரிபார்த்து, ஒரு திட்டத்தோடு இதை பரப்பவும் ஆரம்பித்துவிடுங்கள்.

**ஒரு முக்கிய கருத்து பரிமாற்றம்:** சூரா அல் பாத்திஹாவை ஓதும்போது (பின் வருகின்ற) இந்த நபிமொழியை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்: ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்:

அல்லாஹ் கூறுகிறான் : ‘நான் தொழுகையை (சரிபாதியாக) எனக்கும் எனது அடியானுக்கு மத்தியில் பங்கிட்டு விட்டேன், பாதி எனக்குரியது, (மறு)பாதி எனது அடியானுக்குரியது, எனது அடியான் என்னிடம் எதைக் கேட்கிறானோ அதை நான் கொடுக்கிறேன், எனது அடியான் اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْن என சொல்கிறானோ, حَمِدَنِى عَبْدِى (ஹமிதனீ அப்தீ)-என்னை எனது அடியான் (உள்ளமும் உயிரும் இணைந்து நாவால்) புகழ்கிறான் என்கிறான். எனது அடியான் الرَّحْمٰنِ الرَّحِيْمِ என சொல்கிறானோ اَثْنَى عَلَىَّ عَبْدِىْ-(அத்னா அலய்ய அப்தீ- என்னை (நாவினால்) என் அடியான் திரும்பவும் புகழ்கிறான் என்கிறான்). எனது அடியான் مَالِكِ يَوْمِ الدِّيْن என சொல்கிறானோ مَجّدَنِى عَبْدِىْ (மஜ்ஜதனீ அப்தீ- என் அடியான் என் கம்பீரத்தையும் மகிமையையும் எடுத்துரைத்தான் என்கிறான். اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْن என சொல்கிறானோ, இது எனக்கும் எனது அடியானுக்கும் மத்தியில் உள்ளதாகும், எனவே அவன் கேட்பதை நான் அவனுக்கு கொடுத்து விடுவேன் என அல்லாஹ் சொல்கிறான்.

எப்பொழுது اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ – صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْن என சொல்கிறானோ, இவை எனது அடியானுக்குரியதாகும் எதை அவன் கேட்கிறானோ அவை யாவும் அவனுக்கு கிடைக்கும் என அல்லாஹ் சொல்கிறான் (நூல் : முஸ்லிம்)

## இலக்கணம்:

நாம் இதற்கு முன்னுள்ள பாடங்களிலும் ''அவனுடைய, அவர்களுடைய, உன்னுடைய, உங்களுடைய, என்னுடைய, எங்களுடைய'' என்பதற்கான அரபி வார்த்தைகளைப் படித்தோம், இப்பாடத்திலும் அதே வார்த்தைகளைப் படிக்க இருக்கிறோம் மேலும் இதில் (அதே வார்த்தைகளுடன்) ஆண்பால்-பெண்பால் உருவாக்கும் முறையையும் கற்க இருக்கிறோம்.

இவற்றை TPI முறையிலேயே பயிற்சி செய்யுங்கள்.

| உதாரணங்கள் | | உதாரணங்கள் | | இணைந்து வருகின்ற பிரதிப் பெயர்ச்சொற்கள் | | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|---|---|
| அவனுடைய புத்தகம் | كِتَابُه | அவனுடைய மார்க்கம் | دِيْنُهٗ | அவனுடைய | ـهٗ + ـهِ | ஒருமை واحد Sr. (Singular.) | படர்க்கை 3rd Person غائب |
| அவர்களுடைய புத்தகம் | كِتَابُهُمْ | அவர்களுடைய மார்க்கம் | دِيْنُهُمْ | அவர்களுடைய | ـهُمْ + ـهِمْ | பன்மை جمع Pl. (plural) | |
| உன்னுடைய புத்தகம் | كِتَابُكَ | உன்னுடைய மார்க்கம் | دِيْنُكَ | உன்னுடைய | ـكَ | ஒருமை واحد Sr. (Singular.) | முன்னிலை 2nd Person حاضر |
| உங்களுடைய புத்தகம் | كِتَابُكُمْ | உங்களுடைய மார்க்கம் | دِيْنُكُمْ | உங்களுடைய | ـكُمْ | பன்மை جمع Pl. (plural) | |
| என்னுடைய புத்தகம் | كِتَابِى | என்னுடைய மார்க்கம் | دِيْنِى | என்னுடைய | ـِي | ஒருமை واحد Sr. (Singular.) | தன்னிலை 1st Person متكلّم |
| எங்களுடைய புத்தகம் | كِتَابُنَا | எங்களுடைய மார்க்கம் | دِيْنُنَا | எங்களுடைய | ـنَا | பன்மை pl. جمع dl. مثنى | |

எப்பொழுது நீங்கள் هى ஹிய (அவள்) அல்லது ها ஹா (அவளுடைய) என சொல்வீர்களோ இடது ஆட்காட்டி விரலை வைத்து ஒரு பெண் இடப்புறம் உட்கார்ந்திருப்பது போன்று இடப்புறம் சைகை காட்ட வேண்டும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அவளுடைய புத்தகம் | كِتَابُها | அவளுடைய மார்க்கம் | دِينُها | அவளுடைய | ـهَا | அவள் | هِيَ |

ஆண்பாலிலிருந்து பெண்பால் இன்னும் அதன் பன்மை : அரபி மொழியில் ஆண்பாலிலிருந்து பெண்பாலாக்க பொதுவாக ஆண்பாலின் வார்த்தையில் ஒரு உருண்டையான ة தா இணைத்து விடுவார்கள் உதாரணமாக: مسلم என்பதில் مسلمة போன்றதாகும், அதைப்போன்றே ஒரு பெண்பாலை பன்மையாக்கும் போது உருண்டை ة நீக்கி விட்டு அலி:ப்- தா ات வை இணைத்து விடவேண்டும், கீழே அதற்கான உதாரணங்களைக் கவனியுங்கள்.

| பெண்பால் பன்மை | பெண்பால் ஒருமை | | ஆண்பால் ஒருமை |
|---|---|---|---|
| كَافِرَات | كَافِرَة | ← | كَافِر |
| مُشْرِكَات | مُشْرِكَة | ← | مُشْرِك |
| مُنَافِقَات | مُنَافِقَة | ← | مُنَافِق |

| பெண்பால் பன்மை | பெண்பால் ஒருமை | | ஆண்பால் ஒருமை |
|---|---|---|---|
| مُسْلِمَات | مُسْلِمَة | ← | مُسْلِم |
| مُؤْمِنَات | مُؤْمِنَة | ← | مُؤْمِن |
| صَالِحَات | صَالِحَة | ← | صَالِح |

**பாடம் எண் : 4**
**சூரா அல்-ஃபாத்திஹா**
**(6-7)**

4 பரப்பு | கேள் 1
புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்
3 திட்டமிடு | மதிப்பிடு 2

**வினா 1:** காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.

| الْمُسْتَقِيمَ ⑥ | الصِّرَاطَ | اِهْدِنَا |
|---|---|---|
| | | |

| عَلَيْهِمْ | أَنْعَمْتَ | الَّذِيْنَ | صِرَاطَ |
|---|---|---|---|
| | | | |

| الضَّآلِّيْنَ ⑦ | وَلاَ | عَلَيْهِمْ | الْمَغْضُوبِ | غَيْرِ |
|---|---|---|---|---|
| | | | | |

**வினா 2:** நேர்வழியில் கொண்டு செல்லுதல் யார் கையில் உள்ளது ?

**விடை :**

**வினா 3:** அல்லாஹ் எவர்கள் மீது அருள்புரிந்துள்ளான் ?

**விடை :**

**வினா 4:** கோபத்திற்குள்ளானவர்கள் மற்றும் வழிதவறியவர்கள் இரண்டிற்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன? மேலும் அல்லாஹ்வின் கோபம் யாரின் மீது ஏற்படுகிறது ?

**விடை :**

**வினா 5:** اِهْدِنَا என்பதில் نَا என்பதின் பொருள் என்ன ?

**விடை :**

## 4-வது பாடத்திற்கான வினாக்கள்

வினா- 1-B கீழே கொடுக்கப்பட்டவைகளை பெண்பாலாக்கி பின்னர் பன்மையாக மாற்றவும்

| جمع | مؤنث | مذكر |
|---|---|---|
| | | مُسْلِمٌ |
| | | كافِرٌ |
| | | مُشْرِك |
| | | عَابِدٌ |
| | | صَالِحٌ |
| | | مُنَافِقٌ |

வினா-1-A கீழே கொடுக்கப்பட்டவைகளுக்கு பெண்பாலின் பிரதிப் பெயர்ச்சொல்லை இணைக்கவும்

| பெயர்சொல் + ها | பெயர்சொல் الفاظ |
|---|---|
| ربها | رَبٌّ |
| | دِيْنٌ |
| | كِتَابٌ |
| | ايَات |
| | اِسْمٌ |
| | صِرَاطٌ |

**வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும்

| | |
|---|---|
| | எங்களது மார்க்கம் மேலும் எங்களது புத்தகம் |
| | உனது ரப் மேலும் அவனது புத்தகம் |
| | குர்ஆன் நமது வேதமாகும் |
| | அவர்களது புத்தகம் மேலும் அவர்களது மார்க்கம் |
| | எனது ரப் மேலும் எனது வேதம் |

**வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக

| | |
|---|---|
| | ضَالٍّ |
| | وَالَّذِيْنَ |
| | فَعَلَيْهِمْ |
| | رَبُّكُمْ وَ دِيْنُكمْ |
| | وَدِيْنُنَا |

| பாடம் எண் : 5<br>குர்ஆன் இறங்கியதின்<br>நோக்கம் (சூரா ص 29) | இப்பாடத்தின் முடிவின் போது நீங்கள் 32 புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்வீர்கள் அவை குர்ஆனில் சுமார் 16296 முறை வருகின்றன. |
|---|---|

| | | | |
|---|---|---|---|
| 4 | பரப்பு | கேள் | 1 |
| | புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | | |
| 3 | திட்டமிடு | மதிப்பிடு | 2 |

﴿أعوذ بالله من الشيطان الرجيم﴾ ﴿بسم الله الرحمن الرحيم﴾

| مُبَارَكٌ | إِلَيْكَ | | أَنزَلْنَاهُ | | كِتَابٌ [261*] |
|---|---|---|---|---|---|
| அருள் வளம் (பாக்கியம்) நிறைந்தது | உம் மீது | | இதை நாம் இறக்கினோம் | | (இது ஒரு) வேதம் |
| ஈத் முபாரக் என சொல்வது போல | كَ | اِلَى | هُ | اَنْزَلْنَا | كِتَاب என்பதின் பன்மை كُتُبٌ |
| | நீ / உம் | பக்கம், மீது | அதை | நாம் இறக்கினோம் | |

**மொழிபெயர்ப்பு : (நபியே! குர்ஆனாகிய இந்த) வேதமாகிறது பாக்கியமிக்கதாகும். நாம் இதை உம்மீது இறக்கினோம்**

அல்லாஹ் ஆரம்பத்திலேயே இது ஒரு பாக்கியமிக்கது என சொல்லிவிட்டான். ஆனால் ஏன் இறக்கினான் என்ற விபரம் பின்னால் வருகிறது. அதாவது இந்நூலின் பாக்கியங்களை முழுமையாக பெறவேண்டுமென்றால் இது இறக்கப்பட்ட நோக்கத்தைப் புரிந்து செயல்பட வேண்டும்.

| أُولُوا الْأَلْبَابِ [43] (29) (سورة ص) | | وَلِيَتَذَكَّرَ | | | آيَاتِهِ [382*] | | لِّيَدَّبَّرُوا | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அறிவுடையோர் | | மேலும் நல்லுபதேசம் பெறுவதற்காக | | | இதனுடைய வசனங்களை | | சிந்திப்பதற்காக | |
| اَلْبَاب | أُولُوْ _ أُوْلِىْ | يَتَذَكَّرَ | لِ | وَ | هِ | آيَات | يَدَّبَّرُوْا | لِ |
| அறிவு | உடையவர்கள் | உபதேசம் பெறுவார் | க்காக | இன்னும் | இதன் | வசனங்கள் | சிந்திப்பார்கள் | க்காக |
| لُبّ : அறிவு<br>لُبّ என்பதன் பன்மை أَلْبَاب. | | | | | آيَة: ஒருமை; வசனம்<br>آيَة என்பதன் பன்மை آيَات . | | சிந்தித்தல் : تَدَبُّر | |

**மொழிபெயர்ப்பு : இதனுடைய வசனங்களை சிந்திப்பதற்காகவும் (இதனைக்கொண்டு) அறிவுடையோர் நல்லுபதேசம் பெறுவதற்காகவும் (நாம் இதை உம்மீது இறக்கினோம்)**

**இத்திருமறையை இறக்கியதின் நோக்கங்கள் இரண்டு : 1) சிந்தித்தல் 2) உபதேசம் பெறுதல்**

- تَدَبُّر ததப்புர் என்றால் சிந்தித்தல் என பொருள். செய்தித்தாள் படிக்க சிந்திக்க வேண்டியதில்லை. முதல் முறை படித்தவுடனே அதன் சாரம்சம் புரிந்து விடும். ஆனால் அறிவியல், கணிதம், வணிகவியல் நூல்களை செய்தித்தாள் படிப்பது போன்று எவ்வாறு படிக்க முடியும்? நீங்கள் (வரிக்குவரி) நிறுத்தி நிறுத்தி விளங்கி சிந்தித்து செல்ல வேண்டும் இதுவே சிந்தித்தல் என்பதின் எடுத்துக்காட்டாகும்.
- சிந்திக்க வேண்டுமென்றால், முதலில் (விஷயத்தை) விளங்க வேண்டும் எனவே குர்ஆனில் சிந்திக்க (ஆய்வு செய்ய முதலில்) அதை புரிவது அவசியம்.
- تَذَكُّر ததக்குர் என்றால் உபதேசம் பெறுதல் அதாவது தன் வாழ்வில் அதில் சொல்லப்பட்டிருப்பதின் படி செயல்படுதல், அதைப் புரிந்து கொள்ளும்போதுதான் அதிலிருந்து உபதேசம் பெறமுடியும்.
- இவ்விரண்டையும் நாம் செய்யும்போது இன்ஷா அல்லாஹ் இம்மை மறுமையுடைய அனைத்து பாக்கியங்களையும் நாம் பெறமுடியும் சிந்திப்பதைப்பற்றி நாம் பேசுவதற்கு முன் குர்ஆனோடு நமது உறவு என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

1. **Direct - நேரடியானது** (நேரடியாக நம்முடன் உரையாடுகிறது) குர்ஆனை நாம் ஓதும்போது அல்லது செவியுறும்போது இது அல்லாஹ்வின் வேதம். அல்லது அல்லாஹ்வின் வார்த்தை என்கிறோம். இதன் பொருள் அல்லாஹ் நம்முடன் நேரடியாக உரையாடுகிறான் என்பதே, அல்லாஹ் நம்மோடு நேரடியாக உரையாடுவது என்பது முடிவாகிவிட்டபோது, இந்த அடியான் தன் வார்த்தைகளை செவியுற்றபின் என்ன செய்கிறான் என நிச்சயம் பார்த்து (கவனித்து)க் கொண்டிருக்கிறான்.
2. **Personal – தனித்தனியாக** (உரையாடுகிறது) : எவ்வசனத்தை ஓதினாலும் கேட்டாலும் இது என் சம்பந்தப்பட்டது என உணரவேண்டும், இவ்வசனம் இந்த நிராகரிப்போர்களுக்கென்றோ, இந்த இணைவைப்பாளர்களுக்கு என்றோ இந்த நயவஞ்சகர்களுக்கு என்றோ இந்த ஊர் இஸ்லாமியர்களுக்கு என்றோ அறவே கருதக்கூடாது மாறாக இதிலே நமக்கு என்ன செய்தி மற்றும் போதனை உள்ளது என்றே பார்க்க வேண்டும்.
3. **Planned - திட்டமிடப்பட்டது** அதாவது ஒவ்வொரு பருக்கையிலும் உண்ணுபவரின் பெயர் எழுதப்பட்டிருப்பது போல உலகில் ஒவ்வொன்றும் விதிப்படியே இருக்கிறது எனவே ஒவ்வொரு வசனத்திலும் ஓதுகின்ற அல்லது செவியுறுபவரின் பெயர் எழுதப்பட்டிருக்கிறது என்றே சொல்வோம்.
4. **Relevant - உறவு** (நம்மோடு): குர்ஆன் என்பது ஞாபகமூட்டுதலும் உபதேசமுமே ஆகும். எப்பொழுதெல்லாம் குர்ஆன் ஓதப்படுகிறதோ, செவியுறப்படுகிறதோ, அது ஒரு செய்தியைத்தருகிறது. ஏனெனில் அல்லாஹ்வின் ஞாபகமூட்டல் (போதனை எவ்வித) தொடர்பின்றி எவ்வாறு இருக்க முடியும்? அல்லாஹ் ஏன் இன்று நமது காதுகளில் இவ்வசனங்களை போட்டுள்ளான் ? என சிந்தித்து பார்க்க வேண்டும்.

**(நமக்கும் குர்ஆனுக்கும் உள்ள) உறவு தெரிந்துவிட்ட பிறகு சிந்திப்பதற்காகவும் உபதேசம் பெறுவதற்காகவும் சில விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும்.**

1. **கவனம் :** முழு வசனமும் விளங்காவிட்டாலும் முழு கவனத்தோடே கேட்கவேண்டும். எந்த வார்த்தை புரிந்ததோ அதை முதலில் தக்க வைத்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.
2. **புரிந்து கொள்ளல் :** புரியாத போது அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்டுவிட்டு, அதே நேரத்தில் இன்றிலிருந்தே குர்ஆனை விளங்கிக்கொள்ள தொடர்ந்து முயற்சி செய்வேன் என சபதம் எடுத்துக்கொள்ளுங்கள்.
3. **சிந்தித்தல் :** எங்கெல்லாம் அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப்பற்றி சொல்லப்படுகிறதோ, வரலாறுகளைப்பற்றி ஞாபகமூட்டப்படுகிறதோ நன்றாக அங்கு சிந்தித்துப் பாருங்கள்.
4. **உணருதல் :** அருட்கொடைகள் மற்றும் உபகாரங்களைப்பற்றி சொல்லப்படுகிறதோ (அவற்றை) முழு உணர்வோடு படியுங்கள், சுவர்க்கத்தைப்பற்றி சொல்லப்படும்போது ஆர்வமும் நம்பிக்கையும் வையுங்கள், நரகத்தைப்பற்றி சொல்லப்படும்போது பயமும் அச்சமும் கொள்ளுங்கள்.

**சிந்தித்தல், உபதேசம் பெறுவதற்கான ஓர் வழி**

1. **கேள்:** துஆ (பிரார்த்தனை) : ஏனெனில் ஏதோ ஒன்றை குர்ஆன் நம்மிடம் எதிர்பார்க்கிறது அதை நிறைவு செய்ய துஆவிலிருந்தே துவங்குங்கள்.
2. **மதிப்பிடு:** சரிபார்த்தல் எத்தனை நாட்கள் மற்றும் வாரங்கள் நம்மை விட்டுச் சென்று விட்டன (இனியும் இந்நிலை தொடர்வது சரியல்ல என) துஆ செய்தவாறு (தன்னைத்தானே) சரிபாருங்கள்.
3. **திட்டமிடு :** வரும் நாட்களில், வாரங்களில் செய்வதாக திட்டமிடுங்கள்.
4. **பரப்பு:** அல்லாஹ்வின் தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள் : بَلِّغُوْا عَنِّى وَلَوْ آيَةً (என்னிடமிருந்து ஒரு வசனமாயினும் சரி பிறருக்கு எடுத்து கூறிவிடுங்கள்)

மேலே கூறப்பட்ட 12 விதங்களில் சிந்தித்தல், உணர்ந்து பார்த்தல் மற்றும் துஆ என்பவை மிக முக்கியமானதாகும். இதனை (எங்கே) எவ்வாறு உபயோகிப்பது என்பதை வரக்கூடிய பாடங்களில் படிப்போம்.

**இலக்கணம்:** எழுதுகின்ற, படிக்கின்ற மற்றும் கேட்கின்ற வார்த்தைகள் மூவகைப்படும்

1) اِسْم பெயர்ச்சொல் 2) فِعْل வினைச்சொல் 3) حَرْف எழுத்து (இடைச்சொல்)

1) اِسْم பெயர்ச்சொல் : ஒரு பொருள், இடம் அல்லது மனிதனின் பெயர்கள் அல்லது அவனது குணம் - தண்மைப் பெயர்கள். உதாரணமாக: رَجُلٌ மனிதன், முஸ்லிம், அப்துல்லாஹ் என்பது போல

2) فِعْل வினைச்சொல் : ஒருவரிடம் ஒரு செயல் செய்தல் அல்லது நடத்தல் வெளிப்படும். உதாரணமாக: فَتَحَ அவன் திறந்தான், ذَهَبَ சென்றான், يَشْرَبُ குடிக்கிறான் போன்றவை.

3) حَرْف எழுத்து : ஒரு வினைச்சொல்லையும் பெயர்ச்சொல்லையும் எது இணைத்து வைக்குமோ அது. உதாரணமாக : مَعَ – مِنْ – عَنْ – ل போன்றவை

**குர்ஆனில் இவை (இந்த 4 எழுத்துக்கள்) சுமார் 4960 முறை வருகின்றன, இந்நான்கு எழுத்துக்களின் மொழிபெயர்ப்புகளை நினைவில் வைக்க அதன் உதாரணங்களையும் நன்றாக நினைவில் வையுங்கள்.** அவை:

| ஊதாரணங்கள் | | எழுத்து | |
|---|---|---|---|
| <u>உங்களுக்கு</u> உங்களின் மார்க்கம் <u>எனக்கு</u> என் மார்க்கம் | لَكُمْ دِينُكُمْ وَلِيَ دِين | க்கு | لَ، لِ |
| ஷைத்தானிடம் <u>இருந்து</u> அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகின்றேன் | أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَان | இருந்து | مِن |
| அவரை <u>பற்றி</u> அல்லாஹ் பொருந்தி கொண்டான் | رَضِيَ اللهُ عَنهُ | பற்றி | عَن |
| நிச்சயமாக அல்லாஹ் பொருமையளர்க<u>ளுடன்</u> உள்ளான் | إنَّ اللهَ مَعَ الصَّابِرِين | உடன் | مَعَ |

**இப்பாடத்தில் இந்த நான்கு எழுத்துகளைப் பற்றி படிக்கப் போகிறோம்**

| வுடன் مَعَ | | பற்றி, ல் உடன் عَنْ | | யிருந்து مِن | | க்காக لَ | |
|---|---|---|---|---|---|---|---|
| அவனுடன் | مَعَهُ | அவனைப்பற்றி | عَنْهُ | அவனிடமிருந்து | مِنْهُ | அவனுக்காக | لَهُ |
| அவர்களுடன் | مَعَهُمْ | அவர்களைப்பற்றி | عَنْهُم | அவர்களிடமிருந்து | مِنْهُمْ | அவர்களுக்காக | لَهُم |
| உன்னுடன் | مَعَكَ | உன்னைப்பற்றி | عَنْكَ | உன்னிடமிருந்து | مِنْكَ | உனக்காக | لَكَ |
| உங்களுடன் | مَعَكُمْ | உங்களைப்பற்றி | عَنْكُم | உங்களிடமிருந்து | مِنْكُمْ | உங்களுக்காக | لَكم |
| என்னுடன் | مَعِي | என்னைப்பற்றி | عَنِّي | என்னிடமிருந்து | مِنِّي | எனக்காக | لِي |
| எங்களுடன் | مَعَنا | எங்களைப்பற்றி | عَنَّا | எங்களிடமிருந்து | مِنَّا | எங்களுக்காக | لَنا |
| அவளுடன் | مَعَها | அவளைப்பற்றி | عَنْها | அவளிடமிருந்து | مِنْها | அவளுக்காக | لَها |

**ஞாபகக்குறிப்பு :** இவ்வெழுத்துக்கள் வினைச்சொல், பெயர்ச்சொல் (فعل, اسم فاعل . اسم مفعول) போன்றவைகளோடு (மாறி) இணைந்து வரும்போது மொழிபெயர்ப்புகளும் மாறக்கூடும். இந்நான்கு எழுத்துக்களில் முதல் மூன்று حروف جر (தனக்கு அடுத்து வரும் வார்த்தைக்கு ஜேர் கொடுக்கக்கூடிய இடைச்சொற்கள்) ஆகும். நான்காவது எழுத்து مَعَ (இதுவும் தனக்கு அடுத்து வரும் வார்த்தைக்கு ஜேர் கொடுக்கக்கூடியது என்றாலும், ظَرْف இடத்தைக் குறிக்கும்போது வருவதால் இது) ظرف مكان (இடத்தைக் குறிக்கும் வார்த்தை) ஆகும்.

**பாடம் எண் : 5**

**குர்ஆன் இறங்கியதன் நோக்கம் (ஸாத் 29)**




**வினா 1:** காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.

| مُبٰرَكٌ | اِلَيْكَ | اَنْزَلْنٰهُ | كِتٰبٌ |
|---|---|---|---|
| | | | |
| اُولُوا الْاَلْبَابِ ۝29 | وَلِيَتَذَكَّرَ | اٰيٰتِه | لِّيَدَّبَّرُوْٓا |
| | | | |

**வினா 2:** تَدَبُّر என்றால் என்னவென்பதை உதாரணத்தோடு கூறுங்கள் ?

**விடை :**

**வினா 3:** تَذَكُّر என்றால் என்னவென்பதை உதாரணத்தோடு கூறுங்கள் ?

**விடை :**

**வினா 4:** குர்ஆனோடு நமக்குள்ள உறவின் நான்கு விதங்கள் யாவை ?

**விடை :**

**வினா 5:** تَدَبُّر மற்றும் تَذَكُّر. ன் நான்கு நிபந்தனைகளை விளக்கிக் கூறுங்கள்

**விடை :**

## 5-வது பாடத்திற்கான வினாக்கள்

**வினா1)** لِ என்ற இடைச்சொல்லோடு பிரதிப்பெயர்ச்சொற்களை இணைத்து வாக்கியம் அமைக்கப்பட்டுள்ளது போல காலியிடங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள மற்ற வார்த்தைகளைக் கொண்டும் வாக்கியம் அமையுங்கள்:

| مع | عن | من | ل | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|
| | | | لَهُ | ஒருமை واحد Sr. (Singular.) | படர்க்கை 3rd Person غائب |
| | | | لَهُمْ | பன்மை جمع Pl. (plural) | |
| | | | لَكَ | ஒருமை واحد Sr. (Singular.) | முன்னிலை 2nd Person حاضر |
| | | | لَكُمْ | பன்மை جمع Pl. (plural) | |
| | | | لِي | ஒருமை واحد Sr. (Singular.) | தன்னிலை 1st Person متكلّم |
| | | | لَنَا | பன்மை pl. جمع dl. مثنى | |
| | | | لَهَا | واحد مؤنث sr. | غائب |

| **வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | அல்லாஹ் உங்களைப் பொருந்திக் கொள்ளட்டும் |
| | உனது பெயர் |
| | மேலும் உங்களிலிருந்து |
| | மேலும் அவர்களுக்காக |
| | அல்-குர்ஆன் என்னுடன் உள்ளது |

| **வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | اللهُ مَعَنَا |
| | فَلَهُمْ |
| | وَلَنَا |
| | فَمِنْكُمْ |
| | فَلَهَا |

| **பாடம் எண் : 6**<br>**குர்ஆன் எளியது, அதைக்கற்பதே மிகச்சிறந்த செயல்** | **இப்பாடத்தின் முடிவின் போது நீங்கள் 44 புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்வீர்கள் அவை குர்ஆனில் சுமார் 23151 முறை வருகின்றன.** | 4 பரப்பு / கேள் 1 / புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் / 3 திட்டமிடு / மதிப்பிடு 2 |
|---|---|---|

சென்ற பாடத்தில் நாம், அல்லாஹ் குர்ஆனின் வசனங்களை சிந்திப்பதற்கும் நடைமுறை படுத்துவதற்கும் இறக்கியுள்ளான் என்பதனை படித்தோம்.

குர்ஆனின் வசனங்கள் அரபியில் உள்ளன மேலும் அதை மொழியாக்க முடியாது நாம் அதனுடைய மொழிபெயர்பிலிருந்து அதன் செய்தியை மட்டும் பெறமுடியும். ஆரபி வசனங்களை நாம் சிந்திப்பதற்கு நாம் அரபி மொழியை கற்றுக்கொள்ள வேண்டும்.

இது அல்லாஹ்வின் மிக பெரிய அருள் ஆகும். அவன் புரிந்துகொள்வதற்கு குர்ஆனை எளிதாக்கியுள்ளான். அடிப்பபடைகளை புரிந்துகொள்வதற்கு அதன் அரபியும் எளிதாகவே உள்ளது.

﴿أعوذ بالله من الشيطان الرجيم﴾ ﴿بسم الله الرحمن الرحيم﴾

| لِلذِّكْرِ (القَمَر – 17) | | الْقُرْآنَ [70] | يَسَّرْنَا | 1: وَلَقَدْ [409] | | |
|---|---|---|---|---|---|---|
| **(மனப்பாடம் செய்ய) உபதேசம் பெற** | | **இந்த குர்ஆனை** | **எளிதாக்கி விட்டோம்** | **மேலும் நிச்சயமாக** | | |
| الذِّكْر | لِ | | | قَدْ | لَ | وَ |
| உபதேசம் பெறுதல் | க்காக | | يُسر எளிது | உறுதியாக | நிச்சயமாக | இன்னும் |
| ذِكْر இரு பொருள்: (1)மனனம் செய்தல் (2)புரிந்து கொள்ளுதல் | | قُرْآن -அதிகம் ஓதப்படவேண்டியது | عُسر கடினமானது<br>يَسَّرْنَا நாம் லேசாக்கினோம் | لَ என்பது உறுதிபடுத்துவதற்காக<br>قد என்பது : ஏற்கனவே உறுதிபடுத்தப்பட்ட விஷயங்களைக் குறிப்பிட உபயோகிக்கப்படும்.<br>قَدْ قَامَتِ الصَّلٰوة தொழுகை நிலைப்பெற்று விட்டது என்பது போல. | | |
| **மொழிபெயர்ப்பு : மேலும் நிச்சயமாக உபதேசம் பெறுவதற்காகவே நாம் குர்ஆனை எளிமைப்படுத்தி விட்டோம்** | | | | | | |

لَ என்பதற்கு உதாரணம் : وَ لَقَدْ يَسَّرنا الْقُرْآنَ لِ என்பதற்கு உதாரணம் : لِيَتَذَكَّرَ – لِيَدَّبَّرُوْا

- திக்ர் என்பதற்கு இரு பொருள்கள் உள்ளன 1) மனப்பாடம் செய்தல் 2) புரிந்து உபதேசம் பெறுதல், இஸ்லாமிய தீர்ப்புகள் வழங்குவதற்கும் சட்டங்களை வெளியிடுவதற்கும் இன்னும் பல கலைகளை பயில வேண்டியிருக்கும் ஆனால் உபதேசம் பெறுவது என்பது சுலபம்.
- அல்லாஹ் இதை எளிமைப்படுத்தியுள்ளான், மிக விரைவில் முழு குர்ஆனையும் கற்றுக்கொள்வோம் என்ற எண்ணம் மற்றும் திட்டத்தோடு செயல் மூலமும் நன்றியை வெளிப்படுத்துங்கள்.

- குர்ஆனைக் கற்பது கடினமானது என யாராவது சொன்னால் அல்லாஹ்வின் சொல்லுக்கு எதிராக பிரகடனம் செய்கிறார் என பொருள், இனிமேல் குர்ஆனைக் கற்பது கடினமானது என எவரின் நாவிலிருந்தும் வரவே கூடாது.

- குர்ஆன் என்பது எளிமையானதுதான் ஆனால் தானாக வந்துவிடுமா ? அதற்கு முயற்சிகள் தேவை, ஒரு நபிமொழியில் அல்லாஹ் கூறுகிறான் : 'யார் என்னிடம் நடந்து வருகிறானோ நான் அவனிடம் ஓடிச்செல்கிறேன்' இதன் பின்னரும் நாம் அல்லாஹ்வின் பக்கம் (நடந்து) செல்ல தயாராகிவிடவேண்டாமா?

- குர்ஆன் என்பது எளிது, அதைப்புரிந்து கொள்வதும் எளிது (எனவே) அதன் தெளிவுரை வழங்கும் விதம் மற்றும் அதன் சான்றுகள் நல்ல முறையில் மனதில் பதிந்துவிடும் அளவுக்கு நல்ல முறையில் கற்றுக்கொள்ள வேண்டும்.

| وَعَلَّمَهُ (بخارى) | | | تَعَلَّمَ الْقُرْآنَ | مَنْ [823] | خَيْرُكُمْ [186] :2 | |
|---|---|---|---|---|---|---|
| **மேலும் அதைக் கற்பித்தார் (புகாரி)** | | | **குர்ஆனை கற்றார்** | **ஒருவர்** | **உங்களில் மிகச் சிறந்தவர்** | |
| هُ | عَلَّم | وَ | تَعَلَّمَ: கற்றான்<br>عَلَّمَ : கற்பித்தான் | مَنْ என்பதின் உதாரணங்கள்<br>1): எவர் : خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَهُ<br>2) مَنْ : யார் مَنْ رَبُّكَ<br>உனது ரப் யார்? கப்ரில் முதல் கேள்வி | كُمْ | خَيْرُ |
| அவனுக்கு | கற்பித்தான் | மேலும் | | | உங்களில் | மிகச் சிறந்தவர் |
| **மொழிபெயர்ப்பு : உங்களில் மிகச் சிறந்தவர் குர்ஆனை தானும் கற்று பிறருக்கும் கற்பிப்பவரே** | | | | | | |

- இந்நபிமொழியை இமாம் புகாரி அவர்கள் அறிவித்துள்ளார்கள், குர்ஆனைக் கற்றலும், கற்பித்தலும் அனைத்தையும் விட மிகச்சிறந்தது என்பது ஆரம்பத்திலேயே மிகத் தெளிவாக தெரிகிறது.

- இந்நபிமொழியில் முதலில் மாணவரைப்பற்றியும், பின்னர் ஆசிரியரைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இது முதலில் மாணவனின் மனநிலையில் இருக்க வேண்டியதன் தேவையைச் சுட்டிக் காட்டுகிறது, கற்றுக்கொள்கிற - கற்பிக்கின்ற என்ற இரு பணியையும் செய்கின்ற மனிதர்கள்தான் அனைவர்களையும் விட மிகச்சிறந்தவர்கள் என்பதையும் காட்டுகிறது. இறைவேத ஞானத்திற்கு முடிவு இல்லை என்பதும் தெரிகிறது எனவே அனைவரும் கடைசி மூச்சு வரை அதைக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்,

- அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கின்றான். எனவே இத்தொடரை விடமாட்டோம். முழு குர்ஆனையும் கற்போம். பின்னர் அதை மற்றவர்களுக்கும் கற்பிப்போம் (எழுத்துகளை மட்டும்) பார்த்து படிப்பதோடு மட்டுமில்லாமல் குர்ஆனைப்புரிந்து, சிந்திக்கவும் கற்போம். குர்ஆனை நன்கு பரப்பிட இச்சேவையை தனிப்பட்ட முறையிலும் கூட்டான முறையிலும் செய்வோம் என, இந்நபிமொழியின் படி செயல்பட இப்பொழுதே உறுதியாக எண்ணம் வையுங்கள்.

- நபி(ஸல்)அவர்கள் குர்ஆனின் ஆசிரியர் ஆவார். அவர்கள் அதனை விளக்கத்துடன் கற்றுதந்தார்கள். மேலும் அதனை நடைமுறை படுத்தினார்கள். சஹாபாக்களும் இதன் முறையிலேயே கற்றார்கள். முதலில் நாம் குர்ஆனை அரபியில் தஜ்வீதுடன் ஓதுவதற்கு கற்றுகொள்ள வேண்டும். இதனுடன் மட்டும்

நிருத்தாலும் வாழ்விலும் கொண்டுவர நடைமுறைபடுத்துங்கள். எப்படி நடைமுறை படுத்த வேண்டும் என பயிற்சி எடுங்கள்.

| بِالنِّيَّاتِ | الْأَعْمَالُ [41] | 3: إِنَّمَا [146] |
|---|---|---|
| **எண்ணங்களைக்கொண்டு** | **செயல்கள்** | **மட்டுமே** |
| بِ - கொண்டு, النِّيَّاتُ என்பது نِيَّة (நிய்யத்) என்ற வார்த்தையின் பன்மையாகும் | عَمَلٌ என்பது الأعْمَالُ அமல் என்ற வார்த்தையின் பன்மையாகும்- செயல்கள் | اِنَّمَا என்பது ஒரு பொருளை(அ) கருத்தை குறிப்பிட்டு சொல்வதற்கு கொண்டு வரப்படும் اِنَّ என்பது நிச்சயம் என்ற பொருளைத்தரும் என்பது உங்களுக்குத் தெரியும் |
| **மொழிபெயர்ப்பு : அனைத்து செயல்களும் எண்ணங்களைக்கொண்டு மட்டுமே(கூலி வழங்கப்படும்)** | | |

- மறுமை நாளில் முதல் மூன்று தீர்ப்புகள் மூன்று மனிதர்களைப்பற்றி : அவர்களிலே ஒருவர் (காரீ) குர்ஆனை பிறருக்கு காண்பிப்பதற்காக ஓதியவர், படித்துக்கொடுத்தவர் அவருடைய எண்ணத்தில் தவறு இருக்கிறது என்பதால் நரகில் தூக்கி வீசப்படுவார் ஏனெனில் தனக்கு இணையாக பிறருக்கு காண்பிக்க வேண்டும் என செய்கிற எச்செயலையும் இறைவன் ஏற்பதில்லை.
- இன்ஷா அல்லாஹ் நாம் குர்ஆனைக் கற்று, விளங்கி, அதன்படி செயல்படுவதற்காகவும் அல்லாஹ்வை திருப்திபடுத்துவதற்காகவும் மட்டுமே அதைக் கற்போமாக!
- அல்லாஹ்வின் திருப்திக்காகவே பிறருக்கு கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப்படையில் மக்களை ஒன்று சேர்ப்பதற்காகவும் இதை கற்றுக்கொள்வோம் ஏனெனில் 99 விழுக்காடு மக்கள் குர்ஆனை விட்டு விலகியே இருக்கின்றனர்.

கீழ் உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள வார்த்தைகள் குர்ஆனில் ஏரத்தாழ 2306 முறை வந்துள்ளது. அதன் பொருளை கீழ் தரப்பட்டுள்ள உதாரணங்களை கொண்டு நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இவ்வாறு படிப்பது நினைவில் கொள்ளவும் ஞாபபடுத்துவதற்கும் இளகு வழி. இளகுவான வழி அதன் உதாரணங்களோடு படித்துகொள்வதாகும்.

| | | | |
|---|---|---|---|
| அல்லாஹ் நாடினால் | إِنْ شَاءَ اللهُ | ஆல் | إِنْ [628] |
| நிச்சயமாக அல்லாஹ் பொருமையாளர்களுடன் உள்ளான் | إِنَّ اللهَ مَعَ الصَّابِرِين | நிச்சயமாக | إِنَّ [1532] |
| செயல்கள் அனைத்தும் எண்ணங்களை கொண்டே | إِنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ | மட்டுமே | إِنَّمَا [146] |

## <u>இலக்கணம்:</u>

நாம் முன்னதாகவே கீழ்வந்துள்ள மூன்று உதாரணங்களில் ஒன்றை படித்துவிட்டோம்.

1. اسْم (பெயர்சொல்): பெயர்கள் (كِتَاب، مَكَّة) தண்மைகள் (مُسْلِم، مُؤْمِن)
2. فِعْل (வினைச்சொல்): காலத்தோடு இணைந்த செயல்கள் (فَتَحَ، نَصَرُوا)
3. حَرْف (இடைச்சொல்): இடைச்சொற்கள் (بِ، لِ، مِنْ، فِي، إنَّ)

இந்த பாடத்தில் நாம் இன்னும் கூடுதலாக நான்கு எழுத்துக்களை கற்கஉள்ளோம். بِ، فِي، عَلَى، إِلَى.
இவை அனைத்தும் இடைச்சொற்கள் ஆகும். இந்த வார்த்தைகளை எளிமையாக படித்துகொள் உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| Example | | Letter | |
|---|---|---|---|
| அல்லாஹ்வின் பெயரால் (பெயரைக் **கொண்டு**) | بِسْمِ اللهِ | கொண்டு | بِ |
| அல்லாஹ்வின் பாதை**யில்** | فِي سَبِيلِ اللهِ | ல் | فِي |
| உங்கள் **மீது** சாந்தி உண்டாகட்டும் | السَّلَامُ عَلَيْكُمْ | மீது | عَلَى |
| நிச்சயமாக நாம் அல்லாஹ்விற்கு உரியவர்கள் அவன் புரமே நாம் **திரும்ப** உள்ளோம் | إِنَّا لِلهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُون | நோக்கி | إِلَى |

குறிப்பு: மேலே தரப்பட்டு இடை சொற்களை கவணிக்கவும். அவைகளுக்கு ஒரு பொருள் உண்டா அல்லது இன்னும் பொருள்கள் உண்டா?

கீழ் அட்டவணையில் உள்ள வார்த்தைகள் குர்ஆனில் ஏதரத்தாழ 4327 முறைகள் வந்துள்ளது. இந்த வார்த்தைகளை TPI மூலமாக கற்றுக்கொள்ளுங்கள்.

| வரை, நோக்கி : اِلَى | மீது : عَلَى | ல் : فِى | வுடன், கொண்டு, ல்: بِ |
|---|---|---|---|
| அவன் வரை اِلَيهِ | அவன் மீது عَلَيهِ | அவனில் فِيْهِ | அவனைக்கொண்டு بِهِ |
| அவர்கள் வரை اِلَيهِمْ | அவர்கள் மீது عَلَيهِم | அவர்களில் فِيْهِم | அவர்களைக்கொண்டு بِهِم |
| உன் வரை اِلَيكَ | உன் மீது عَلَيكَ | உன்னில் فِيْكَ | உன்னைக்கொண்டு بِكَ |
| உங்கள் வரை اِلَيكُم | உங்கள் மீது عَلَيكُم | உங்களில் فِيْكُم | உங்களைக்கொண்டு بِكُم |
| என் வரை اِلَيَّ | என் மீது عَلَيَّ | என்னில் فِيَّ | என்னைக்கொண்டு بِى |
| எங்கள் வரை اِلَينَا | எங்கள் மீது عَلَيْنَا | எங்களில் فِينا | எங்களைக்கொண்டு بِنَا |
| அவள் வரை اِلَيْهاَ | அவள் மீது عَلَيْهاَ | அவளில் فِيْها | அவளைக்கொண்டு بِها |

ஞாபகக்குறிப்பு : இவ்வெழுத்துக்கள் வினைச்சொல், பெயர்ச்சொல் ( فعل, اسم فاعل . اسم مفعول) போன்றவைகளோடு (மாறி) இணைந்து வரும்போது மொழிபெயர்ப்புகளும் மாறக்கூடும்.

**பாடம் எண் : 6**
**குர்ஆன் எளிதானது**
**மேலும் அதைக் கற்பதே**




**வினா 1: காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| لِلذِّكْرِ | الْقُرْآنَ | يَسَّرْنَا | وَلَقَدْ |
|---|---|---|---|
| | | | |

| (بخارى) وَعَلَّمَهُ | تَعَلَّمَ الْقُرْآنَ | مَنْ | خَيْرُكُمْ |
|---|---|---|---|
| | | | |

| (بخارى) | بِالنِّيَّاتِ | إِنَّمَا الْأَعْمَالُ |
|---|---|---|
| | | |

**வினா 2: குர்ஆனை கற்றுக்கொள்ளும்போது நமது எண்ணம் (நிய்யத்) எவ்வாறு இருக்கவேண்டும்?**

**விடை :**

**வினா 3: குர்ஆன் கடினமானதா? ஆதாரம் கொடுங்கள்?**

**விடை :**

**வினா 4: குர்ஆனைக் கற்க நாம் என்னென்ன (முயற்சிகள்) செய்ய முடியுமென்பதைக் கூறுங்கள்?**

**விடை :**

**வினா 5: اِنْ،اِنَّ மற்றும் اِنَّمَا போன்றவைகளின் வேறுபாடுகள் என்ன?**

**விடை:**

## 6-வது பாடத்திற்கான வினாக்கள்

வினா1) ب என்ற இடைச்சொல்லோடு பிரதிப்பெயர்ச்சொற்களை இணைத்து வாக்கியம் அமைக்கப்பட்டுள்ளது போல - காலியிடங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள மற்ற வார்த்தைகளைக் கொண்டும் வாக்கியம் அமையுங்கள்.

| اِلَى | عَلَى | فِي | بِ | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|
| | | | بِهٖ | ஒருமை واحد Sr. (Singular.) | படர்க்கை 3rd Person غائب |
| | | | بِهِمْ | பன்மை جمع Pl. (plural) | |
| | | | بِكَ | ஒருமை واحد Sr. (Singular.) | முன்னிலை 2nd Person حاضر |
| | | | بِكُمْ | பன்மை جمع Pl. (plural) | |
| | | | بِي | ஒருமை واحد Sr. (Singular.) | தன்னிலை 1st Person متكلّم |
| | | | بِنَا | பன்மை pl. جمع dl. مثنى | |
| | | | بِهَا | واحد مؤنث Sr. | غائب படர்க்கை |

| | வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக |
|---|---|
| | وَفِيْكُمْ |
| | فَعَلَيَّ |
| | وَاِلَيْكَ |
| | فِيْ كِتَا بِكُمْ |
| | اَنْزَلْنَا عَلَيْكَ الْكِتَابَ |

| | வினா 3 : தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் |
|---|---|
| | அவன் மீது மேலும் என் மீது |
| | குர்ஆனின் பக்கம் |
| | உங்கள் அனைவரின் மீது சாந்தி உண்டாகட்டும் |
| | குர்ஆனில் |
| | உன் மீது மேலும் அவன் மீது |

**பாடம் எண் : 7**
**பயில வேண்டிய துஆக்களும் பயிலவேண்டிய முறைகளும்**

**இப்பாடத்தின் முடிவின் போது நீங்கள் 52 புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்வீர்கள் அவை குர்ஆனில் சுமார் 24446 முறை வருகின்றன.**

| | |
|---|---|
| 4 பரப்பு | கேள் 1 |
| புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | |
| 3 திட்டமிடு | மதிப்பிடு 2 |

| | | | |
|---|---|---|---|
| 20:114 عِلْمًا | زِدْنِي | | رَبِّ |
| **கல்வியை** | **எனக்கு அதிகப்படுத்துவாயாக!** | | **எனது ரப்பே!** |
| | نِى | زِدْ | தேவைப்படுகிற அனைத்தையும் கருத்தில் கொண்டு பரிபாலிப்பவன் |
| | எனக்கு | அதிகப்படுத்துவாயாக! | |
| **மொழிபெயர்ப்பு : எனது ரப்பே! எனக்கு கல்வியை அதிகப்படுத்தித் தருவாயாக!** | | | |

- இந்த துஆ சூரா தாஹாவில் வருகிறது இந்த துஆவை அல்லாஹு தஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு குறிப்பாக குர்ஆனை மனப்பாடம் செய்வதற்காகவும் கற்றுக்கொள்வதற்காகவும் கற்றுக்கொடுத்தான் எனவே இதை மனம் இணைந்தவாறு அதிகம் ஓதுங்கள் குர்ஆனைப் புரிந்து கொள்வதற்கும் அதன்படி செயல்படுவதற்கும் பாக்கியமளிப்பானாக என்ற உறுதியான எண்ணத்தோடு ஓதுங்கள்.
- துஆவோடு நாம் குர்ஆனை விளங்கிக்கொள்ளும் முயற்சியில் அதற்காக நேரமும் ஒதுக்க வேண்டும். இல்லையெனில், முயற்சியில் அலட்சியம் செய்துவிட்டு துஆ மட்டும் செய்தால் இது துஆவோடு செய்யும் பரிகாசமாகும் (உதாரணமாக:)ஒரு மாணவனைப்பற்றி நினைவு கூருங்கள் அவன் தேர்வில் வெற்றி பெறவேண்டுமென அல்லாஹ்விடம் அழுகிறான். ஆனால் பள்ளிக்கூடம் செல்வதும் இல்லை, எந்த புத்தகத்தை எடுத்து படிப்பதும் இல்லை. என்ன இவன் உள்ளத்தோடு துஆ செய்கிறானா ? (இவர் தேர்வில் எவ்வாறு வெற்றி பெற முடியும்)
- கல்வி கற்பது ஏன்? (தனிப்பட்ட முறையிலும் கூட்டான முறையிலும்) அதன்படி செயல்படவேண்டும் மேலும் அதைப் பரப்ப வேண்டும்.
- பல நாட்கள் பட்டினி கிடப்பவன் (அல்லாஹ்விடம்) எவ்வாறு கேட்பான்? மறுநாள் மிகப்பெரிய அறுவை சிகிச்சைக்குத் தயாராக இருப்பவன் அல்லாஹ்விடம் எவ்வாறு கேட்பான்? ஒரு துடிப்போடு, ஒன்றிய உள்ளத்தோடு, திரும்பத்திரும்ப- அதே தோற்றத்தில் துஆ செய்ய வேண்டும். ‘அல்லாஹ்வே! (குர்ஆனைக்கூட புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிற) மடமையின் நோயை விட்டு காப்பாற்றுவாயாக! (எல்லாவற்றை விட மிக முக்கிய ஞானம் குர்ஆனிய ஞானம் ஆகும்) அதில் எனக்கு ஞானத்தைத் தருவாயாக!’

**எழுதுகோலை (மற்றும் அதற்குரிய சாதனங்கள் அனைத்தை) யும் பயன்படுத்துங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (سورة العلق) ④ بِالْقَلَمِ | | عَلَّمَ | 304 الَّذِىْ |
| **எழுதுகோலைக் கொண்டு** | | **கற்பித்தான்** | **எவன்** |
| எழுதுகோல் | கொண்டு | عَلِمَ அறிந்து கொண்டான்,<br>عَلّمَ : கற்பித்தான் | இது குர்ஆனில் 304 முறை வருகிறது இதன் பன்மை الَّذِيْنَ |
| **மொழிபெயர்ப்பு : எவன் எழுதுகோலைக் கொண்டு கற்பித்தானோ (அவன்)** | | | |

- எனவே, உடனே எழுதுகோலை எடுங்கள். இதற்கு முன்னரும் லட்சக்கணக்கான-கோடிக்கணக்கான வார்த்தைகளை எழுதியிருப்பீர்கள் இப்பொழுது குர்ஆன் மற்றும் அரபியைக் கற்க நீங்கள் எழுதுகோலைப் பயன்படுத்துங்கள் இதை தமது வழக்கமாகவே ஆக்கிக்கொள்ளுங்கள். நீங்கள் எழுதுவதை சாதாரண வழக்கமாக ஆக்கிக்கொள்ளும்போது செவிசாய்ப்பதிலும், விளங்கிக்கொள்வதிலும் கவனம் அதிகரிக்கும்
- இன்றே சபதம் எடுத்துக்கொள்ளுங்கள் குர்ஆனை கற்க தினமும் ஐந்து நிமிடங்களிலிருந்து பத்து நிமிடங்கள் வரை சோம்பேறித்தனம் மற்றும் அலட்சியத்தை கைவிட்டு முழு ஆர்வத்தோடும் உளத்தூய்மையோடும் வார்த்தைகளின் பொருள், இலக்கண வார்த்தைகளை எழுதுவோம்.
- எங்கு எழுதுவது? குறிப்பேடுகள் மீது! அதை வாங்கி வாருங்கள். நீங்கள் கற்பவைகளுக்கு பதிவேடு ஒன்று வைத்திருக்க வேண்டும், தனக்கென தன்னால் எழுதப்பட்டவைகளுக்கு ஒரு நூலகம் அமைக்கத் துவங்குங்கள்.
- இச்சமுதாயத்திலே எதைப்பற்றி அறிந்தவர்கள் மிகக்குறைவு என்றால் எதை முதன்முதலாக இறக்கி வைத்த வஹீயிலேயே اِقْرَأ بِاسْمِ رَبِّكَ الَّذِى خَلَقَ 'நபியே! உம்மை படைத்த உனது ரப்பின் பெயரைக் கொண்டு படிப்பீராக!' என, படிக்க கட்டளையிட்டு துவங்கி வைத்தானோ அந்த குர்ஆனைப்பற்றித்தான். (என்பார்கள்)

**போட்டி போடும் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்**

| عَمَلاً (الْمُلْك: 2) | اَحْسَنُ [43] | | اَيُّكُمْ [46] | |
|---|---|---|---|---|
| **செயலால்** | **மிக அழகானவர் (சிறந்தவர்)** | | **உங்களில் யார்** | |
| أَعْمَال عَمَل | அழகானது | حَسَنٌ | كُمْ | اَىُّ |
| | மிக அழகானது | اَحْسَنُ | உங்களில் | யார் |
| **மொழிபெயர்ப்பு: உங்களில் எவர் செயலால் மிக்க அழகானவர்** | | | | |

- தொழுவதில் எவர் சிறந்தவர்? வீட்டிற்குள்ளே எவர் சிறந்தவர்? அலுவலகத்தில் எவர் சிறந்தவர்? (தொழுகை நோன்பு திக்ர் போன்ற) தனிப்பட்ட காரியங்களில் எவர் சிறந்தவர்? (சமுதாய சீர்திருத்தம், அழைப்புப்பணி, நல்லதை ஏவி தீயதை தடுத்தல் போன்ற) கூட்டான காரியங்களில் எவர் சிறந்தவர்?
- இங்கு குர்ஆனை கற்பதில் எவர் சிறந்தவர்? அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான். அல்லாஹ்விடம் தன்னை (சிறந்தவனாக) எடுத்துக்காட்ட சிறந்த முறையில் கற்க முயற்சி செய்யுங்கள்.
- நீங்கள் குர்ஆனைக் கற்க ஆரம்பித்து விட்டீர்கள் என்பதால், ஷைத்தான் நெருப்புக்கங்குகளில் உருண்டு புரளுகிறான், உங்களைத் தடுக்க முழு முயற்சி செய்வான். ஷைத்தான் மிகப்பெரிய அனுபவசாலி என்பதை நினைவில் வையுங்கள். எனினும் அல்லாஹ்விடம் உதவி கோருங்கள், உங்களது செயல்களைக் குறித்துக்கொள்ள வானவர்களும் தயார்! அவர்களது எழுதுகோலும் தயார்! நீங்கள் தயாரா?

## **இலக்கணம்:**

கடந்த பாடங்களில் ( حروف جر) இடைச்சொற்கள் என்கிற ஜேர் கொடுக்கின்ற எழுத்துகளைப்பற்றி படித்தோம் அவை பற்றி நினைவில் வைக்க வேண்டியவை :

1. حروف جر (இடைச்சொல்): என்றால் இவை வினைச்சொல்லோடு இணைந்து வரும், (பொது வாக மொழிபெயர்ப்பு என்பது) உரிய மொழி மற்றும் அதன் மொழிபெயர்ப்பு விதிக்குட்பட்டதாகும். ஏனெனில் ஒவ்வொரு மொழிக்கும் (மொழிபெயர்ப்பதில்) ஒரு விதி உள்ளது. உதாரணமாக:



| | | |
|---|---|---|
| آمَنْتُ بِالله | | I believed in Allah |

நான்கு மொழிக ... بِ – பு -in-மீது) போன்ற

வேறுபட்ட (ف جر ...

2. இடைச்சொல், ... உதாரணமாக:

| | | |
|---|---|---|
| اِغْفِرْ لِي | Forgive (for) me | என்னை மன்னி |
| يَدْخُلُونَ فِي دِينِ اللهِ | entering the religion of Allah | அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் நுழைவார்கள் |

3. சில வேலை இடைச்சொல் அரபியில் வராது, வேறு மொழிகளில் வரும்

| | | |
|---|---|---|
| وَارْحَمْنِي | Have mercy on me. | என் மீது அருள் புரி |
| قِنِي عَذَابَكَ | Save me from your punishment | உன் வேதனையிலிருந்து காப்பாற்று |

4. இடைச்சொற்கள் மாறும்போது பொருளும் மாறுபடுகின்றன ஆங்கிலத்தில் : get, get in , get out, get on, get off என்பவை போல, உருதுவில் : كتاب سے مارا புத்தகத்தால் அடித்தான் – كتاب كو مارا புத்தகத்தை அடித்தான் என மாறுவது போல.

| | |
|---|---|
| **<u>Pray to</u>** your Rabb | صَلِّ لِرَبِّكَ (صَلِّ + لِ) |
| **<u>Send peace on</u>** Muhammad (pbuh) | صَلِّ عَلَى مُحَمَّد (صَلِّ + عَلَى) |

5. இடைச்சொற்கள் எப்பொழுது பெயர்ச்சொல்லோடு வருமோ (1)தனக்கு பின் வரும் பெயர்ச்சொல்லின் மீது ـٍ இரு ஜேர் வரும். உதாரணமாக : فِی كِتابٍ – اِلی بَیْتٍ என்பது போல, (2) பின் வரும் பெயர்ச்சொல்லின் மீது The என்ற பொருளைத்தருகின்ற ال வந்தால் ـِ ஒரு ஜேர் தான் கொடுக்க வேண்டும். உதாரணமாக : - فِی الكِتابِ – اِلَی الْبَیْتِ– باللهِ– لِلّٰهِ – مِنَ الشّیْطَانِ போன்றவை.

6. எந்த எழுத்து (இடைச்சொல்) எங்கே வரும், அதன் பொருள் என்ன? என்பதெல்லாம் மொழிபெயர்ப்புகளில் வரும் குர்ஆனோடு அதிகம் இலயித்துவிட முயற்சி செய்யுங்கள். இன்ஷா அல்லாஹ் எந்த சிக்கலும் இல்லை.

### சுட்டிக்காட்டும் பெயர்ச்சொற்கள் (Demonstrative Pronouns)

தமிழில் (இதோ) இவன், (அதோ) அவன் என சொல்வது போல ஒவ்வொரு மொழியிலும் ஒன்றை சுட்டிக்காட்டுவதற்காக சில வார்த்தைகளை உபயோகிக்கப் படுகின்றன. (அரபி மொழியில்):

<table>
<tr><td rowspan="4">இந்நான்கு வார்த்தைகளும் பரிசுத்த குர்ஆனில் 902 முறை வருகின்றன, இவற்றை TPI முறையில் பயிற்சி செய்யுங்கள் - – هولاء هٰذا என சொல்லும்போது ஒன்று மற்றும் 4 விரல்களால் கீழே இருக்கும் புத்தகங்களை நோக்கி சைகை காட்டுங்கள் ذٰلِكَ _ أولٰئِكَ என சொல்லும்போது (هو– هم என்பதற்கு காட்டுவது போல் வலப்புறத்திலும் இல்லாமல் اَنْتَ– اَنْتُم என்பதற்கு காட்டுவது போல எதிர்புறத்திலும் இல்லாமல் இரண்டிற்கும்) இடையில் சைகை காட்டுங்கள். நன்கு பயிற்சி செய்தால், இன்ஷா அல்லாஹ் 902 முறை வருகின்ற வார்த்தைகள் மனதில் அப்படியே மனதில் பதிந்துவிடும்.</td><td>இது</td><td>هٰذَا</td></tr>
<tr><td>இவை, இவர்கள்</td><td>هٰؤُلَآءِ</td></tr>
<tr><td>அது</td><td>ذَلِكَ</td></tr>
<tr><td>அவர்கள்</td><td>أُولٰئِكَ</td></tr>
</table>

## பாடம் எண் : 7
### கற்கவேண்டிய துஆவும் மற்றும் பயில வேண்டிய முறையும்




**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| **(طه : 114)** | عِلْمًا ﴿114﴾ | زِدْنِىْ | رَّبِّ |
|---|---|---|---|
| | | | |

| **(العلق: 4)** | بِالْقَلَمِ | عَلَّمَ | الَّذِىْ |
|---|---|---|---|
| | | | |

| **(الملك: 2)** | عَمَلًا | اَحْسَنُ | اَيُّكُمْ |
|---|---|---|---|
| | | | |

**வினா 2: கல்வியை அதிகப்படுத்துவாயாக! என துஆ செய்ய அல்லாஹு தஆலா யாருக்கு கற்பித்தான்?**
**விடை :**

**வினா 3: கல்வியை அதிகப்படுத்துவாயாக! என துஆ செய்துவிட்டு என்னென்ன முயற்சிகள் நாம் செய்ய வேண்டும்?**
**விடை :**

**வினா 4: ( حروف جر ) இடைச்சொற்கள் மாறி(மாறி)வருவதால் மொழிபெயர்ப்பும் மாறிவிடுகிறதா? ஓர் உதாரணம் கூறுங்கள்.**
**விடை :**

**வினா 5: (ஓர்) இடைச்சொல்லிற்கு (ஒரு பொருள்தான் உள்ளதா அல்லது) பதில் (அதாவது பொருள்) மாறிக்கொண்டே இருக்குமா?**

## 7-வது பாடத்திற்கான வினாக்கள் - கற்க வேண்டிய துஆவும் பயிலவேண்டிய முறையும்

| கீழே உதாரணங்களில் கொடுக்கப்பட்டது போல உரிய பெயர்ச்சொற்களைக் கொண்டு மற்ற இரண்டு காலியிடங்களையும் நிரப்புக | | |
|---|---|---|
| | هٰذَا كتاب | هٰذَا |
| | هٰؤُلآءِ مسلمون | هٰؤُلآءِ |
| | | ذٰلِكَ |
| | | أُولـٰئِكَ |

| கீழே கொடுக்கப்பட்டுள்ள சுட்டுப் பெயர்ச்சொற்களை மொழிபெயருங்கள் | |
|---|---|
| | هٰؤُلآءِ |
| | ذٰلِكَ |
| | هٰذَا |
| | أُولـٰئِكَ |

| வினா 3 : தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | கற்றான் மேலும் கற்பித்தான் |
| | பேனாவைக் கொண்டு கற்றான் |
| | எனக்கு கல்வியை அதிகப்படுத்துவாயாக |
| | எனவே நீங்கள் அனைவரும் |
| | மேலும் அவர்களிலிருந்து |

| வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | فَمِنْهُمْ |
| | وَإِلَيَّ |
| | وَفِيهَا |
| | وَمِنْكَ |
| | وَعَلَيْكُمْ |

| பாடம் எண் : 8 |
|---|
| சூரா அல் அஸ்ர் |

இப்பாடத்தின் முடிவின் போது நீங்கள் 8 புதிய வார்த்தைகளை கற்றுக் கொள்வீர்கள் அவை குர்ஆனில் சுமார் 25475 முறை வருகின்றன.

| | | |
|---|---|---|
| 4 பரப்பு | கேள் 1 | |
| புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | | |
| 3 திட்டமிடு | மதிப்பிடு 2 | |

**அறிமுகம் : இச்சிறிய சூராவில் மனிதனை நஷ்டத்திலிருந்து காப்பாற்றக்கூடிய அதாவது அவனுக்கு ஈடேற்றம் பெற்றுத் தரக்கூடிய முறை வழங்கப்பட்டுள்ளது.**

﴿أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ﴾ ﴿بِسْمِ اللهِ الرَّحمٰنِ الرَّحِيمِ﴾

| وَالْعَصْرِ |
|---|
| **காலத்தின் மீது சத்தியமாக** |
| وَ என்பதற்கு இரு பொருள்கள் உள்ளன 1. சத்தியமாக 2. மேலும் |

- குர்ஆனின் பல சூராக்கள் சத்தியத்தைக் கொண்டு துவங்குகின்றன உதாரணமாக:
  وَالْفَجْرِ – وَالضُّحى – وَالَّيْلِ – وَالنَّجْمِ – وَالسَّمَاءِ
- பின்னால் சொல்லப்படுகிற விஷயங்கள் மீது காலம் சாட்சியாக இருப்பதால் காலத்தின் மீது சத்தியமிடப்பட்டுள்ளது.

| لَفِي خُسْرٍ 51 | | | الْإِنسَانَ 65 | إِنَّ |
|---|---|---|---|---|
| **நஷ்டத்தில்தான் இருக்கிறான்** | | | **மனிதன்** | **நிச்சயமாக** |
| خُسْر | فِى | لَ | اِنْسَان என்பதின் பன்மை نَاس (நாஸ்) என்பதாகும் | اِنَّ என்பது குர்ஆனில் 1296 முறை வருகின்றது اِنَّ اللهَ مَعَ الصَّابِرِيْن (அல்லாஹ் பொறுமையாளர்களோடு இருக்கிறான் என்பது) போல |
| நஷ்டம், அழிவு | ல் | உறுதியாக | | |
| **மொழிபெயர்ப்பு: நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில்தான் இருக்கிறான்** | | | | |

- இங்கு மூன்று முறைகள் உறுதிபடுத்தப்பட்டுள்ளன. 1) و 2) انّ 3) لَ
- اِلاَّ என்பதைக்கொண்டு நான்காவது முறையாகவும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது 100 மாணவர்களில் 95 பேர் தேர்வில் தோல்வியடைந்திருந்தால் 95 நபர்களைத்தவிர மீதி அனைவரும் தேர்ச்சி என நாம் சொல்ல மாட்டோம் (அனைவரும் தோல்வி 5 மாணவர்களைத்தவிர என்போம்) இங்கு அல்லாஹ் மனிதன் நஷ்டத்தில்தான் இருக்கிறான் என சொல்லும் வசனத்தைக் கேட்டவுடனேயே நம்மை (நஷ்டத்திலிருந்து) காப்பாற்றிக்கொள்ளும் வேலையை செய்ய முழுமையாக முயற்சி செய்யுங்கள்.

| الصَّالِحَاتِ | وَعَمِلُوا | | اٰمَنُوا | الَّذِيْنَ 1080 | إِلاَّ 666 |
|---|---|---|---|---|---|
| **நன்மைகள்** | **மேலும் செய்தார்கள்** | | **நம்பிக்கை கொண்டார்கள்** | **அத்தகையோர்** | **தவிர** |
| صَالِح ← صَالِحُون، صَالِحِين<br>صَالِحَات← صَالِحَة<br>எவ்வித செயல்பாடுகளை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான், நற்செயலையா தீயசெயலையா அதன் விளக்கம்தான் இது | عَمِلُوا | وَ | ايمان என்ற வார்த்தையிலிருந்து வந்ததாகும். அதிலிருந்து மு:மின் என்பதாகும் | صِرَاطَ الَذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ | لَااِلٰهَ اِلَّا الله அவனைத்தவிர வணங்கத் தகுதியுடையவன் யாரும் இல்லை |
| | அவர்கள் செய்தார்கள் | மேலும் | | | |
| **மொழிபெயர்ப்பு : விசுவாசங்கொண்டு நற்செயல்கள் புரிந்தவரைத் தவிர** | | | | | |

- இறைவா! எங்களுக்கு உறுதியான மேலும் சரியான ஈமானையும் சரியான ஏகத்துவக் கொள்கையையும் வழங்கிடுவாயாக! நாமும் ஈமான் கொண்டுள்ளோம். ஆனால் எவ்வாறு ? பணியில் இருக்கும்போது பகல்வேளைகளில் அல்லாஹ்வை எந்த அளவு நினைவில் கொள்கிறோம்?
- மறுமையின் மீது, மறைவான விஷயங்கள் மீது (குறிப்பாக தன்னுடன் இருக்கின்ற இரு வானவர்களை, ஷைத்தானை, ஜின்னை) எந்த அளவு நம்புகிறோம்? விதியை, வேதங்களை எந்த அளவு நம்புகிறோம்? வேதத்தின் மீது மட்டும் நம்பியுள்ளோமா அல்லது அது சம்பந்தப்பட்ட அனைத்தின் மீதா?
- குர்ஆனில் ஈமான் கொள்ளவேண்டியவைகளைப் பற்றி விரிவாக சொல்லப்பட்டுள்ளது. அவை ஈமானை மென்மேலும் உறுதிபடுத்துகிறது. நபிமொழிகள் அதற்கு உறுதுணையாக இருக்கிறது.
- நம்பிக்கை (ஈமான்) மட்டும் போதுமானது அல்ல அதோடு செயல்படுவதும் அவசியம், செயல்படுவதில் : தொழுகை, நோன்பு, ஜகாத், நற்குணங்கள், அழைப்புப்பணி, நல்லதை ஏவி தீயதை தடுத்தல் போன்றவற்றில் நமது நிலை என்ன?

<table>
<tr><td>بِالصَّبْرِ</td><td>وَتَوَاصَوْا</td><td>بِالْحَقِّ 247</td><td colspan="2">وَتَوَاصَوْا</td></tr>
<tr><td>பொறுமையைக் கொண்டு</td><td>மேலும் ஒருவருக்கு ஒருவர் உபதேசம் செய்து கொண்டார்கள்</td><td>சத்தியத்தைக் கொண்டு</td><td colspan="2">மேலும் ஒருவருக்கு ஒருவர் உபதேசம் செய்து கொண்டார்கள்</td></tr>
<tr><td rowspan="2">صَبْر எந்நிலையிலும் தடுமாறாமல் இருத்தல்</td><td rowspan="2">تَدارَسُوا<br>ஒருவருக்கொருவர் கற்பித்துக் கொண்டனர்</td><td rowspan="2">حَقّ : சத்தியம் (உண்மை)</td><td>تَوَاصَوْا</td><td>وَ</td></tr>
<tr><td>ஒருவருக்கு ஒருவர் உபதேசம் செய்து கொண்டார்கள்</td><td>மேலும்</td></tr>
<tr><td colspan="5">மொழிபெயர்ப்பு: சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசித்துக் கொண்டும், பொறுமையைக்கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசித்துக் கொண்டும் இருந்தார்கள்</td></tr>
</table>

- ஈமான் கொள்ளுதல் மற்றும் நற்செயல்கள் புரிதல் மட்டும் போதுமானதல்ல. மாறாக, இத்துடனே உண்மையைக் கொண்டும், பொறுமையைக் கொண்டும் ஒருவர் மற்றவருக்கு உபதேசித்துக் கொள்வதும் அவசியம், அல்லாஹ்வின் நேசர் என்றால், உபதேசம் செய்வதற்கு மட்டுமே இருக்கிறார் உபதேசம் பிறரிடமிருந்து பெறமாட்டார் என்பது தவறு போதிப்பது போதனை பெறுவது என்ற இரண்டும் இல்லையெனில் ஒருவர் மற்றவருக்கு உபதேசித்துக் கொள்வது என்பது எவ்வாறு நடக்க முடியும் ? அனைத்து நபிமார்களும் எவ்விதத்தில் உண்மையைக் கொண்டும் பொறுமையைக் கொண்டும் ஒருவர் மற்றவருக்கு உபதேசித்துக் கொண்டார்கள் என்பதின் முழுவிவரங்களும் குர்ஆனில் உள்ளன (அவை) இப்பணி பற்றி (நாம்) பயிற்சி பெறுவதற்கான ஒரு முன் மாதிரி ஆகும்.
- சத்தியம் எங்கு கிடைக்கும் ? குர்ஆன் மற்றும் நபிவழியில். குர்ஆனே புரியாத போது எங்கே சிந்தனையில் உட்காரும்? மற்றவர்களுக்கு எதை போதிப்பார்கள்? சத்தியம் எது என தெரிந்துவிட்டால், மனிதன் அதன்படி செயல்படவேண்டும் மேலும் சத்தியத்தோடும், சத்தியத்தோடு பணிபுரிபவர்களோடும் ஒத்துழைக்க வேண்டும்.
- தன் பிள்ளைகளை (பள்ளி சென்று) படியுங்கள் என சொல்லும் போதே முதலில் பாடசாலை பின்னர் கல்லூரி அதன் பின்னர் ......... என நம்மிடம் முழு திட்டம் இருக்கிறது பின்னர் நம்மிடம் இது போன்ற விரிவான திட்டம் உண்மையைக் கொண்டு ஒருவர் மற்றவருக்குள் உபதேசித்துக் கொள்வதில் இருக்கிறதா ? (இருப்பதே இல்லை)
- இங்கு (تَوَاصَوا بِالْحَقّ)பன்மையாக கூறப்பட்டுள்ளது. எனவே இது குழு உணர்வை எடுத்துக்காட்டுகிறது, இஸ்லாமில் குழுவாக செயல்படுவது என்பது அவசியம் தனியாக ஒருவர் மற்றவருக்கு உபதேசிப்பதில் குழுவைப் போன்ற அதிக பலன் கிடைப்பதில்லை.
- தனிப்பட்ட நோக்கம் : சீர்திருத்தம், அழைப்புப்பணி
- கூட்டான நோக்கம் : அல்லாஹ்வின் பக்கம் அழைப்பது. மக்கள் முன்னிலையில் கலிமாவை எடுத்துரைப்பது, இறைகலிமாவை மேலோங்க முயற்சிப்பது

- உண்மையைக் கொண்டு ஒருவர் மற்றவருக்குள் உபதேசிப்பதில் முக்கிய முறை

தனது ஒரு நண்பரை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து இப்பயிற்சியை (ஒருவர் மற்றவருக்கு) ஞாபகமூட்டிக்கொண்டேயிருங்கள், உறுதியை (வைராக்கியத்தை) அதிகப்படுத்துங்கள். பொறுமையின் சிறப்பினை எடுத்துச்சொல்லுங்கள்.

பொறுமை மூவகைப்படும் 1) நல்லவைகளின் மீது பொறுமையோடு (நிலைத்து) இருத்தல் 2) பாவங்களைவிட்டு ஒதுங்கியிருப்பதில் பொறுமையோடு (நிலைத்து) இருத்தல் 3) சிரமங்கள் ஏற்படும்போது பொறுமையோடு இருத்தல்.

**இலக்கணம்:** கடந்த பாடங்களில் ( حرف جر) இடைச் சொற்களைப்பற்றி படித்தோம். இப்பாடத்தில் வினைச்சொற்கள் சம்பந்தமாக படிக்க இருக்கிறோம், வினைச்சொல் என்றால், ஒருவரிடமிருந்து ஒரு செயல் செய்தல் அல்லது நடத்தல் வெளிப்படும். உதாரணமாக: فَتَحَ திறந்தான், ذَهَبَ : சென்றான் يَشْرَبُ குடிப்பான்.

அரபி மொழியில் (வினைச் சொல்லாயினும் சரி பெயர்ச் சொல்லாயினும் சரி) அனைத்து வார்த்தைகளும் சுமார் 3 எழுத்துக்கள் முறையின் அடிப்படையில்தான் வரும் உதாரணமாக : ف ع ل – ن ص ر – ض ر ب போன்றவை.

அரபி மொழியில் அடிப்படைக்காலங்கள் இரண்டு 1) ماضى சென்ற காலம் 2) مضارع நிகழ்காலம், இதில் சென்ற காலத்தைப் பற்றியே படிக்க இருக்கிறோம். இதில் 6 வாக்கிய அமைப்புகள் உள்ளன அவற்றை TPI முறையில் கற்கவும் (இவற்றை பயிற்சி செய்யும்போது நெஞ்சின் உயரத்தில் கைகளால் சுட்டிக்காட்டியும் சத்தம் சற்று தாழ்ந்தும் இருக்க வேண்டும்) அதன் முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது


1. فَعَلَ ::பஅல (அவன் செய்தான்) என சொல்லும்போது வலது ஆட்காட்டி விரலை வைத்து ஒரு மனிதன் வலப்புறம் உட்கார்ந்திருப்பது போன்று வலப்புறம் சைகை காட்ட வேண்டும். فَعَلُوا ::பஅலூ (அவர்கள் பலர் செய்தார்கள்) என சொல்லும்போது; வலது 4 விரல்களால் (அதைப் போன்றே) வலப்புறம் சைகை காட்டுங்கள்.
2. فَعَلْتَ ::பஅல்த்த (நீ செய்தாய்) என சொல்லும்போது வலது ஆட்காட்டி விரலை வைத்து எதிரில் இருக்கும் மனிதனைப் பார்த்து சைகை காட்ட வேண்டும். அடுத்து فَعَلْتُمْ ::பஅல்த்தும் (நீங்கள் பலர் செய்தீர்கள்) என சொல்லும்போது 4 விரல்களால் எதிரில் இருக்கும் மனிதர்களைப் பார்த்து சைகை காட்டுங்கள். வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போது ஆசிரியர் மாணவரையும், மாணவர்கள் ஆசிரியரையும் நோக்கி சைகை காட்டுங்கள்.
3. فَعَلْتُ ::பஅல்த்து (நான் செய்தேன்) என சொல்லும்போது வலது ஆட்காட்டி விரலை வைத்து தன்னை நோக்கி சைகை காட்டுங்கள் அடுத்து فَعَلْنَا ::பஅல்னா (நாங்கள் பலர் செய்தோம்) என சொல்லும் போது 4 விரல்களால் தன்னை நோக்கிக் காட்டுங்கள்.

சென்ற காலத்தின் வார்த்தைகளை எழுதும்போது *italics* (சாய்த்து எழுதப்படும்) *Fonts* எழுத்துகளை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் பணி முடிக்கப்பட்டுவிட்டது. எனவே அவ்வார்த்தைகள் சாய்த்து எழுதப்பட்டுள்ளது.


| கடந்தகால வினைச்சொல் | فعل ماضى | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|
| அவன் செய்தான் | *فَعَلَ* | ஒருமை واحد *Sr.* | படர்க்கை 3rd Person غائب |
| அவர்கள் செய்தார்கள் | *فَعَلُوا* | பன்மை جمع *Pl.* | |
| நீ செய்தாய் | *فَعَلْتَ* | ஒருமை واحد *Sr.* | முன்னிலை 2nd Person حاضر |
| நீங்கள் செய்தீர்கள் | *فَعَلْتُم* | பன்மை جمع *Pl.* | |
| நான் செய்தேன் | *فَعَلْتُ* | ஒருமை واحد *Sr.* | தன்னிலை 1st Person متكلّم |
| நாங்கள் செய்தோம் | *فَعَلْنا* | பன்மை *pl.* جمع *dl.* مثنى | |

இவை மிக முக்கியமானவை, மேலும் இதனை தெளிவாக கற்றுக் கொள்ளுங்கள் ஏனெனில் குர்ஆனில் 9000 முறை வருகின்றன.

அதாவது ஒவ்வொரு 10 வது வார்த்தை குர்ஆனில் இதன் அமைப்பில் வருகின்றன இந்த அமைப்பை மனனம் செய்ய 5 அல்லது 10 நிமிடங்களை செலவு செய்யுங்கள்.



கடந்தகால வினைச்சொல்லின் (படர்க்கை, முன்னிலை, தன்னிலைகளுடைய ஒருமை, இருமை, பன்மைகளின்) வார்த்தைகள் தன் வேறுபட்ட நிலைகளில் தன் கடைசி எழுத்துக்களை மாற்றிக் கொண்டே வரும். அந்த எழுத்துகளின் மாற்றங்களைக் கொண்டே அது ஒருமை அல்லது பன்மை அல்லது படர்க்கை,




முன்னிலை, தன்னிலை என அறிய முடிகிறது. இவ்விஷயத்தை சிந்தனையில் பதிய வைக்கவே படங்கள் மூலம் விளக்கமளிக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. ஒரு சாலையோரத்தில் நின்றிருக்கும் போது சென்றுவிட்ட வாகனங்களின் பின்பகுதி தெரியும், பின்பகுதியைப்பார்த்துத்தான் எந்த வாகனம் சென்றது எனக் கேட்பீர்கள் அதைப்போன்றே விமான ஓடுதளத்தில் நீங்கள் நின்றிருக்கும் போது, பறந்துவிட்ட விமானத்தின் (வால்)பின்பகுதி தெரியும் அதன் வாலின் மீது ஏற்படுகின்ற மாற்றங்களையே (கடந்த கால வினைச்சொற்களின் இறுதியில் وا – تَ– تُم – تُ – نَا என ஏற்படுகின்ற மாற்றங்களோடு ஒப்பிட்டு) சொல்லப்பட்டுள்ளது. மற்றொரு உதாரணத்தையும் இங்கு ஞாபகத்தில் வைக்கலாம். கற்பனை செய்து கொள்ளுங்கள் : ஒரு பழம் தருகின்ற மரக்கன்று ஒன்றை நடுகிறான் (அவனது செயலான) இம்மரக்கன்று உயரமாக வளர்ந்து விட்டது. அதன் நிழலடியில் (மரத்தை நட்டவன்) நிற்கிறான். இப்பொழுது (அவனது செயலான) பெரிய பொருளாக இருக்கின்ற மரம் முதலில் கண்ணில் படுகிறது. பின்னர் மரத்தை நட்ட (அம்மரத்தின் நிழலில் நிற்கின்ற) மனிதனைப்பற்றி தெரிய வருகிறது. அதுபோல மரம் நட்டவர்கள் (மரத்தின் நிழலில் நிற்கின்றவர்கள்) பலராக இருக்கும்போது, முதலில் அவர்களது செயலும் பின்னர் فَعَلُوْا என்பதில் பலரின் அடையாளமான وا தெரிவதுபோல் அப்பலரும் தென்படுவார்கள் அதைப்போலவே فَعَلْتَ– فَعَلتُم– فَعَلتُ–فَعَلْنَا– என்பவைகளிலும் முதலில் செயலும் பின்னர் செயல்படுத்தியவரும் தென்படுவார்கள். (அவன் செய்யவில்லை என) ஒரு விஷயத்தை மறுக்கும்போது مَا (இல்லை) என்ற எழுத்தை இதே வினைச்சொல்லின் துவக்கத்தில் சேர்த்து விடவேண்டும். உதாரணமாக مَا فَعَلَ – مَا فَعَلُوا – مَا فَعَلْتَ – مَا فَعَلتُم _ مَا فَعَلَتُ– مَا فَعَلْنا

**Addition of قَدْ gives further emphasis to the Perfect tense.**

***قَدْ فَعَلَ*** *தின்னமாக செய்தான்* ***قَدْ فَعَلُوا*** *திண்ணமாக செய்தார்கள்* ***قَدْ فَعَلْتَ*** *திண்ணமாக செய்தாய்*
***قَدْ فَعَلْتُمْ*** *திண்ணமாக செய்தீர்கள்* ***قَدْ فَعَلْتُ*** *திண்ணமாக செய்தேன்* ***قَدْ فَعَلْنَا*** *திண்ணமாக செய்தோம்*

**பாடம் எண் : 8**

**சூரா அல்-அஸ்ர்**




**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழி பெயர்ப்புளைக் கொண்டு நிரப்புங்கள்.**

| لَفِيْ خُسْرٍ ۝٢ | الْاِنْسَانَ | اِنَّ | وَالْعَصْرِ ۝١ |
|---|---|---|---|
| | | | |

| الصّٰلِحٰتِ | وَعَمِلُوا | اٰمَنُوْا | الَّذِيْنَ | اِلَّا |
|---|---|---|---|---|
| | | | | |

| بِالصَّبْرِ ۝٣ | وَتَوَاصَوْا | بِالْحَقِّ | وَتَوَاصَوْا |
|---|---|---|---|
| | | | |

**வினா 2: காலத்தின் மீது சத்தியம் செய்வது எதைக் காட்டுகிறது?**

**விடை :**

**வினா 3: ஈடேற்றம் பெறுவதற்கான நிபந்தனைகள் யாவை?**

**விடை :**

**வினா 4: உண்மை எங்கு (தேடினால்) கிடைக்கும் ?**

**விடை :**

**வினா 5: பொறுமையின் வகைகள் எத்தனை?**

**விடை :**

## 8-வது பாடத்திற்கான வினாக்கள் - சூரா அல்-அஸ்ர்

**வினா 1:** கடந்த கால வினைச்சொற்களின் காலியிடங்களில் فَعَلَ வின் ஒவ்வொரு 6 வாக்கிய அமைப்புகளையும் மும்முறை எழுதி, பின்னர் அதற்கான மொழிபெயர்ப்பையும் எழுதுங்கள்.

| மொழிபெயர்ப்பு | فعل ماضى | فعل ماضى | فعل ماضى | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|
| | | | | ஒருமை واحد Sr. (Singular.) | படர்க்கை 3rd Person غائب |
| | | | | பன்மை جمع Pl. (plural) | |
| | | | | ஒருமை واحد Sr. (Singular.) | முன்னிலை 2nd Person حاضر |
| | | | | பன்மை جمع Pl. (plural) | |
| | | | | ஒருமை واحد Sr. (Singular.) | தன்னிலை 1st Person متكلّم |
| | | | | பன்மை مثنى dl. جمع pl. | |

**வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும்

| | |
|---|---|
| | நான் இதைச் செய்தேன் |
| | நஷ்டத்தில் |
| | ஈமான் கொண்டனர் மேலும் செயல் பட்டனர் |
| | உன்னுடைய மார்க்கம் இன்னும் எனது மார்க்கம் |
| | எனது பெயர் மேலும் உனது பெயர் |

**வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக

| | |
|---|---|
| | مَنْ فَعَلَ هٰذَا |
| | وَفَعَلْتَ |
| | مِنْ رَبُّكَ |
| | فِيْ دِيْنِهِمْ |
| | اِلَي رَبِّك |

| பாடம் எண் : 9<br>சூரா அந்நஸ்ர் |
|---|

9 பாடங்கள் முடிந்த நிலையில் **26410** முறை வருகின்ற **59** வார்த்தைகளை கற்பீர்கள்

| 4 | பரப்பு | கேள் | 1 |
|---|---|---|---|
| | புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | | |
| 3 | திட்டமிடு | மதிப்பிடு | 2 |

**அறிமுகம்:-** அப்துல்லாஹ் பின் அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நபி(ஸல்)அவர்களுக்கு இறுதியாக அருளப்பட்ட அத்தியாயம் இதுவாகும். (முஸ்லிம்). இந்த சூரா இறக்கப்பட்ட பின் மேலும் சில வசனங்கள் அருளப்பட்டது. இஸ்லாத்தின் எதிரிகள் அரேபியாவில் தோற்கடிக்கப்பட்டார்கள். மேலும் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஏனெனில் இஸ்லாத்திற்கு எதிராக பொய்யான கருத்துகளை சொல்ல வேண்டும் என்று ஒரு நபர் கூட அவர்களை பயமுறுத்தவில்லை அல்லது அவர்களை குழப்பதிற்கு உன்டாக்கவும் இல்லை. அவர்கள் இஸ்லாத்தை ஏற்பதற்கு முழு சுதந்திரத்தை பெற்றுக்கொண்டார்கள்.

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ۞ بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

| وَالْفَتْحُ | نَصْرُ اللَّـهِ | جَاءَ | إِذَا 454 |
|---|---|---|---|
| **வெற்றி** | **அல்லாஹ்வின் உதவி** | **வந்தது (வரும்)** | **போது** |
| திறத்தல், வெற்றி | نَصْر- உதவி | جَاءَ- வந்து விட்டது إِذَا جَاءَ-போது إِذَا விற்குப்பின் கடந்த கால வினைச்சொல் வந்தால் அதன் பொருள் எதிர்காலத்தில் ஆகி விடும் | إِذَا– إِذْ **போது** |
| **மொழிபெயர்ப்பு : (நபியே உமக்கு) அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் வரும்போது** | | | |

- إِذْ என்ற வார்த்தை குர்ஆனில் 239 முறை வந்துள்ளது. மேலும் إِذَا என்ற வார்த்தை 454 முறைகள் வந்துள்ளது. அவைகள் இரண்டின் அர்த்தமும் எப்பொழுது.
- அல்லாஹ்வின் உதவி என்பதன் பொருள் அல்லாஹ் மற்ற அனைத்தையும் விட உண்மையின் மீது ஆதிக்கம் செலுத்துகின்றான். இங்கே நஷ்ருல்லாஹ் என்பதன் பொருள் அதாவது நம்மால் முயற்சி மாத்திரமே செய்ய முடியும் அதன் முடிவு அல்லாஹ் ஒருவனிடமிருந்து மாத்திரம் வரும். ஆகையால் நம்முடைய வாழ்வில் எந்த தேவையையும் அல்லாஹ் ஒருவனிடமாத்திரமே கேட்க வேண்டும்.
- இங்கு வெற்றி என்பதன் பொருள் ஹிஜ்ரி 10ம் ஆண்டு கிடைத்த மக்கா வெற்றி ஆகும். எப்போது ஈமான் கொண்டவர்கள் தங்களுடைய அனைத்து பொருட்களையும் அல்லாஹ்விற்காக தியாகம் செய்கின்றார்களோ அவர்களுக்கு அல்லாஹ் உறுதியாக உதவி புரிகின்றான்.
- யா அல்லாஹ் உன்னுடைய உதவியை அதிகமாக எங்களுக்கு வழங்கு மேலும் வெற்றியை கொடு.
- 23 வருடங்கள் கடின உழைப்பும் மற்றும் முழுமையான வணக்க வழிபாட்டின் காரணமாக அல்லாஹ் வெற்றியை கொடுத்தான் அப்படியெனில் நாம் இஸ்லாத்திற்காக என்ன செய்திருக்கின்றோம்?
- **திட்டுமிடுதல்:-** என்னால் இன்று அல்லது இந்த வாரம் அல்லது என்னுடைய வாழ்வில் என்ன செய்யமுடியும் ஒரு தனிநபரின் திட்டம் அல்லது குழுவின் திட்டம் ஒரு காரியத்தை உருவாக்கும். மார்கத்திற்கு சேவை செய்வதற்காக ஒருவர் தன்னுடை பணம் நேரம் அனைத்தையும் செலவு செய்ய வேண்டும். அதே போல் நீங்கள் ஒரு மாணவனாக இருந்தால் படிப்பில் சிறந்தவராக இருங்கள் அதுவே நீங்கள் இஸ்லாத்திற்கு செய்யும் சிறந்த சேவை ஆகும்.

| أَفْوَاجًا | فِي دِيْنِ اللَّـهِ | | | يَدْخُلُونَ | النَّاسَ[42] | وَرَأَيْتَ | |
|---|---|---|---|---|---|---|---|
| **கூட்டங் கூட்டமாக** | **அல்லாஹ்வின் மார்க்கத்தில் (தீன் : வாழ்க்கை நடத்தும் முறை)** | | | **நுழைவார்கள்** | **மக்களை** | **மேலும் நீங்கள் காணுவீர்கள்** | |
| فَوْج என்பதின் பன்மையாகும் | اللَّـهِ | دِيْنِ | فِي | دُخُول : நுழைதல் خُرُوج : வெளியேறுதல் | اِنْسَان இன்ஸான் என்பதின் பன்மை | رَأَيْتَ | وَ |
| | அல்லாஹ்வின் | மார்க்கம் | ல் | | | காணுவீர்கள் | மேலும் |
| தீன் : வாழ்க்கை நடத்தும் முறை | | | | | | | |
| جَاءَ- வந்து விட்டது اِذَا جَاءَ- வரும் போது, اِذَا விற்குப்பின் கடந்த கால வினைச்சொல் வந்தால் அதன் பொருள் எதிர்காலத்தில் ஆகி விடும். | | | | | | | |
| **மொழிபெயர்ப்பு : நீங்கள் அல்லாஹ்வின் மார்க்கத்தில் மக்கள் கூட்டம்கூட்டமாக நுழைவதைக் காண்பீர்கள்** | | | | | | | |

- இங்கு (மக்கள்) என்பது மக்கா வெற்றி கொள்ளும்போதுள்ள பல கோத்திரங்களை குறிக்கின்றது.
- دِيْن க்கு இரண்டு பொருள் உள்ளது 1. தீர்ப்பு நாள் 2. வாழ்க்கை நெறி. இங்கு வாழ்க்கை நெறியை குறிக்கின்றது. அதாவது இஸ்லாத்தை ஏற்றுக்கொன்ட மக்கள்.
- மேலுள்ள வசனத்தின் அடிப்படையில் அல்லாஹ்வின் வெற்றி, உதவியின் முடிவு என்ன? மக்கள் வழிகாட்டுதலை பெற்று இஸ்லாத்தில் நுழைகின்றனர். நாம் இந்த காரணத்திற்க இன்று வெற்றியை கேட்கின்றோமா? மக்களை இஸ்லாத்தை புரிந்துகொள்ள மேலும் அதனை பின்பற்ற உதவுகின்றோமா?

| وَاسْتَغْفِرْهُ | | | رَبِّكَ | | بِحَمْدِ | | فَسَبِّحْ | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மேலும் அவனிடம் பாவமன்னிப்பு கேளுங்கள்** | | | **உனது ரப்புடைய** | | **புகழைக்கொண்டு** | | **எனவே துதிப்பீராக!** | |
| هُ | اسْتَغْفِرْ | وَ | كَ | رَبّ | حَمْد | بِ | سَبِّحْ | فَ |
| அவனிடம் | பிழைபொறுக்க தேடுவீராக | இன்னும் | உனது | ரப்புடைய | புகழைக் | கொண்டு | துதிப்பீராக! | எனவே |
| اِسْتِغْفَار – مَغْفِرَة – غَفُوْر– مَغْفُوْر என சொல்வது போல | | | உன்னைப் பரிபக்குவப் படுத்தி பராமரித்துக் கொண்டிருக்கும் அந்த ரப்புடைய | | حمد என்றால் நல்லவைகளைப் பற்றி மட்டும் புகழ்தல் | | تسبيح என்றால் குறைகள் இல்லாதவன் என சொல்லுதல் | |
| **மொழிபெயர்ப்பு : அப்போது உமது இரட்சகனின் புகழைக்கொண்டு துதிப்பீராக! மேலும் அவனிடம் பிழை பொறுக்கத் தேடுவீராக!** | | | | | | | | |

- சுப்ஹானல்லாஹ் அதாவது அல்லாஹ் பரிசுத்தமானவன். அனைத்து குறைகளைவிட்டும் பரிசுத்தமானவன் அதாவது அவனிடம் எந்தக் குறையோ, பலவீனமோ இல்லை. அவனுக்கு யாருடைய உதவி தேவையில்லை. அவன் யாருடைய அழுத்தத்திற்கும் (நிர்பந்தத்திற்கும்) உட்பட்டவனில்லை. அவனுக்கு எந்த பிள்ளைகளும் இல்லை, அவன் யாருடைய பிள்ளையும் இல்லை. அவன் தன்னிலும் தன் தண்மைகளிலும் உரிமை கொண்டாடுவதிலும் சுயமாக முடிவெடுப்பதிலும் (எல்லாவற்றிலும்) தனித்தவன்.
- நாம் சுப்ஹானல்லாஹ் சொல்கிறோம் என்றால் அதற்கு மற்றொரு கருத்தையும் கூறலாம் : அவனால் கொடுக்கப்பட்ட வாழ்க்கை என்ற தேர்வுத்தாள் எதுவாயிருப்பினும் அது முற்றிலும் சரியே, அதுபற்றி எந்த முறையீடு(களு)ம் இருக்கக் கூடாது. (ஆனால்) எங்களுக்கு வாழ்க்கையின் சோதனைகளை சுலபமாக ஆக்கித் தருவாயாக! என்று மட்டும் துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும்.

- (சுப்ஹானல்லாஹ்வின் சரியான கருத்தை மறுத்து)அல்லாஹ்வைப்பற்றி முறையீடு ஏதும் இருந்தால், உண்மையான புகழ்ச்சியோ நன்றியோ செலுத்தமாட்டார்கள். எனவேதான் அதிகபட்சம் ஹம்தின் வார்த்தைகள் தஸ்பீஹ் என்ற வார்த்தைகளுக்குப் பின்னர்தான் வருகிறது. இங்கும் கூட அவ்வாறுதான் இருக்கிறது

- நம்மிடம் தஸ்பீஹ் மற்றும் ஹம்து இரண்டும் குறைவாகவே இருக்கிறது எனவே அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரவேண்டும். ஒரு நல்ல காரியத்தை செய்ய வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் தஸ்பீஹ், ஹம்து மற்றும் பாவமன்னிப்புக் கேட்க வேண்டும்.

<table>
<tr><td>تَوَّابًا</td><td>كَانَ</td><td colspan="2">اِنَّهُ</td></tr>
<tr><td>பாவமன்னிப்பு கோருதலை ஏற்பவன்</td><td>இருக்கிறான்</td><td colspan="2">நிச்சயமாக அவன்<br>உதாரணம்: ان الله مع الصابرين –<br>நிச்சயமாக அல்லாஹ் பொருமையாளர்களுடன் இருக்கிறான்.</td></tr>
<tr><td rowspan="2">تَابَ : திரும்பி (திருந்தி) வந்தான் تَابِبٌ திரும்பி (திருந்தி) வருபவன், تَوَابٌ : திரும்ப திரும்ப (திருந்தி) வருபவன்</td><td rowspan="2">كَانَ : <u>இருந்தான்</u> அல்லாஹ்வோடு இணைத்து பேசும்போது "<u>இருக்கிறான்</u>" என பொருள்படும்</td><td>هُ</td><td>اِنَّ</td></tr>
<tr><td>அவன்</td><td>நிச்சயமாக</td></tr>
<tr><td colspan="4">பொருள்:- நிச்சயமாக அவன் மன்னிப்பவனாக இருக்கின்றான்.</td></tr>
</table>

- நம் போன்ற பாவிகளுக்கு இது மிகப்பெரிய நற்செய்தியாகும், இறையருளை விட்டு என்றும் நிராசை ஆகக்கூடாது. உண்மையாக (அதாவது தன் குற்றத்தை ஏற்று, அதன் மீது தலைகுனிந்து, திரும்ப செய்ய மாட்டேன் என்ற முழுமையான உறுதியுடன்) பாவமன்னிப்புக் கோருங்கள். இதை ஏற்றுக்கொள்வான் என்றும் நம்புங்கள்.

- உதாரணமாக : நான் மிகவும் பசியோடு இருக்கிறேன். யாராவது ஒருவர் நூற்றுக்கணக்கானோர்களுக்கு சாப்பாடு கொடுக்க விரும்பினால், எனக்கும் ஓர் உணவுப்பொட்டலம் தாருங்கள்! என அன்போடு கேட்கமாட்டோமா? பாவமன்னிப்புக்கோருவதை ஏற்பதாக இறைவன் சொல்கிறான் உடனே பாவமன்னிப்புக் கோருங்கள்.

<u>**இலக்கணம் :**</u> فعل مضارع (ஃபிஃலெ முழாரிஃ) என்பதில் வருங்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டுமே அடங்கும். இப்பாடத்தில் நாம் இவ் வினைச் சொற்களின் 6 வார்த்தைகளை TPI முறையில் பயிற்சி செய்வோம். அவை வருமாறு

<table>
<tr><td>நிகழ்கால / எதிர்கால வினைச்சொல்</td><td>فعل مضارع</td><td>நபர்</td></tr>
<tr><td>அவன் செய்கிறான் / செய்வான்</td><td>يَفْعَلُ</td><td rowspan="2">படர்க்கை<br>3rd Person<br>غائب</td></tr>
<tr><td>அவர்கள் செய்கிறார்கள் /செய்வார்கள்</td><td>يَفْعَلُونَ</td></tr>
<tr><td>நீ செய்கிறாய் / செய்வாய்</td><td>تَفْعَلُ</td><td rowspan="2">முன்னிலை<br>2nd Person<br>حاضر</td></tr>
<tr><td>நீங்கள் செய்கிறீர்கள் / செய்வீர்கள்</td><td>تَفْعَلُونَ</td></tr>
<tr><td>நான் செய்கிறேன் / செய்வேன்</td><td>اَفْعَلُ</td><td rowspan="2">தன்னிலை<br>1st Person<br>متكلّم</td></tr>
<tr><td>நாங்கள் செய்கிறோம் / செய்வோம்</td><td>نَفْعَلُ</td></tr>
</table>

வகையில் இறுதி எழுத்துக்கள் மாறுபடும் فعل مضارع அமைப்பில் ஆரம்ப எழுத்துக்கள் மாறுபடும். இதை நினைவில் கொள்ள பின்வரும் ஒரு குறிப்பை கவனியுங்கள். ஒரு வேலை நீங்கள் சாலையின் மத்தியில் நின்றால் உங்களை நோக்கி வரக்கூடிய ஜீப் அல்லது காரின் முன் பாகத்தை எளிதாக பார்க்கலாம். அதாவது எதோ ஒன்று வரக்கூடியதாக இருக்கின்றது அதுவே فعل مضارع. முன்பாகத்தை பார்க்கும் போதே அது என்ன வாகனம் என்று கூறிவிடுவீர்கள் இங்கு வெவ்வேறு வாகனங்களை காட்டுவதற்கு பதிலாக நாம் நீங்கள் ஓடுகளத்தில் நிற்பது போலவும் ஒரு விமானம் தரை இறங்குவதை போல காட்டியுள்ளோம். அதே போல் முதல் எழுத்துக்களை பார்க்கும் போதே யார் செய்கிறார் அல்லது செய்வார், நீ, அவன் அல்லது நான் என்பதையெல்லாம் கூறிவிடுவீர்கள் இந்த ஆரம்ப எழுத்துக்கள் ا ن ت ي ஆகும்


சென்றகால வினைச்சொற்களை பயிற்சி செய்ததைப் போன்றே இந்த فعل مضارع பயிற்சியையும் TPI முறையில் பயிலுங்கள் எனினும் வேறுபாட்டினை அவசியம் கவனத்தில் கொள்ளவேண்டும்,

(فعل ماضى – فعل مضارع இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள்)

1) فعل مضارع (நிகழ்-எதிர் கால வினைச்சொற்கள்)ஐப்பயிற்சி செய்யும் போது கைகள் கண்களை நோக்கி சைகை காட்ட வேண்டும். சப்தமும் சற்று உயர்ந்தவாறு இருக்க வேண்டும். (فعل ماضى சென்றகால வினைச்சொற்களை பயிற்சி செய்யும்போது; கைகளால் நெஞ்சின் உயரத்தை நோக்கி சைகை காட்ட வேண்டும்)

2) فعل ماضى யை எழுதும்போது (எழுத்துகளை) சாய்த்து எழுத வேண்டும். فعل مضارع யை எழுதும்போது (வேலை நடந்து கொண்டிருக்கிறது அல்லது நடக்க இருப்பதைப் போல எழுத்துகளை) நேராக எழுத வேண்டும்

3) فعل مضارع ன் வாக்கிய அமைப்புகளில் மற்றொரு சிறப்பு : فعل ماضى யில் (வார்த்தைகளின் பின்பகுதியில் ) ஏற்படும் மாற்றங்களைப்போன்று அல்லாமல் فعل مضارع யின் மாற்றங்கள் ( وْنَ–يْنَ– انِ என முடிவுறும் வார்த்தைகள் நீங்கலாக மற்ற) வாக்கிய அமைப்புகளில் (வந்து கொண்டிருக்கிற அல்லது வர இருக்கிற) விமானத்தில் நுனி(முற்)ப்பகுதியில் மாற்றங்கள் படிப்படியாக தென்படுவது போல வார்த்தையின் முற்பகுதியில் (يَ–تَ–أَ – نَ என) மாற்றங்கள் ஏற்படும், இவ்விஷயங்களை புதிதாக பயிலுபவர்களின் மனதில் பதியவைப்பதற்காகவே (கீழேயுள்ள) இவ்விரண்டு படங்களும் காண்பிக்கப்பட்டுள்ளன.




**فعل مضارع** ஞாபகப்படுத்திக் கொள்ள மற்றொரு முறையையும் மனதில் வையுங்கள்.

தன் சிந்தனையில் யாசிர் என்ற சிறுவனை தன் வலப்புறத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள். ( ஞாபகம் இருக்கட்டும் فعل ماضى யில் மரம் என சொன்னோம் ஏனெனில் செயல் முடிந்து விட்டது. இங்கு யாசிர் என்பவன்) ஒரு செடியை நடுகிறான்: செடியைக் கவனிக்கும்போது (செடியை நடுகின்ற) யாசிர் என்ற சிறுவன் பெரியவனாகவே தென்படுவான் அவ்வாறே يَفْعَلُ என்பதில் உள்ள ي வை யாசிர் என நினைத்துக் கொள்ளுங்கள். அதாவது யாசிர் செடி நட்டுக்கொண்டிருக்கிறான் (يَاسِرٌ يَفْعَلُ ) அதே போல பல யாசிர்கள் செய்யும்போது இரைச்சல் வரும் அது பன்மையில் வருகின்ற ون– ين வூன்-ஈன் என்பதாகும், அதைப்போன்றே தௌபீக் என்பவர் செடி நடுகிறார் تَفْعَلُ என்பதில் உள்ள ت தா- வை தௌபீக் என சொல்லும்போது நினைவில் வையுங்கள். பல தௌபீக்-கள் செய்யும் போது இரைச்சல் வரும்.

அது பன்மையில் வருகின்ற ون– ين வூன்-ஈன் என்பதாகும், اَفْعَلُ என சொல்லும்போது اَنَا அன-வில் வருகின்ற அலி∴பும், نَفْعَلُ என சொல்லும்போது نَحْنُ நஹ்னு வில் உள்ள நூனும் அவ்வாறே. இதில் اَفْعَلُوْن– نَفْعَلُوْنَ என சொல்லப்படாது என்பதை நினைவில் வையுங்கள்.

இவற்றில் : மறுக்கும்போது لَا லா என்பதை இவற்றின் முன் இணைத்துவிட வேண்டும். உதாரணமாக: لَايَفْعَلُ– لَايَفْعَلُوْن– لَاتَفْعَلُ– لَاتَفْعَلُوْن– لَا اَفْعَلُ– لَا نَفْعَلُ சில சமயங்களில் مَا (மா) என்பதையும் பயன்படுத்தப்படும்.

| لاَ இணைந்தால் எதிர்வினை பொருள் தரும் (மாட்டான்) | | سَ : மிக விரைவில் (நேரத்தை சொல்ல இயலாது سَوف) | | سَوف : விரைவில் | | நபர் |
|---|---|---|---|---|---|---|
| செய்யமாட்டான் | لاَ يَفْعَلُ | மிக விரைவில் செய்வான் | سَيَفْعَلُ | விரைவில் செய்வான் | سَوْفَ يَفْعَلُ | 3rd |
| செய்யமாட்டார்கள் | لاَ يَفْعَلُون | மிக விரைவில் செய்வார்கள் | سَيَفْعَلُون | விரைவில் செய்வார்கள் | سَوْفَ يَفْعَلُون | |
| செய்யமாட்டாய் | لاَ تَفْعَلُ | மிக விரைவில் செய்வாய் | سَتَفْعَلُ | விரைவில் செய்வாய் | سَوْفَ تَفْعَلُ | 2nd |
| செய்யமாட்டீர்கள் | لاَ تَفْعَلُون | மிக விரைவில் செய்வீர்கள் | سَتَفْعَلُون | விரைவில் செய்வீர்கள் | سَوْفَ تَفْعَلُون | |
| செய்யமாட்டேன் | لاَ أَفْعَلُ | மிக விரைவில் செய்வேன் | سَأَفْعَلُ | விரைவில் செய்வேன் | سَوْفَ أَفْعَلُ | 1st |
| செய்யமாட்டோம் | لاَ نَفْعَلُ | மிக விரைவில் செய்வோம் | سَنَفْعَلُ | விரைவில் செய்வோம் | سَوْفَ نَفْعَلُ | |

## பாடம் எண் : 9
### சூரா அந் நஸ்ர்

4 பரப்பு | கேள் 1
புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்
3 திட்டமிடு | மதிப்பிடு 2

**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| وَالْفَتْحُ ① | نَصْرُ اللّٰهِ | جَآءَ | اِذَا |
|---|---|---|---|
| | | | |

| اَفْوَاجًا ② | فِيْ دِيْنِ اللّٰهِ | يَدْخُلُوْنَ | النَّاسَ | وَرَاَيْتَ |
|---|---|---|---|---|
| | | | | |

| وَاسْتَغْفِرْهُ | رَبِّكَ | بِحَمْدِ | فَسَبِّحْ |
|---|---|---|---|
| | | | |

| كَانَ تَوَّابًا ③ | اِنَّهٗ |
|---|---|
| | |

**வினா 2: சூரா அந்-நஸ்ர் எப்பொழுது இறங்கியது?**
**விடை :**

**வினா 3: தஸ்பீஹ் மற்றும் ஹம்துக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்ன?**
**விடை :**

**வினா4: நுஸ்ரத் என்பதின் கருத்து என்ன? மேலும் வெற்றி என எதைக்குறிப்பிடுகிறோம் ?**
**விடை :**

**வினா 5: சூரா அந்-நஸ்ரிலிருந்து நமக்கு என்ன படிப்பினை கிடைக்கிறது?**
**விடை** :

## 9-வது பாடத்திற்கான வினாக்கள் - சூரா அந்-நஸ்ர்

**வினா 1:** எதிர் கால வினைச்சொற்களின் காலியிடங்களில் يَفْعَلُ வின் ஒவ்வொரு 6 வாக்கிய அமைப்புகளையும் மும்முறை எழுதி பின்னர் அதற்கான மொழிபெயர்ப்பையும் எழுதுங்கள்.

| மொழிபெயர்ப்பு | فعل مضارع | فعل مضارع | فعل مضارع | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|
| | | | | ஒருமை واحد Sr. (Singular.) | படர்க்கை 3rd Person غائب |
| | | | | பன்மை جمع Pl. (plural) | |
| | | | | ஒருமை واحد Sr. (Singular.) | முன்னிலை 2nd Person حاضر |
| | | | | பன்மை جمع Pl. (plural) | |
| | | | | ஒருமை واحد Sr. (Singular.) | தன்னிலை 1st Person متكلّم |
| | | | | பன்மை pl. جمع dl. مثنى | |

| **வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | அவன் செய்தான் மேலும் நான் செய்தேன் |
| | அவர்கள் செய்தார்கள் மேலும் நீ செய்தாய் |
| | அவன் செய்கிறான் மேலும் நான் செய்கிறேன் |
| | மேலும் நாங்கள் செய்கிறோம் |
| | நான் இதை செய்கிறேன் |

| **வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | مَنْ يَفْعَلْ ذٰلِكَ |
| | اِنَّ اللهَ يَفْعَلُ |
| | اِلَي يَوْمِ الدِّيْنِ |
| | مَعَ كتَابِهَا |
| | وَعَلَي اللهِ |

**பாடம் எண் : 10**
**சூரா அல் இக்லாஸ்**

**10 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 26842 முறை வரக்கூடிய 61 புதிய வார்த்தைகளை கற்பீர்கள்.**

| | |
|---|---|
| 4 பரப்பு | கேள் 1 |
| புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | |
| 3 திட்டமிடு | மதிப்பிடு 2 |

**அறிமுகம் : இது மிகச்சிறிய அத்தியாயம். ஆனால் மிக முக்கியம் வாய்ந்தது. தொழுகையில் ஓதும்போது சிறிய அத்தியாயம் எனக்கருதாமல், இதன் முக்கியத்துவத்தை முன்வைத்து ஓதுங்கள்**

1) 'இந்த அத்தியாயம் குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியாகும்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

2) நாம் யாரை வணங்கவேண்டும் அல்லது வணக்கத்திற்குரியவன் யார் என்ற வினாவிற்கு இவ்வத்தியாயம் சிறந்த பதில்.

3) இந்த அத்தியாயத்தை இதற்கடுத்து வருகின்ற இரு அத்தியாயங்களோடு (இணைத்து) ஒவ்வொரு ஃபர்ளு தொழுகைக்குப்பின் ஒரு முறையும், மக்ரிப் மற்றும் பஜ்ருக்குப்பின் மும்முறையும் ஓதுவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழக்கமாக இருந்தது.

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

| اَحَدٌ 85* | اللهُ | هُوَ | قُلْ |
|---|---|---|---|
| **ஒருவனே** | **அல்லாஹ்** | **அவன்** | **(நபியே) நீர் கூறுவீராக!** |
| தனித்தவன், ஒருவன் | | | இவ்வார்த்தை குர்ஆனில் பல நூறு முறைகள் வருகிறது |
| **மொழிபெயர்ப்பு : (நபியே) நீர் கூறுவீராக! அவன் அல்லாஹ் ஒருவனே!** | | | |

1) அல்லாஹ்வின் (ذَاتُ) விஷயத்தில் அவனுக்கு யாரும் இணையில்லை. அவனுக்கு யாருடனும் எந்த உறவு முறைகளும் இல்லை.
2) அல்லாஹ்வின் தண்மைப்பெயர்களில் எவரும் இணையில்லை. உதாரணமாக: யாரும் மறைவான விஷயங்களை அறியமாட்டார்கள். அவனைப் போன்று கேட்கவோ, பார்க்கவோ, உதவி செய்யவோ யாராலும் முடியாது.
3) வணங்குதல், சிரம் சாய்த்தல் போன்ற அல்லாஹ்விற்கு மட்டும் உரிமை கொண்டாடும் விஷயங்களில் அவனுக்கு யாரும் இணையில்லை.
4) தனது சுய விருப்பத்தின் விஷயங்களில் அவனுக்கு யாரும் இணையில்லை. உதாரணமாக: அவனது சட்டங்கள்தான் நடைமுறையில் இருக்கும். அவனே ஹலால், ஹராம், அனுமதிக்கப்பட்டது, அனுமதிக்கப்படாதது போன்ற சட்டங்களை உருவாக்குகிறான்.
5) **பிரார்த்தனை / கேள் :** இறைவா! எனக்கு உன்னை மட்டும் வணங்க உதவிடுவாயாக!
6) **சரிபார்த்தல் / மதிப்பிடு :** எத்தனை முறை என் மனோஇச்சையின் சொல்லிற்கு அடிபணிந்துள்ளேன்? (أَفَرَاَيْتَ مَنِ اتَّخَذَ اِلٰهَهُ هَوَاهُ) நான் எத்தனை முறை ஷைத்தானிற்கு அடிபணிந்துள்ளேன்? (اَلاَّ تَعْبُدُوْا الشَّيْطَانَ) இவ்வாறு அடிபணிந்ததற்கு காரணம் என்ன? கெட்ட நண்பர்கள், (தொலைக்காட்சி, இன்டர்நெட் போன்ற) கெட்ட சாதணங்கள். பின்னர் இந்த கெட்டவைகளை நம்மை விட்டும் அகற்ற **திட்டமிட்டு** அதற்குப்பதிலாக நல்லவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
7) قُلْ **: அதாவது பரப்புங்கள்.** நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பரப்பியது போன்று மிக அழகிய முறையில், புத்திசாலித்தனத்தோடு (சமயோசித சிந்தனையோடு) நாமும் பரப்ப வேண்டும்.

| الصَّمَدُ | اللّٰهُ |
|---|---|
| **(யாவற்றை விட்டும்) தேவையற்றவன்** | **அல்லாஹ்** |
| அவனிடமே அனைவரும் தேவையுடையவர்களாக உள்ளனர், அவன் யாரிடமும் தேவையுடையவனாக இல்லை | இது அவனது சுய பெயராகும். அர்ரஹீம், அல்கரீம் போன்றவை அவனது தண்மைப்பெயர்களாகும் |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹ் (யாவற்றை விட்டும்) தேவையற்றவன்** | |

**கற்பனை செய்து பாருங்கள் :** இந்நேரத்தில் கோடிக்கணக்கான மனிதர்கள், கணக்கிலடங்காத படைப்பினங்கள் அவனது அருளாலே உயிரோடிருக்கின்றன. அவனிடமே யாசிக்கின்றன. இவ்வாறு அவனது கண்ணியத்தை சிந்தித்தவாறு இவ்வசனத்தை ஓதுங்கள்.

அல்லாஹ்வே! எனது தேவைகளை நீயே நிறைவு செய்து கொண்டிருக்கிறாய். மேலும் தொடர்ந்து நீயே நிறைவு செய்வாயாக! என்றும், அல்லாஹ்வே! என்னை உன்னிடம் மட்டும் தேவையுடையவன் ஆகவும், மற்ற யாரிடமும் தேவையுடையவனாக ஆகிவிடாமல் இருக்கவும் உதவிடுவாயாக! என்றும் பிரார்த்திக்கலாம்.

| يُوْلَدْ ③ | وَلَمْ [347] | لَمْ يَلِدْ [347] | |
|---|---|---|---|
| **பெறப்படுகின்றான்** | **மேலும் இல்லை** | **பெறவில்லை** | |
| يَلِد : பெறுகின்றான் (செய்வினை)<br>يُولَد : பெறப்படுகின்றான் (செயப்படுவினை) | لَمْ : இல்லை<br>لَنْ : முடியாது | يَلِدْ<br>பெறுகின்றான் | لَمْ<br>இல்லை |
| **பொருள்: அவன் (யாரையும்) பெறவுமில்லை, (யாராலும்) பெறப்படவில்லை** | | | |

1) இவ்வசனத்தை ஓதும்போது 200 கோடி கிறிஸ்தவர்கள் வரை இச்செய்தியைக் கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு நமக்கு இருப்பதாக உணருங்கள் ஏனெனில், நபி ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் குமாரர் என்ற தவறான கொள்கை உடையவர்களாக உள்ளனர்.

2) குழந்தைகள் எதற்கு (தேவை)? மனிதன் சோர்ந்து விடுகிறான். அல்லது தனிமையில் இருப்பதாக உணர்கிறான் அப்போது குழந்தைகள் மகிழ்விக்கின்றனர். மனிதன் வயோதிகப் பருவத்தை அடையும்போது குழந்தைகள் ஓர் (ஊன்றுகோலாக) ஆதரவாக இருக்கின்றனர். மனிதன் மரணிக்கும்போது அவனது வாரிசுரிமைக்காரர்களாக, அவனது வேலையையும் (நல்ல)பெயரையும் பாதுகாத்து வைக்கின்றனர், அல்லாஹ் இவ்வனைத்து பலவீனங்களைவிட்டும் பரிசுத்தமானவன். அவன் என்றும் இருக்கிறான். என்றென்றும் இருப்பான் எனவே அவனுக்கு பிள்ளைகளின் தேவை எதற்கு? (யாரும் தேவையில்லை)

3) ஆயிரம் மில்லின் பில்லியன் வருடங்களுக்கு பின் சென்று சிந்திக்க முயற்சி செய்யுங்கள் அவன் அப்போதும் இருப்பான் அதேபோல் வருங்காலத்திலும் சிந்தித்து பாருங்கள் அவன் எப்போதும் இருப்பான்.

| اَحَدٌ ﴿4﴾ [85*] | كُفُوًا | لَّه | وَلَمْ يَكُنْ | | |
|---|---|---|---|---|---|
| **ஒருவரும்** | **நிகராக** | **அவனுக்கு** | **மேலும் இருக்கவில்லை** | | |
| أَحَد : ஒருவன் (அல்லாஹ்வுக்கு)<br>أَحَد : ஒருவரும் | சமமாக | அவனுக்காக<br>அவனை நோக்கி | يَكُن | لَمْ | وَ |
| | | | இருகிறான் | இல்லை | மேலும் |
| **பொருள்: அவனுக்கு நிகராக ஒருவரும் இல்லை** | | | | | |

**சூரா அல் இக்லாஸின் படிப்பினைகள்:**

- அல்லாஹ்வின் ஆற்றலுக்கு சமமாக அல்லது அவனுடன் ஒப்பிட யாரும் இல்லை. மேலும் அவனுடைய பண்புகளுக்கும் உரிமைக்கும் ஆற்றலுக்கும் சமமானவர் யாரும் இல்லை. இந்த உலகத்தின் பரப்பளவை கற்பனை செய்யுங்கள் அதன் பரப்பளவு மில்லியன் மற்றும் பில்லியன் ஒளி வருடங்களின் கணக்காகும். மேலும் அவனை தவிர அங்கு யாரும் இல்லை அல்லாஹ் மாத்திரமே உருவாக்குபவன்.

- துஆ:- யா அல்லாஹ் என்னுடை ஈமானை வலுப்படுத்த உதவி புரிவாயாக. என் வாழ்வின் அனைத்திற்கும் நீயே போதுமானவன்.

- மதிப்பிடு:- இந்த விஷயத்தை நான் நினைவு கூறுகின்றேனா? ஈமான் உள்ள மக்கள் இருக்கும் இடத்தில் இருக்கும் போது நான் யாருக்காவது பயப்படுகின்றேனா? நான் யாரிடமிருந்தும் எதையாவது எதிர்பார்கின்றேனா?

நபித்தோழர் ஒருவர் தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் சூரா இக்லாஸையே ஓதி வந்தார். வேறு எந்த சூராவும் ஓதுவதில்லை. இதற்கான காரணத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அத்தோழரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் 'எனக்கு அதன் மீது மிக்க அன்பு உள்ளது' என்றார்கள் அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சொன்னார்கள் : 'அதன் மீது உள்ள அன்பு உம்மை சுவர்க்கத்தில் நுழைவித்து விட்டது'.

அன்போடு அடிக்கடி ஓதுங்கள்: உதாரணமாக, ஒவ்வொரு மனிதனும் தன் உறவினர்களின் விஷேச நிலையை ஏதாவது காரணத்தை (சாக்காக) வைத்து எடுத்துச் சொல்லுவான். அதுவும் மகிழ்ச்சியோடு. இவ்வாறிருக்க அல்லாஹ்வோ என்னைப் படைத்தவன். எனக்கு உணவளிப்பவன். என் இரட்சகன். அனைவரையும்விட சிறந்த உபகாரி. தாயைவிட 70 மடங்குக்கும் அதிகமாய் அன்பு செலுத்துபவன். பின்னர் நாம் அவனைப்பற்றி ஏன் அடிக்கடி நினைவு கூறக்கூடாது? நமது 'ரப்' எவ்வாறெனில், அவனைப்போன்று (சிறந்த) எந்த படைப்பாளனோ, அதிகாரம் படைத்தவனோ, வணக்கத்திற்குரியவனோ, வல்லமை படைத்தவனோ, அன்புகாட்டுபவனோ, மன்னிப்பு வழங்குபவனோ, அனைத்தையும் சிறந்த முறையில் செய்பவனோ யாருமே இல்லை. இருந்ததும் இல்லை. இப்பொழுதும் இல்லை, இனிமேல் வரப்போவதுமில்லை. இதை ஓதும்போது உள்ளம் அன்பாலும் அவனின் மகிமையாலும் நிரம்பியிருக்க வேண்டும். இந்த ஏகத்துவச்செய்தியை பரப்பிட திட்டமிடுங்கள்.

## இலக்கணம்:

(செய்-என்ற) கட்டளை-ஏவல் மற்றும் (செய்யாதே-என்ற) கட்டளை-விலக்கல் வாக்கியங்களை TPI முறையில் பயிற்சி செய்யுங்கள், இதன் முறையை கீழேயுள்ள கட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ளது

| | نَہی-Prohibitive<br>கட்டளை-விலக்கல் | | أمْر-Imperative<br>கட்டளை-ஏவல் | |
|---|---|---|---|---|
| اِفْعَلْ (செய்) என சொல்லும்போது, முன் இருப்பவரை நோக்கி ஆட்காட்டி விரலால் நீங்கள் உங்கள் முன்னால் இருப்பவருக்கு கட்டளையிடுவது போல் கையை சிறிது மேலிருந்து கீழாக கொண்டு வந்தவாறு சைகை காட்டுங்கள். (இவ்வாறே) اِفْعَلُوْا (செய்யுங்கள்) என சொல்லும்போது அதைப்போன்று நான்கு விரல்களால் சைகை காட்டுங்கள்.<br><br>لاَتَفْعَلْ (செய்யாதே) என சொல்லும்போது முன் இருப்பவரை நோக்கி ஆட்காட்டி விரலால் நீங்கள் உங்கள் முன்னால் இருப்பவருக்கு செய்யாதே என சொல்வது போல் கையை இடது புறத்திலிருந்து வலப்புறத்தின் பக்கம் கொண்டு வந்து சைகை காட்டுங்கள். (இவ்வாறே) لاَتَفْعَلُوْا (செய்யாதீர்கள்) என சொல்லும்போது அதைப்போன்று நான்கு விரல்களால் சைகை காட்டுங்கள். | செய்யாதே | لاَتَفْعَلْ | செய் | اِفْعَلْ |
| | செய்யாதீர்கள் | لاَتَفْعَلُوْا | செய்யுங்கள் | اِفْعَلُوْا |

எப்பொழுது வினைச்சொல்லோடு பிரதிப்பெயர்ச்சொற்களும் இணைந்து வருமோ, அப்பொழுது அவை (مفعول به)செயப்படுபொருளாக மாறி விடுகிறது, ஒரு வினைச்சொல்லோடு (இது இணைந்து வருகின்ற) உதாரணத்தைக் கவனியுங்கள்.

| அவனை படைத்தான் … + خَلَقَ | | இணைந்து வரும் பிரதிப் பெயர்ச்சொற்கள் (object-செயப்படு பொருள்) | | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|
| அவனை படைத்தான் | خَلَقَهُ | அவனுடைய / அவனை | ـهُ + ـهِ | ஒருமை واحد Sr. (Singular.) | படர்க்கை 3rd Person غائب |
| அவர்களை படைத்தான் | خَلَقَهُمْ | அவர்களுடைய / அவர்களை | ـهُمْ+ ـهِمْ | பன்மை جمع Pl. (plural) | |
| உன்னைப் படைத்தான் | خَلَقَكَ | உன்னுடைய / உன்னை | ـكَ | ஒருமை واحد Sr. (Singular.) | முன்னிலை 2nd Person حاضر |
| உங்களைப் படைத்தான் | خَلَقَكُمْ | உங்களுடைய / உங்களை | ـكُمْ | பன்மை جمع Pl. (plural) | |
| என்னைப் படைத்தான் | خَلَقَنِى | என்னுடைய / என்னை | ـِى | ஒருமை واحد Sr. (Singular.) | தன்னிலை 1st Person متكلّم |
| எங்களைப் படைத்தான் | خَلَقَنا | எங்களுடைய / எங்களை | ـنَا | பன்மை pl. جمع dl. مثنى | |

| பாடம் எண் : 10 |
|---|
| சூரா அல்-இக்லாஸ் |




**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| اَحَدٌ ① | اللّٰهُ | هُوَ | قُلْ |
|---|---|---|---|
| | | | |

| الصَّمَدُ ② | اَللّٰهُ |
|---|---|
| | |

| وَلَمْ يُوْلَدْ ③ | لَمْ يَلِدْ |
|---|---|
| | |

| اَحَدٌ ④ | كُفُوًا | لَّه | وَلَمْ يَكُنْ |
|---|---|---|---|
| | | | |

**வினா 2: சூரா அல்-இக்லாஸின் சிறப்பைப்பற்றி விளக்கமளியுங்கள் ?**
**விடை :**

**வினா 3: அல்லாஹு தஆலாவைப்பற்றி இந்த அத்தியாயத்தில் வந்துள்ள நான்கு விஷயங்களைக் குறிப்பிடுக?**
**விடை :**

**வினா 4: சூரா அல்-இக்லாஸோடு அன்பை எவ்வாறு ஏற்படுத்த முடியும் ?**
**விடை :**

**வினா 5: சூரா அல்-இக்லாஸோடு அன்பை ஏற்படுத்திக்கொண்ட நபித்தோழரின் நிகழ்ச்சியை தெளிவுபடுத்துங்கள் ?**
**விடை :**

## 10-வது பாடத்திற்கான வினாக்கள் - சூரா அல்-இக்லாஸ்

**வினா-1-**A கீழே உதாரணத்தில் கொடுக்கப்பட்டுள்ளது போல பல்வேறு வினைச்சொற்களோடு பிரதிப் பெயர்ச்சொற்களை இணைத்து அவைகளை மொழிபெயர்ப்பு செய்யுங்கள்.

| மொழிபெயர்ப்பு | خَلَقَ | ضمائر பிரதிப் பெயர்ச்சொற்கள் | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|
| அவனை அவன் படைத்தான் | خَلَقَهُ | ـهُ ـهِ | ஒருமை واحد Sr. (Singular.) | படர்க்கை 3rd Person غائب |
| | | ـهُمْ ـهِم | பன்மை جمع Pl. (plural) | |
| | | ـكَ | ஒருமை واحد Sr. (Singular.) | முன்னிலை 2nd Person حاضر |
| | | ـكُمْ | பன்மை جمع Pl. (plural) | |
| | | ـى | ஒருமை واحد Sr. (Singular.) | தன்னிலை 1st Person متكلّم |
| | | ـنَا | பன்மை pl. جمع dl. مثنى | |

**வினா-1-**B فعل أمر (கட்டளை-ஏவல் வினைச்சொல்)மேலும் فعل نهي. (கட்டளை-விலக்கல் வினைச்சொல்) லுக்கான வார்த்தையமைப்புகளை இருமுறை எழுதி, பின்னர் அவைகளை மொழி பெயர்ப்பு செய்யுங்கள்.

| மொழிபெயர்ப்பு | امر ونـهي கட்டளை-ஏவல் மற்றும் கட்டளை-விலக்கல் வினைச்சொற்கள் | | |
|---|---|---|---|
| | | | لاَ تَفْعَلْ |
| | | | اِفْعَلُوا |
| | | | لاَ تَفْعَلُوا |
| | | | اِفْعَلْ |

| **வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | அவன் என்னை படைத்தான் |
| | அவன் செய்வதில்லை |
| | மேலும் நாங்கள் செய்யவில்லை |
| | எனவே இதை செய்யாதே |
| | யார் உங்களைப் படைத்தானோ (அவன்) |

| **வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | فَخَلَقَ |
| | لَاتَفْعَلْ هذَا |
| | فَعَلَهُ |
| | وَافْعَلُواالْخَيْرَ |
| | وَمَافَعَلْتُهُ |

| பாடம் எண் : 11<br>சூரா அல் ஃபலக் |
|---|

11 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 29131 முறை வரக்கூடிய 64 புதிய வார்த்தைகளை கற்பீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 4 | பரப்பு | கேள் | 1 |
| | புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | | |
| 3 | திட்டமிடு | மதிப்பிடு | 2 |

**அறிமுகம் :** சூரா அல் ஃபலக் இன்னும் சூரா அந்நாஸ் இவ்விரண்டையும் مُعَوِّذَتَيْنِ (பாதுகாப்புத் தேடுகிற இரு அத்தியாயங்கள்) என சொல்லப்படுகிறது. சூரா அல் இக்லாஸ் மற்றும் பாதுகாப்புத் தேடுகிற இவ்விரு அத்தியாயங்களையும் ஒவ்வொரு பர்லு தொழுகைக்குப்பின் ஒரு முறையும், மக்ரிப் மற்றும் பஜ்ருக்குப்பின் மும்முறையும் ஓதுவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழக்கமாக இருந்தது (என்பதை சூரா அல்-இக்லாஸில் படித்தோம்) மேலும் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள் :

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓய்வெடுக்க படுக்கையை அடையும் போது مُعَوِّذَتَيْنِ ஐ ஓதி கைகளில் ஊதி அதை தன் உடலில் தடவிக்கொள்வார்கள். (புகாரி-முஸ்லிம்) அல்லாஹ் நமக்கு கற்பித்த இந்த அத்தியாயம் அனைத்து விதமான கெடுதிகள், பொறாமை, சூனியம் போன்றவைகளிலிருந்து தற்காத்துக்கொள்ள சிறந்ததாகும், கெடுதிகளிலிருந்து தற்காத்துக்கொள்ள நினைக்காதவர்கள் நம்மிடையே யார் இருக்கின்றனர்? எனவே நாம் அனைவரும் இவ்வத்தியாயங்களை ஓத, அதுவும் விளங்கி ஓத முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

﴿أعوذ بالله من الشيطان الرجيم﴾ ﴿بسم الله الرحمن الرحيم﴾

| الْفَلَقِ | بِرَبِّ | | اَعُوْذُ | قُلْ |
|---|---|---|---|---|
| **வைகறையின் (அதிகாலை நேரத்தின்)** | **(ரப்) இரட்சகனிடம்** | | **நான் பாதுகாவல் தேடுகிறேன்** | **(நபியே) நீர் சொல்வீராக!** |
| فَلَق : அதிகாலை நேரத்தின் | رَبّ | بِ | أَعُوذُ بِاللهِ | |
| | இரட்சகன் | இடம், கொண்டு | | |
| **மொழிபெயர்ப்பு : (நபியே) நீர் சொல்வீராக! வைகறையின் இரட்சகனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்** | | | | |

- ஞாபகம் இருக்கட்டும் : மனிதன் சண்டை சச்சரவுகளின் தாக்கங்களால், இரவு-பகலுடைய அபாயங்களால், சில தீங்கிழைக்கின்ற மனிதர்களால், பொறாமைக்காரர்களால், கொடிய கிருமிகளால் சூழ்ந்து - சிக்கி இருக்கிறான்.
- இன்றுவரை காப்பாற்றி வருகிற அல்லாஹ்வின் மகத்துவத்தையும், பரிபாலிக்கும் வல்லமையையும் உணர்ந்தவாறு இன்றும் எங்களைக் காப்பாற்றுவாயாக! என அவனிடமே (மன்றாடி) வேண்டிக்கொள்ளுங்கள்.
- قُلْ : அதாவது பரப்புங்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பரப்பியது போன்று மிக அழகிய முறையில், புத்திசாலித்தனத்தோடு (சமயோசித சிந்தனையோடு) நாமும் பரப்ப வேண்டும்
- رَبِّ الْفَلَقِ (வைகறையின் இரட்சகன்) என்ற வார்த்தைகள் மீது சிந்தித்துப் பாருங்கள். அவன் அதிகாலை நேரத்தை எவ்வாறு கொண்டு வருகிறான் ? கதிரவன், அதன் ஒளியின் அமைப்பு, பூமியிலிருந்து அதன் தொலைவு, பூமியின் கணக்கிற்கு ஏற்றவாறு ஏற்படும் மாற்றங்கள், பூமிப்பகுதிகளுக்கு இடையூறு அளிக்கின்ற கெட்ட ஒளிக்கதிர்களை சுத்திகரிப்பு செய்து, பயனுள்ள ஒளிச்சுடர்களை மட்டும் தருகின்ற மூடி (உறை) மற்றும் கணக்கில் அடங்காத ஏற்பாடுகள் என, (தன் தொலைநோக்குப் பார்வையால்) தன் கற்பனையை முழுமையாகப் பயன்படுத்துங்கள்.

| خَلَقَ | 2155<br>مَا | 29<br>شَرِّ | مِن |
|---|---|---|---|
| **படைத்தான்** | **எதை** | **தீமை** | **இருந்து** |
| படைப்பாளன் : خالق | என்ன, இல்லை | | |
| **பொருள்: அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்து** | | | |

- شَرّ என்பதற்கு இரு கருத்துகள் உள்ளன : 1) கெட்டவை (தீங்கு விளைவிப்பவை) 2) சிரமம் தருபவை, சில கெட்டவைகள் பார்க்க நல்லதாக தோன்றும். ஆனால் அவற்றின் முடிவு மிக கெட்டதாக இருக்கும் எனவே அவையும் தீங்கு விளைவிப்பவையே.
- ஞாபகம் இருக்கட்டும்: அவனால் உருவாக்கப்பட்டவை (பொருட்)களின் தீங்கை விட்டு அதாவது படைப்பினங்களின் தீங்கை விட்டு, நாம் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்.
- எடுத்துக்காட்டாக: அல்லாஹ் மனிதர்களை நற்செயல்களுக்காக படைத்துள்ளான். ஆனால் சில மனிதர்கள் கெட்டவைகளையே பரப்பிக்கொண்டிருக்கின்றனர் அத்தகையோர்களின் தீங்கை விட்டு நாம் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்.
- இவ்வாறே அனைத்து உயிரினங்கள் மற்றும் உயிரற்றவைகளின் தீங்கை விட்டு நாம் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்.

| وَقَبَ | إِذَا | غَاسِقٍ | وَ مِنْ شَرِّ | | |
|---|---|---|---|---|---|
| **பரவி விட்டது** | **போது** | **இருள்** | **மேலும் தீங்கை விட்டு** | | |
| وَقَبَ என்றால் பரவி விட்டது إِذَا وَقَبَ என்றால் பரவி விடும்போது என்ற பொருளைத்தரும் ஏனெனில் إِذَا என்பது கடந்தகால வினைச்சொல்லோடு வரும்போது எதிர்கால வினைச்சொல்லின் பொருளாக மாறிவிடும் | إِذَا வைப்போலவே إِذْ (இத்) என்பதற்கும் எப்பொழுது என்பதற்கும் ஒரே பொருள் | | شَرّ | مِنْ | وَ |
| | | | கெடுதி | யிருந்து | இன்னும் |
| **மொழிபெயர்ப்பு : மேலும் (இரவின்) இருளின் தீங்கைவிட்டு அது பரவி விடும்போது** | | | | | |

- (சுமார்) 12 மணி நேரங்களுக்குப் பின்னர் இரவு வருகிறது, இரவில் சம்பாதிக்கும் நேரமும் முடிவுக்கு வருகிறது, மனிதன் பொதுவாக ஓய்வாகிவிடுகிறான், அலுவலற்ற மூளை (இரவு நேரங்களில்) ஷைத்தானின் தொழிற்சாலையாகிவிட சாத்தியமிருக்கிறது.
- இரவு நேரங்களில் அதிகம் தவறிழைக்க வைக்கின்ற சாதனங்கள் மேலும் கெட்டவைகளை வித்திடுகிற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சினிமா, கிளப், மானக்கேடான செயல்கள் போன்றவை மிகுதியாகி விடுகின்றன.
- இரவு நேரங்களிலேதான் விரோதிகளின் தாக்குதல்களும் பயமின்றி நடக்கிறது.
- அதிகாலையில் தாமதமாக எழுந்திருப்பது கெடுதியாகும். ஏனெனில் ஃபஜர் தொழுகைக்கு எழுந்திருக்க சிரமமாக இருக்கும். இது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் பாதிப்பு காலையின் சிறந்த வாய்ப்புகளை இலக்கிறாய்.

| فِي الْعُقَدِ | | النَّفَّاثَاتِ | وَ مِنْ شَرِّ | | |
|---|---|---|---|---|---|
| **முடிச்சுகளில்** | | **(மந்திரித்து) ஊதும் பெண்கள்** | **மேலும் தீங்கை விட்டு** | | |
| الْعُقَدِ | فِي | இதன் ஒருமை نَفَّاثَةٌ (நஃப்பாததுன்) மந்திரித்து ஊதக்கூடிய சூனியக்காரி, ஊதி சூனியம் செய்பவள் | شَرّ | مِنْ | وَ |
| முடிச்சுகள் இதன் ஒருமை عُقْدَةٌ உக்தா (முடிச்சு) எனவே தான் பொதுவாக திருமண (மற்ற எல்லா) ஒப்பந்தத்திற்கும் عَقْدٌ அக்த் என்கிறோம் | ல் | | கெடுதி | இருந்து | இன்னும் |
| **மொழிபெயர்ப்பு : மேலும் முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டு(ம்)** | | | | | |

- நமது சில குடும்பங்களில் இது மிகப்பெரிய பிரச்சினைக்குரிய விஷயமாகவே இருக்கிறது. நமது பிள்ளைகளைப் பார்த்து அங்கே சாப்பிடாதீர்கள் இங்கே சாப்பிடாதீர்கள் ஏதாவது ஆகிவிடும் என நாம் சொல்கிறோம் இதற்கு இந்த அத்தியாயம் சிறந்த சிகிச்சையாகும்.
- சூனியம் என்பது கடுமையான ஒரு சோதனைக்குரிய விஷயமாகும், பல நல்ல மனிதர்களின் கொள்கையையும் தடுமாற வைத்துவிடுகிறது, அதன் சிகிச்சைக்காக தவறான வேலைகளில் ஈடுபட ஆரம்பித்து விடுகின்றனர்.

- இன்னும் ஒரு விதத்தில் (மந்திரித்து) ஊதுபவர்களின் தீங்கை விட்டு (பாதுகாவல் தேடுகிறோம்) அதாவது அவர்கள் தினமும் ஒவ்வொருவரின் (பிடரி) தலையிலும் இரவில் (தூங்கும்போது) மூன்று முடிச்சுகள் போட்டு (அல்லாஹ்வின் பெயரைச் சொல்லி எழுந்து உளுச்செய்து, தொழுகைக்கு சென்று விடக்கூடாது என) ஓதி ஊதுகின்றனர். அதாவது (அவர்கள்தான்) சைத்தான்! (மற்றும் அவனது கூட்டம்).
- நீ தாமதமாக விழித்தால் ஷைத்தானிர்க்கு பெரிய வாய்ப்பு கொடுக்கின்றாய். ஃபஜ்ர் தொழுகையை தவரவிட்டு தூங்குவதற்கு.

| إِذَا حَسَدَ | حَاسِدٍ | وَمِنْ شَرِّ |
|---|---|---|
| **அவன் பொறாமைப்படும்போது** | **பொறாமைக்காரன்** | **மேலும் தீங்கை விட்டு** |
| **மொழிபெயர்ப்பு : மேலும் பொறாமைக்காரனின் தீங்கைவிட்டும் (பாதுகாவல் தேடுகிறேன்) அவன் பொறாமை கொள்ளும்போது** | | |

- பொறாமைக்காரன் பொறாமைப்படும்போது சில சமயங்களில் உங்களின் பெயருக்கு பங்கம் விளைவிக்க முயற்சி செய்வான் அல்லது உங்களுக்கு ஏதாவது நஷ்டத்தை ஏற்படுத்த முயற்சி செய்வான்.
- நம்மை அல்லாஹ் பொறாமைக்காரர்களை விட்டும், அவர்களின் தீங்குகளை விட்டும் காப்பாற்றுவானாக ! என்று பிரார்த்திப்போமாக.

## <u>இலக்கணம் :</u>

அன்று ஒரு காலம் இருந்தது முஸ்லிம்கள் உலகிற்கு கல்வியையும் கலையையும் கற்று தந்தார்கள். ஆனால் இன்ற மாறாக நடக்கின்றது காரணம் நாம் குர்ஆனை விட்டுவிட்டோம்.

1) فَاعِل (செய்பவன்) ஐச் சொல்லும்போது வலது கையால் கொடுப்பதை (ப்போன்று) சைகை காட்டுங்கள், உதவப்பட்டவன் (பயன்)பெறுகின்ற கரம் ஆகும் அவன் மீதே (செயலின்) பிரதிபலிப்பு ஏற்பட்டுள்ளது
2) مفعول (பிரதிபலிப்பு ஏற்பட்டவன்)ஐச் சொல்லும்போது பெற்றுக்கொள்கிற (தைப்போன்று) கரங்களைக் காண்பியுங்கள்.
3) இறுதியாக فِعْل (ஒரு செயலை செய்தல்)ஐப்பற்றி சொல்லும்போது (குத்துவதற்கு கையை மூடிக் கொள்வது போல) கைகளை மூடிக்கொண்டு தம் பலத்தை (வெளிப்படுத்துவதைப்போன்று) காண்பியுங்கள்.

| active participle; passive participle, and verbal noun<br>செய்யகூடியவன், செய்யபடக்கூடியவன், வினைபெயர்சொற்கள் | |
|---|---|
| செய்பவன் | فَاعِل |
| செய்யப்படுபவன் | مَفْعُول |
| செயல்<br>*இது செயலின் பெயரைக் குறிப்பிடுவதாகும் ( உ-ம் : குடித்தல், உண்ணுதல் என்பது போல- இதற்கு அரபியில் مَصْدَر (மஸ்தர்- பிறப்பிடம்) என்பார்கள்)* | فِعْل |
| فَاعِلُون، فَاعِلِين *pl.*<br>என்பது இதன் பன்மைகளாகும் | |
| مَفْعُولُون، مَفْعُولِين *.pl*<br>என்பது இதன் பன்மைகளாகும் | |

இந்த அனைத்து சைகைகளும் புதிய மனிதருக்கு ஏதோ ஆச்சரியமாக தெரியலாம் ஆனால் மனதில் பதியவைப்பதற்காக இந்த சைகைகளைக் கொண்டு வேலை வாங்கிக் கொள்ளுங்கள், ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள தன்னை முழுமையாக TPI மூலம் எந்த அளவு பயன்படுத்துவீர்களோ அந்த அளவு பயனனடைவீர்கள். இம்முறை மூலம் எந்த அளவு எளிமையாக அனைத்து வார்த்தைகளையும் மனப்பாடம் செய்து கொண்டீர்கள் என, இன்ஷா அல்லாஹ் நீங்களே தெரிந்து கொள்வீர்கள்.

فَعَلَ வுடைய (105 இடத்தில் வருகிற) 21 வாக்கிய அமைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை பயிற்சி செய்யுங்கள். (அவற்றில் இறுதி இரு வாக்கிய அமைப்புகள் பெண்பால் ஆகும்) மேலும் இரு ( فَاعِل– مَفْعُول என்ற) பெயர்ச்சொல்களும், مصدر (மஸ்தர்) அதாவது செயலின் பெயர் (فِعل)ம் கொடுக்கப்பட்டுள்ளது, இவ்வார்த்தை வேறுபட்ட அமைப்புகளால் 105 முறை வருகின்றன என்பதைக் காண்பிப்பதற்காகவே 105 என சொல்லப்பட்டுள்ளது.

பெண்பாலின் வாக்கிய அமைப்புகளுக்கு இடது கையை உபயோகப்படுத்துங்கள் ஆண்பாலுக்கு நாம் வலது கையை சைகைகளுக்கு பயன்படுத்தியிருந்தோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், இதன் நோக்கம் கற்பிப்பதேயன்றி பெண்பாலை தனிமைப்படுத்தி காண்பிப்பதல்ல, இதுவும் ஞாபகமிருக்கட்டும். பெண்பாலின் ஒருமையின் வார்த்தைகள்தான் மற்ற (இருமை, பன்மை போன்ற) வாக்கியமைப்புகளைவிட அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| செய்கிறாள் | تَفْعَلُ | செய்தாள் | فَعَلَتْ | அவளுடைய ரப் | رَبُّهَا | அவள் | هِيَ |

مضارع ஐ பயிற்சி செய்யும்போது உங்கள் வசதிக்காக ''அவன் செய்கிறான், அவர்கள் செய்கிறார்கள், நீ செய்கிறாய்'' என்ற மொழி பெயர்ப்பை மட்டும் சொல்வது எளிதாக இருக்கும். ஆனால் போதிக்கும்போது இதற்கு ''அவன் செய்வான், அவர்கள் செய்வார்கள், நீ செய்வாய்'' என்ற மொழிபெயர்ப்புகளும் இருப்பதாக சொல்லிக் கொடுங்கள்.

**5** இருந்து **10** நிமிடங்கள் ஒதுக்கு **TPI** பயன்படுத்தி வினைச்சொல் அட்டவணை மனனம் செய்ய. ஏறத்தாழ **19000** (குறிப்பாக **20%**) குர்ஆனிய வார்த்தைகள் இந்த வகையில்தான் வந்துள்ளன. அதாவது குர்ஆனில் வருகின்ற ஒவ்வொரு **4** வது வார்த்தை இதன் அடிப்படையில் வரும். இந்த அட்டவணையை எளிமையான நான்கு வழியில் கற்றுகொள்ளலாம்.

1. **ஆசிரியரும் மாணவர்களும் வார்த்தையை அதன் பொருளோடு கூறவேண்டும்.**
2. **ஆசிரியர் அரபி வார்த்தையை கூறுவார் மாணவர் பொருள் கூறுவார்.**
3. **ஆசரியர் அரபியில் கூறுவார் மாணவர் தொடர்ந்து அரபியில் கூற வேண்டும்**
4. **ஆசிரியர் மாணவர் இணைந்து அரபியில் கூறுவார்கள்**

நினைவில் வையுங்கள் இந்த ஒவ்வெரு முறையிலும் **TPI** பயன்படுத்த பட வேண்டும்.

فَعَلَ ( ف ) அவன் செய்தான் : இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் 105 முறைகள் வருகின்றன

| | | | | فِعْل مُضَارِع | | فِعْل مَاضِي | |
|---|---|---|---|---|---|---|---|
| فَعَلَ ، يَفْعَلُ ، اِفْعَلْ | | | | செய்கின்றான் | يَفْعَلُ | செய்தான் | فَعَلَ |
| نَهْي | | أَمْر | | செய்கின்றார்கள் | يَفْعَلُونَ | செய்தார்கள் | فَعَلُوا |
| செய்யாதே | لاَ تَفْعَلْ | செய் | اِفْعَلْ | செய்கின்றாய் | تَفْعَلُ | செய்தாய் | فَعَلْتَ |
| செய்யாதீர்கள் | لاَ تَفْعَلُو | செய்யுங்கள் | اِفْعَلُوا | செய்கின்றீர்கள் | تَفْعَلُونَ | செய்தீர்கள் | فَعَلْتُمْ |
| செய்யகூடியவன் : فَاعِل | | | | செய்கின்றேன் | أَفْعَلُ | செய்தேன் | فَعَلْتُ |
| செய்யபடக்கூடியவன் : مَفْعُول | | | | செய்கின்றோம் | نَفْعَلُ | செய்தோம் | فَعَلْنَا |
| செயல், செய்தல் : فِعْل | | | | செய்கின்றாள் | تَفْعَلُ | செய்தாள் | فَعَلَتْ |

## பாடம் எண் : 11
### சூரா அல் ஃபலக்

| | |
|---|---|
| 4 பரப்பு | கேள் 1 |
| புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | |
| 3 திட்டமிடு | மதிப்பிடு 2 |

**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| الْفَلَقِ ① | بِرَبِّ | اَعُوْذُ | قُلْ |
|---|---|---|---|
| | | | |

| خَلَقَ ② | مَا | مِن شَرِّ |
|---|---|---|
| | | |

| وَقَبَ ③ | إِذَا | غَاسِقٍ | وَمِن شَرِّ |
|---|---|---|---|
| | | | |

| فِى الْعُقَدِ ④ | النَّفّٰثٰتِ | وَمِن شَرِّ |
|---|---|---|
| | | |

| اِذَا حَسَدَ ⑤ | حَاسِدٍ | وَمِن شَرِّ |
|---|---|---|
| | | |

**வினா 2: ஃபர்லு தொழுகை(களு)க்குப் பின், என்னென்ன அத்தியாயங்களை முஹம்மது (ஸல்) அவர்கள் ஓதி வந்தார்கள்?**
**விடை :**

**வினா 3: தூங்கும்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்த அத்தியாயங்களை ஓதி விட்டு என்ன செய்து வந்தார்கள்?**
**விடை :**

**வினா 4: தினமும் இரவில் நமது தலையில் (பிடரியில்) முடிச்சு போட்டு ஊதுபவர்கள் யார் ?**
**விடை :**

**வினா 5: “حسد.” (பொறாமை) என்பதின் கருத்து என்ன ?**
**விடை :**

# 11 – வது பாடத்திற்கான வினாக்கள் - சூரா அல்-ஃபலக்

வினா 1– A : கீழே கொடுக்கப்பட்ட தமிழ் வினைச்சொற்களை அரபியில் மொழி பெயர்க்கவும்

| فعل مضارع | மொழிபெயர்ப்பு | فعل ماضي | மொழிபெயர்ப்பு | எண் عدد Number | நபர் |
|---|---|---|---|---|---|
| | செய்கிறான் / செய்வான் | | செய்தான் | ஒருமை واحد *Sr.* *(Singular.)* | படர்க்கை *3rd Person* غائب |
| | செய்கிறார்கள் / செய்வார்கள் | | செய்தார்கள் | பன்மை جمع *Pl.* *(plural)* | |
| | செய்கிறாய் / செய்வாய் | | செய்தாய் | ஒருமை واحد *Sr.* *(Singular.)* | முன்னிலை *2nd Person* حاضر |
| | செய்கிறீர்கள் / செய்வீர்கள் | | செய்தீர்கள் | பன்மை جمع *Pl.* *(plural)* | |
| | செய்கிறேன் / செய்வேன் | | செய்தேன் | ஒருமை واحد *Sr.* *(Singular.)* | தன்னிலை *1st Person* متكلّم |
| | செய்கிறோம் / செய்வோம் | | செய்தோம் | பன்மை *pl.* جمع *dl.* مثنى | |
| | செய்கிறாள் / செய்வாள் | | செய்தாள் | واحد مؤنث sr. | غائب *பெண்பால்* |

வினா-1-B கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை فَعَلَ (105) ف அவன் செய்தான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்

| முக்கியமானவை فَعَلَ ، يَفْعَلُ ، اِفْعَلْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | அவன் செய்கிறான் / செய்வான் يَفْعَلُ | அவன் செய்தான் فَعَلَ |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| | |
|---|---|
| வினா 3 : தமிழிலிருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
| | நான் செய்யவில்லை |
| | எனவே நான் செய்கிறதில்லை |
| | நீங்கள் செய்கிறதில்லை |
| | நாங்கள் செய்வதில்லை |
| | நீங்கள் செய்யவில்லை |

| | |
|---|---|
| வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
| | وَمَافَعَلُوْهُ |
| | لَا يَفْعَلُوْن |
| | مَافَعَلْتُمْ |
| | فَافْعَلُوْا |
| | وَاسْتَغْفِرُهُ |

| பாடம் எண் : 12<br>சூரா அந் நாஸ் |
|---|

12 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 29718 முறை வரக்கூடிய 70 புதிய வார்த்தைகளை கற்பீர்கள்.

| | |
|---|---|
| 4 பரப்பு | கேள் 1 |
| புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | |
| 3 திட்டமிடு | மதிப்பிடு 2 |

**அறிமுகம் : முன் பாடத்தில் சூரா அல்-ஃபலக்கின் அறிமுகத்தில் இதைப்பற்றியும் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது**

﴿أعوذ بالله من الشيطان الرجيم﴾ ﴿بسم الله الرحمن الرحيم﴾

| النَّاسِ | بِرَبِّ | | اَعُوْذُ | قُلْ |
|---|---|---|---|---|
| **மனிதர்கள்** | **(ரப்) இரட்சகனிடம்** | | **நான் பாதுகாவல் தேடுகிறேன்** | **சொல்** |
| اِنْسَان : மனிதன் | رَبّ | بِ | أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ | |
| نَاس : மனிதர்கள் | இரட்சகன் | இடம், கொண்டு | | |
| **மொழிபெயர்ப்பு : (நபியே) நீர் சொல்வீராக! மனிதர்களின் இரட்சகனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.** | | | | |

- قُلْ **:** அதாவது பரப்புங்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பரப்பியது போன்று. மிக அழகிய முறையில், புத்திசாலித்தனத்தோடு (சமயோசித சிந்தனையோடு) நாமும் பரப்ப வேண்டும்
- தன்னைப்பற்றி பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக உணருங்கள். மனிதன் சன்டைசச்சரவுகளின் தாக்கங்களால், இரவு-பகலுடைய அபாயங்களால், சில தீங்கிழைக்கின்ற மனிதர்களால், பொறாமைக்காரர்களால், கொடிய கிருமிகளால் சூழப்பட்டு-சிக்கி இருக்கிறான்.
- இன்றுவரை காப்பாற்றி வருகின்ற அல்லாஹ்வின் மகத்துவத்தையும், பரிபாலிப்பு வல்லமையையும் உணர்ந்தவாறு இன்றும் எங்களைக் காப்பாற்றுவாயாக! என அவனிடமே (மன்றாடி) வேண்டிக்கொள்ளுங்கள்.
- மனிதர்களின் 'ரப்' **:** இந்த பூமியில் வசிக்கின்றவைகளைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள். சுமார் 700 கோடி!!! அவர்கள் அனைவர்களையும் வளர்ப்பவன். அவர்களை தன் கவனத்தில் கொள்பவன். இதோடு நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் முதல் இன்று வரையுள்ள மனிதர்கள் மேலும் உலகம் அழிகின்ற நாள் வரை வருகிற மனிதர்களையும் வளர்ப்பவன்.
- மனிதர்களுக்காக மழை பொழிய வைத்தல், செடி-கொடிகளை முளைக்க வைத்தல், சூரியன் மற்றும் தரையில் மாற்றங்களை ஏற்படுத்துதல், காலநிலைகளின் நிர்வாகம் போன்ற அனைத்தையும் செய்பவன்.
- அனைவரையும் தன் கவனத்தில் வைப்பவன். ஒவ்வொரு மனிதர்களுடைய சரீரத்தின் சின்னஞ்சிறு பகுதியையும் வளர்ப்பவன்.

| 34* اِلٰهِ النَّاسِ | 14* مَلِكِ النَّاسِ |
|---|---|
| **மனிதர்களின் வணக்கத்திற்குரியவன்** | **மனிதர்களின் அரசன்** |
| اِلٰه என்பதின் பன்மை آلِهَةٌ (ஆலிஹத்துன்) | மலிக்: அரசன், மலக் : வானவர், மாலிக் : அதிபதி |
| **மொழிபெயர்ப்பு : (அவன் தான்) மனிதர்களின் அரசன், (அவனே) மனிதர்களின் (வணக்கத்திற்குரிய) நாயன்.** | |

- ملك மேலும் مَلِك ஆகிய இரண்டையும் குழப்பி கொள்ள வேண்டாம். ملك என்றால் வானவர் (ملائكة) பன்மை ملك மற்றும் ملائكة குர்ஆனில் 88 முறை வருகின்றன.

- **கற்பனை செய்யுங்கள்:** இன்று வாழுகின்ற 7 பில்லியன் மக்களின் உண்மையான அரசன் அவனே அவர்கள் அனைவரையும் அவனே கட்டுபடுத்துகின்றான் மரணம் வாழ்வு உட்பட. அவனை அவர்கள் மறந்தாலும் மருத்தாலும் கஷ்டமான நேரங்களில் அவனை அழைக்கின்றார்கள்.
- **கேள்:** யா அல்லாஹ் எனக்கு குழப்பம் ஏற்படும்போது உன்னையே உண்மையான அரசனாகவும் இறைவனாகவும் ஏற்றுக்கொள்ள உதவிடுவாயாக.
- **மதிப்பிடு:** அவனுடைய கட்டளைகளை பின்பற்றவில்லையெனில் நான் செயல்ரீதியாக அரசனாக அவனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொருள். அவனை நான் பின்பற்றவில்லையெனில் நான் அவனை முழுமையான இறைவனாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொருள். எத்தனை முறை என் மனோ இச்சையை பின்பற்றியுள்ளேன்? குர்அன் அடிப்படையில் தன் மனோ இச்சையை பின்பற்றுவதை அதயே இறைவனாக ஆக்குவது போல் ஆகும்(45:23). எத்தனை முறை நான் ஷைத்தானின் ஊசலாட்டத்திற்கு ஆளானேன்? குர்ஆனின் அடிப்படையில் ஷைத்தானை பின்பற்றுவது அவனை வணங்குவது போலாகும் (26:30) நான் ஏன் அவனை பின்பற்றுகிறேன்? தீய நண்பர்கள், டீவி, இன்டர்நெட்?
- **உணர்:** தீய எதிரி நம்முடன் இருப்பதை உணருங்கள். மேலும் நம்முடன் எப்போதும் இரண்டு வானவர்கள் இருப்பதையும் உணருங்கள்.
- குர்ஆனின் இறுதி வார்த்தை (தீய) மக்கள். நம்மை நல்ல மக்களுடன் இருக்க எச்சரிக்கின்றது.
- நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் நம்மில் ஒவ்வொருவருடனும் ஒரு ஷைத்தானும் ஜின்னும் உள்ளனர். ஆவை நம்மை நேரம் பாரத்து வழகெடுக்க தயாராக உள்ளனர்.
- மனிதர்களில் ஷைத்தான் யார்? ஷைத்தானை போல நேராகவும் மறைமுகமாகவும் நடந்துகொள்பவர்கள். அல்லாஹ்வை பின்பற்றுவதைவிட்டும் நம்மை வழிகெடுப்பவர்கள். இவைகள் தற்காலத்தில் உள்ள நம்முடைய ஊடகங்கள், தொலைகாட்சி, செய்திதாள், தீய பத்திரிக்கைள் நிகழ்சிகள் ஆகும். நம்மை சுற்றியுள்ள ஆண்களும் பெண்களும் தங்களுடைய ஆடை பேச்சு நடத்தை கொண்டு ஷைத்தானின் கூட்டாளிகளாக நடந்துகொள்கின்றனர். இன்றைய உலகம் இவர்களை கொண்டு இல்லையா? அப்படியெனில் இந்த அத்தியாயம் எந்தளவிற்கு பாதுகாப்பானது என்பதை நீங்கள் உணரவில்லையா!. இந்த தீயவைகளை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகங்கள்.
- **திட்டமிடு:** தீய நண்பர்கள் நிகழ்ச்சிகளை தவிர்து கொள்ள முயற்சிசெய்யுங்கள் நல்ல செயல்களை செய்யுங்கள். அல்லாஹ்வின் உதவியை கேட்பது மாத்திரம் இல்லாமல் நல்ல நண்பர்களின் அணியையும் சூழலையும் உருவாக்க முயற்சி செய்யுங்கள்.

| الْخَنَّاسِ | الْوَسْوَاسِ | مِنْ شَرِّ |
|---|---|---|
| **பின்னால் பதுங்கியிருப்பவன்** | **வீண் சந்தேகங்கள்** | **தீங்கை விட்டு** |
| الخَنّاسِ -வெளிப்பட்ட பின் பதுங்குபவன், பின் வாங்குபவன் | الوَسْوَاسِ : அடிக்கடி சந்தேகிக்க வைப்பவன், وَسْوَسَة (வஸ்வஸா) அறிந்து கொள்ள முடியாத அளவுக்கு இதயத்தில் நுழைந்து கெட்ட சந்தேகங்களை போடுபவன். இதன் அரபியமைப்பு 4 எழுத்துகளைக்கொண்ட : وَسْ وَسَ வஸ்வஸ என்பதாகும் | شَرّ என்பதற்கு இரு பொருட்கள் 1) கெடுதி 2) சிரமம் |
| **மொழிபெயர்ப்பு : பின்னால் பதுங்கியிருந்து வீண்சந்தேகங்களை கிளப்பக்கூடியவனின் தீங்கை விட்டு** | | |

- உணர் நம்முடைய தீய எதிரி ஷைத்தான் நம்முடன் இருப்பதையும் மேலும் இரு வானவர்கள் இருப்பதையும் உணருங்கள்
- ஷைத்தானின் தாக்குதல்களை உணர்ந்து (அவனை விட்டு) மனதால் பாதுகாப்புத் தேடுங்கள்
- அல்லாஹ்வின் திக்ர் நினைவின் முக்கியத்துவத்தையும் உணருங்கள் ஷைத்தான் அதைக் கொண்டு கேவலமடைந்து விலகி ஒதுங்கிவிடுகிறான்.

| الذِىْ | يُوَسْوِسُ | فِى صُدُوْرِ [44] | | النَّاسِ |
|---|---|---|---|---|
| **எத்தகையவன்** | **அவன் வீண்சந்தேகத்தைப் போடுகிறான்** | **இதயங்களில்** (صدور என்பது صدر என்பதின் பன்மையாகும்) | | **மனிதர்கள்** |
| الَّذِىْ என்பது குர்ஆனில் 304 முறையும் الَّذِيْنَ என்பது 1080 முறையும் வருகிறது | | فِى | صُدُوْر | (இன்ஸான் என்பதின் பன்மையாகும்) |
| | | ல் | உள்ளங்கள் | |
| **மொழிபெயர்ப்பு : அவன் எத்தகையவன் என்றால் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களை கிளப்பிவிடுகின்றான்** | | | | |

- ஷைத்தான் இதயங்களில் வீண் சந்தேகங்களை கிளப்பிவிட முயற்சிக்கிறான்.
- உள்ளங்களின் ஒற்றன், கள்ளனாக இருக்கிறான். ஷைத்தானின் தாக்குதல் (மற்றும்)வேவு பார்த்தல் இதயத்திலிருந்தே ஆரம்பமாகிறது. இதயம் அல்லாஹ்வின் திக்ர் நினைவால் உயிரோட்டத்தோடும், வலுவாகவும் இருந்தால் ஷைத்தான் பின்வாங்கிவிடுகிறான். இல்லையெனில் மனிதன் அவனது தாக்குதலின் கீழ் பாவம் செய்கிறான். மேலும் அவனது இதயம் கருக்க (கரும்புள்ளிகள் விழ) ஆரம்பித்து விடுகிறது.
- அல்லாஹு தஆலா குர்ஆனைப்பற்றி : شِفَاءٌ لِّمَا فِى الصُّدُوْرِ - இதயங்களில் உள்ள(தீய)வைகளுக்கு நோய்நிவாரணம் வழங்கக்கூடியதாகும் என சூரா யூனுஸில் குறிப்பிடுகின்றான்.

| مِنَ الْجِنَّةِ [32*] | | وَالنَّاسِ | |
|---|---|---|---|
| **ஜின்களிலிருந்து** | | **மேலும் மனிதர்களிலிருந்து** | |
| مِنْ | الجِنَّةِ | وَ | النَّاسِ |
| இருந்து | ஜின்கள் இனம் | இன்னும் | மனிதர்கள் இனம் |
| **மொழிபெயர்ப்பு : (இத்தகையோர்) ஜின்களில் இன்னும் மனிதர்களில் இருக்கின்றனர்** | | | |

- ஒவ்வொருவருடனும் ஒரு ஜின் (ஷைத்தான்) இருக்கிறான். அவன் மிகக்கெட்டவன், வாழ்க்கையை வீணடிப்பவன். விரோதியைப் போன்று தொடர்ந்து தாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான். (எனவே) உங்களுடன் ஜின் இருப்பதாக உணருங்கள்.

- மனித ஷைத்தான்கள் யார்? அந்த ஒவ்வொரு நண்பன் அல்லது கூட்டம் எவை இஸ்லாமின் விஷயத்தில் சந்தேகத்தையோ அல்லது பாவத்தின் விஷயத்தில் ஒருங்கிணைப்பை ஏற்படுகிறதோ அவை யாவும் ஷைத்தானின் கூட்டமைப்பு (மஜ்லிஸ்) ஆகும். தொலைக்காட்சி, இன்டர்நெட், செய்தித்தாள்கள்,செய்திகள் போன்ற நமது மக்கள் தொடர்பு ஊடகங்கள் (மீடியாக்கள்) இவற்றால் நிரம்பி இருக்கவில்லையா? இவ்வித மனிதர்களைவிட்டு அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடவேண்டும். அவர்களுடன் மிகவும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

- அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதுடன் இவ்வாறான சூழ்நிலைகளைவிட்டு தற்காத்துக் கொள்ள தனியாகவும் கூட்டாகவும் முயற்சிகள் செய்து கொண்டே இருக்க வேண்டும்

**<u>இலக்கணம் :</u>** 21 வாக்கிய அமைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன அவற்றை பயிற்சி செய்யுங்கள் அவற்றில் இறுதி இரு வாக்கிய அமைப்புகள் பெண்பாலிற்கு உரியதாகும்

இவ்வார்த்தை பல்வேறு அமைப்புகளில் 21 முறை வருகின்றன என்பதைக் காண்பிப்பதற்காகவே 21 என சொல்லப்பட்டுள்ளது

இரு அடைப்புக்குறிகளுக்கு மத்தியில் (ف) என வருவது: இது فَتَحَ-يَفْتَحُ என்ற முறையில்( கீழே கூறப்பட்ட வினைச்சொல்) இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது

فَتَحَ ( ف ) அவன் திறந்தான் : இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் 29 முறைகள் வருகின்றன

| فَتَحَ ، يَفْتَحُ ، اِفْتَحْ | | فِعْل مُضَارِع நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல் | | فِعْل مَاضِي கடந்தகால வினைச்சொல் | |
|---|---|---|---|---|---|
| | | திறக்கிறான் / திறப்பான் | يَفْتَحُ | திறந்தான் | فَتَحَ |
| نَهْي prohibitive கட்டளை-விலக்கல் | أمْر Imperative கட்டளை-ஏவல் | திறக்கிறார்கள் / திறப்பார்கள் | يَفْتَحُونَ | திறந்தார்கள் | فَتَحُوا |
| திறக்காதே لاَ تَفْتَحْ | திற! اِفْتَحْ | திறக்கிறாய் / திறப்பாய் | تَفْتَحُ | திறந்தாய் | فَتَحْتَ |
| திறக்காதீர்கள் لاَ تَفْتَحُوا | திறங்கள் اِفْتَحُوا | திறக்கிறீர்கள் / திறப்பீர்கள் | تَفْتَحُونَ | திறந்தீர்கள் | فَتَحْتُمْ |
| திறப்பவன்: فَاتِح | | திறக்கிறேன் / திறப்பேன் | أَفْتَحُ | திறந்தேன் | فَتَحْتُ |
| திறக்கப் படுபவன்: مَفْتُوح | | திறக்கிறோம் / திறப்போம் | نَفْتَحُ | திறந்தோம் | فَتَحْنَا |
| திறத்தல்: فَتْح | | அவள் திறக்கிறாள்/ திறப்பாள் | تَفْتَحُ | அவள் திறந்தாள் | فَتَحَتْ |

இதில் மேலேயுள்ள கட்டங்களில் فَعَلَ – يَفْعَلُ – اِفْعَلْ என்பவைதான் முக்கியமானதாகும்

جَعَلَ ( ف ) அவன் உருவாக்கினான் : இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **346** முறைகள் வருகின்றன

| جَعَلَ ، يَجْعَلُ ، اِجْعَلْ | | فِعْل مُضَارِع நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல் | | فِعْل مَاضِي கடந்தகால வினைச்சொல் | |
|---|---|---|---|---|---|
| | | அமைக்கிறான்/ அமைப்பான் | يَجْعَلُ | அமைத்தான் | جَعَلَ |
| نَهْي prohibitive கட்டளை-விலக்கல் | أمْر Imperative கட்டளை-ஏவல் | அமைக்கிறார்கள்/ அமைப்பார்கள் | يَجْعَلُونَ | அமைத்தார்கள் | جَعَلُوا |
| அமைக்காதே لاَ تَجْعَلْ | அமை اِجْعَلْ | அமைக்கிறாய்/ அமைப்பாய் | تَجْعَلُ | அமைத்தாய் | جَعَلْتَ |
| அமைக்காதீர்கள் لاَ تَجْعَلُوا | அமையுங்கள் اِجْعَلُوا | அமைக்கிறீர்கள்/ அமைப்பீர்கள் | تَجْعَلُونَ | அமைத்தீர்கள் | جَعَلْتُمْ |
| அமைப்பவன்: جَاعِل | | அமைகிறேன்/ அமைப்பேன் | أَجْعَلُ | அமைத்தேன் | جَعَلْتُ |
| அமைக்கப் படுபவன்: مَجْعُول | | அமைக்கிறோம்/ அமைப்போம் | نَجْعَلُ | அமைத்தோம் | جَعَلْنَا |
| அமைத்தல்: جَعْل | | அவள் அமைக்கிறாள்/ அமைப்பாள் | تَجْعَلُ | அவள் அமைத்தாள் | جَعَلَتْ |

இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் جَعَلَ – يجْعَلُ – اِجْعَلْ என்பவைதான் முக்கியமானதாகும்.

| பாடம் எண் : 12 |
| --- |
| சூரா அந்-நாஸ் |




**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| اِلٰهِ النَّاسِ (3) | مَلِكِ النَّاسِ (2) | بِرَبِّ النَّاسِ (1) | قُلْ اَعُوْذُ |
| --- | --- | --- | --- |
| | | | |

| الْخَنَّاسِ (4) | الْوَسْوَاسِ | مِن شَرِّ |
| --- | --- | --- |
| | | |

| النَّاسِ (5) | فِي صُدُورِ | يُوَسْوِسُ | الَّذِي |
| --- | --- | --- | --- |
| | | | |

| وَالنَّاسِ (6) | مِنَ الْجِنَّةِ |
| --- | --- |
| | |

**வினா 2: “رب” என்பதின் பொருளை உதாரணங்களோடு விளக்குக?**
**விடை :**

**வினா 3: شرّ - தீங்கு என்பதின் கருத்து என்ன ?**
**விடை :**

**வினா 4: ஷைத்தான் எப்பொழுது ஊசலாட்டங்களைப் போடுகிறான் ?**
**விடை :**

**வினா 5: மனித சாத்தான்களின் உரையாடல்கள் எவ்வாறு இருக்கும் ?**
**விடை :**

## 12 – வது பாடத்திற்கான வினாக்கள் - சூரா அந்நாஸ்

வினா-1-A கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை فَتَحَ (29) ف அவன் திறந்தான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்

| | | | |
|---|---|---|---|
| முக்கியமானவை<br>فَتَحَ ، يَفْتَحُ ، اِفْتَحْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
| | | அவன் திறக்கிறான் / திறப்பான் يَفْتَحُ | அவன் திறந்தான் فَتَحَ |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**வினா-1-**B கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை جَعَلَ (346) ف அவன் உருவாக்கினான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்.

| | | மொழிபெயர்ப்பு | فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு | فِعْل مَاضِي |
|---|---|---|---|---|---|
| முக்கியமானவை<br>جَعَلَ ، يَجْعَلُ ، اِجْعَلْ | | அவன் உருவாக்குகிறான்/ உருவாக்குவான் | يَجْعَلُ | அவன் உருவாக்கினான் | جَعَلَ |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

| | |
|---|---|
| **வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
| | நாங்கள் அவனை உருவாக்கினோம் |
| | எனவே அவர்களை உருவாக்கிவிட்டான் |
| | அவன் உங்களை உருவாக்குகிறான் |
| | நீங்கள் அவனை உருவாக்குகிறீர்கள் |
| | நாம் திறந்தோம் |

| | |
|---|---|
| **வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
| | جَعَلْنَاكُمْ |
| | جَعَلْنَا |
| | وَاجْعَلْهُ |
| | تَفْتَحُوْنَ |
| | يَفْتَحُ |

| பாடம் எண் : 13<br>சூரா அல்-காபிரூன் | 13 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 30854 முறை வரக்கூடிய 76 புதிய வார்த்தைகளை கற்பீர்கள். | 4 பரப்பு / கேள் 1<br>புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்<br>3 திட்டமிடு / மதிப்பிடு 2 |
|---|---|---|

அறிமுகம் : இந்த அத்தியாயம் மக்காவில் இறங்கியதின் காலகட்டம் மக்கத்து முஷ்ரிக்குகள் இஸ்லாம் பரவிக்கொண்டே இருப்பதையும் அவர்களது மார்க்கம் பலவீனமடைந்துக் கொண்டே போவதையும் பார்த்தபோது அவர்கள் இஸ்லாமிய வளர்ச்சியை தடுப்பதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் வந்து ஓராண்டு காலம் இந்த முஷ்ரிக்குகள் ஒரே இறைவனை (அல்லாஹ்வை) வணங்குவார்கள். அடுத்த ஆண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் (முஷ்ரிக்குகளின்) சிலைகளை வணங்க வேண்டும் என்ற இக்கருத்தை (நிபந்தனையாக) முன்வைத்தார்கள் அதற்கு அல்லாஹு த்தஆலாவிடமிருந்து (இந்த அத்தியாயம் மூலம்) மிகக்தெளிவாக பதில் தரப்பட்டது.

- பஜ்ரு மற்றும் மஃக்ரிபின் சுன்னத் தொழுகைகளில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஓதி வந்தார்கள் (நூல் : அஹ்மத், திர்மிதி, நஸயி, இப்னுமாஜா போன்றவை)
- அல்லாஹ்வின் தூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், தன தோழர்களுக்கு சொன்னார்கள் : இரவில் தூங்கும்போது இதை ஓதி உறங்குவீர்களென்றால், இணைவைப்பதை விட்டு நீங்கியவர்களாக கருதப்படுவீர்கள் (அபூதாவூத் ஹதீஸ் எண் 5050)

أَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ۞ بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

| الْكَافِرُونَ | يَاَيُّهَا | قُلْ |
|---|---|---|
| **நிராகரிப்பவர்கள்** | **ஏ!** | **சொல்** |
| كَافِر என்பதிலிருந்து كَفَرَ , فَاعِل விலிருந்து فَعَلَ அதாவது كَافِر நிராகரிப்பவன் இதன் பன்மை كَافِرُوْنَ – كَافِرِيْنَ | يا اَيُّهَا – يَا اِيَّتُهَا ஏ (என அழைக்கப்படும் சொல்) | قُلْ அதாவது அழகிய முறையில் பரப்புங்கள் |
| **மொழிபெயர்ப்பு : (நபியே) நீர் கூறுவீராக! நிராகரிப்பவர்களே!** | | |

- முஸ்லிமல்லாத ஒவ்வொருவரும் நிராகரிப்பவர் அல்லர். யார் இஸ்லாம் பற்றிய விஷயங்கள் வந்து சேர்ந்த பின்னரும் புரிந்து கொண்டே மறுக்கிறாரோ, அவர்தான் காபிர்-நிராகரிப்பவராவார். பொதுவாக குர்ஆன் முஸ்லிமல்லாதவர்களைப் பார்த்து يَا اَيُّهَا النَّاس (யா அய்யுஹன்னாஸ்) மனிதர்களே! என அழைக்கிறது
- நாம் சிறுவர்களாக இருந்தபோது உங்களது தந்தை உங்களது ஏதாவது சகோதரி அல்லது சகோதரர் மீது சினம் கொண்டுவிட்டால் உங்களில் மற்ற யாவரும் சுதாரித்துக் கொள்வீர்கள். அத்துடன் தன் தந்தையை மகிழ்விக்க முயற்சி செய்வீர்கள், இங்கு அல்லாஹ் (தன்னை) நிராகரிப்பவர்களோடு மிகக் கோபமாக இருக்கிறான் உடனே நாம் சுதாரித்துக் கொள்ள வேண்டும் மேலும் எந்த விஷயத்திலும் இறைவன் நம்மோடு கோபித்துவிடாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- நிராகரிப்பவர்களின் முக்கிய பிரச்சினை என்னவாக இருந்தது? தனது மனம் (மனோஇச்சை), தனது ஆணவம், வசதி, கௌரவம், மூதாதையர்களின் (தவறான) வழிமுறை போன்றவைகளின் காரணமாக சத்தியத்தை தெரிந்திருந்தும் மறுத்துவந்தார்கள்.
- அல்லாஹ்வே! எனது ஆணவத்தின் காரணமாக உண்மையை மறுக்க காரணமாக்கிவிடாதே என்றும், எனது ஆணவமும். மனோயிச்சையும் தற்பெருமையும் சத்தியத்தில் (அதாவது உண்மைக்கு எதிராக) என்றும் வரவிடாதே என்றும் பிரார்த்தியுங்கள்.
- சரிபார்த்தல் : சத்தியத்தை எத்தனை முறை எதிர்த்திருக்கிறேன் அல்லது உடனே ஏற்காமல் இருந்திருக்கிறேன் ? (என உங்களை சரிபாருங்கள்)
- பாவமன்னிப்புக்கேட்க, அல்லாஹ்வைப்புகழ, அவனது மகிமையை எடுத்துரைக்க, தன்னை சீர்திருத்திக்கொள்ள திட்டமிடுங்கள்.

- ஆணவம் மற்றும் மூதாதையர்களின் (தவறான) வழிமுறைகளை ஏற்பதின் விளைவுகளை மனிதர்களுக்கு எடுத்துச்சொல்லி வாருங்கள்.

| تَعْبُدُونَ | مَا | لاَ أَعْبُدُ | |
|---|---|---|---|
| **வணங்குகிறீர்கள்** | **எதை** | **நான் வணங்கமாட்டேன்** | |
| இது تَفْعَلُونَ என்ற வாக்கிய அமைப்பில் வருகிறது | مَا என்பதற்கு இரு பொருள்கள் உள்ளன 1) இல்லை- புழக்க நடைமுறையில் مَافِيهِ 2) எது- உனது மார்க்கம் எது (مَا دِينُكَ) என கப்ரில் கேட்பது போல | أَعْبُدُ | لاَ |
| | | வணங்குகிறேன் | இல்லை |
| **மொழிபெயர்ப்பு: நீங்கள் வணங்குபவற்றை நான் வணங்கமாட்டேன்** | | | |

- (ஏகத்துவக்) கொள்கை விஷயத்தில் (எவருடனும்) எந்த உடன்பாடும் இல்லை.

- வணக்கம் (இபாதத்) என்பதற்கு மூன்று பொருள்கள் உள்ளன.
  (1)சிரம் தாழ்த்தி வணங்கும் செயல் (2) முழுமையாக அடிபணிந்து கட்டளையை ஏற்று நடத்தல் (3)அடிமைத்தனம் (அடிமையாகிவிடல்). இம்மூன்று கருத்துகளிலும் வணக்கவழிபாடு என்பது அல்லாஹ்விற்கு மட்டுமே இருக்க வேண்டும்.

- இன்றைய (காபிர்கள்) நிராகரிப்பாளர்கள்தான் இஸ்லாமிற்கு அவப்பெயர் சூட்ட முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்று கருதினால் இன்றைய முஸ்லிம்களும் குழம்பிப்போய் இருக்கிறார்கள். இவ்வாறான சூழ்நிலையில் முழு ஏகத்துவம் மற்றும் நம்பிக்கையுடன் இம்மார்க்கத்தில் நிலைத்திருப்பதற்காக நன்றி செலுத்தியவாறு உங்களைப்பற்றி சிறிதளவும் குறைவாகக்கருதாமல் இஸ்லாமின் படி செயல்படுங்கள். எதிர்ப்பவர்(எதிரி)களை குருடர்களைப் பார்ப்பது போல அல்லது விஷம் அருந்துபவர்களைப் பார்ப்பது போல கருதுங்கள்.

| اَعْبُدُ | مَا | عَابِدُونَ | وَ لاَ أَنْتُمْ | | |
|---|---|---|---|---|---|
| **வணங்குகிறேன்** | **எதை** | **வணங்குபவர்கள்** | **மேலும் நீங்கள் இல்லை** | | |
| اَفْعَلُ (அஃப்அலு) என்ற அமைப்பை போல اَعْبُدُ | இதன் பொருள் இதற்கு மேல் உள்ள வசனத்தில் சொல்லப் பட்டுள்ளது | عَابِدُونَ– عَابِدவணங்குபவன் عَابِدِيْنَ வணங்குபவர்கள் عَبْد-அடிமை ஆனால் (عَاهِد) ஒப்பந்தத்தோடு பணியமர்த்தப்பட்ட அடிமை என்பது வேறு | أَنْتُمْ | لاَ | وَ |
| | | | நீங்கள் | இல்லை | மேலும் |
| **மொழிபெயர்ப்பு : மேலும் நான் வணங்குகின்ற(ஒரு)வனை நீங்கள் வணங்குபவர்களல்லர்** | | | | | |

- (இணை வைத்துக் கொண்டு) நீங்கள் அல்லாஹ்வையே வணங்கிக் கொண்டிருப்பதாக தவறாக எண்ணிக் கொண்டு இருந்து விடவேண்டாம். இணை வைப்பரின் (எந்த) அல்லாஹ்வுடைய வணக்கமும் ஏற்கப்பட மாட்டாது.

- எல்லா மத(மார்க்க)ங்களும் ஒன்றாக முடியாது, (அல்லாஹ்வோடு) இணையாக ஒருவனை இணைத்துக்கொண்டால் எந்த வணக்கமும் அல்லாஹ்விடம் ஏற்க்கப்படாது.

| عَبَدْتُّمْ | مَّا | عَابِدٌ | وَ لاَ أَنَا | | |
|---|---|---|---|---|---|
| **நீங்கள் வணங்குநீர்கள்** | **எதை** | **வணங்குபவன்** | **மேலும் நான் இல்லை** | | |
| இது فَعَلْتُم என்ற வாக்கிய அமைப்பைப்போல | | வணங்குபவன் فَاعِل என்ற வாக்கிய அமைப்பைப்போல | أَنَا | لاَ | وَ |
| | | | நான் | இல்லை | மேலும் |
| **மொழிபெயர்ப்பு : நீங்கள் வணங்குபவற்றை நானும் வணங்குபவனல்ல** | | | | | |

நீங்கள் வணங்கிக்கொண்டிருப்பவைகளை வணங்குவதற்கு கடுமையாக மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது

- இப்பொழுதும் வணங்கமாட்டேன் (لَا اَعْبُدُ) இன்னும் இனியும் (எதிர்காலத்திலும்) வணங்கமாட்டேன் (وَلاَ اَنَا عَابِدٌ)
- உங்களால் தற்பொழுது வணங்கப்படுபவைகளையும் வணங்கமாட்டேன் (تَعْبُدُوْنَ مَا) மேலும் கடந்தகாலங்களில் வணங்கியவைகளையும் வணங்கமாட்டேன் (مَا عَبَدْتُمْ)

| اَعْبُدُ | مَا | عَابِدُونَ | وَ لاَ أَنْتُمْ |
|---|---|---|---|
| **வணங்குகிறேன்** | **எதை** | **வணங்குபவர்கள்** | **மேலும் நீங்கள் இல்லை** |
| **மொழிபெயர்ப்பு: மேலும் நான் வணங்குபவனை நீங்களும் வணங்குபவர் அல்லர்** | | | |

- பல அத்தாட்சிகள் வந்தபின்னரும் உங்களுடைய பின்வாங்குதலின் காரணமாக நீங்கள் ஒரே இறைவனை வணங்குவீர்கள் என்ற ஆதரவு (நம்பிக்கை) இல்லை.

| دِينِ | وَلِيَ | دِينُكُمْ | لَكُمْ |
|---|---|---|---|
| **என்னுடைய மார்க்கம்** | **மேலும் எனக்கு** | **உங்களுடைய மார்க்கம்** | **உங்களுக்கு** |
| **மொழிபெயர்ப்பு : உங்களுக்கு உங்களுடைய மார்க்கம் மேலும் எனக்கு என்னுடைய மார்க்கம்** | | | |

- இதன் கருத்து அனைத்து மார்க்கங்களும் சமம் என்பதல்ல
- இதன் கருத்து (இஸ்லாமை) பரப்பும் பணியை இதோடு நிறுத்திக்கொண்டார்கள் என்பதும் அல்ல, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்த (வசனத்தின்) வஹீயிற்குப்பின் இஸ்லாமியப்பிரச்சாரத்தை விட்டுவிட்டார்களா? இல்லவே இல்லை, இவ்விஷயம் உடன்பாட்டை (compromise) முன்னிறுத்தியதற்கு பதிலுரைக்கவே சொல்லப்பட்டது
- உண்மையிலேயே நான் இந்த (இஸ்லாமிய) மார்க்கத்தை மதிக்கிறேனா? அதன்படி செயல்பட, அதை பிறருக்கு எத்திவைக்க நான் முயற்சி செய்கிறேனா? இந்த அத்தியாயத்தை வாழ்க்கையில் கொண்டு வாருங்கள், அதாவது இது சொல்வது போன்று செயல்படுங்கள்

## <u>இலக்கணம்:</u>

21 வாக்கிய அமைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது இதற்கு முன் فَتَحَ–يَفْتَحُ اِفْتَحْ என்பதின் பாடத்தை படித்தோம் இப்பொழுது – نَصَرَ) வின் பாடத்தை படிக்க இருக்கிறோம் அடிப்படையில் அதே فَعَلَ என்ற வாக்கிய அமைப்புதான் ஆனால் ஜபர், ஜேர், பேஷின் வேறுபாடுதான். இங்கு- يَنْصَرُ –اِنْصَرْ - نَصَرَ க்குப்பதிலாக اُنْصُرْ – يَنْصُرُ -- نَصَرَ முறையில் அதாவது ص ன் மீது ஜேருக்குப்பதிலாக (مضارع யில்) பேஷ் வருகிறது, அரபி மொழியில் அதிகபட்ச வினைச்சொற்கள் இதே முறையில்தான் வருகின்றன.

نَصَرَ (ن) **அவன் உதவிசெய்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **92** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| உதவி செய்கிறான் / செய்வான் | يَنصُرُ | உதவி செய்தான் | نَصَرَ |
| உதவி செய்கிறார்கள் / செய்வார்கள் | يَنصُرُونَ | உதவி செய்தார்கள் | نَصَرُوا |
| உதவி செய்கிறாய் / செய்வாய் | تَنصُرُ | உதவி செய்தாய் | نَصَرْتَ |
| உதவி செய்கிறீர்கள் / செய்வீர்கள் | تَنصُرُونَ | உதவி செய்தீர்கள் | نَصَرْتُم |
| உதவி செய்கிறேன் / செய்வேன் | أَنصُرُ | உதவி செய்தேன் | نَصَرْتُ |
| உதவி செய்கிறோம் / செய்வோம் | نَنصُرُ | உதவி செய்தோம் | نَصَرْنا |
| அவள் உதவி செய்கிறாள்/செய் வாள் | هِيَ تَنْصُرُ | அவள் உதவி செய்தாள் | هِيَ نَصَرَتْ |
| **இந்த மற்றும் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** نَصَرَ – يَنصُرُ – أَنصُرُ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |

| **கட்டளை-விலக்கல்** نَهِى - Prohibitive | | **கட்டளை-ஏவல்** امْر - Imperative | |
|---|---|---|---|
| உதவி செய்யாதே | لاَ تَنْصُرْ | உதவி செய் | أُنْصُرْ |
| உதவி செய்யாதீர்கள் | لاَ تَنْصُرُوا | உதவி செய்யுங்கள் | أُنْصُرُوا |
| உதவுபவன்: نَاصِر | | | |
| உதவப்படுபவன்: مَنْصُور | | | |
| உதவி செய்தல்: نَصْر | | | |

خَلَقَ ( ن ) **அவன் படைத்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **248** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| படைக்கிறான் / படைப்பான் | يَخْلُقُ | படைத்தான் | خَلَقَ |
| படைக்கிறார்கள் / படைப்பார்கள் | يَخْلُقُونَ | படைத்தார்கள் | خَلَقُوا |
| படைக்கிறாய் / படைப்பாய் | تَخْلُقُ | படைத்தாய் | خَلَقْتَ |
| படைக்கிறீர்கள் / படைப்பீர்கள் | تَخْلُقُونَ | படைத்தீர்கள் | خَلَقْتُم |
| படைக்கிறேன் / படைப்பேன் | أَخْلُقُ | படைத்தேன் | خَلَقْتُ |
| படைக்கிறோம் / படைப்போம் | نَخْلُقُ | படைத்தோம் | خَلَقْنَا |
| அவள் படைக்கிறாள்/ படைப்பாள் | هِيَ تَخْلُقُ | அவள் படைத்தாள் | هِيَ خَلَقَتْ |
| **இந்த மற்றும் மேலேயுள்ள கட்டங்களில்** خَلَقَ – يَخْلُقُ – أَخْلُقُ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |

| **கட்டளை-விலக்கல்** نَهِى - Prohibitive | | **கட்டளை-ஏவல்** امْر - Imperative | |
|---|---|---|---|
| படைக்காதே | لاَ تَخْلُقْ | படை | أُخْلُقْ |
| படைக்காதீர்கள் | لاَ تَخْلُقُوْا | படையுங்கள் | أُخْلُقُوا |
| படைப்பவன் : خَالِق | | | |
| படைக்கப்படுபவன் : مَخْلُوق | | | |
| படைத்தல் : خَلْق | | | |

ذَكَرَ (ن) **அவன் ஞாபகம் செய்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **143** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضی | |
|---|---|---|---|
| நினைக்கிறான் / நினைப்பான் | يذكُرُ | நினைத்தான் | ذَكَرَ |
| நினைக்கிறார்கள் / நினைப்பார்கள் | يذكُرُونَ | நினைத்தார்கள் | ذَكَرُوا |
| நினைக்கிறாய் / நினைப்பாய் | تَذكُرُ | நினைத்தாய் | ذَكَرْتَ |
| நினைக்கிறீர்கள் / நினைப்பீர்கள் | تَذكُرُونَ | நினைத்தீர்கள் | ذَكَرْتُم |
| நினைக்கிறேன் / நினைப்பேன் | أذكُرُ | நினைத்தேன் | ذَكَرْتُ |
| நினைக்கிறோம் / நினைப்போம் | نَذكُرُ | நினைத்தோம் | ذَكَرْنا |
| அவள் நினைக்கிறாள் / நினைப்பாள் | هِيَ تَذكُرُ | அவள் நினைத்தாள் | هِيَ ذَكَرَتْ |
| **இந்த மற்றும் மேலேயுள்ள கட்டங்களில்** ذَكَرَ – يذكُرُ – أُذكُرْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |

| **கட்டளை-விலக்கல்** نَهِی - Prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمر - Imperative | |
|---|---|---|---|
| நினைக்காதே | لاَ تَذْكُرْ | நினை | أُذكُرْ |
| நினைக்காதீர்கள் | لاَ تَذْكُرُوا | நினையுங்கள் | أُذكُرُوا |
| நினைப்பவன் : ذَاكِر | | | |
| நினைக்கப்படுபவன் : مَذكُور | | | |
| நினைக்கும் செயல் : ذِكر | | | |

رَزَقَ (ن) **அவன் உணவளித்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **122** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضی | |
|---|---|---|---|
| உணவளிக்கிறான் / உணவளிப்பான் | يَرْزُقُ | உணவளித்தான் | رَزَقَ |
| உணவளிக்கிறார்கள் / உணவளிப்பார்கள் | يَرْزُقُونَ | உணவளித்தார்கள் | رَزَقُوا |
| உணவளிக்கிறாய் / உணவளிப்பாய் | تَرْزُقُ | உணவளித்தாய் | رَزَقْتَ |
| உணவளிக்கிறீர்கள் / உணவளிப்பீர்கள் | تَرْزُقُونَ | உணவளித்தீர்கள் | رَزَقْتُم |
| உணவளிக்கிறேன் / உணவளிப்பேன் | أَرْزُقُ | உணவளித்தேன் | رَزَقْتُ |
| உணவளிக்கிறோம் / உணவளிப்போம் | نَرْزُقُ | உணவளித்தோம் | رَزَقْنَا |
| அவள் உணவளிக்கிறாள்/ உணவளிப்பாள் | هِيَ تَرْزُقُ | அவள் உணவளித்தாள் | هِيَ رَزَقَتْ |
| இந்த இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் رَزَقَ – يَرْزُقُ – أرْزُقْ என்பவைதான் முக்கியமானதாகும் | | | |

| **கட்டளை-விலக்கல்** نَهِی - Prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمر - Imperative | |
|---|---|---|---|
| உணவளிக்காதே | لاَ تَرْزُق | உணவளி | أَرْزُق |
| உணவளிக்காதீர்கள் | لاَ تَرْزُقُوْا | உணவளியுங்கள் | أَرْزُقُوا |
| உணவளிப்பவன் : رَازِق | | | |
| உணவளிக்கப்படுபவன் : مَرْزُوق | | | |
| உணவளிக்கும் செயல் : رِزْق | | | |

**பாடம் எண் : 13**

**சூரா அல்-கா∴பிரூன்**

| பரப்பு 4 | கேள் 1 |
|---|---|
| புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | |
| திட்டமிடு 3 | மதிப்பிடு 2 |

**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| الْكٰفِرُوْنَ ① | يٰۤاَيُّهَا | قُلْ |
|---|---|---|
| | | |

| تَعْبُدُوْنَ ② | مَا | اَعْبُدُ | لَآ |
|---|---|---|---|
| | | | |

| اَعْبُدُ ③ | مَآ | عٰبِدُوْنَ | وَلَآ اَنْتُمْ |
|---|---|---|---|
| | | | |

| عَبَدْتُّمْ ④ | مَّا | عَابِدٌ | وَلَآ اَنَا |
|---|---|---|---|
| | | | |

| اَعْبُدُ ⑤ | مَآ | عٰبِدُوْنَ | وَلَآ اَنْتُمْ |
|---|---|---|---|
| | | | |

| دِيْنِ ⑥ | وَلِيَ | دِيْنُكُمْ | لَكُمْ |
|---|---|---|---|
| | | | |

**வினா 2: முஸ்லிமல்லாத ஒவ்வொருவரும் நிராகரிப்பவரா? (இல்லையெனில்) பின்னர் (கா.:பிர்) நிராகரிப்பவர் என்றால் யார் ?**
**விடை :**

**வினா 3: لَكُمْ دِيْنُكُمْ உங்களின் மார்க்கம் -கொள்கை- உங்களுக்கு என்று கூறியிருப்பதால் இஸ்லாமிய அழைப்புப் பிரச்சாரத்தை விட்டுவிடுவதா ?**
**விடை :**

**வினா 4: நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இந்த அத்தியாயத்தை என்னென்ன தொழுகைகளில் ஓதி வந்தார்கள்?**
**விடை :**

**வினா 5: இரவு நேரங்களில் (தூங்கும்போது) இந்த அத்தியாயத்தை ஓதுவது பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் என்ன கூறியுள்ளார்கள்?**
**விடை :**

## 13 – வது பாடத்திற்கான வினாக்கள் - சூரா அல்-காஃபிரூன்

வினா-1- கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை نَصَرَ (92) ن அவன் உருவாக்கினான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்.

<table>
<tr><td colspan="2" rowspan="2">முக்கியமானவை<br>نَصَرَ، يَنْصُر،اُنْصُرْ</td><td>மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع</td><td>மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي</td></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><td>மொழிபெயர்ப்பு نَهْي</td><td>மொழிபெயர்ப்பு أَمْر</td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
</table>

خَلَقَ 248 (ن) படைத்தான்

<table>
<tr><td colspan="2" rowspan="2">முக்கியமானவை<br>خَلَقَ، يَخْلُقُ، اُخْلُق</td><td>மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع</td><td>மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي</td></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><td>மொழிபெயர்ப்பு نَهْي</td><td>மொழிபெயர்ப்பு أَمْر</td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
</table>

ذَكَرَ[143] (ن) ذكر: ஞாபகம் செய்தல்

| முக்கியமானவை<br>ذَكَرَ، يَذْكُرُ، اُذْكُرْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

رَزَقَ[122] (ن) رزق: உணவளித்தான்

| முக்கியமானவை<br>رَزَقَ ،يَرْزُقُ، اُرْزُقْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| **வினா 3 :** தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | நீங்கள் எனக்கு உதவி செய்தீர்கள் |
| | நான் உங்களுக்கு உதவி செய்தேன் |
| | அவன் என்னை ஞாபகம் செய்தான் |
| | நான் அவனை ஞாபகம் செய்தேன் |
| | எனவே எங்களுக்கு உதவி செய் |

| **வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | خَلَقَكُمْ وَ رَزَقَكُمْ |
| | وَلَقَدْ نَصَرَ كُمُ اللّٰهُ |
| | مَنْ يَنْصُرُنِيْ |
| | فَاذْكُرُوْنِيْ |
| | اَذْكُرُكُمْ |

| பாடம் எண் : 14<br>பாங்குடைய வார்த்தைகள் மற்றும் உளுவின் துஆ |
|---|

| 14 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 33079 முறை வரக்கூடிய 87 புதிய வார்த்தைகளை கற்பீர்கள். |
|---|

| 4 | பரப்பு | கேள் | 1 |
|---|---|---|---|
| | புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | | |
| 3 | திட்டமிடு | மதிப்பிடு | 2 |

| اَللّٰهُ أَكْبَرُ [23] اَللّٰهُ أَكْبَرُ . | اَللّٰهُ أَكْبَرُ اَللّٰهُ أَكْبَرُ . |
|---|---|
| **அல்லாஹ் மிகப்பெரியவன்** | **அல்லாஹ் மிகப்பெரியவன்** |

- அல்லாஹ்வின் வல்லமை, ஆளுமை, கம்பீரம், கண்ணியம் மற்றும் அவனது ஒவ்வொரு தண்மைப்பெயர்கள் யாவும் எல்லாவற்றையும் விடப் பெரியது
- துஆ : அல்லாஹ்வே எனக்கு என்வாழ்வில் உன்னையே பெரியவனாக ஏற்க உதவிடுவாயாக! அதாவது உயிர், குலம் அல்லது மனிதர்களுக்குப் பதிலாக உன் விஷயங்களையே ஏற்று செயல்பட உதவிடுவாயாக!.
- ஃபஜ்ர் தொழுகைக்கு பாங்கு சொல்லும்போது. அதை கேட்டு நான் தூங்கினால் யாரை பின்பற்றுகிறேன்? யாரை உயர்ந்தவனாக எடுத்துள்ளேன்? அல்லாஹ்வையா அல்லது என் மனோஇச்சையையா? இதனை மற்றவைகளோடும் ஒப்பிடலாம்.

| اللّٰهُ | اِلاَّ | اِلٰهَ | لَآ | أَنْ [576] | أَشْهَدُ |
|---|---|---|---|---|---|
| **அல்லாஹ்** | **தவிர** | **வணக்கத்திற்குரிவன்** | **இல்லை** | **என்று (அதாவது)** | **நான் சாட்சி சொல்கிறேன்** |
| | ஆனால் , தவிர | اِلٰـه என்பதற்கு பன்மை آلِهَةٌ | مَا -இல்லை, என்ன, எது لَا இல்லை, لَمْ இல்லை لَنْ இருக்கவே இருக்காது | أَفْعَلُ என்ற விதத்தல், شَهادَة சாட்சி, شَهِيد கண்ணால் பார்த்தவன், உயிர்தியாகம் செய்தவன் என்ற பொருளும் உள்ளது | |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை என்று சாட்சி சொல்கிறேன்** | | | | | |

- اِلٰه (இலாஹ்) என்பதன் விளக்கம்:-

(1) சிரம் தாழ்த்தி வணங்கும் செயல்.
(2) முழுமையாக அடிபணிந்து கட்டளையை ஏற்று நடத்தல்.
(3) அடிமைத்தனம் (அடிமையாகிவிடல்).

இம்மூன்று கருத்துகளிலும் வணக்கவழிபாடு என்பது அல்லாஹ்விற்கு மட்டுமே இருக்க வேண்டும்.
நான் சாட்சி சொல்கிறேன் அதாவது (வீட்டிற்குள் இருந்தாலும் சரி, வெளியில் இருந்தாலும் சரி, அலுவலகத்தில் இருந்தாலும் சரி, கடைவீதியில் இருந்தாலும் சரியே) எனது சொற்கள், செயல்கள் யாவும் சொல்கிறது.

- அனைவரைவிட அல்லாஹ்வோடுதான் அதிக அன்பு வைக்கிறேன்.
- அல்லாஹ்வையே படைப்பவனாக, அரசனாக, இரட்சகனாக ஏற்கிறேன், முழு படைப்பினங்களின் அதிபதியாக (அவனையே) ஏற்கிறேன். அவனையே வணங்கவும் வழிப்படவும் செய்கிறேன், அவனிடமே உதவியும் தேடுகிறேன். அவனின் மீதே நம்பிக்கையும் வைக்கிறேன்.

| (2 முறை) رَّسُولُ اللهِ [236*] | مُحَمَّدًا | [363] أَنَّ | أَشْهَدُ |
|---|---|---|---|
| **அல்லாஹ்வின் தூதர் இதன் பன்மை-رُسُلٌ** | **முஹம்மது (صلى الله عليه وسلم)** | **நிச்சயமாக** | **நான் சாட்சி சொல்கிறேன்** |
| رَسُول: தூதுவர்<br>رُسُل : தூதர்கள் (குர்ஆனில் 96 முறை வந்துள்ளது) | مُحَمَّدًا:<br>அதிகமாக புகழப்பட்டவர் | أَنْ : அது;<br>أَنَّ : அது; நிச்சயமாக | |
| **மொழிபெயர்ப்பு : முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சி சொல்கிறேன்** | | | |

(நான் சாட்சி சொல்கிறேன் அதாவது) (வீட்டிற்குள் இருந்தாலும் சரி, வெளியில் இருந்தாலும் சரி, அலுவலகத்தில் இருந்தாலும் சரி கடைவீதியில் இருந்தாலும் சரியே) எனது சொற்கள், செயல்கள் யாவும் சொல்கிறது.

1) அனைவரையும் விட அல்லாஹ்மீதும் அவனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும் தான் அதிக அன்பு வைக்கிறேன்
2) முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களால் கொண்டு வரப்பட்ட போதனைகளை ஏன் எதற்கு என்றில்லாமல் ஏற்கிறேன். குர்ஆன் மற்றும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வழிமுறையை சத்தியம் அசத்தியத்தை வேறுபடுத்திக்காட்டக்கூடிய உரைகல்லாக (touch stone) ஏற்கிறேன்.
3) முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை ஏற்க எனக்கு வேறு எந்த சான்றுகளும் தேவையில்லை, எனது விருப்பமும், விருப்பமின்மையும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பின்பற்றுவதில் மட்டுமே இருக்கிறது.

| (2 முறை) الْفَلَاحِ | عَلَى | حَيَّ | (2 முறை) الصَّلٰوةِ [83] | عَلَى | حَيَّ |
|---|---|---|---|---|---|
| வெற்றி (யின்) | பக்கம் | வாருங்கள் | தொழுகை (யின்) | பக்கம் | வாருங்கள் |
| **மொழிபெயர்ப்பு : தொழுகையின் பக்கம் வாருங்கள் வெற்றியின் பக்கம் வாருங்கள்.** | | | | | |

- தொழுகையின் பக்கம் வாருங்கள் என சொல்லப்பட்டுள்ளது. தனது இடத்திலோ அல்லது வீட்டிலோ தொழுது கொள்ளுங்கள் என, சொல்லப்படவில்லை. அதாவது தொழுகையை நிலைநாட்டுங்கள் என சொல்லப்படுவது போல பள்ளிக்கு வந்து தொழுங்கள் என்றுள்ளது.
- அல்லாஹ்வும் தொழுது கொள்ளுங்கள் என கட்டளையிடவில்லை மாறாக தொழுகையை நிலைநாட்டுங்கள் என கட்டளை பிறப்பித்துள்ளான்.
- தொழ வந்தால் வெற்றியும் வெற்றிக்கான வழியும் கிடைக்கும். முழுத் தொழுகையும் அல்லாஹ்வின் திக்ர் (ஞாபகம் செய்வது) ஆகும். அல்லாஹ்வை திக்ர் செய்வதால் ஆத்மரீதியான அமைதி, அறிவுக்கு ஒரு ஒளியும் கிடைக்கும்.
- தொழுகையில் பல உடல்ரீதியான பலன்களும் உள்ளன, சரியான நேரத்தில் தூங்குதல், எழுந்திருத்தல் என்பது மட்டுமின்றி நேரத்தின் படி செயல்படும் பழக்கமும் ஏற்படும். சமுதாய ஒற்றுமை வலிமை அடைவது போன்ற கூட்டான பயன்களும் உள்ளன.
- எல்லாவற்றையும்விட மேலாக மறுமையில் என்றென்றும் நிரந்தர வெற்றி பெறுவதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

ஒரு குருடன் ஒரு பொருளைத்தேடி எதிர்திசையை நோக்கி செல்வது போல (நான் தொழுகைக்கு சென்றுவிட்டால்) என்னுடைய வெற்றிநடைபோடுகின்ற தொழில் நின்றுவிடும் என கருதி, மனிதன் தொழ வருவதில்லை. (இதுவெல்லாம் வெற்றியில்லை, தொழுகையிலேதான் முழுவெற்றி இருக்கிறது என்ற) காரணமும் இங்கு வெற்றியை ஞாபகப்படுத்துவதில் உள்ளது.

| | | |
|---|---|---|
| لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ | اللّٰهُ اَكْبَرُ | اللّٰهُ اَكْبَرُ |
| **அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரிவன் யாரும் இல்லை** | **அல்லாஹ் மிகப்பெரியவன்** | **அல்லாஹ் மிகப்பெரியவன்** |

இறுதியாக அதே பாங்கு சொல்வதில் துவங்கப்பட்ட வார்த்தைகளையே சொல்லப்பட்டுள்ளது ஆனால் இங்கு ஒரு விஷயம் அறிவிக்கப்பட்டுள்ளது அதாவது அவனது மகிமையை ஏற்று வந்துவிடுங்கள், அவ்வாறு ஏற்று வராவிட்டாலும் அவன் மிகப் பெரியவன், (நீங்கள்) வந்தாலும் வராவிட்டாலும் அவனது மகிமையில் எந்தக் குறையும் ஏற்படாது. வராதபோது நீங்கள்தான் நஷ்டமடைந்து உட்காருவீர்கள். எப்பொழுது அவனுடைய அழைப்பிற்கு லப்பைக் (இதோ உன்னிடம் வந்து விட்டேன்) என்பீர்களோ, உலகம் மற்றும் மறுமை இரண்டிலும் வெற்றி பெற்றுக்கொள்வீர்கள்.

**உளுவின் திக்ர்கள் (துஆக்கள்)**

بِسْمِ اللّٰهِ என்பது உளு செய்ய துவங்கும்போது ஓதவேண்டிய துஆவாகும்.

ஒளுவைமுடித்தபின் ஓதவேண்டி துஆ கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| اللّٰهُ | اِلَّا | اِلٰهَ | لَآ | أَنْ | أَشْهَدُ |
| **அல்லாஹ்** | **தவிர** | **வணக்கத்திற்குரியவன்** | **இல்லை** | **நிச்சயமாக** | **நான் சாட்சி சொல்கிறேன்** |
| | ஆனால், தவிர | | مَا -இல்லை, என்ன, எது<br>لا இல்லை, لَمْ இல்லை<br>لَنْ இருக்கவே இருக்காது | أَفْعَلُ என்ற விதத்தல், شهادة சாட்சி,<br>شَهِيد கண்ணால் பார்த்தவன், அல்லாஹ்விற்காக உயிர்தியாகம் செய்தவன் என்ற பொருளும் உள்ளது | |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை என்று சாட்சி சொல்கிறேன்** | | | | | |

- நான் சாட்சி சொல்கிறேன் அதாவது (வீட்டிற்குள் இருந்தாலும் சரி, வெளியில் இருந்தாலும் சரி, அலுவலகத்தில் இருந்தாலும் சரி கடைவீதியில் இருந்தாலும் சரியே) எனது சொற்கள், செயல்கள் யாவும் என எனது நாவு சொல்கிறது 1) அல்லாஹ்வையே படைப்பவனாக, அரசனாக, இரட்சகனாக ஏற்கிறேன். முழு படைப்பினங்களின் அதிபதியாக (அவனையே) ஏற்கிறேன். அவனையே வணங்கவும் வழிப்படவும் செய்கிறேன், அவனிடமே உதவியும் தேடுகிறேன். 2) அனைவரைவிட அல்லாஹ்வோடுதான் அதிக அன்பு வைக்கிறேன்.

| | | |
|---|---|---|
| لَهُ | لاَ شرِيْكَ [40] | وَحْدَهُ |
| **அவனுக்கு** | **இணை(யானவன்) இல்லை** | **அவன் தனித்தவன்** |
| அவனுக்கு, அவனுக்காக | شَرِيْك (என்பதின் பன்மை) شُرَكَاءُ -ஷு ரகா, ( இது) شِرْك ஷிர்க் (என்ற வார்த்தையிலிருந்து பிறந்ததாகும் இதிலிருந்து தான்) مُشْرِك முஷ்ரிக் | وَاحِد – اَحَدٌ – تَوْحِيْدٌ (என்றவைகளைப் போல) |
| **மொழிபெயர்ப்பு : அவன் தனித்தவன், அவனுக்கு இணை(யானவன்) யாருமே இல்லை** | | |

இங்கு அல்லாஹ்வின் ஒருமைப்பாட்டை மறுமுறை வேறுவார்த்தைகளால் உறுதிபடுத்தியும், இணையிலிருந்து முழுமையாக(வெறுத்து) ஒதுங்கிவிடவேண்டும் என்ற அறிவிப்பும் செய்துள்ளான். இல்லையெனில் வெற்றி பெறுவது கடினம். ஏனெனில் அல்லாஹ் இணைவைப்பதை அறவே மன்னிக்க மாட்டான். எனவே இணைவைப்பதின் அபாயத்தை மனதில் வைத்தவாறு இதை படிக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| وَرَسُوْلُهُ | | | عبْدُهُ [126] | | مُحمّداً | اَنّ | وَأَشْهَدُ |
| **மேலும் அவனது தூதர்** | | | **அவனது அடியார்** | | **முஹம்மது (ஸல்)** | **நிச்சயமாக** | **நான் சாட்சி சொல்கிறேன்** |
| هُ | رَسُوْلُ | وَ | هُ | عَبْد | مُحَمَّد – அதிகம் புகழப்பட்டவர் | | أَفْعَلُ என்ற விதத்தில், شهادة சாட்சி, شَهِيد கண்ணால் பார்த்தவன் |
| அவனது | தூதர் (வேதம் கொடுத்து அனுப்பப்பட்டவர்) | இன்னும் | அவனது | அடியார் | | | |
| **மொழிபெயர்ப்பு : முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவனது அடியாராகவும், மேலும் அவனது தூதராகவும் இருக்கிறார்கள் என சாட்சி சொல்கிறேன்** | | | | | | | |

முதல் இரண்டு வார்த்தைகளின் தெளிவுரை பாங்குடைய பாடத்தில் சென்றுவிட்டது. இங்கு عبد(அப்து) என்ற வார்த்தை அதிகப்படியாக உள்ளது. முன் சென்ற சமுதாயத்தினர் சில நல்லவர்களை அவர்களது மிகச்சிறந்த நற்செயல்களின் காரணமாக அவர்களை அல்லாஹ்வின் குமாரர் அல்லது அல்லாஹ்விற்கே நிகராக ஆக்கிவிட்டனர், அல்லாஹு த்தஆலா: முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது உண்மை நிலையை தெளிவுபடுத்தி. அவர்கள் அல்லாஹ்வின் அடியார்தான் என்பதன் மீது அனைத்து விசுவாசிகளையும் சாட்சி சொல்லவும் வைத்து, அல்லாஹ்வின் குமாரர் அல்லது அல்லாஹ்விற்கே நிகராகச் சொல்லி இணைவைக்கும் வாசலையே அடைத்து விட்டான்.

நம் அனைவரையும் மேலும் அதில் ஒவ்வொரு பொருளையும் அல்லாஹ்வே படைத்தான். எனவே நாம் அவனது உண்மையான அடியாராக இருக்க வேண்டும். முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவனது (அடியார்களில்) மிகச்சிறந்த அடியாராகவும் மேலும் நம் அனைவருக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாகவும் (இருந்தார்கள்) இருக்கிறார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| مِنَ الْمُتَطَهِّرِيْنَ | وَ اجْعَلْنِى | مِنَ التَّوَّابِيْنَ | اجْعَلْنِى | اللّٰهُمَّ |
| **தூய்மையானவர்களில் இருந்து** | **மேலும் என்னை ஆக்கிடுவாயாக** | **பாவமன்னிப்பு தேடுபவர்களிலிருந்து** | **என்னை ஆக்கிடுவாயாக!** | **அல்லாஹ்வே!** |
| مُتَطَهِّرٌ என்பதற்கு பன்மை – مُتَطَهِّرُوْنَ – مُتَطَهِّرِيْنَ(இதே போலவே) طَاهِر–طَهُور (இவை பிறந்தது) طَهارَة (என்ற வார்த்தையிலிருந்து) | | تَابَ : திரும்பி (திருந்தி) வந்தான் تَائِب திரும்பி (திருந்தி) வருபவன், تَوَّاب :திரும்பத்திரும்ப (திருந்தி) வருபவன் | نِى | اِجْعَل |
| | | | என்னை | ஆக்கு |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹ்வே! என்னை முழுமையாக பாவமன்னிப்புத் தேடுபவர்களிலிருந்து (ஒருவனாகவும்) என்னை ஆக்கிடுவாயாக! மேலும் பரிசுத்தமானவர்களிலிருந்து (ஒருவனாகவும்) என்னை ஆக்கிடுவாயாக!** | | | | |

- மனிதன் அடிக்கடி தவறுகள் செய்கிறான், செய்யக்கூடாத காரியத்தைச் செய்கிறான். அல்லது செய்யவேண்டிய காரியத்தைச் சரிவர செய்வதில்லை. எனவே அடிக்கடி பாவமன்னிப்புத் தேடுவது அத்தியாவசியமாகும்
- சுத்தம் என்பதன் கருத்து : ஆடை மற்றும் இடத்தின் சுத்தம், கொள்கை மற்றும் எண்ணங்களின் சுத்தம் மேலும் அனைத்து வித சுத்தத்திற்கும் பாக்கியமளிப்பானாக! ( என்பதாகும்)

**இலக்கணம் :**

21 வாக்கிய அமைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றை பயிற்சி செய்யுங்கள். அவற்றில் இறுதி இரு வாக்கிய அமைப்புகள் பெண்பால் ஆகும்.

كَفَرَ (ن) **நிராகரித்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **461** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| நிராகரிக்கிறான் / நிராகரிப்பான் | يَكْفُرُ | நிராகரித்தான் | كَفَرَ |
| நிராகரிக்கிறார்கள் / நிராகரிப்பார்கள் | يَكْفُرُونَ | நிராகரித்தார்கள் | كَفَرُوا |
| நிராகரிக்கிறாய் / நிராகரிப்பாய் | تَكْفُرُ | நிராகரித்தாய் | كَفَرْتَ |
| நிராகரிக்கிறீர்கள் / நிராகரிப்பீர்கள் | تَكْفُرُونَ | நிராகரித்தீர்கள் | كَفَرْتُمْ |
| நிராகரிக்கிறேன் / நிராகரிப்பேன் | أَكْفُرُ | நிராகரித்தேன் | كَفَرْتُ |
| நிராகரிக்கிறோம் / நிராகரிப்போம் | نَكْفُرُ | நிராகரித்தோம் | كَفَرْنَا |
| அவள் நிராகரிக்கிறாள்/ நிராகரிப்பாள் | هِيَ تَكْفُرُ | அவள் நிராகரித்தாள் | هِيَ كَفَرَتْ |
| இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் كَفَرَ – يَكْفرُ – أكَفُرْ என்பவைதான் முக்கியமானதாகும் | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى - Prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر - Imperative | |
| நிராகரிக்காதே | لاَ تَكْفُرْ | நிராகரி | أَكَفُرْ |
| நிராகரிக்காதீர்கள் | لاَ تَكْفُرُوْا | நிராகரியுங்கள் | أكَفُرُوا |
| நிராகரிப்பவன் : كَافِر | | | |
| நிராகரிக்கப்படுபவன் : مَكْفُوْر | | | |
| நிராகரித்தல் : كُفْر | | | |

دَخَلَ 78 (ن) **நுழைந்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **78** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضی | |
|---|---|---|---|
| நுழைகிறான் / நுழைவான் | يَدْخُلُ | நுழைந்தான் | دَخَلَ |
| நுழைகிறார்கள் / நுழைவார்கள் | يَدْخُلُونَ | நுழைந்தார்கள் | دَخَلُوا |
| நுழைகிறாய் / நுழைவாய் | تَدْخُلُ | நுழைந்தாய் | دَخَلْتَ |
| நுழைகிறீர்கள் / நுழைவீர்கள் | تَدْخُلُونَ | நுழைந்தீர்கள் | دَخَلْتُمْ |
| நுழைகிறேன் / நுழைவேன் | أَدْخُلُ | நுழைந்தேன் | دَخَلْتُ |
| நுழைகிறோம் / நுழைவோம் | نَدْخُلُ | நுழைந்தோம் | دَخَلْنَا |
| அவள் நுழைகிறாள்/ நுழைவாள் | هِيَ تَدْخُلُ | அவள் நுழைந்தாள் | هِيَ دَخَلَتْ |
| இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் دَخَلَ – يَدْخُلُ – أ دْخُلْ என்பவைதான் முக்கியமானதாகும் | | | |
| **கட்டளை-விலக்கல்** نَہِی - Prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمر - Imperative | |
| நுழையாதே | لاَ تَدْخُلْ | நுழை | أدْخُلْ |
| நுழையாதீர்கள் | لاَ تَدْخُلُوْا | நுழையுங்கள் | أدْخُلُوا |
| நுழைபவன் : دَاخِل | | | |
| நுழையப்படுபவன் : مَدخُول | | | |
| நுழைதல் : دُخُول | | | |

عَبَدَ ( ن ) **வணங்கினான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **143** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضی | |
|---|---|---|---|
| வணங்குகிறான் / வணங்குவான் | يَعْبُدُ | வணங்கினான் | عَبَدَ |
| வணங்குகிறார்கள் / வணங்குவார்கள் | يَعْبُدُونَ | வணங்கினார்கள் | عَبَدُوا |
| வணங்குகிறாய் / வணங்குவாய் | تَعْبُدُ | வணங்கினாய் | عَبَدْتَ |
| வணங்குகிறீர்கள் / வணங்குவீர்கள் | تَعْبُدُونَ | வணங்கினீர்கள் | عَبَدْتُمْ |
| வணங்குகிறேன் / வணங்குவேன் | أَعْبُدُ | வணங்கினேன் | عَبَدْتُ |
| வணங்குகிறோம் / வணங்குவோம் | نَعْبُدُ | வணங்கினோம் | عَبَدنَا |
| அவள் வணங்குகிறாள்/ வணங்குவாள் | هِيَ تَعْبُدُ | அவள் வணங்கினாள் | هِيَ عَبَدَتْ |
| இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் عَبَدَ – يَعْبُدُ – أُعْبُدْ என்பவைதான் முக்கியமானதாகும் | | | |
| **கட்டளை-விலக்கல்** نَہِی - Prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمر - Imperative | |
| வணங்காதே | لاَ تَعْبُدْ | வணங்கு | أُعْبُدْ |
| வணங்காதீர்கள் | لاَ تَعْبُدُوْا | வணங்குங்கள் | أُعْبُدُوا |
| வணங்குபவன் : عَابِد | | | |
| வணங்கப்படுபவன் : مَعْبُود | | | |
| வணங்குதல் : عِبَادَة | | | |

**பாடம் எண் : 14**

**பாங்கின் வார்த்தைகள் மற்றும் உளுவின் துஆ**

4 பரப்பு | கேள் 1

புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்

3 திட்டமிடு | மதிப்பிடு 2

**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| | |
|---|---|
| اَللّٰهُ أَكْبَرُ ۞ اَللّٰهُ أَكْبَرُ | اَللّٰهُ أَكْبَرُ ۞ اَللّٰهُ أَكْبَرُ |
| | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| اللّٰهُ | إِلاَّ | إِلٰهَ | لاَ | أَنْ | أَشْهَدُ |
| | | | | | |

| | | | |
|---|---|---|---|
| رَّسُولُ اللّٰهِ | مُحَمَّدًا | أَنَّ | أَشْهَدُ |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| الْفَلاَحِ ۞ | حَيَّ عَلَى | الصَّلٰوةِ ۞ | حَيَّ عَلَى |
| | | | |

| | |
|---|---|
| لاَ إِلٰهَ إِلاَّ اللّٰهُ | اَللّٰهُ أَكْبَرُ ۞ اَللّٰهُ أَكْبَرُ |
| | |

**உளு செய்தபின் ஓத வேண்டிய துஆ**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| اللّٰهُ | إِلاَّ | إِلٰـهَ | لاَّ | أَنْ | أَشْهَدُ |
| | | | | | |

| | | |
|---|---|---|
| لَهُ | لاَ شَرِيكَ | وَحْدَهُ |
| | | |

| | | | | |
|---|---|---|---|---|
| وَرَسُولُهُ | عَبْدُهُ | مُحَمَّدًا | أَنَّ | وَأَشْهَدُ |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| مِنَ الْمُتَطَهِّرِيْنَ | وَاجْعَلْنِي | مِنَ التَّوَّابِيْنَ | اجْعَلْنِي | اَللّٰهُمَّ |
| | | | | |

**வினா 2: ‘அல்லாஹு அக்பர்’ அல்லாஹ்தான் மிகப்பெரியவன் என்பதை நம் வாழ்வில் எவ்வாறு கொண்டுவருவது?**
**விடை :**

**வினா 3: சாட்சி சொல்லுதல் என்ற ஷஹாதத் என்பதின் கருத்து என்ன ?**
**விடை :**

**வினா 4: தொழுவதால் கிடைக்கும் இம்மை-மறுமையின் பயன்களைக் குறிப்பிடுங்கள்?**
**விடை :**

**வினா 5: உளூ செய்த பின் துஆ ஓதுவதின் சிறப்பு என்ன?**
**விடை :**

## 14 – வது பாடத்திற்கான வினாக்கள் - பாங்கின் வார்த்தைகள் மற்றும் உளுவின் துஆ

**வினா-1-** கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை كَفَرَ (461) ن அவன் நிராகரித்தான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்.

<table>
<tr><td colspan="2" rowspan="2">முக்கியமானவை<br>كَفَرَ، يَكْفُرُ، اُكْفُرْ</td><td>மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع</td><td>மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي</td></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><td>மொழிபெயர்ப்பு نَهْي</td><td>மொழிபெயர்ப்பு أمْر</td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
</table>

دَخَلَ 78 (ن) நுழைந்தான்

<table>
<tr><td colspan="2" rowspan="2">முக்கியமானவை<br>دَخَلَ، يَدْخُلُ، اُدْخُلْ</td><td>மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع</td><td>மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي</td></tr>
<tr><td></td><td></td></tr>
<tr><td>மொழிபெயர்ப்பு نَهْي</td><td>மொழிபெயர்ப்பு أمْر</td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2"></td><td></td><td></td></tr>
</table>

عَبَدَ[143] (ن) வணங்கினான்

| முக்கியமானவை<br>عَبَد، يَعْبُدُ، اُعْبُدْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| வினா 3 : தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | நாங்கள் உன்னையே வணங்குகிறோம் |
| | நீ நுழைந்தாய் மேலும் நான் நுழைந்தேன் |
| | நான் வணங்கினேன் மேலும் நிராகரிக்கவில்லை |
| | அவன் நிராகரித்தான் மேலும் வணங்கவில்லை |
| | நான் நுழைகிறேன் |

| வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | فَاعْبُدُوْهُ |
| | فَاعْبُدْهُ |
| | وَلَاتَكْفُرُوْا |
| | وَقَدْ كَفَرْتُمْ |
| | وَمَنْ كَفَرَ |

**பாடம் எண் : 15**
**ஸனா, ருகூவு, சஜ்தா**

**15 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 33812 முறை வரக்கூடிய 95 புதிய வார்த்தைகளை கற்பீர்கள்.**

1 கேள்
2 மதிப்பிடு
3 திட்டமிடு
4 பரப்பு
புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்

| اسْمُكَ | وَتَبَارَكَ | وَبِحَمْدِكَ | | | اللّٰهُمَّ | 41* سُبْحَانَكَ |
|---|---|---|---|---|---|---|
| **உன் பெயர்** | **மேலும் பாக்கியம் நிறைந்தது** | **மேலும் உனது புகழைக்கொண்டே** | | | **அல்லாஹ்வே!** | **நீ பரிசுத்தமானவன்** |
| اِسْم : பெயர் | بَارَكَ : அவன் அருள்செய்தான் تَبَارَكَ : அவன் அருளானான் | حَمْدِ كَ | بِ | وَ | | سُبْحَانَ الله : அல்லாஹ் பரிசுத்தமானவன் سُبْحَانَكَ : நீ பரிசுத்தமானவன் |
| | | உன் புகழ் | கொண்டு | மேலும் | | |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹ்வே நீ பரிசுத்தமானவன். புகழ்ச்சி என்பது உனக்கே உரியது, உன் பெயர் மிகவும் அருள் பாக்கியங்கள் நிறைந்தது.** | | | | | | |

- சுப்ஹானகல்லாஹு ம்ம (سُبْحَانَكَ اللّٰهُمَّ) **:** அல்லாஹ் பலவீனமானவன் இல்லை. அநீதியாளனும் இல்லை. அவனுக்கு யாருடைய உதவியும் தேவையில்லை, அவனில் எந்த குறையும் இல்லை. அவன் எனக்கு கொடுத்துள்ள வாழ்க்கையின் சோதனை எதுவாக இருந்தாலும், அது முற்றிலும் சரியே! (அது பற்றி) எனக்கு எவ்வித முறையீடும் இல்லை. (இது ஒரு நிலையான நேர்மறையான (positive attitude) நிலைப்பாட்டின் அடிப்படையாகும்)
- வ-பிஹம்திக்க (وَ بِحَمْدِكَ)**:** புகழ்ச்சி மற்றும் நன்றி செலுத்துதல் என்பது இஸ்லாமின் ஒரு முக்கிய அடிப்படையாகும், எதுவரை உண்மையான தஸ்பீஹ் (இறைவனால் விதிக்கப்பட்ட யாவும் சரியே என்பது) இல்லையோ அதுவரை உண்மையான புகழ்ச்சி மற்றும் நன்றி செலுத்துதல் என்பது ஏற்படாது.
  வெற்றிபெற்ற மனிதர்களின் இரகசியம் **:** (எதிலும்) ஒரு நேர்மறையான நிலைப்பாடும், நன்றி செலுத்துதலும்தான்.
- வதபாரகஸ்முக (وَ تَبَارَكَ اسْمُكَ) **:** வேலை நன்றாக இருக்கிறது என்று சொல்லுவதால் மட்டும் வேலை நன்றாக ஆகிவிடாது. ஆனால், அல்லாஹ்வின் பெயரைக்கொண்டு பணியைத் துவங்கும்போது அவனது உதவியும் அபிவிருத்தியும் கிடைத்துக் கொண்டே இருக்கும். அவனது பெயரைச் சொல்லக்கூடியவர்கள், மேலும் அவனது பணியைச் செய்பவர்கள் மறுமையில் என்றென்றும் அபிவிருத்தி (பாக்கியங்)களால் மகிழ்ச்சியோடு இருப்பார்கள்.

| غَيْرُكَ | | وَلَآاِلٰهَ | جَدُّكَ | | 23 وَ تَعَالَي | |
|---|---|---|---|---|---|---|
| **உன்னைத்தவிர** | **மேலும் எந்த வணங்கத் தகுதியுடையவனும் இல்லை** | | **உன் மகிமை** | | **மேலும் உயர்ந்தது** | |
| كَ | غَيرُ | | كَ | جَدّ | تَعَالَى | وَ |
| உன்னை | தவிர | | உன் | மகிமை | உயர்ந்தது | இன்னும் |
| | | லா இலாஹ: எந்த வணங்கத் தகுதியுடையவனும்-- இல்லை | ஜத் (جد) என்பதற்கு பாட்டன் என்ற பொருளும் உண்டு இதன் பன்மை : اَجْداد மூதாதையர்கள் | | தலைசிறந்த (காரியதரிசி) | |
| **மொழிபெயர்ப்பு : மேலும் உனது மகிமை மிக சிறந்தது. மேலும் உன்னைத்தவிர வேறு எந்த (உண்மையான) வணங்கத் தகுதியுடையவனும் இல்லை** | | | | | | |

- வ-தஆலா ஜத்துக ( وَ تَعَالَى جَدُّكَ )உனது மகிமை அல்லது பெருமை (majesty) அனைத்தையும் விட தலைசிறந்தது, உலகில் எவ்வளவு பலம் வாய்ந்த ஆட்சியாளராக இருக்கட்டும், (சக்கரவர்த்தி) அரசனாக இருக்கட்டும், உன் எதிரில் ஒன்றுமில்லை.
- வ-லா-இலாஹ கைருக ( وَلاَ اِلٰهَ غَيْرُكَ ) அவனது ஏகத்துவத்தின் உறுதிப்பாடு, இணையிலிருந்து முழுமையாக (வெறுத்து)ஒதுங்கிவிடுவதின் அறிவிப்பு, இல்லையெனில் வெற்றிபெறுவது கடினம் (போன்றவற்றின் சாரம்சம் இதில் உள்ளது ஏனெனில்) அல்லாஹு த்தஆலா இணைவைப்பதை அறவே மன்னிக்க மாட்டான், எனவே இணைவைப்பதின் அபாயத்தை சிந்தனையில் கொண்டவாறு இதைப் படிக்க வேண்டும்.

**ருகூவின் திக்ர்கள்**

| العَظِيْم [107] | رَبِّىَ | سُبْحَانَ |
|---|---|---|
| **மகா மேன்மைவாய்ந்தவன்** | **எனது ரப்** | **பரிசுத்தமானவன்** |
| கண்ணியம் மிக்கவன், பெருமை மிக்கவன், அவனை யாராலும் இயலாமையில் ஆக்க முடியாது | சரீரத்தின் சின்னஞ்சிறு பகுதிகளையும் வளர்ப்பவன் | அனைத்து குறை மற்றும் கெடுதியானவற்றை விட்டு |
| **மொழிபெயர்ப்பு : எனது ரப் மிக்க தூயவன். மேன்மை மிக்கவன்** | | |

இங்கு சொல்லப்பட்டுள்ள நான்கு விஷயங்கள் குறித்து கற்பனை மற்றும் உணர்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

- அல்லாஹ் தூய்மையானவன் (சுப்ஹானக என்பதன் விளக்கத்தை படிக்கவும்)
- அவன்தான் ரப்.., நம்மையும் நம்மை சுற்றியுள்ளதையும் அவனே கவனிக்கின்றான். அவனே பரிபாளிப்பவன், பாதுகாப்பவன் நம் தேவைகள் அனைத்தையும் வழங்குபவன். நம்மிள் உள்ள 1000 கணக்கான செல்களை கட்டுபடுத்துபவன் அவன் ஒருவனே.
- நீங்கள் உங்கள் இறைவனை நோக்கி என் ரப் என்று கூறுகின்றோம். நம் தாய் நம்மை நோக்கி என் மகன் அல்லது என் மகள் சிறந்தவள் என்று சொன்னாள் அதன் பொருள் என்ன? அது அவளின் அன்பையும் நேசத்தையும் காட்டுகின்றது. அதுபோல் நீங்கள் ருகூவில் தஸ்பீஹ் சொல்லுகையில் அன்போடு சொல்லுங்கள்.
- அவன் மகத்தானவன். عَظْم என்ற வார்த்தை அரபியில் எலும்புக்கு சொல்லப்படும். அது வலுவை குறிக்கின்றது. عَظِيم என்றால் எவன் வலுவானவன் சக்திவாய்ந்தவனுக்கு சொல்லப்படும். இதை நாம் நம்மை தாழ்த்தி குனிந்து கொண்டு சொல்கின்றோம்.

| حَمِدَهُ | مَنْ | لِ | سَمِعَ اللّٰهُ |
|---|---|---|---|
| **அவனைப் புகழ்ந்தான்** | **யார்** | **ஐ – க்காக, க்கு** | **அல்லாஹ் செவியேற்று விட்டான்** |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹு யார் அவனைப்புகழ்கின்றாரோ அதை செவிசாய்த்து விட்டான்** | | | |

- அல்லாஹ் யாவற்றையும் செவியுறுகிறான். எனினும் இங்கு புகழ்பவனின் புகழ்ச்சியை விஷேசமாக செவியுறுவதாக சொல்லப்பட்டுள்ளது. எனவே நாம் முழு ஆர்வத்தோடு அவனைப் புகழவேண்டும் (ஆகவே தான்) رَبَّنَا وَلَكَ الْحَمْدُ (என்கிறோம்)
- நமது புகழ்ச்சி என்பது அல்லாஹ்விற்கு ஒன்றும் தேவையில்லை, நாம் அவனைப்புகழ்வதால் அவனுக்கு எந்த பயனும் சென்றடைவதில்லை. புகழாமல் இருப்பதால் அவனுக்கு எந்த நஷ்டமும் ஏற்படப் போவதில்லை, அதன் முழுப்பயனும் நமக்கே கிடைக்கிறது.

| الْحَمْدُ | وَلَكَ | رَبَّنَا |
|---|---|---|
| அனைத்து புகழும் | மேலும் உனக்கே | எங்களுடைய ரப்பே |
| **மொழிபெயர்ப்பு : எங்களுடைய ரப்பே உனக்கே புகழனைத்தும்** | | |

حَمْدُ ஹம்து என்பதற்கு இரு பொருட்கள் உள்ளன 1) புகழுதல் 2) நன்றி செலுத்துதல் (அல்லாஹ்வே ! நீ மேன்மை மிக்கவன். சங்கை மிக்கவன். நிகரற்ற அருளாளன் போன்றவற்றை) முழு மனதோடும், ஆவலோடும், புகழ்வதற்கான ஈர்ப்போடும் அவனைப் புகழுங்கள், மேலும் رَبَّنَا وَ لَكَ الْحَمْدُ எனச் சொல்லுங்கள்.

**சஜ்தாவின் திக்ர்கள்**

| الْأَعْلَىٰ ۞ | رَ بِّيَ | سُبْحَانَ |
|---|---|---|
| மிக உயர்ந்தவன் | என் இறைவன் | மிக தூய்மையானவன் |
| (இந்த மிக பெரியவன்) الْأَكْبَر (மிகப் பெரியது) أَكْبَر (பெரியது) كَبِير<br>(இந்த மிக சிறியவன்) الْأَصْغَر (மிக சிறியது) أَصْغَر (சிறியது) صَغِير<br>(இந்த மிக உயர்ந்தவன்) الْأَعْلَى (மிக உயர்ந்தது) أَعْلَى (உயர்ந்தது) عَلِيّ | | |
| **பொருள்: மிக உயர்ந்தவனாகிய என் இறைவன் மிக தூயவன்** | | |

சஜ்தா செய்யும்போது அவனிடம் முழுமையாக ஒப்படைத்து விடுகிறோம் ,
(மேற்கூறப்பட்ட) நான்கு விஷயங்களை சிந்தித்தவராகவும், உணர்ந்தவராகவும் இதை ஓத வேண்டும் 1) அவனது தூய்மை, 2) அவனது வளர்ப்பாற்றல் 3) என்னையும் வளர்ப்பவன் என்ற சிந்தனை 4) அவனது உயர்வு

நாம் தரையில் இருக்கிறேன் அல்லாஹ்வோ (தன் அர்ஷ்) சிம்மாசனத்தின் மீது அனைவரையும்விட உயர்வான இடத்தில் இருக்கிறான், இதுவே (அனைத்து) அடியார்களின் உண்மை நிலையாகும். எனவேதான் அடியான் அல்லாஹ்வோடு சஜ்தாவில்தான் மிக நெருங்கிய நிலையில் இருக்கிறான்.

<u>سُبْحَانَ رَبِيَ ا لْأَعْلَى **வை தன் வாழ்வில் கொண்டு வாருங்கள்**</u>

**துஆ :**அல்லாஹ்வே : என் வாழ்வின் அனைத்து சோதனைகளையும் (திருப்தியோடு) ஏற்றுக் கொள்வதற்கும், (எனக்கு மட்டும் ஏன் இவ்வாறு நடக்கிறது என்பது போன்ற) எந்த முறையீடுகளும் என்னிடமிருந்து ஏற்படாமலிருக்கவும் எனக்கு உதவிடுவாயாக!

**சரிபார்த்தல் :** என் நிறம், முகஅழகு, குலம், கோத்திரம், காலநிலை மாற்றத்தின் மாறுதல்கள், தற்கால நிலைகள் போன்றவை பற்றி எத்தனை முறை முறையிடுகிறேன்? (முறையிட்டுள்ளேன் என உங்களை நீங்களே சரி காணுங்கள்).

**திட்டமிடுதல்:** அல்லாஹ் எது செய்தாலும் முழுமையாக அதனை சரியாகவே செய்கிறான் என்ற விஷயம் நமது சிந்தனையில் வந்து விடவேண்டும். தற்கால நமது மாறுகின்ற நிலைகள் யாவும் நம்மை சோதிப்பதற்காகவும் இன்னும் நம்மைப் போன்ற மனித தவறுகளுக்கான தண்டனையாகவுமே ஏற்படுகிறது

**பரப்புதல்:** அல்லாஹ் எல்லாவித குறைகளையும் விட்டும் தூய்மையானவன் என்ற செய்தியை அனைவருக்கும் எடுத்துரைத்து விட வேண்டும்.

**இலக்கணம் :** 21 வாக்கிய அமைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றை பயிற்சி செய்யுங்கள். அவற்றில் இறுதி இரு வாக்கிய அமைப்புகள் பெண்பால் ஆகும்.

ضَرَبَ (ض) **அவன் அடித்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **58** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضی | |
|---|---|---|---|
| அடிக்கிறான் / அடிப்பான் | يَضْرِبُ | அடித்தான் | ضَرَبَ |
| அடிக்கிறார்கள் / அடிப்பார்கள் | يَضْرِبُونَ | அடித்தார்கள் | ضَرَبُوا |
| அடிக்கிறாய் / அடிப்பாய் | تضْرِبُ | அடித்தாய் | ضَرَبْتَ |
| அடிக்கிறீர்கள் / அடிப்பீர்கள் | تَضْرِبُونَ | அடித்தீர்கள் | ضَرَبْتُم |
| அடிக்கிறேன் / அடிப்பேன் | أَضْرِبُ | அடித்தேன் | ضَرَبْتُ |
| அடிக்கிறோம் / அடிப்போம் | نَضْرِبُ | அடித்தோம் | ضَرَبْنَا |
| அவள் அடிக்கிறாள்/ அடிப்பாள் | هِيَ تضْرِبُ | அவள் அடித்தாள் | هِيَ ضَرَبَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** ضَرَبَ – يَضْرِبُ – اِضْرِبْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَہی-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمر-Imperative | |
| அடிக்காதே | لاَ تضْرِبْ | அடி | اِضْرِبْ |
| அடிக்காதீர்கள் | لاَ تضْرِبُوْا | அடியுங்கள் | أضْرِبُوا |
| அடிப்பவன் : ضَارِب | | | |
| அடிக்கப்படுபவன் : مَضْرُوب | | | |
| அடித்தல் : ضَرْب | | | |

ظَلَمَ **அவன் அநீதியிழைத்தான் (ض ) :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **266** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضی | |
|---|---|---|---|
| அநீதியிழைக்கிறான் / அநீதியிழைப்பான் | يَظْلِمُ | அநீதியிழைத்தான் | ظَلَمَ |
| அநீதியிழைக்கிறார்கள் / அநீதியிழைப்பார்கள் | يَظْلِمُونَ | அநீதியிழைத்தார்கள் | ظَلَمُوا |
| அநீதியிழைக்கிறாய் / அநீதியிழைப்பாய் | تَظْلِمُ | அநீதியிழைத்தாய் | ظَلَمْتَ |
| அநீதியிழைக்கிறீர்கள் / அநீதியிழைப்பீர்கள் | تَظْلِمُونَ | அநீதியிழைத்தீர்கள் | ظَلَمْتُم |
| அநீதியிழைக்கிறேன் / அநீதியிழைப்பேன் | أَظْلِمُ | அநீதியிழைத்தேன் | ظَلَمْتُ |
| அநீதியிழைக்கிறோம் / அநீதியிழைப்போம் | نَظْلِمُ | அநீதியிழைத்தோம் | ظَلَمْنَا |
| அநீதியிழைக்கிறாள்/ அநீதியிழைப்பாள் | هِيَ تَظْلِمُ | அநீதியிழைத்தாள் | هِيَ ظَلَمَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** ظَلَمَ – يَظْلِمُ – أ ظْلِمْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَہی-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمر-Imperative | |
| அநீதியிழைக்காதே | لاَ تَظْلِمْ | அநீதியிழை | اِظْلِمْ |
| அநீதி இழைக்காதீர்கள் | لاَ تَظْلِمُوا | அநீதியிழையுங்கள் | اِظْلِمُوا |
| அநீதியிழைப்பவன் : ظَالِم | | | |
| அநீதியிழைக்கப்படுபவன் : مَظْلُوم | | | |
| அநீதியிழைத்தல் : ظُلْم | | | |

صَبَرَ **அவர்கள் பொறுமை செய்தார்கள் (ض)** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **53** முறைகள் வருகின்றன


| நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல் فعل مضارع | | கடந்தகால வினைச்சொல் فعل ماضى | |
|---|---|---|---|
| பொறுமை செய்கிறான் / செய்வான் | يَصْبِرُ | பொறுமை செய்தான் | صَبَرَ |
| பொறுமை செய்கிறார்கள் / செய்வார்கள் | يَصْبِرُونَ | பொறுமை செய்தார்கள் | صَبَرُوا |
| பொறுமை செய்கிறாய் / செய்வாய் | تَصْبِرُ | பொறுமை செய்தாய் | صَبَرْتَ |
| பொறுமை செய்கிறீர்கள் / செய்வீர்கள் | تَصْبِرُونَ | பொறுமை செய்தீர்கள் | صَبَرْتُم |
| பொறுமை செய்கிறேன் / செய்வேன் | أَصْبِرُ | பொறுமை செய்தேன் | صَبَرْتُ |
| பொறுமை செய்கிறோம் / செய்வோம் | نَصْبِرُ | பொறுமை செய்தோம் | صَبَرْنا |
| அவள் பொறுமை செய்கிறாள்/ செய்வாள் | هِيَ تَصْبِرُ | அவள் பொறுமை செய்தாள் | هِيَ صَبَرَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** صَبَرَ – يَصْبِرُ – أَصْبِرْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| பொறுமை செய்யாதே | لاَ تَصْبِرْ | பொறுமை செய் | اِصْبِرْ |
| பொறுமை செய்யாதீர்கள் | لاَ تَصْبِرُوا | பொறுமை செய்யுங்கள் | أَصْبِرُوا |
| பொறுமை செய்பவன் : صَابِر | | | |
| பொறுமை செய்யப்படுபவன் :<br>இந்த வினைச்சொல்லின் செயப்படுப்பொருள் (مفعول) வராது. | | | |
| பொறுமை செய்தல் : صَبر | | | |

غَفَرَ 95 (ض) **மன்னித்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **95** முறைகள் வருகின்றன

| நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல் فعل مضارع | | கடந்தகால வினைச்சொல் فعل ماضى | |
|---|---|---|---|
| மன்னிக்கிறான் / மன்னிப்பான் | يَغْفِرُ | மன்னித்தான் | غَفَرَ |
| மன்னிக்கிறார்கள் / மன்னிப்பார்கள் | يَغْفِرُونَ | மன்னித்தார்கள் | غَفَرُوا |
| மன்னிக்கிறாய் / மன்னிப்பாய் | تغْفِرُ | மன்னித்தாய் | غَفَرْتَ |
| மன்னிக்கிறீர்கள் / மன்னிப்பீர்கள் | تَغْفِرُونَ | மன்னித்தீர்கள் | غَفَرْتُم |
| மன்னிக்கிறேன் / மன்னிப்பேன் | أَغْفِرُ | மன்னித்தேன் | غَفَرْتُ |
| மன்னிக்கிறோம் / மன்னிப்போம் | نَغْفِرُ | மன்னித்தோம் | غَفَرْنا |
| அவள் மன்னிக்கிறாள் / மன்னிப்பாள் | هِيَ تغْفِرُ | அவள் மன்னித்தாள் | هِيَ غَفَرَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** غَفَرَ – يَغْفِرُ – أَغْفِرْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| மன்னிக்காதே | لاَ تغْفِرْ | மன்னி | أَغْفِرْ |
| மன்னிக்காதீர்கள் | لاَ تغْفِرُوْا | மன்னியுங்கள் | أَغْفِرُوا |
| மன்னிப்பவன் : غَافِر | | | |
| மன்னிக்கப்படுபவன் : مَغْفُوْر | | | |
| மன்னித்தல் : مَغْفِرَة | | | |

இப்பாடத்தில் ضَرَبَ – يَضْرِبُ என்ற விதத்தில் நான்கு வினைச் சொற்களும் சொல்லப்பட்டுள்ளது இந்த நான்கு உதாரணங்களை ஒரே வார்த்தையில், கீழ்காணும் முறையில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

- ஒருவன் மற்றொருவனை வேண்டுமென்றே அடித்தான் (ضَرَبَ) என்றால் (ظَلَمَ ) அவன் அநீதியிழைத்து விட்டான்
- எவரின் மீது அநீதி ஏற்பட்டதோ, அவர் பலவீனமானவர் என்பதால் அமைதி காத்து (பொறுமையாக) அமர்ந்து விட்டார் (صَبَرَ )
- அநீதியிழைத்தவன் அதாவது அடித்தவன், மன்னிப்புக் கோர நாடி அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேட்டான் அல்லாஹ் அவனை மன்னித்து விட்டான் (غَفَرَ)



| பாடம் எண் : 15<br>ஸனா, ருகூவு மற்றும் சஜ்தா |
|---|

| பரப்பு (4) | கேள் (1) |
|---|---|
| புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | |
| திட்டமிடு (3) | மதிப்பிடு (2) |

**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

********************ஸனா********************

| اسْمُكَ | وَتَبَارَكَ | وَبِحَمْدِكَ | اللّٰهُمَّ | سُبْحَانَكَ |
|---|---|---|---|---|
| | | | | |

| غَيْرُكَ | وَلاَ إِلـهَ | جَدُّكَ | وَتَعَالَى |
|---|---|---|---|
| | | | |

***** ***** *****ருகூவு***** ***** *****

| الْعَظِيْم | رَ بِّيَ | سُبْحَانَ |
|---|---|---|
| | | |

***** ***** *****சஜ்தா ***** ***** *****

| الْأَعْلَىٰ | رَ بِّيَ | سُبْحَانَ |
|---|---|---|
| | | |

**வினா 2: அல்லாஹ்வின் பெயர் அருள்வளம் நிறைந்தது என்பதின் கருத்து என்ன ?**
**விடை :**

**வினா 3: ருகூவில் எத்தகைய விஷயங்களை அல்லாஹ்விடம் சொல்கிறோம் ?**
**விடை :**

**வினா 4: சஜ்தாவில் எத்தகைய விஷயங்களை அல்லாஹ்விடம் சொல்கிறோம் ?**
**விடை :**

**வினா 5: சுப்ஹான என்பதின் கருத்து என்ன ?**
**விடை :**

## 15 – வது பாடத்திற்கான வினாக்கள் - ஸனா, ருகூவு மற்றும் சஜ்தா

வினா-1- கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை ضَرَبَ (58) ض அவன் அடித்தான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்.

ضَرَبَ[58] **அடித்தான்** ضَرَبَ مَثَلاً: உதாரணம் கொடுத்தான்

| முக்கியமானவை ضَرَبَ، يَضْرِبُ، اِضْرِبْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

ظَلَمَ[266] (ض) **அவன் அநீதியிழைத்தான்**

| முக்கியமானவை ظَلَمَ، يَظْلِمُ، اِظْلِمْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

صَبَرَ[53] (ض) **அவன் பொறுமையாக இருந்தான்**

| முக்கியமானவை<br>صَبَرَ، يَصْبِرُ، اِصْبِرْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

غَفَرَ[95] (ض) **அவன் மன்னித்தான்**

| முக்கியமானவை<br>غَفَرَ، يَغْفِرُ، اِغْفِرْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| வினா 3 : தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | அநீதியிழைக்காதீர்கள் |
| | அவன் அடித்தான் எனவே அநீதியிழைத்து விட்டான் |
| | நீங்கள் அனைவரும் பொறுமையோடு இருங்கள் |
| | அவர்கள் அநீதியிழைத்தார்கள் |
| | பொறுமையோடு இரு |

| வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | فَاضْرِبُوْا |
| | صَبَرْتُمْ |
| | فَغَفَرْنَا |
| | وَمَاظَلَمْنَاهُمْ |
| | وَمَاظَلَمُوْنَا |

| பாடம் எண் : 16<br>தஷஹ்ஹு த்<br>(அத் தஹிய்யாத் ஓதுதல்) |
|---|

16 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 35199 முறை வரக்கூடிய 103 புதிய வார்த்தைகளை கற்பீர்கள்.

| | |
|---|---|
| 4 பரப்பு | கேள் 1 |
| புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் | |
| 3 திட்டமிடு | மதிப்பிடு 2 |

| وَالطَّيِّبَاتُ 46 | وَالصَّلَوَاتُ | لِلّٰهِ | | اَلتَّحِيَّاتُ |
|---|---|---|---|---|
| பொருளாதார வணக்கங்கள் | மேலும் சரீர வணக்கங்கள் | அல்லாஹ்விற்கே (உரியது) | | நாவின் வணக்கங்கள் |
| طَيِّبَة (பொருளால் செய்யும் வணக்கங்கள்) என்பதின் பன்மையாகும் | صَلَوة (சரீர ரீதியான வணக்கங்கள்) என்பதின் பன்மையாகும் | الله | لِ | تَحِيَّةٌ (நாவின் வணக்கங்கள்) என்பதின் பன்மையாகும் |
| | | அல்லாஹ் | க்காக | |
| **மொழிபெயர்ப்பு : நாவு, உடல் மற்றும் பொருள் ரீதியிலான அனைத்து வணக்கங்களும் அல்லாஹ்வுக்கே உரியது.** | | | | |

- புகாரி-முஸ்லிமின் ஹதீஸில் வருகிறது : ஒரு முறை நபி ஸல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னார்கள்: 70 ஆயிரம் மனிதர்கள் எவ்விதக் கேள்வி கணக்கின்றி சுவர்க்கத்தில் நுழைவார்கள் மேலும் சொன்னார்கள் ''அவர்கள் பிறரைக்கொண்டும் ஓதிப்பார்த்திருக்கமாட்டார்கள், மேலும் சகுனம் பார்க்கவும் மாட்டார்கள், தன் ரப்பின் மீது மட்டுமே நம்பிக்கை வைப்பார்கள்'', இதைக்கேட்டவுடனே உகாஷா பின் மிஹ்ஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து நின்று, ''இறைத்தூதர் அவர்களே! நானும் அவர்களில் ஒருவனாக இருக்க பிரார்த்தனை செய்வீராக'' என சொன்னார்கள் அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ''ஆம்! நீயும் அவர்களில் ஒருவரே'' என்றார்கள். சற்று பின்னர் மற்றொரு நபித்தோழர் எழுந்து நின்று, ''நானும் அவர்களில் ஒருவனாக பிரார்த்தனை செய்வீராக'' என்றார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (**سَبَقَكَ عُكَاشَة** - அதில்) ''உகாஷா உம்மை முந்திவிட்டார்'' என்றார்கள்.

- இந்நபிமொழியிலிருந்து ஒரு விஷயத்தை கற்றுக்கொள்ள முடிகிறது. நல்ல விஷயத்தை கேட்டவுடனேயே ''இறைவா! எனக்கும் இதற்கு உதவிடுவாயாக!'' என உடனே துஆ செய்துவிட வேண்டும் இல்லையெனில் பிறர் முந்திக்கொள்வார்கள்.

- அல்லாஹ்வே! எனக்கும் நாவு சரீர ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான இம்மூன்று விஷயங்களிலும் பங்கேற்க வழிவகுப்பாயாக!

- சரிபார்த்தல் : எனது நாவன்மையின் நிலை என்ன? சக்திகள் (குறிப்பாக மூளையின் சக்தி) எங்கே செலவாகிக்கொண்டிருக்கிறது? பணம் (செல்வம்) எங்கு செலவாகிக்கொண்டிருக்கிறது?

<table>
<tr><th colspan="2">وَبَرَكَاتُه</th><th colspan="2">ورَحْمَتُ اللهِ</th><th>[75] اَيُّهَا النَّبِيُّ</th><th colspan="2">عَلَيْكَ</th><th>[42] اَلسَّلَامُ</th></tr>
<tr><td colspan="2">மேலும் அவனது பாக்கியங்கள்</td><td colspan="2">மேலும் அல்லாஹ்வின் அருள்</td><td>நபியவர்களே!</td><td colspan="2">உங்கள் மீது</td><td>அமைதி உண்டாகட்டும்</td></tr>
<tr><td colspan="2">بَرَكَةٌ என்பதற்கான பன்மை بَرَكَاتُ (பரக்காத்)</td><td>اللهِ</td><td>رَحْمَتُ</td><td rowspan="3">யா, அய்யுஹா, யா-அய்யுஹா அனைத்தும் ஓ! என்ற அழைப்பொலி ஆகும்</td><td colspan="2">நபியவர்கள் மீது</td><td>السَّلامُ عَلَيْكُمْ (உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்) என்பது போல</td></tr>
<tr><td>هُ</td><td>بَرَكَاتُ</td><td rowspan="2">அல்லாஹ்</td><td rowspan="2">அருள்</td><td>كَ</td><td>عَلَى</td><td rowspan="2"></td></tr>
<tr><td>அவனது</td><td>பாக்கியங்கள்</td><td>உங்கள்</td><td>மீது</td></tr>
<tr><td colspan="8">மொழிபெயர்ப்பு : நபியவர்களே! உங்கள் மீது அமைதியும், அல்லாஹ்வின் அருளும், அவனது பல பாக்கியங்களும் ஏற்படட்டும்</td></tr>
</table>

முன்னால் சொல்லப்பட்ட (நாவுரைக்கின்ற, சரீர ரீதியான மற்றும் பொருளாதார ரீதியான) மூன்று விஷயங்களையும் மிகச் சிறந்த முறையில் செய்து முடித்து நமக்கும் கற்பித்த (நபிய)வர்களுக்கு எவ்விதத்தில் என்ன நம்மால் செய்யமுடியும்? (அதன் நன்றிக்கடனாகத்தான்) அவர்களது ஆத்மாவுக்கு அமைதி, அருள், பாக்கியங்கள் (ஆகிய மூன்றும்) ஏற்படட்டும்.

<table>
<tr><th>[140] الصَّالِحِينَ</th><th>عِبَادِ اللهِ</th><th colspan="2">وَعَلَى</th><th colspan="2">عَلَيْنَا</th><th>[42] السَّلَامُ</th></tr>
<tr><td>நல்லவர்கள்</td><td>அல்லாஹ்வின் அடியார்கள்</td><td colspan="2">மேலும் மீது</td><td colspan="2">நம் மீது</td><td>அமைதி உண்டாகட்டும்</td></tr>
<tr><td rowspan="2">صَالِحٌ என்பதற்கு பன்மை صَالِحِينَ- صَالِحُوْنَ</td><td rowspan="2">عَبْد (الله) அடியான் என்பதற்கு பன்மை عِبَادٌ அடியார்கள், عَابِدٌ என்பதின் பன்மை عَابِدُوْنَ- عَابِدِيْنَ</td><td>عَلَى</td><td>وَ</td><td>نَا</td><td>عَلَى</td><td rowspan="2">السُّلامُ عَلَيكُم (உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்) என்பது போல</td></tr>
<tr><td>மீது</td><td>மேலும்</td><td>நம்</td><td>மீது</td></tr>
<tr><td colspan="7">மொழிபெயர்ப்பு : நம்மீதும், அல்லாஹ்வின் நல்லடியார்களின் மீதும் அமைதி ஏற்படட்டும்</td></tr>
</table>

- அல்லாஹ்வின் அருட்கொடைகள் யார் மீது? நபிமார்கள், ஸித்தீகீன்கள், அல்லாஹ்விற்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள், நல்லவர்கள் மீது. இங்கு முதலில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது, பின்னர் நம்மீது மற்றும் நல்லவர்கள் மீது.

- (நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மற்றும் நல்லவர்கள்) இருவருடைய விஷயத்தில் இன்ஷா அல்லாஹ் துஆ ஏற்றுக் கொள்ளப்படும், நடுவில் (عَلَيْنَا) நம்மீது என உள்ளது, முன்னுள்ள மற்றும் பின்னுள்ள இரண்டும் ஏற்கப்படும் போது அல்லாஹ்வின் அருளால் நடுவில் உள்ளதும் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நம்பிக்கை உள்ளது . ஞாபகம் இருக்கட்டும் : ஸாலிஹீன் (நல்லவர்கள்) செய்தது போல நற்செயல்கள் மூலம் அல்லாஹ்வின் அருளை பெற்றுக் கொள்ள யார் முயற்சிப்பார்களோ, அவர்களுக்குத்தான் (அவனது அருள்) கிடைக்கும்.

- இதில் நமக்கு ஒரு செய்தியும் உள்ளது. துஆ செய்வதோடு நல்லவர்களாகவும் முழு முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் குர்ஆனில் அருள் பெற்றவர்களில் நான்கு பிரிவினரில் முதலில் நபிமார்களைப் பற்றியும் இறுதியாக நல்லவர்களைப் பற்றியும் சொல்லப்பட்டுள்ளது.

| اللّٰهُ | اِلاَّ | اِلٰهَ | لآ | أَنْ | أَشْهَدُ |
|---|---|---|---|---|---|
| **அல்லாஹ்** | **தவிர** | **வணக்கத் திற்குரிவன்** | **இல்லை** | **நிச்சயமாக** | **நான் சாட்சி சொல்கிறேன்** |
| | | | مَا- இல்லை, என்ன, எது<br>لا இல்லை, لَمْ இல்லை<br>لَنْ இருக்கவே இருக்காது | اَنْ– اَنَّ<br>நிச்சயமாக<br>اَنْ அதாவது | أَفْعَلُ என்ற<br>விதத்தில், شَهادَة<br>சாட்சி, شَهِيد<br>கண்ணால்<br>பார்த்தவன் |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாரும் இல்லை என்று சாட்சி சொல்கிறேன்.** | | | | | |

**பாங்கின் பாடத்தில் இதன் தெளிவுரை சொல்லப்பட்டுவிட்டது**

| وَرَسُوْلُهُ | | | عبْدُهُ | | مُحمّداً | اَنّ | وَأَشْهَدُ |
|---|---|---|---|---|---|---|---|
| **மேலும் அவனது தூதர்** | | | **அவனது அடியார்** | | **முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்** | **நிச்சயமாக** | **மேலும் நான் சாட்சி சொல்கிறேன்** |
| هُ | رَسُوْل | وَ | هُ | عَبْد | مُحَمّد – அதிகம் புகழப்பட்டவர் | اَنْ –<br>அதாவது –<br>நிச்சயமாக<br>اَنّ<br>நிச்சயமாக | |
| அவனது | தூதர் (வேதம் கொடுத்து அனுப்பப்ப ட்டவர்) | இன்னும் | அவனது | அடியார் | | | |
| **மொழிபெயர்ப்பு : மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவனது அடியாராகவும், மேலும் அவனது தூதராகவும் இருக்கிறார்கள் என சாட்சி சொல்கிறேன்.** | | | | | | | |

முதல் இரண்டு வார்த்தைகளின் தெளிவுரை பாங்குடைய பாடத்தில் சென்றுவிட்டது, இங்கு عَبْدُ(அப்து) என்ற வார்த்தை அதிகப்படியாக உள்ளது. நம் அனைவரையும் மற்றும் உலகில் உள்ள ஒவ்வொன்றையும் அல்லாஹ்தான் படைத்துள்ளான் எனவே நாம் அவனது உண்மையான அடியாராக இருக்க வேண்டும். நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தான் தலைசிறந்த அடியாராக இருக்கிறார்கள் மேலும் நமக்கு (தலைசிறந்த) முன்மாதிரியாகவும் இருக்கிறார்கள்.

**இலக்கணம் :** கீழே கொடுக்கப்பட்ட 21 முக்கிய வாக்கிய அமைப்புகளை பயிற்சி செய்யுங்கள்.

سَمِعَ ( س ) **செவியுற்றான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **100** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| செவியுறுகிறான் / செவியுறுவான் | يَسْمَعُ | செவியுற்றான் | سَمِعَ |
| செவியுறுகிறார்கள் / செவியுறுவார்கள் | يَسْمَعُونَ | செவியுற்றார்கள் | سَمِعُوا |
| செவியுறுகிறாய் / செவியுறுவாய் | تَسْمَعُ | செவியுற்றாய் | سَمِعْتَ |
| செவியுறுகிறீர்கள் / செவியுறுவீர்கள் | تَسْمَعُونَ | செவியுற்றீர்கள் | سَمِعْتُم |
| செவியுறுகிறேன் / செவியுறுவேன் | أَسْمَعُ | செவியுற்றேன் | سَمِعْتُ |
| செவியுறுகிறோம் / செவியுறுவோம் | نَسْمَعُ | செவியுற்றோம் | سَمِعْنا |
| அவள் செவியுறுகிறாள்/ செவியுறுவாள் | هِيَ تَسْمَعُ | அவள் செவியுற்றாள் | هِيَ سَمِعَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** سَمِعَ – يَسْمَعُ – أ سْمَعْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| செவியுறாதே | لاَ تَسْمَعْ | செவியுறு | اِسْمَعْ |
| செவியுறாதீர்கள் | لاَ تَسْمَعُوا | செவியுறுங்கள் | اِسْمَعُوا |
| செவியுறுபவன் : سَامِع | | | |
| செவியுறப்படுபவன் / செவியுறப்படக்கூடியவன் : مَسْمُوع | | | |
| செவியுறுதல் : سَمْع | | | |

عَلِمَ ( س ) **அறிந்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **518** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| அறிகிறான் / அறிவான் | يَعْلَمُ | அறிந்தான் | عَلِمَ |
| அறிகிறார்கள் / அறிவார்கள் | يَعْلَمُونَ | அறிந்தார்கள் | عَلِمُوا |
| அறிகிறாய் / அறிவாய் | تَعْلَمُ | அறிந்தாய் | عَلِمْتَ |
| அறிகிறீர்கள் / அறிவீர்கள் | تَعلَمُونَ | அறிந்தீர்கள் | عَلِمْتُم |
| அறிகிறேன் / அறிவேன் | أَعْلَمُ | அறிந்தேன் | عَلِمْتُ |
| அறிகிறோம் / அறிவோம் | نَعْلَمُ | அறிந்தோம் | عَلِمْنا |
| அவள் அறிகிறாள்/ அறிவாள் | هِيَ تَعْلَمُ | அவள் அறிந்தாள் | هِيَ عَلِمَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** عَلِمَ – يَعْلَمُ – أ عْلَمْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| அறிந்து கொள்ளாதே | لاَ تَعْلَمْ | அறிந்து கொள் | اِعْلَمْ |
| அறிந்து கொள்ளாதீர்கள் | لاَ تَعْلَمُوا | அறிந்து கொள்ளுங்கள் | اِعْلَمُوا |
| அறிந்தவன் : عَالِم | | | |
| அறிந்து கொள்ளப்படுபவன் : مَعْلُوم | | | |
| அறிந்து கொள்ளுதல் : عِلْم | | | |

عَمِلَ (س) **செயல் பட்டான்:** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **318** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضی | |
|---|---|---|---|
| செயல்படுகிறான் / செயல்படுவான் | يَعمَلُ | செயல் பட்டான் | عَمِلَ |
| செயல்படுகிறார்கள் / செயல்படுவார்கள் | يَعمَلُونَ | செயல் பட்டார்கள் | عَمِلَوا |
| செயல்படுகிறாய் / செயல்படுவாய் | تَعمَلُ | செயல் பட்டாய் | عَمِلْتَ |
| செயல்படுகிறீர்கள் / செயல்படுவீர்கள் | تَعمَلُونَ | செயல் பட்டீர்கள் | عَمِلْتُم |
| செயல்படுகிறேன் / செயல்படுவேன் | أَعمَلُ | செயல் பட்டேன் | عَمِلْتُ |
| செயல்படுகிறோம் / செயல்படுவோம் | نَعمَلُ | செயல் பட்டோம் | عَمِلْنا |
| அவள் செயல்படுகிறாள்/ செயல்படுவாள் | هِيَ تَعمَلُ | அவள் செயல் பட்டாள் | هِيَ عَمِلَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** عَمِلَ – يَعمَلُ – اِ عمَلْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَہی-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| செயல்படாதே | لاَ تَعمَلْ | செயல்படு | اِ عمَلْ |
| செயல்படாதீர்கள் | لاَ تَعمَلُوا | செயல்படுங்கள் | اِعمَلُوا |
| செயல்படுபவன் : عَامِل | | | |
| செயல்படுத்தப்படுபவன் : معْمُوْل | | | |
| செயல்படுதல் : عَمَل | | | |

رَحِمَ ( س ) **அன்பு காட்டினான்:** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **148** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضی | |
|---|---|---|---|
| அன்பு காட்டுகிறான் / அன்பு காட்டுவான் | يَرْحَمُ | அன்பு காட்டினான் | رَحِمَ |
| அன்பு காட்டுகிறார்கள் / அன்பு காட்டுவார்கள் | يَرْحَمُونَ | அன்பு காட்டினார்கள் | رَحِمُوا |
| அன்பு காட்டுகிறாய் / அன்பு காட்டுவாய் | تَرْحَمُ | அன்பு காட்டினாய் | رَحِمْتَ |
| அன்பு காட்டுகிறீர்கள் / அன்பு காட்டுவீர்கள் | تَرْحَمُونَ | அன்பு காட்டினீர்கள் | رَحِمْتُم |
| அன்பு காட்டுகிறேன் / அன்பு காட்டுவேன் | أَرْحَمُ | அன்பு காட்டினேன் | رَحِمْتُ |
| அன்பு காட்டுகிறோம் / அன்பு காட்டுவோம் | نَرْحَمُ | அன்பு காட்டினோம் | رَحِمْنَا |
| அவள் அன்பு காட்டுகிறாள் / அன்பு காட்டுவாள் | هِيَ تَرْحَمُ | அவள் அன்பு காட்டினாள் | هِيَ رَحِمَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** رَحِمَ – يَرْحَمُ – اِ رْحَمْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَہی-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| அன்பு காட்டாதே | لاَ تَرْحَمْ | அன்பு காட்டு | اِ رْحَمْ |
| அன்பு காட்டாதீர்கள் | لاَ ترْحَمُوا | அன்பு காட்டுங்கள் | اِ رْحَمُوا |
| அன்பு காட்டுபவன் : رَاحِم | | | |
| அன்பு காட்டப்படுபவன் : مرْحُوْم | | | |
| அன்பு காட்டுதல் : رَحْم | | | |

**பாடம் எண் : 16**

**தஷஹ்ஹு த்**

**(அத்தஹிய்யாத் ஓதுதல்)**

4 பரப்பு | கேள் 1

புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்

3 திட்டமிடு | மதிப்பிடு 2

**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| وَالطَّيِّبَاتُ | وَالصَّلَوَاتُ | لِلّٰهِ | اَلتَّحِيَّاتُ |
|---|---|---|---|
| | | | |

| وَبَرَكَاتُه، | وَرَحْمَتُ اللهِ | أَيُّهَاالنَّبِيُّ | عَلَيْكَ | اَلسَّلاَمُ |
|---|---|---|---|---|
| | | | | |

| الصَّالِحِيْنَ | عِبَادِ اللهِ | وَعَلَىٰ | عَلَيْنَا | اَلسَّلاَمُ |
|---|---|---|---|---|
| | | | | |

| إِلاَّ اللهُ | لاَّ إِلٰهَ | أَنْ | أَشْهَدُ |
|---|---|---|---|
| | | | |

| وَرَسُولُه‘ | عَبْدُه‘ | مُحَمَّدًا | وَأَشْهَدُ أَنَّ |
|---|---|---|---|
| | | | |

**வினா 2: அன்போடு ஸலவாத்து ஓதும்போது என்னென்ன விஷயங்களை நினைவில் வைக்க வேண்டும் ?**

**விடை :**

**வினா 3: இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது அல்லாஹ் (விஷேசமாக) செய்த அருட்கொடை என்ன ?**

**விடை :**

**வினா 4: (ஆல்) آل என்பதன் கருத்து என்ன?**

**விடை :**

**வினா 5: அருள் புரியட்டும் என்பதன் கருத்து என்ன ?**

**விடை :**

## 16 – வது பாடத்திற்கான வினாக்கள் - தஷஹ்ஹு த் (அத்தஹிய்யாத் ஓதுதல்)

வினா-1- கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை سَمِعَ (100)س அவன் செவியுற்றான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்.

سَمِعَ 100 (س) அவன் செவியுற்றான்

| முக்கியமானவை<br>سَمِعَ يَسْمَعُ، اِسْمَعْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

عَلِمَ 518 (س) அறிந்தான்

| முக்கியமானவை<br>عَلِمَ ، يَعْلَمُ، اِعْلَمْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

عَمِلَ 318 (س) அவன் செயல்பட்டான்

| முக்கியமானவை<br>عَمِلَ ، يَعْمَلُ، اِعْمَلْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

رَحِمَ 148 (س) அன்பு காட்டினான்

| முக்கியமானவை<br>رَحِمَ ، يَرْحَمُ، اِرْحَمْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| வினா 3 : தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | செவியுற்றேன் எனவே அறிந்து கொண்டேன் |
| | அறிந்து கொண்டேன் எனவே செயல் பட்டேன் |
| | எனவே நீங்கள் அனைவரும் செவியுறுங்கள் |
| | நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ளுங்கள் மேலும் செயல் படுங்கள் |
| | நீங்கள் அனைவரும் அன்பு காட்டுங்கள்! |

| வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | سَمِعْتُمْ |
| | سَتَعْلَمُوْنَ |
| | يَعْلَمُهُمْ |
| | يَسْمَعُوْنَكُمْ |
| | تَسْمَعُوْنَهُمْ |

| பாடம் எண் : 17<br>தரூத் (நபியவர்கள் மீது (துஆ) ஸலவாத் ஓதுதல் | 17 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 35656 முறை வரக்கூடிய 110 புதிய வார்த்தைகளை கற்பீர்கள். | 4 பரப்பு / கேள் 1 / புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர் / 3 திட்டமிடு / மதிப்பிடு 2 |
|---|---|---|

அறிமுகம் : ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது துஆ செய்யும் போது, அவர்களின் தியாகங்களை நினைவு கூறுங்கள், இன்று நபியவர்களின் மறைவுக்குப் பின்னர் சுமார் 1400 ஆண்டுகள் கடந்த பின்னரும், அவர்களது இருப்பிடத்தை விட்டு பல ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைதூரத்தில் இருந்தும், நாம் இஸ்லாமியர்களாக இருக்கிறோம் என்றால் அல்லாஹ்வின் அருளுக்குப்பின்னர் நபியவர்களின் தியாகங்களின் பலனே!

நாள்முழுதும் சோர்வடைந்திருந்தும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஏதோ ஒரு கோத்திரத்திற்கு இஸ்லாமிய அழைப்பு கொடுத்திருந்தார்கள். அக்கோத்திரத்தினர் மற்றவர்களுக்கு கொடுத்த (இஸ்லாமிய) அழைப்பு என் வரை வந்து சேர்ந்திருக்கலாம் (எனவே நான் முஸ்லிமாக இருக்கிறேன்) என்ற விதத்தில் சிந்தித்தவாறு ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் செய்த ஒவ்வொரு தியாகமும் என்மீது உபகாரமாக இருக்கிறது என்பதையும் உணருங்கள்.

இப்பொழுது அவைகளுக்கு பதிலாக நம்மால் அவர்களுக்காக என்ன செய்ய முடியும்? அவர்களை விருந்துக்கு அழைக்க முடியுமா அல்லது ஏதாவது அன்பளிப்புகள் அனுப்ப முடியுமா? ஒன்றும் செய்ய முடியாது. அவர்களுக்காக துஆ (ஸலவாத்து) மட்டும் தான் செய்ய முடியும். நாம் துஆ செய்தாலும் செய்யாவிட்டாலும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு நன்மையின் பலன்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும், நாம் அவர்களுக்கு துஆ செய்வதால் உண்மையில் நமக்குத்தான் கண்ணியம் கிடைக்கிறது. இது மட்டுமல்ல துஆ செய்வதால், அதற்கான கூலி கிடைக்கிறது.

| مُحَمّدٍ | وَ علَى آلِ | عَلَى مُحَمّدٍ | صَلِّ | اَللّٰهُمَّ |
|---|---|---|---|---|
| **முஹம்மது** صلى الله عليه وسلّم | **மேலும் கிளையினர் மீது**<br>آل- ஆல் என்றால் அவர்களது பிள்ளைகள், மனைவிமார்கள், அவர்களை பின்பற்றி வந்தவர்கள், அவர்களின் வழி நடந்தவர்கள் | **முஹம்மது** صلى الله عليه وسلّم **அவர்கள் மீது** | **அருள் புரிவாயாக!**<br>صلّ لِ தொழு<br>صَلِّ عَلى அருள் புரி | **அல்லாஹ்வே!** |

**மொழிபெயர்ப்பு : அல்லாஹ்வே! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும், மேலும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது கிளையினர்கள் மீதும் அருள் புரிவாயாக!**

துஆ செய்யுங்கள் : அல்லாஹ்வே! நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது அருள்மழை பொழிவாயாக! அன்புகாட்டுவாயாக! அவர்களது புகழையும், பதவிகளையும் உயர்த்துவாயாக!

உனது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எங்கள் மீது கணக்கற்ற உபகாரங்கள் செய்துள்ளார்கள், அவர்களுக்கு பரிகாரம் செய்வது இப்பொழுது எங்களால் இயலாது. எனவே நீயே என்னென்ன பரிகாரங்களை வழங்கமுடியுமோ அவர்களுக்கு வழங்கிடுவாயாக!

| اِبْرَاهِيم [70] | وَ عَلَى آلِ [26] | عَلَى اِبْرَاهِيْمَ | صلّيْت | كَما [59] |
| --- | --- | --- | --- | --- |
| | **மேலும் கிளையினர் மீது** | | **அருள் புரிந்தாய்** | **போல** |
| **இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள்** | آل- என்றால் அவர்களது பிள்ளைகள், மனைவிமார்கள், அவர்களை பின் பற்றி வந்தவர்கள், அவர்களின் வழி நடந்தவர்கள் | **இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மீது** | صلّيْتَ لِ தொழுதான் صَلّيْتَ عَلَى அருள் புரிந்தான் | مَا \| كَ \| போல |
| **மொழிபெயர்ப்பு : இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மீதும் மேலும் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது கிளையினர்கள் மீதும் நீ அருள் புரிந்தது போல** | | | | |

இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ் தலைசிறந்த தலைமைத்துவத்தைக் கொடுத்துள்ளான். உலகின் அனைத்து முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் என அனைவர்களும் இறைத்தூதராக அவர்களை ஏற்கிறார்கள் எனவே அல்லாஹ்வே! இந்த பூமியில் வாழுகின்ற அதிகபட்ச மனிதர்களாலும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நபித்துவத்தையும் ஏற்றுக்கொள்ள வைப்பாயாக!

| مَجِيدٌ | حَمِيْدٌ [17] | اِنّكَ |
| --- | --- | --- |
| **கண்ணியமிக்கவன்** | **புகழுக்குத்தகுதியுடையவன்** | **நிச்சயமாக நீ** |
| யாருடைய கம்பீரம், கண்ணியம், மகத்துவம் முழுமையான நிலையை அடைந்து விட்டதோ அவனுக்கு சொல்லப்படும் | حَمْد புகழ், حَمِيْد (ஹமீது) புகழத்தகுதி படைத்தவன் | اِنَّ – நிச்சயமாக, كَ – நீ |
| **மொழிபெயர்ப்பு : நிச்சயமாக நீ புகழத்தகுதியுடையவனாகவும், கண்ணியமிக்கவனாகவும் இருக்கிறாய்** | | |

மிகப் புகழத்தகுந்த தூதரை நீ அனுப்பியிருப்பது உனது மிகச்சிறந்த உபகாரமாகும். எனவே நீ மஜீத் (கம்பீரம், கண்ணியம், மகத்துவம் அனைத்திலும் முழுமையான நிலையை உடையவன்- ீநசகநஉவழைை) ஆக இருக்கிறாய்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீது ஸலவாத் சொல்லும்போது அவர்களின் தியாகங்களை நினைவு கூறுங்கள். மேலும் அவர்கள் குர்ஆனின் ஆசிரியராக ஆக்கப்பட்டு அனுப்பப்பட்டார்கள் என்பதையும் நினைவுக்கு கொண்டுவாருங்கள். மேலும் துஆ செய்வீராக! அல்லாஹ்வே! என்னையும் அவர்களின் மாணவனாக்கி குர்ஆனைக் கற்க உதவிபுரிவாயாக! மேலும் குர்ஆனையும் நபிமொழியையும் படிப்பதில் நான் எவ்வளவு நேரம் செலவிடுகிறேன்? அல்லது நான் (busy) ஓய்வற்ற நிலையில் இருக்கிறேன் என சொல்லிக்கொண்டிருக்கேனா? என தன்னைத்தானே சரிபாருங்கள். பின்னர் திட்டமிடுங்கள். ஒரு தனிப்பட்ட நேரத்தில் குர்ஆனையும் நபிமொழியையும் படிக்க ஒரு வகுப்பைத் துவங்குங்கள். முடிந்த அளவு இப்(பயிற்சி) போதனையை உலகின் அனைத்து மனிதர்களுக்கும் கொண்டுபோய்ச் சேர்க்க முயற்சி செய்யுங்கள்.

| مُحَمّدٍ | وَ علَى آلِ | عَلَى مُحَمّدٍ | بَارِكْ | اَللّٰهُمّ |
|---|---|---|---|---|
| **முஹம்மது** صلى الله عليه وسلّم | **மேலும் கிளையினர் மீது** آل- என்றால் அவர்களது பிள்ளைகள், மனைவிமார்கள், அவர்களை தொடர்ந்தவர்கள், அவர்களின் வழி நடந்தவர்கள் | **முஹம்மது** صلى الله عليه وسلّم **அவர்கள் மீது** | **பாக்கியங்கள் புரிவாயாக!** عِيْدْ مُبَارَكْ (ஈத் முபாரக்) பாக்கியங்கள் நிறைந்த பெருநாள் | **அல்லாஹ்வே!** |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹ்வே! முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும், மேலும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது கிளையினர்கள் மீதும் பாக்கியங்கள் புரிவாயாக!** | | | | |

- உனது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எங்கள் மீது கணக்கற்ற உபகாரங்கள் செய்துள்ளார்கள். அவர்களுக்கு பரிகாரம் செய்வது இப்பொழுது எங்களால் இயலாது எனவே நாங்கள் சொல்கிறோம் அல்லாஹ்வே! நீயே என்னென்ன பரிகாரங்களை வழங்கமுடியுமோ அதனை அவர்களுக்கு வழங்கிடுவாயாக! (நபியவர்கள் மீது) ஸலவாத் சொல்கிற முதல் பகுதியிலே ஸலாத் என்ற வார்த்தையே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது ( اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ) இதிலேயே பரகத் என்பதும் அடங்கும். எனினும் துஆக்களில் பல்வேறு வார்த்தைகள் மற்றும் வாக்கியங்களை திரும்பத்திரும்ப எடுத்துரைக்கவே பிரத்தியேகமாக ஸலாத் என்ற வார்த்தையைக்கொண்டு பிரார்த்தித்த பின் பரகத் என்ற வார்த்தையைக் கொண்டு துஆ செய்யப்பட்டுள்ளது.
- நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தியாகங்களை நினைவுப்படுத்தி மனதை ஒர் நிலைப் படுத்தி அவர்களின் நற்பாக்கியங்களுக்காக துஆ செய்யவும்.
- பரக்கத்தின் கருத்து : சிறந்த சேவை, நல்லவை, அருட்கொடைகள் வழங்கப்பட்டிருத்தல், அதுவும் தொடர்ந்திருத்தல், மேலும் அதிலே தொடர்ந்து அதிகரிப்பும், முன்னேற்றங்களும் ஏற்படுதல் போன்றவை,
- செயல்களில் பரக்கத் என்பதன் கருத்து : அது ஏற்கப்படுதல், அவற்றிற்கான சிறந்த பரிகாரம் கிடைத்தல்.
- பிள்ளைகளில் பரகத் என்பதன் பொருள் : குழந்தைகள் பல சந்ததியினர் வரை தொடர்ந்தும், பரந்தும், அதிகரிப்போடும் இருத்தல்.
- நபியவர்களின் மீது பரக்கத் என்பதன் கருத்து : நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பிள்ளை(சந்ததியினர்)களில் அபிவிருத்தி, அவர்களின் வழிநடப்பவர்களில் அதிகரிப்பு ஏற்படுதல்

<table>
<tr><th>اِبْرَاهِيْمَ</th><th>وَ علَى آلِ</th><th>عَلَى اِبْرَاهِيْمَ</th><th>بَارَكْتَ</th><th colspan="3">كَمَا</th></tr>
<tr><td rowspan="2">இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள்</td><td rowspan="2">மேலும் கிளையினர் மீது<br>آل- என்றால் அவர்களது பிள்ளைகள், மனைவிமார்கள், அன்பு கொண்டு அவர்களை பின்தொடர்ந்தவர்கள், அவர்களின் வழி நடந்தவர்கள்</td><td rowspan="2">இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மீது</td><td rowspan="2">பாக்கியங்கள் புரிந்தாய்</td><td colspan="3">போல</td></tr>
<tr><td>مَا</td><td>كَ</td><td>போல</td></tr>
<tr><td colspan="7">மொழிபெயர்ப்பு : இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மீதும் மேலும் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது கிளையினர்கள் மீதும் நீ பாக்கியங்கள் புரிந்தது போல.</td></tr>
</table>

இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ் தலைசிறந்த தலைமைத்துவத்தைக் கொடுத்துள்ளான். உலகின் அனைத்து முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், யூதர்கள் என அனைவர்களும் இறைத்தூதராக அவர்களை ஏற்கிறார்கள். எனவே அல்லாஹ்வே! இந்த பூமியில் வாழுகின்ற அதிகபட்ச மனிதர்களாலும் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நபித்துவத்தையும் ஏற்றுக்கொள்ள வைப்பாயாக!

| مَجِيدٌ | حَمِيدٌ | اِنّكَ |
|---|---|---|
| **கண்ணியமிக்கவன்** | **புகழத்தகுதியுடையவன்** | **நிச்சயமாக நீ** |
| யாருடைய கம்பீரம், கண்ணியம், மகத்துவம் முழுமையான நிலையை அடைந்து விட்டது என அவனுக்கு சொல்லப்படும் | حَمْد புகழ், حَمِيْد (ஹமீது) புகழத்தகுதி படைத்தவன் | اِنَّ – நிச்சயமாக , كَ – நீ |
| **மொழிபெயர்ப்பு : நிச்சயமாக நீ புகழத்தகுதியுடையவனாகவும், கண்ணியமிக்கவனாகவும் இருக்கிறாய்** | | |

மிகப் புகழத்தகுந்த தூதரை நீ அனுப்பியிருப்பது உனது மிகச்சிறந்த உபகாரமாகும், எனவே நீ மஜீத் (கம்பீரம், கண்ணியம், மகத்துவம் அனைத்திலும் முழுமையான நிலையை உடையவன்- perfection) ஆக இருக்கிறாய்

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்காக துஆ செய்யும்போது, ''என்னிடமிருந்து ஒரு வசனமாயினும் சரி எடுத்துரைத்துவிடுங்கள் என ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சொன்னார்கள்'' போன்ற அவர்களின் உபதேசங்களையும் நினைவுக்கு கொண்டு வாருங்கள்.

நாமே(இந்த குர்ஆனை) புரிந்து கொள்ளாத போது பிறருக்கு நாம் எவ்வாறு (புரியவைக்க) பரப்பபோகிறோம்? எனவே விரைவில் விளங்கிக் கொள்ள திட்டமிடுங்கள் அதாவது இப்பயிற்சியை நிறைவு செய்யுங்கள். ஓர் உதாரணத்தை கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள் பாலைவனத்தில் மரணிக்கும் அளவுக்கு (பட்டினியால்) சிக்கி தவிக்கும்போது ஒரு மனிதர் வந்து ஓரளவு (உண்ண) உணவும், (குடிக்க) குடிநீரும் வழங்கி, (தன் தேவைகளை நிறைவு செய்வதோடு) இதை உங்களைப் போன்று பட்டினியாலும், தாகத்தாலும் சாகக்கிடப்பவர்களுக்கும் கொண்டு செல்லுங்கள் என மேலும் அறிவுறுத்துகிறார் இவ்வாறு நீங்கள் அறிவுறுத்தப்பட்டுக்கொண்டேயிருந்தும் நீங்கள் (அந்த சாகக்கிடப்பவர்களுக்கு அவற்றைக் கொண்டு) செல்லவில்லையெனில் (அல்லாஹ் உங்கள் மீது அன்பு காட்டட்டும்- அல்லாஹ் உங்கள் மீது அருள்புரியட்டும்) இது எவ்வளவு பெரிய தவறு? இந்த உதாரணத்தை بَلِّغُوا عَنِّى وَلَوْ آيَةً என்ற நபியவர்களின் போதனையோடு ஒப்பிட்டு, தனக்கும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கும் மத்தியில் ஒரு தொடர்பை ஏற்படுத்துங்கள்.

இத்துடனே உள்ளத்தில் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அன்பையும் கட்டுப்படுதலையும் அதிகரிக்க முயற்சி செய்யுங்கள். அதாவது அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைப் படித்து அவர்களின் வழிகாட்டுதலின் படி செயல்படுங்கள்.

## <u>இலக்கணம் :</u>

கீழே கொடுக்கப்பட்ட 21 முக்கிய வாக்கியமைப்புகளை பயிற்சி செய்யுங்கள், கடைசி இரண்டு வாக்கிய அமைப்புகள் பெண்பால் ஒருமையைக் குறிப்பதாகும், அடிப்படை வார்த்தை அதே **فَعَلَ** என்பதுதான், வேறுபாடு ஜபர் - ஜேர் - பேஷ் மட்டும்தான், ஞாபகம் இருக்கட்டும். இந்த (கீழே கொடுக்கப்படுகின்ற) பாடம் **يَضْرِبُ–ضَرَبَ** என்ற மாதிரியோடு வருகின்ற வினைச் சொற்களாகும்.

**وَعَدَ ( ض ) அவன் வாக்குறுதியளித்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **107** முறைகள் வருகின்றன.

(கீழே வருகின்ற நான்கு வினைச்சொற்களிலும் அதன் முதல் எழுத்து (**حَرْفُ عِلَّةٍ**- weak letters) பலவீன எழுத்தாகும். அதாவது ا – ي – و இம்மூன்று எழுத்துக்களில் ஒன்று வந்தால் அவற்றிற்கு Weak letters எனப்படும்)

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضي | |
|---|---|---|---|
| வாக்குறுதியளிக்கிறான் / வாக்குறுதியளிப்பான் | يَعِدُ | வாக்குறுதியளித்தான் | وَعَدَ |
| வாக்குறுதியளிக்கிறார்கள் / வாக்குறுதியளிப்பார்கள் | يَعِدُونَ | வாக்குறுதியளித்தார்கள் | وَعَدُوا |
| வாக்குறுதியளிக்கிறாய் / வாக்குறுதியளிப்பாய் | تَعِدُ | வாக்குறுதியளித்தாய் | وَعَدْتَ |
| வாக்குறுதியளிக்கிறீர்கள் / வாக்குறுதியளிப்பீர்கள் | تَعِدُونَ | வாக்குறுதியளித்தீர்கள் | وَعَدْتُم |
| வாக்குறுதியளிக்கிறேன் / வாக்குறுதியளிப்பேன் | أَعِدُ | வாக்குறுதியளித்தேன் | وَعَدْتُ |
| வாக்குறுதியளிக்கிறோம் / வாக்குறுதியளிப்போம் | نَعِدُ | வாக்குறுதியளித்தோம் | وَعَدْنَا |
| அவள் வாக்குறுதியளிக்கிறாள்/ வாக்குறுதியளிப்பாள் | هِيَ تَعِدُ | அவள் வாக்குறுதியளித்தாள் | هِيَ وَعَدَتْ |

| | | | |
|---|---|---|---|
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் عِدْ – يَعِدُ – وَعَدَ என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَہی -prohibitive | | **கட்டளை-ஏவல்** أمر-Imperative | |
| வாக்குறுதியளிக்காதே | لاَ تَعِدْ | வாக்குறுதியளி | عِدْ |
| வாக்குறுதியளிக்காதீர்கள் | لاَ تعِدُوا | வாக்குறுதியளியுங்கள் | عِدُوا |
| வாக்குறுதியளிப்பவன் : وَاعِد | | | |
| வாக்குறுதியளிக்கப் படுபவன் : مَوْعُود | | | |
| வாக்குறுதியளித்தல் : وَعْد | | | |

وَجَدَ (ض) **பெற்றுக் கொண்டான்:** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **107** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| பெற்றுக் கொள்கிறான் / பெற்றுக் கொள்வான் | يَجِدُ | பெற்றுக் கொண்டான் | وَجَدَ |
| பெற்றுக் கொள்கிறார்கள் / பெற்றுக் கொள்வார்கள் | يجِدُونَ | பெற்றுக் கொண்டார்கள் | وَجَدُوا |
| பெற்றுக் கொள்கிறாய் / பெற்றுக் கொள்வாய் | تَجِدُ | பெற்றுக் கொண்டாய் | وَجَدْتَ |
| பெற்றுக் கொள்கிறீர்கள் / பெற்றுக் கொள்வீர்கள் | تَجِدُونَ | பெற்றுக் கொண்டீர்கள் | وَجَدْتُم |
| பெற்றுக் கொள்கிறேன் / பெற்றுக் கொள்வேன் | أَجِدُ | பெற்றுக் கொண்டேன் | وَجَدْتُ |
| பெற்றுக் கொள்கிறோம் / பெற்றுக் கொள்வோம் | نَجِدُ | பெற்றுக் கொண்டோம் | وَجَدْنَا |
| அவள் பெற்றுக் கொள்கிறாள்/ பெற்றுக் கொள்வாள் | هِىَ تَجِدُ | அவள் பெற்றுக் கொண்டாள் | هِىَ وَجَدَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** وَجَدَ – يَجِدُ – جِدْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| (நீ) பெற்றுக் கொள்ளாதே | لاَ تَجِدْ | (நீ) பெற்றுக் கொள் | جِدْ |
| பெற்றுக் கொள்ளாதீர்கள் | لاَ تَجِدُوا | பெற்றுக் கொள்ளுங்கள் | جِدَوا |
| பெற்றுக் கொள்பவன் : وَاجِد | | | |
| பெற்றுக் கொள்ளப்படுபவன் : مَوْجُود | | | |
| பெற்றுக் கொள்ளுதல் : وُجُوْد | | | |

وَلَدَ (ض) **(குழந்தை) பெற்றெடுத்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **54** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| பெற்றெடுக்கிறான் / பெற்றெடுப்பான் | يَلِدُ | பெற்றெடுத்தான் | وَلَدَ |
| பெற்றெடுக்கிறார்கள் / பெற்றெடுப்பார்கள் | يَلِدُونَ | பெற்றெடுத்தார்கள் | وَلَدُوا |
| பெற்றெடுக்கிறாய் / பெற்றெடுப்பாய் | تَلِدُ | பெற்றெடுத்தாய் | وَلَدْتَ |
| பெற்றெடுக்கிறீர்கள் / பெற்றெடுப்பீர்கள் | تَلِدُونَ | பெற்றெடுத்தீர்கள் | وَلَدْتُم |
| பெற்றெடுக்கிறேன் / பெற்றெடுப்பேன் | أَلِدُ | பெற்றெடுத்தேன் | وَلَدْتُ |
| பெற்றெடுக்கிறோம் / பெற்றெடுப்போம் | نَلِدُ | பெற்றெடுத்தோம் | وَلَدْنَا |
| அவள் பெற்றெடுக்கிறாள் / பெற்றெடுப்பாள் | هِىَ تَلِدُ | அவள் பெற்றெடுத்தாள் | هِىَ وَلَدَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில்** وَلَدَ – يَلِدُ – لِدْ **என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| பெற்றெடுக்காதே | لاَ تَلِدْ | பெற்றெடு | لِدْ |
| பெற்றெடுக்காதீர்கள் | لاَ تَلِدُوا | பெற்றெடுங்கள் | لِدُوا |
| பெற்றெடுப்பவன் : وَالِد | | | |
| பெற்றெடுக்கப்படுபவன் : مَوْلُوْد | | | |
| பெற்றெடுத்தல் : وِلاَدَة | | | |

**பாடம் எண் : 17**

**தருத் (ஸலவாத் ஓதுதல்)**




**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| مُحَمَّدٍ | وَّعَلٰى اٰلِ | عَلٰى مُحَمَّدٍ | صَلِّ | اَللّٰهُمَّ |
|---|---|---|---|---|
| | | | | |

| إِبْرَاهِيْمَ | وَعَلٰى اٰلِ | عَلٰى إِبْرَاهِيْمَ | صَلَّيْتَ | كَمَا |
|---|---|---|---|---|
| | | | | |

| مَّجِيْدٌ | حَمِيْدٌ | إِنَّكَ |
|---|---|---|
| | | |

| مُحَمَّدٍ | وَّعَلٰى اٰلِ | عَلٰى مُحَمَّدٍ | بَارِكْ | اَللّٰهُمَّ |
|---|---|---|---|---|
| | | | | |

| إِبْرَاهِيْمَ | وَعَلٰى اٰلِ | عَلٰى إِبْرَاهِيْمَ | بَارَكْتَ | كَمَا |
|---|---|---|---|---|
| | | | | |

| مَّجِيْدٌ | حَمِيْدٌ | إِنَّكَ |
|---|---|---|
| | | |

**வினா 2: பரக்கத் என்பதின் கருத்து என்ன ?**
**விடை :**

**வினா 3: செய(அம)ல் களில் பரக்கத் எவ்வாறு ஏற்படுகிறது ?**
**விடை :**

**வினா 4: பிள்ளைகளில் பரக்கத் எவ்வாறு ஏற்படுகிறது ?**
**விடை :**

**வினா 5: ஸலவாத்தின் இறுதியில் ஹமீது என அல்லாஹ்வை சொல்லப்பட்டுள்ளது அதைப்பற்றி நாம் விளங்கிக்கொண்டது எவ்வாறு ?**
**விடை**

## 17 – வது பாடத்திற்கான வினாக்கள் - ஸலவாத் ஓதுதல்

வினா-1- கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை وَعَدَ (107) ض ( و )அவன் வாக்குறுதியளித்தான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தை களைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்.

وَعَدَ 107 (و) அவன் வாக்குறுதியளித்தான்

| முக்கியமானவை<br>وَعَدَ ، يَعِدُ، عِدْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

وَجَدَ 107 (و) அவன் பெற்றுக்கொண்டான்

| முக்கியமானவை<br>وَجَدَ، يَجِدُ، جِدْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

وَلَدَ[54] (و) பெற்றெடுத்தான்

| முக்கியமானவை<br>وَلَدَ، يَلِدُ، لِدْ | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| வினா 3 : தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | அவனை நான் பெற்றுக்கொண்டேன் |
| | அவன் என்னை பெற்றுக்கொண்டான் |
| | உங்களை அவன் பெற்றுக்கொள்வான் |
| | அவர்கள் அவனிடம் வாக்குறுதியளித்தனர் |
| | அவர்களை நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள் |

| வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | وَعَدَكُمُ اللهُ |
| | وَعَدَتَّهُ |
| | وَعَدَكَ |
| | لَمْ يَلِدْ |
| | وَعَدْتُّكُمْ |

**பாடம் எண் : 18**
**தஹிய்யாத்துக்குப்பின் ஓத வேண்டியது**

**18 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 38122 முறை வரக்கூடிய 117 புதிய வார்த்தைகளை கற்பீர்கள்.**




தொழுகை முடிந்தவுடன் பாவமன்னிப்பு கேளுங்கள், தொழுதபின் நேர்வழியின் மீது நிலைத்திருக்க உறுதியான எண்ணம் கொள்ளுங்கள். ஒரு தொழுகையிலிருந்து மறு தொழுகை வரை (என்ன செய்வதென்று) திட்டமிட்டு வாழ்க்கையைக் கழித்துக் கொண்டேயிருங்கள், அடுத்த தொழுகையில் திரும்பவும் வரும்போது (அல்லாஹ்விடம்)இந்த துஆவை கேட்பீர்கள் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தனது உம்மத்திலே மிகச் சிறந்த மனிதரான (தன் தோழர்) அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு இதனைக் கற்பித்தார்கள், இந்த செய்தியைக் கவனித்தபின் எந்த அளவு துடிப்போடு நாம் துஆ செய்யவேண்டும் என சிந்தியுங்கள்.

| ظُلْماً كَثِيْرًا 74 | نَفْسِى 293 | ظَلَمْتُ | اِنِّىْ | اَللّٰهُمَّ |
|---|---|---|---|---|
| **அதிக அநீதி** | **என் ஆத்மாவுக்கு** | **அநீதியிழைத்துக் கொண்டேன்** | **நிச்சயமாக நான்** | **அல்லாஹ்வே!** |
| كَثِيْرٌ அதிகமாக | نَفْسٌ இதன் பன்மை نُفُوْسٌ | இது فَعَلْتُ என்ற முறையில் வருகிறது | | |
| **மொழிபெயர்ப்பு : அல்லாஹ்வே! நிச்சயமாக நான் என் ஆத்மாவுக்கு அதிக அளவு அநீதியிழைத்துக் கொண்டேன்.** | | | | |

- அல்லாஹ்வே! அநீதியிழைத்தது நான் தான். உன் புறத்திலிருந்து எந்த குறைபாடுகளும் இல்லை,
- உனது சட்டங்களில் எந்த கூடுதல்களும் இல்லை.
- எனது பாவங்களுக்கு நான்தான் முழு பொறுப்பாளி, உனது உபகாரங்கள் மற்றும் அருட்கொடைகள் இருந்தும் நான் அநீதியிழைத்துக் கொண்டேன்.

| اَنْتَ | اِلاَّ | الذُّنُوْبَ 37 | وَلاَيَغْفِرُ |
|---|---|---|---|
| **நீ** | **தவிர** | **பாவங்களை** | **இன்னும் மன்னிக்க மாட்டான்** |
| | | ذَنْبٌ ஒருமை அதன் பன்மை ذُنُوْبٌ | يَغْفِرُ மன்னிப்பான் لاَ இல்லை |
| **மொழிபெயர்ப்பு : உன்னைத்தவிர (யாரும்)பாவங்களை மன்னிக்க மாட்டார். (முடியாது)** | | | |

இப்பொழுது எந்த இடைத்தரகர்(பரிந்துரையாளர்)களாலும் எந்த வேலையும் நடக்கப் போவதில்லை, யாராலும் எந்த உதவிகளும் செய்ய முடியாது, என் பாவங்களை நீ மட்டுமே மன்னிக்க முடியும்.

| وَارْحَمْنِى | | | مَغْفِرَةً مِنْ عِنْدِكَ | | | فَاغْفِرْ لِىْ | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மேலும் என் மீது அன்பு காட்டு** | | | **உன்னிடம் இருக்கிற** (சிறப்பான) **மன்னிப்பால்** | | | **எனவே என்னை மன்னிப்பாயாக!** | | |
| نِىْ | ارْحَمْ | وَ | عِنْدِكَ | مِنْ | مَغْفِرَةً | لِىْ | اِغْفِرْ | فَ |
| எனக்கு | அன்பு காட்டு | மேலும் | உன்னிடம் | யிருந்து | மன்னிப்பு | எனக்கு | மன்னிப்பாயாக! | எனவே |
| **மொழிபெயர்ப்பு : எனவே உன்னிடம் உள்ள சிறப்பான மன்னிப்பால் என்னை மன்னிப்பாயாக! மேலும் என் மீது அன்பு காட்டுவாயாக!** | | | | | | | | |

- **غفر** என்றால் மறைப்பது , பாவத்தை மறைப்பது.
- இவ்வுலகில் நேரிய பாதையில் நடக்க உன் அருள் எங்களுக்கு தேவை.
- நாளை மறுமையில் சுவனத்தில் நுழைவதற்கு உன் அருள் எங்களுக்கு தேவை. நீ என் பாவத்தை மறைத்த பிறகும் என்னால் சுவனத்தில் நுழையமுடியாது உன்னுடைய கருணை இல்லாமல். இல்லையெனில் நான் நஷ்டவாளி ஆகிவிடுவேன்.

| الرَّحِيم | الغَفُورُ [91] | | اِنّكَ اَنْتَ |
|---|---|---|---|
| **நிகரற்ற அன்புடையோன்** | **மிகவும் மன்னிப்பவன்** | | **நிச்சயமாக நீயே** |
| الرَّحِيْم- தொடர்ந்து அன்பு காட்டுபவன் | اِسْتِغْفَار : பாவமன்னிப்பு கோருதல்<br>غَفُورُ: மன்னிப்பாளன் | اَنْتَ நீ | اِنَّكَ<br>நிச்சயமாக நீ |
| **மொழிபெயர்ப்பு : நிச்சயமாக நீயே மன்னிப்பவன். அளவிலா அன்பு காட்டுபவன்** | | | |

பாவங்கள் இருந்தும் நீ உடனே என்னை தண்டிக்காமல் (விட்டு) இருக்கிறாய் எனவே நீ அளவில்லா அன்பு காட்டுபவன்.

## இலக்கணம் :

(இதில்) قَامَ –قَالَ – عِنْدَ போன்றவற்றை பயிற்சி செய்யுங்கள்

(இந்த இரண்டு வினைச்சொற்களிலும் அதன் இரண்டாவது எழுத்து ( حرف علت- weak letters) பலவீன எழுத்தாகும் அதாவது و– ي – ا இம்மூன்று எழுத்துக்களில் ஒன்று வந்தால் அவற்றிற்கு Weak letters எனப்படும்)

| | | |
|---|---|---|
| عِنْدَهُ | அவனிடத்தில் | இதற்கு மேலேயுள்ள பாடத்தில் عِنْدَ என்ற வார்த்தை வந்துள்ளது. இதன் பொருளை மனதில் வைக்க வழமையில் உள்ள : كَمْ رِيالٍ عِنْدَكَ (கம் ரியால் இன்தக்) உன்னிடம் எத்தனை ரியால் இருக்கிறது போன்ற உதாரணங்கள் இருக்கிறது, இவற்றை TPI மூலம் இங்கு வலப்புறம் கொடுக்கப்பட்டுள்ள ஏழு வார்த்தைகளையும் பயிற்சி செய்யுங்கள் |
| عِنْدَهُمْ | அவர்களிடத்தில் | |
| عِنْدَكَ | உன்னிடத்தில் | |
| عِنْدَكُمْ | உங்களிடத்தில் | |
| عِنْدِي | என்னிடத்தில் | |
| عِنْدَنَا | எங்களிடத்தில் | |
| عِنْدَهَا | அவளிடத்தில் | |

قَالَ (ق) **அவன் சொன்னான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **1719** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| சொல்கிறான் / சொல்வான் | يَقُوْلُ | சொன்னான் | قَالَ |
| சொல்கிறார்கள் / சொல்வார்கள் | يَقُوْلُونَ | சொன்னார்கள் | قَالُوا |
| சொல்கிறாய் / சொல்வாய் | تقُوْلُ | சொன்னாய் | قُلْتَ |
| சொல்கிறீர்கள் / சொல்வீர்கள் | تقُوْلُونَ | சொன்னீர்கள் | قُلْتُم |
| சொல்கிறேன் / சொல்வேன் | أَقُوْلُ | சொன்னேன் | قُلْتُ |
| சொல்கிறோம் / சொல்வோம் | نَقُوْلُ | சொன்னோம் | قُلْنا |
| அவள் சொல்கிறாள்/ சொல்வாள் | هِيَ تَقُوْلُ | அவள் சொன்னாள் | هِيَ قَالَتْ |
| **இதில் மேலேயுள்ள கட்டங்களில் قَالَ – يقُوْلُ – قُلْ என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| சொல்லாதே | لاَ تَقُلْ | சொல் | قُلْ |
| சொல்லாதீர்கள் | لاَ تقُوْلُوا | சொல்லுங்கள் | قُوْلُوا |
| சொல்பவன் (அ) சொல்லக்கூடியவன் : قَاٮِٕل | | | |
| சொல்லப்படுபவன் (அ) சொல்லவைக்கப் படுபவன் : مقُوْل | | | |
| சொல்லுதல் : قَوْل | | | |

قَامَ (ق) அவன் நின்றான் : இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **55** முறைகள் வருகின்றன

| நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல் فعل مضارع | | கடந்தகால வினைச்சொல் فعل ماضى | |
|---|---|---|---|
| நிற்கிறான் / நிற்பான் | يَقُوْمُ | நின்றான் | قَامَ |
| நிற்கிறார்கள் / நிற்பார்கள் | يَقُوْمُونَ | நின்றார்கள் | قَامُوا |
| நிற்கிறாய் / நிற்பாய் | تَقُوْمُ | நின்றாய் | قُمْتَ |
| நிற்கிறீர்கள் / நிற்பீர்கள் | تَقُوْمُونَ | நின்றீர்கள் | قُمْتُم |
| நிற்கிறேன் / நிற்பேன் | أَقُوْمُ | நின்றேன் | قُمْتُ |
| நிற்கிறோம் / நிற்போம் | نَقُوْمُ | நின்றோம் | قُمْنا |
| அவள் நிற்கிறாள்/ நிற்பாள் | هِيَ تَقُوْمُ | அவள் நின்றாள் | هِيَ قَامَتْ |
| இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் قَامَ – يَقُوْمُ – قُمْ என்பவைதான் முக்கியமானதாகும் | | | |
| கட்டளை-விலக்கல் نَهِى-prohibitive | | கட்டளை-ஏவல் اَمْر-Imperative | |
| நிற்காதே | لاَ تقُمْ | நில் | قُمْ |
| நிற்காதீர்கள் | لاَ تقُوْمُوا | நில்லுங்கள் | قُوْمُوا |
| நிற்பவன் (அ) நிற்கக்கூடியவன் : قَاٮِٕم | | | |
| நிற்கப் படுபவன் (அ) நிற்க வைக்கப்படுபவன் : مَقُوْم بِه | | | |
| நிற்கும் செயல் : قِيَام | | | |

**பாடம் எண் : 18**

**ஸலவாத்துக்குப்பின்**

**(ஓதவேண்டியது)**

4 பரப்பு | கேள் 1

புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்

3 திட்டமிடு | மதிப்பிடு 2

**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| ظُلْمًا كَثِيرًا | نَفْسِي | ظَلَمْتُ | إِنِّي | اَللّٰهُمَّ |
|---|---|---|---|---|
| | | | | |

| أَنْتَ | إِلاَّ | الذُّنُوبَ | وَّلاَ يَغْفِرُ |
|---|---|---|---|
| | | | |

| وَارْحَمْنِي | مَغْفِرَةً مِّنْ عِنْدِكَ | فَاغْفِرْ لِي |
|---|---|---|
| | | |

| الرَّحِيْمُ | الْغَفُورُ | إِنَّكَ أَنْتَ |
|---|---|---|
| | | |

**வினா 2: இந்த துஆவை யாருக்கு யார் கற்பித்தது?**
**விடை :**

**வினா 3: மஃபிரத் (مَغْفِرَة ) என்பதன் கருத்து என்ன ?**
**விடை :**

**வினா 4: தனக்குத்தானே அநீதியிழைப்பதன் பொருள் என்ன ?**
**விடை :**

**வினா 5: பாவங்களை மன்னித்தல் மற்றும் அருள் புரிதலின் திறவுகோல் யார் கையில் இருக்கிறது ?**
**விடை :**

## 18 – வது பாடத்திற்கான வினாக்கள் - ஸலவாத்திற்குப் பின் (ஓதவேண்டியது)

வினா-1- கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை قَال (1719) ن (ق) அவன் சொன்னான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்

قَالَ 1719 (ق) :قَالَ அவன் சொன்னான்

| முக்கியமானவை قَالَ، يَقُولُ، قُلْ | | | |
|---|---|---|---|
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

قَامَ 55 (ق) அவன் நின்றான்

| முக்கியமானவை قَامَ، يَقُومُ، قُمْ : | | | |
|---|---|---|---|
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

| வினா 3 : தமிழில் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும் | |
|---|---|
| | எனவே நான் சொல்கிறேன் உனக்கு |
| | மேலும் நீங்கள் சொல்கிறீர்கள் எனக்கு |
| | நீங்கள் அனைவரும் சொல்கிறீர்கள் அவர்களிடம் |
| | நீங்கள் அனைவரும் எழுந்து நில்லுங்கள் மேலும் சொல்லுங்கள் |
| | அவர்கள் அனைவரும் எழுந்து நின்றனர் மேலும் சொன்னார்கள் |

| வினா 2 : அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக | |
|---|---|
| | فَقَالَ لَهُ |
| | وَقُلْتُمْ لِيْ |
| | فَيَقُوْلُوْنَ لَكُمْ |
| | قُلْتَ لَهُ |
| | قُلْتُ لَكَ |

# பாடம் எண் : 19
## துஆக்கள்

**19 பாடங்கள் முடிந்த நிலையில் குர்ஆனில் இருந்து 40347 முறை வரக்கூடிய 125 புதிய வார்த்தைகளை கற்பீர்கள்.**

4 பரப்பு | கேள் 1
புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்
3 திட்டமிடு | மதிப்பிடு 2

| حَسَنَةً [31] | فِى الدُّنْيَا [115] | آتِنَا | رَبَّنَا |
|---|---|---|---|
| **நல்லது, அழகியது** | **உலகில்** | **எங்களுக்கு வழங்கிடு** | **எங்களின் ரப்பே!** |
| حَسَن : நல்லது (ஆண்பால்)<br>حَسَنَة : நல்லது (பெண்பால்) | الدُّنْيَا ல் -فِيْ<br>உலகம் | نَا எங்களுக்கு , آتِ<br>வழங்கிடுவாயாக | نَا நமது رَبّ ரப்பே! |
| **மொழிபெயர்ப்பு : எங்களுடைய ரப்பே! எங்களுக்கு உலகில் அழகியதை வழங்கிடுவாயாக!** | | | |

அதிகமாக துஆக்கள் ரப்பனா என்பதைக் கொண்டே துவங்குகிறது

ب ر ரப் என்பதற்கான விளக்கம் : ஒவ்வொரு அத்தியாவசியமானவைகளையும் நிறைவு செய்து நம்மை வளர்ப்பவன் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்

உலகில் அழகானவைகள் சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது

1) வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகள், ஆரோக்கியம், கோத்திரத்தின் மேன்மை, கண்ணியம், கம்பீரம், பொருளாதாரம், செழிப்பு, வேலைவாய்ப்பு, வாணிபம், நல்ல பிள்ளைகள், சிறந்த நண்பர்கள் போன்றவை.

2) இஸ்லாமிய விதிகளின் படி செயல்பட போதுமான பாதுகாப்பு மற்றும் அமைதி கிடைத்தல்

3) பலனுள்ள கல்வி, சரியான (இஸ்லாமியக்) கொள்கை, நற்செயல்கள், (அல்லாஹ்விற்காக என்ற) தூய எண்ணம், நற்குணம், சீரிய முறையில் ஏற்படுகின்ற குழந்தை வளர்ப்பு போன்ற மறுமைக்கு பயன் தருகின்றவை.

ஆனால் மறுமையைப் பாழ்ப்படுத்துகின்ற ( செல்வம், செழிப்பு, வேலை, வாணிபம், குழந்தைகள், நண்பர்கள் போன்ற ) எதுவாக இருந்தாலும் அவை அழகானதல்ல.

**சரிபார்த்தல் :** இவ்வுலகில் எதன் பின் ஒடிக்கொண்டிருக்கிறேனோ அது சரியானதுதானா? என சிந்தித்திருக்கிறேனா? அவனிடத்தில் துஆ செய்தேன் பின்னரும் (ஓடியோடி சரியானது கிடைக்க) பல முயற்சிகள் செய்தேன். பின்னரும் சரியானது ஒன்றும் கிடைக்கவில்லையெனில் (அதே தவறான நிலையின் மீது நிலைத்து) மனதிருப்தியோடு இருந்துவிட்டேனா?

**திட்டமிடுதல் :** இந்த துஆவை என்றும் படித்துக் கொண்டேயிருக்க திட்டமிடுங்கள்.

**பரப்புதல் :** நமக்கு எவை அழகானது என உறுதியாக தெரியுமோ, அவற்றை தனது குடும்பத்தினர்களுக்கும், நண்பர்களுக்கும் எத்தி வைத்துவிடுங்கள்.

| النَّارِ [145] | عَذَابَ [332] | وَقِنَا | | | حَسَنَةً [31] | وَ فِى الآخِرَةِ [115] | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **நெருப்பு** | **வேதனை** | **மேலும் எங்களை காப்பாற்று** | | | **அழகியது, நல்லது** | **மேலும் மறுமையில்** | | |
| نَار : நரகம்,<br>النَّار : நரக நெருப்பு | | نَا | قِ | وَ | | الآخِرَةِ | فِى | وَ |
| | | எங்களை | காப்பாற்று | மேலும் | | மறுமை | ல் | இன்னும் |
| **மொழிபெயர்ப்பு : மேலும் மறுமையில் அழகியதையும் (வழங்கிடுவாயாக!) மேலும் நரக வேதனையை விட்டும் எங்களை பாதுகாப்பாயாக** | | | | | | | | |

- மறுமையில் அழகியவை : அல்லாஹ் (நம் நிலையைப்பார்த்து) மகிழ்ச்சியடைதல் , சுவர்க்கம், ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் அருகில் இருத்தல், அல்லாஹ்வைக் கானும் வாய்ப்பு போன்றவை அடங்கும்.
- இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகிறார்கள் : ஒரு முஸ்லிமின் (நன்மைகளை விட) பாவங்கள் அதிகரித்துவிடும்போது அவன் சுத்தமடைவதற்காக சில காலங்கள் நரகில் எரிய வேண்டியது இருக்கும், அல்லாஹ் எங்களைக் காப்பாற்றுவாயாக!, அதிகம் நன்மைகள் செய்ய எங்களுக்கு உதவிடுவாயாக!, மேலும் எங்களை நரக நெருப்பை விட்டும் காப்பாற்றுவாயாக! (ஆமீன்).

**தொழுதபின் ஓத வேண்டிய முக்கியமான துஆ**

முஆத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கிறார்கள்: ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், எனது கரங்களை பிடித்துக் கொண்டு சொன்னார்கள் : ‘முஆதே! நான் அல்லாஹ்வின் ஆணையாக உன் மீது அன்பு வைக்கிறேன். மேலும் சொன்னார்கள்: நான் முஆதே உமக்கு இறுதி உபதேசம் (போல்) செய்கிறேன் : தொழுத பின் இதை ஓத மறக்க வேண்டாம்.

| وَحُسْنِ عِبَادَتِكَ | وَشُكْرِكَ [63] | عَلَىٰ ذِكْرِكَ | أَعِنِّي | اَللّٰهُمَّ |
|---|---|---|---|---|
| **மேலும் உன்னை அழகிய முறையில் வணங்க** | **மேலும் உனக்கு நன்றி செலுத்த** | **உன்னை ஞாபகப்படுத்திக் கொள்ள** | **எனக்கு உதவிடுவாயாக!** | **அல்லாஹ்வே!** |
| **பொருள்:** யா அல்லாஹ் உன்னை நினைவுகூறவும் உனக்கு நன்றி செலுத்தவும் மேலும் அழகிய முறையில் உன்னை வழிபடவும் எனக்கு உதவிடுவாயாக! | | | | |

**தொழுத பின் இந்த துஆவை வேறுபட்ட உணர்வுகளோடு படிக்கலாம் உதாரணமாக :**

1) அல்லாஹ்வே! நான் இப்பொழுது தொழுது முடித்தாலும் எந்த விதத்தில் தொழ வேண்டுமோ அந்த விதத்தில் தொழவில்லை, அல்லாஹ்வே அடுத்தமுறை நல்ல முறையில் தொழ உதவிடுவாயாக!

2) அல்லாஹ்வே! இப்பொழுது தொழுத பின், உலக விஷயங்களில் உன்னை மறந்திடாமல் (ஒவ்வொரு விஷயங்களிலும்) உன்னை ஞாபகம் செய்யவும், உனக்கு நன்றி செலுத்தவும் எனக்கு உதவிடுவாயாக! முழுவாழ்வும் உன்னையே சிறந்த முறையில் வணங்குவதற்கான முறையில் கழிக்க வைப்பாயாக! (ஆமீன்)

## இலக்கணம்:

கீழே கொடுக்கப்பட்ட 21 முக்கிய வாக்கிய அமைப்புகளை பயிற்சி செய்யுங்கள். இந்த இரண்டு வினைச்சொற்களிளும் அதன் இரண்டாவது எழுத்து ( حرف علت- weak letters) பலவீன எழுத்தாகும் அதாவது و – ي – ا இம்மூன்று எழுத்துக்களில் ஒன்று வந்தால் அவற்றிற்கு Weak letters எனப்படும்.

كَانَ ( ق ) **அவன் இருந்தான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **1361** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| இருக்கிறான் / இருப்பான் | يَكُوْنُ | இருந்தான் | كَانَ |
| இருக்கிறார்கள் / இருப்பார்கள் | يَكُوْنُونَ | இருந்தார்கள் | كَانَوا |
| இருக்கிறாய் / இருப்பாய் | تكُوْنُ | இருந்தாய் | كُنْتَ |
| இருக்கிறீர்கள் / இருப் பீர்கள் | تكُوْنُونَ | இருந்தீர்கள் | كُنْتُم |
| இருக்கிறேன் / இருப்பேன் | أَكُوْنُ | இருந்தேன் | كُنْتُ |
| இருக்கிறோம் / இருப்போம் | نَكُوْنُ | இருந்தோம் | كُنّا |
| அவள் இருக்கிறாள்/ இருப்பாள் | هِىَ تَكُوْنُ | அவள் இருந்தாள் | هِىَ كَانَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் كَانَ – يَكُوْنُ – كُنْ என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| இருக்காதே | لاَ تكُنْ | இரு | كُنْ |
| இருக்காதீர்கள் | لاَ تكُوْنُوا | இருங்கள் | كُوْنُوا |
| இருப்பவன் (அ) இருக்கக் கூடியவன் : كَاٮِٕن | | | |
| | | | |
| ஆகுதல், இருத்தல் : كَوْن | | | |

تَابَ (ق) **அவன் பாவமன்னிப்பு கேட்டான் :** இவ் வினைச்சொல்லின் பல்வேறு வடிவங்கள் குர்ஆனில் **72** முறைகள் வருகின்றன

| **நிகழ்கால அல்லது எதிர்கால வினைச்சொல்** فعل مضارع | | **கடந்தகால வினைச்சொல்** فعل ماضى | |
|---|---|---|---|
| பாவமன்னிப்பு கேட்கிறான் / பாவமன்னிப்பு கேட்பான் | يتُوْبُ | பாவமன்னிப்பு கேட்டான் | تَاب |
| பாவமன்னிப்பு கேட்கிறார்கள்/ பாவமன்னிப்பு கேட்பார்கள் | يَتُوْبُونَ | பாவமன்னிப்பு கேட்டார்கள் | تَابَوا |
| பாவமன்னிப்பு கேட்கிறாய் / பாவமன்னிப்பு கேட்பாய் | تتُوْبُ | பாவமன்னிப்பு கேட்டாய் | تُبْتَ |
| பாவமன்னிப்பு கேட்கிறீர்கள் / பாவமன்னிப்பு கேட்பீர்கள் | تَتُوْبُونَ | பாவமன்னிப்பு கேட்டீர்கள் | تُبْتُم |
| பாவமன்னிப்பு கேட்கிறேன் / பாவமன்னிப்பு கேட்பேன் | أتُوْبُ | பாவமன்னிப்பு கேட்டேன் | تُبْتُ |
| பாவமன்னிப்பு கேட்கிறோம் / பாவமன்னிப்பு கேட்போம் | نَتُوْبُ | பாவமன்னிப்பு கேட்டோம் | تُبْنا |
| அவள் பாவமன்னிப்பு கேட்கிறாள்/பாவமன்னிப்பு கேட்பாள் | تَتُوْبُ | அவள் பாவமன்னிப்பு கேட்டாள் | هِىَ تَابَتْ |
| **இதில் இதற்கு மேலேயுள்ள கட்டங்களில் تَاب – يَتُوْبُ– تُبْ என்பவைதான் முக்கியமானதாகும்** | | | |
| **கட்டளை-விலக்கல்** نَهِى-prohibitive | | **கட்டளை-ஏவல்** اَمْر-Imperative | |
| பாவமன்னிப்பு கேட்காதே | لاَ تتُبْ | பாவமன்னிப்பு கேள் | تُبْ |
| பாவமன்னிப்பு கேட்காதீர்கள் | لاَ تتُوْبُوا | பாவமன்னிப்பு கேளுங்கள் | تُوْبُوا |
| பாவமன்னிப்பு கேட்பவன் (அ) கேட்கக்கூடியவன் : تَاٮِٕب | | | |
| பாவமன்னிப்பு கேட்கப் படுபவன் (அ) கேட்கப்படக்கூடியவன் : مَتُوْبٌ بِه | | | |
| பாவமன்னிப்பு கேட்குதல் : تَوْبَة | | | |

**பாடம் எண் : 19**
**(துஆ) பிரார்த்தனைகள்**

4 பரப்பு | கேள் 1
புரிந்து கொள். உள்ளார்ந்த அனுபவத்தை உணர்
3 திட்டமிடு | மதிப்பிடு 2

**வினா:1. காலியிடங்களை அரபி வார்த்தைகளின் சரியான மொழிபெயர்ப்புளைக்கொண்டு நிரப்புங்கள்.**

| حَسَنَةً | فِي الدُّنْيَا | اٰتِنَا | رَبَّنَآ |
|---|---|---|---|
| | | | |

| حَسَنَةً | وَّفِي الْاٰخِرَةِ |
|---|---|
| | |

| النَّارِ 201 | عَذَابَ | وَّقِنَا |
|---|---|---|
| | | |

**தொழுதபின் ஓத வேண்டிய துஆ**

| وَحُسْنِ عِبَادَتِكَ۞ | وَشُكْرِكَ | عَلىٰ ذِكْرِكَ | أَعِنِّي | اَللّٰهُمَّ |
|---|---|---|---|---|
| | | | | |

**வினா 2: உலகத்தில் அழகியவை ( حسنات ) என்றால் என்ன ?**
**விடை :**

**வினா 3: மறுவுலகத்தில் அழகியவை ( حسنات ) என்றால் என்ன ?**
**விடை :**

**வினா 4: இந்த துஆவில் எத்தனை விஷயங்களைக் கேட்கிறோம்?**
**விடை :**

**வினா 5: தொழுத பின் ( اللّٰهُمَّ اَعِنّيْ عَلَى ذِكْرِكَ ) அல்லாஹும்ம அயின்னீ அலா திக்ரிக்க ….என்ற துஆவை ஓதுமாறு யாருக்கு யார் உபதேசித்தது ?**
**விடை:**

## 19 – வது பாடத்திற்கான வினாக்கள் - துஆக்கள்

**வினா-1-** கீழே கொடுக்கப்பட்ட காலியிடங்களை كَانَ (1361) ن (ق) அவன் வாக்குறுதியளித்தான் என்பதிலிருந்து உருவாகுகின்ற மற்ற வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதோடு அதன் மொழிபெயர்ப்புகளையும் எழுதுங்கள்.

كَانَ 1361 (ق) **அவன் (ஆகி) இருந்தான்**

| முக்கியமானவை | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| كَانَ، يَكُونُ، كُنْ | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

تَابَ 72 (ق) **அவன் (திருந்தி) பாவமன்னிப்புக் கேட்டான்**

| முக்கியமானவை | | மொழிபெயர்ப்பு فِعْل مُضَارِع | மொழிபெயர்ப்பு فِعْل مَاضِي |
|---|---|---|---|
| تَابَ، يَتُوبُ، تُبْ | | | |
| மொழிபெயர்ப்பு نَهْي | மொழிபெயர்ப்பு أَمْر | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**வினா 3 :** தமிழிலல் இருந்து அரபியில் மொழி பெயர்க்கவும்

| | |
|---|---|
| | மேலும் நீ (ஆகி) இருக்காதே |
| | விரைவில் அது ஆகிவிடும் |
| | எனவே அவன் ஆகிவிட்டான் |
| | நீங்கள் அனைவரும் பாவமன்னிப்புக் கேளுங்கள் |
| | பாவமன்னிப்புக் கேட்பவர்கள் |

**வினா 2 :** அரபி வார்த்தைகளை சிறுகோடிட்டு பிரித்து அதன் மொழிபெயர்ப்புகளை எழுதுக

| | |
|---|---|
| | اِغْفِرْ يَا غَفُوْرُ |
| | اَلَّذِيْنَ تَابُوْا |
| | وَمَاكَانُوْا |
| | فَيَكُوْنُ |
| | وَكُوْنُوْا |